# பார்த்த ஞாபகம் இல்லையோ..?

அமுதவல்லி கல்யாணசுந்தரம்






# பார்த்த ஞாபகம் இல்லையோ..?

## 1

'இறைவனிடம் கையேந்துங்கள். அவன் இல்லை என்று சொல்லுவதில்லை. பொறுமையுடன் கேட்டுப் பாருங்கள். அவன் பொக்கிஷத்தை மூடுவதில்லை!' என்ற நாகூர் ஈ.எம்.ஹனீபாவின் கணீர்க் குரலில் பக்திப் பாடல் வானொலியில் ஒலிபரப்பாகிக் கொண்டு இருந்தது. உடன் சேர்ந்து பாடியபடி, காலை ஐந்து மணிக்கு அப்பாவின் அலுவலக நண்பரின் மகனும் தன்னுடைய தோழனும் ஆன அஷோக்கின் திருமணத்திற்குக் கிளம்பிக் கொண்டு இருக்கும் அஞ்சலி இருபத்திரண்டு வயது இளம் பெண்.

அழகான என்ற அடைமொழி சேர்த்துச் சொல்லி இருக்க வேண்டும். ஆனால் பெற்றோரை இழந்து ஆசிரமத்தில் தற்போது வசித்து வருவதாலோ, அவளின் அழகைப் பாராட்டிப் போற்றப் பெற்றவர்கள் இல்லை என்பதாலோ அதை அவள் அதிகம் உணர்ந்ததில்லை. சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொலை தூரக் கல்வி மூலம் பத்திரிகைத் துறையில் முதுகலைப் பட்டம் பெறச் சேர்ந்து இருக்கிறாள்.

மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்த சந்திரசேகரன் - இந்திராணி தம்பதியினருக்கு ஒரே மகளாகக் கடந்த ஜூன் வரை முடிசூடா இளவரசியாக வாழ்ந்து வந்தவள் நிலை ஒரே ஆண்டில் தலை கீழாக மாறிப் போனது. உணவுக் குழாய்ப் புற்று நோய்க்குத் தாயைப் பறிகொடுத்தவள், அடுத்த நாற்பதாவது நாளில், தன்னுடைய தந்தையை அளவு மீறிய தொழில் நுட்ப வளர்ச்சிக்குப் பறி கொடுத்தாள்.

படுக்கையில் மடிக் கணினியை வைத்து இடியுடன் கூடிய பெருமழை நாளில் இரவில் வேலை செய்து கொண்டு இருந்தபோது அதிகபட்ச மின் அழுத்தம் தாக்கியதால் ஏற்பட்ட விபத்தில் அவர் இறந்தார். அவரின் இறப்பிற்கு, மடிக்கணினிதான் காரணம் என்பதை ஓராண்டு கழிந்த பின்னும் இன்னும் அவளால் நம்ப முடியவில்லை.

ஆங்கில இலக்கியத்தில் இளங்கலைப் படிப்பை முடித்த பிறகு, வெளியே வேலைக்குச் செல்லாமல் அவ்வப்போது வார இறுதியில் வந்து சென்ற, இந்த ஆசிரமத்தில் நிரந்தரமாகத் தங்கிக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவும், கணக்கு வழக்குகளை



நிர்வாகம் செய்யவும், ஆசிரமத் தலைவி சாவித்திரி அம்மாவிற்குத் துணையாக இருக்கிறாள். ஒரு ஆர்வத்தில், பொழுது போக்கிற்காக இலக்கியம் கற்றாலும் பொருளாதாரம், முதல் கணினி பயன்பாடு வரை அனைத்துக் கலைகளும் கற்றவள்.

''உனக்கு இருக்கும் தகுதிக்கு வெளியில் வேலைக்குப் போனால் சுலபமாகப் பதினைந்தாயிரம் ரூபாயாவது சம்பாதிக்கலாமே? என்னால் உனக்கு அவ்வளவு சம்பளம் கொடுக்க முடியாதே கண்ணம்மா!'' என்று ஒரு நாளைக்குக் குறைந்தது பத்து முறை வருந்தும் சாவித்திரிக்கு, அவளின் எளிய இனிய புன்னகைதான் பதிலாக இருக்கும்.

அவரின் புலம்பல் ஜாஸ்தி ஆவது மாதிரி தோன்றும் போது மட்டும், ''நீங்க அநாதைக் குழந்தைகளை எடுத்து வளர்க்க, அவர்களுக்கு உணவளித்துப் பராமரிக்க, காசு கணக்குப் பார்த்து இருந்தால், அவர்கள் இந்த நிலைக்கு வந்து இருக்க முடியாதே! எங்கோ மூலையில் பிச்சை எடுத்து, அல்லது வெளியில் சொல்ல முடியாத நிலைக்குச் சீரழிக்கப்பட்டு இருப்பார்களே! அந்த நிலை இல்லாமல் காப்பாற்றப் பாடுபடும் உங்களுக்கு என்னால் முடிந்த சின்ன உதவி. நான் நிறையச் சம்பாதித்து யாருக்குக் கொடுக்கப் போகிறேன், சொல்லுங்க?'' என்று அஞ்சலி வாதம் செய்வாள்.

''இதென்ன கேள்வி? எத்தனை நாளைக்கு இப்படியே இருப்பாய்? உனக்கென்று ஒரு வாழ்வு வேண்டாமா? படித்தது ஜர்னலிசம். சமையல் முதல், ஸ்டோர் வரை, வரவு செலவுக் கணக்கு வழக்குப் பராமரிப்பது முதல், சின்னக் குழந்தைகளுக்குப் பல் விளக்கி விடுவது வரை எல்லாமே செய்கிறாய். உன்னுடைய எதிர்காலத்தை,

என்னுடைய வசதிக்காகப் பாழ் பண்ணுகிறேனோ என்று வருத்தமா இருக்கு, அஞ்சலி!'' என்று குற்ற உணர்வில் அவர் தவிப்பார்.

''என்னம்மா பேச்சு இது? எத்தனையோ குழந்தைகளுக்கு வழிகாட்டியாக இருக்கும் நீங்க எப்படி என்னுடைய வாழ்க்கையைப் பாழ்படுத்த முடியும். நீங்க ஆசைப்படுவது மாதிரி இன்னொரு பெரிய வேலைக்குப் போனாலும், என்னுடைய கூடுதல் சம்பாத்தியமும் இங்கேதான் செலவாகப் போகிறது. எங்கோ உழைத்து பணத்தை இங்கே செலவழிப்பதைவிட, இங்கே உள்ள சின்னக் குழந்தைகளுக்கு வழிகாட்டியாக இருப்பதையே நான் விரும்புகிறேன். ஒருவேளை பெரிய வேலை கிடைத்துச் சம்பாத்தியம் அதிகமாக வரும்போது எனக்கு மனசு மாறி விடுமோ என்னவோ?'' என்று அவரை இதமாகத் தேற்றுவாள் அஞ்சலி.

குழந்தைகளுக்குப் பள்ளி விடுமுறை. அஷோக்கின் திருமணத்திற்குக் கிளம்பிக் கொண்டு இருந்தவளின் மனம் பழைய நினைவுகளில் மூழ்கித் தவித்தது. அங்கே போனால் இன்னும் மனம் வாடும். போகப் பிடிக்கவில்லை.

''நீ மண்டபத்திற்கு வராவிட்டால், நாங்க நீ தங்கியிருக்கும் ஆசிரமத்தில் வந்துதான் கல்யாணம் பண்ணிக்கணும். பாவம் மைதிலி! அவங்க அம்மா அப்பா அவங்க பொண்ணு கல்யாணம் எப்படி எல்லாம் விமரிசையா நடக்க வேண்டும் என்று எத்தனையோ கனவு கண்டு இருப்பாங்க. அந்தக் கனவை எல்லாம் சிதைத்த பாவம் உனக்கு வேண்டாம். இப்படியே எத்தனை நாள் கூட்டுக்குள்ளே ஒளிந்து கொள்வாய்? வெளியே வா!'' என்று மிரட்டி இருக்கும், அஷோக்கிற்காகப் போகவேண்டும்.



அஷோக் நல்ல பிரெண்ட். அப்பா இறந்தபோது, தனியாகத் தவித்த தன்னை, நண்பரின் மகள் என்ற நிலையைத் தாண்டி, தன்னுடைய வீட்டில் ஒருத்தியாக, மருமகளாக வைத்துப் பார்க்க, அவனுடைய பெற்றோர் முயன்றபோது, ''அஞ்சலி என்னுடைய பிரெண்டும்மா. இருபது வருஷமா சேர்ந்தே இருக்கிறோம். அவள் பிரெண்ட் மட்டும்தான். அந்த மாதிரி நாங்க பழகலை!'' என்று ஒரு அதட்டலில் தடுத்து நிறுத்தினான்.

''ஹேய் மவுஸ், அம்மா உன் மேலே இருக்கற அக்கறையில, என்னுடைய எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் ஏதேதோ சொல்லிட்டாங்க. நமக்கு எல்லாம் ஐஸ்வர்யா ராய் ரேஞ்சுக்குப் பொண்ணு வேண்டும். கண்டதை மனசுல வச்சு கற்பனை வளர்த்துக்காதே. உன்னோட குறுக்குக் கேள்விக்கு எல்லாம் பதில் சொல்ல நம்மால் ஆகாது. ஒரு நல்ல லக்கீ பார்த்து நானே உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்!'' என்று கேலி பண்ணிய அஷோக்கின் மேல் அப்போது மனம் நிறைய நன்றி மலர்ந்தது.

''ஐஸ்வர்யா ராய் ரேஞ்சில் இருக்கும் பொண்ணு உன்னை மாதிரி அசடு வழியும் அழகு சுந்தரத்தை எப்படிக் கல்யாணம் பண்ணிக் கொள்வாள்? அவள் அபிஷேக் மாதிரி ஆளைத் தேட மாட்டாளா'' என்று கேலியாகப் பதில் சொன்னாள். அழகு சுந்தரம், அழகன், இரண்டு பட்டப் பெயர்களும் அவ்வப்போது அவளின் வாயில் வந்து போகும் அஷோக்கிற்கு மட்டுமான பிரத்யேகமான நாமகரணங்கள்.

''அபிஷேக் என்ன பெரிய அபிஷேக்! எழடி உசரம் மட்டும் இருந்தால் போதுமா? நம்ம பெர்சனாலிட்டி

அதுக்கும் மேலே. தெரிஞ்சுக்கோ. டாங்கிக்குத் தெரியுமா தாஜ்மகால் பெருமை...''

''இதென்ன புது மொழியா இருக்கு? டாங்கிக்கு ஏன் தாஜ் மகாலோட பெருமை தெரியணும்? அதுக்கும் நாம பேசிக்கிட்டு இருக்கும் விஷயத்திற்கும் என்ன சம்பந்தம்?'' என்று சிரித்தாள் அஞ்சலி.

அம்மாவையும் அப்பாவையும் அடுத்தடுத்து இழந்த பிறகு, முதல் முறையாகப் பதிலுக்குப் பதில் என்று பேசிச் சிரித்தது அப்போதுதான். பழைய நினைவுகளில் மூழ்கி, புன்னகையுடன் கிளம்பி வந்த அஞ்சலி சாவித்திரி அம்மாவின் அறைக் கதவைத் தட்டி அனுமதி பெற்று உள்ளே சென்றாள்.

க்ரீம் வண்ணப் பட்டுப் புடவையில் சிவப்பிலும் பச்சையிலுமான சின்னச் சின்ன மயில்கள் பார்டரில் தோகை விரித்தாட, ஒரு பக்கம் சிவப்பும், மறுபக்கம் பச்சையிலுமான ஜரிகைக் கரையிலும், மெலிதான ஒப்பனையிலும், குடை ஜிமிக்கியிலும், கழுத்தை ஒட்டிய சின்ன நெக்லஸிலுமே, தேவதையாக ஜொலித்த அஞ்சலியை வைத்த கண் எடுக்காமல் பார்த்தார் சாவித்திரி.

''என்னம்மா அப்படிப் பார்க்கறீங்க?'' என்று கூச்சத்துடன் கேட்டவளின் முகம் மேலும் அழகானது.

''அஞ்சலி, உன்னை இப்படிப் பளிச்சுன்னு ஒரு நல்ல ட்ரெசில பார்த்து எவ்வளவு நாளாச்சு தெரியுமா? என் கண்ணே பட்டுடப் போகுது!'' என்று சொல்லி அவள் கன்னத்தை வழித்தார் சாவித்திரி.

''நாளைக்குக் காலையில் அஷோக் கல்யாணம் அம்மா. இன்னிக்கே வீட்டுக்கு வரச் சொல்லி வளர்மதி



ஆண்ட்டி ஒரே பிடிவாதம். அண்ணா நகர் போகிறேன். நாளைக்கு மதிய உணவு முடிச்ச பிறகு மண்டபத்தில் இருந்து கிளம்பி மூணு நாலு மணிக்கு எல்லாம் வந்து விடுவேன் அம்மா''... என்று புன்னகை செய்தாள் அஞ்சலி.

''ஒண்ணும் அவசரம் இல்லை. கொஞ்சம் முன்னே பின்னே ஆனாலும், உன் வயசுப் பசங்களோடு கொஞ்ச நேரமாவது சந்தோஷமா செலவு பண்ணி விட்டுவா. நீ எங்கேயும் வெளியே போறதே இல்லை!'' என்று சந்தோஷமாய்ச் சொன்னவர் பார்வை பெருமிதமாய், அவளை அளவிட்டது.

அவரின் பெருமிதப் பார்வையைக் கணித்து, கூச்சத்தோடு, ''ரொம்ப கிராண்டா இருக்காம்மா இந்த ட்ரெஸ்? வீட்டுக்குப் போக இவ்வளவு தேவை இல்லையோ? ஆனால் என்னிடம் இருப்பதிலேயே இதுதான் சிம்பிளான புடவை. மிச்சம் எல்லாம் இதைவிட அதிகமான ஜரிகை வச்சுத்தான் இருக்கு!'' என்று கவலையோடு கேட்டாள் அஞ்சலி.

''ச்சே ச்சே! அப்படி ஒண்ணும் இல்லை அஞ்சலி. நான் அதுக்காகப் பார்க்கவில்லை. ஏதோ யோசனை. ம்ம்ம், நாளைக்கு முகூர்த்தம் எப்போ?'' என்று வெளியே சொன்னாலும் அவர் மனம் வேறு யோசித்தது.

''உனக்கும் வயசாச்சே? உனக்கு இது மாதிரி எப்போ கல்யாணம் நடக்கப் போகுதோ? உனக்கு என்று பிறந்த மகராஜன் எங்கே இருக்கிறானோ? உங்க அம்மா இருந்தால் உன்னை இப்படித் தனியா விட்டு வச்சு இருப்பாங்களா? நாளைக்கு வளர்மதி மேடமிடம் பேச வேண்டும்!'' என்று பெருமூச்சு விட்டார் சாவித்திரி.

* * *

"அம்மா, மயூஸ் வந்தாச்சா இல்லையா? அந்த ஆசிரமத்துல என்னதான் பண்றா? ரெண்டு நாளைக்குக் கூட அங்கிருந்து கிளம்ப மாட்டாளா? அவ வரட்டும். அந்தக் காதைப் பிடிச்சு நல்லா திருகி வைக்கிறேன்!" என்று தன் அறையில் கண்ணாடி முன்னால் தலை வாரியபடி சலித்துக் கொண்ட அஷோக்கின் தலையில் ஒரு கொட்டு விழுந்தது.

"ஏய்! அந்தக் கண்ணாடிக்கு மட்டும் வாய் இருந்தது என்று வச்சுக்கோ. உன்னை அப்படியே கடிச்சுத் துப்பிடும். 'உன்னையே இத்தனை வருஷமா பார்த்துப் பார்த்து நொந்து போயிட்டேன். வேற ஒரு அழகான முகத்தை நாளைக்கு ராத்திரிக்குள்ளே எனக்குக் காட்டலை, மகனே! உன்னைத் தொலைச்சுட்டேன். இனிமேல் என் முன்னால் வந்து நிற்காதே!' என்று மனசுக்குள்ளே புலம்பிகிட்டு இருக்கும்!" என்று அவனைச் சீண்டியபடி அவன் முன்பு வந்து நின்றாள் அஞ்சலி.

"ஹேய், சண்டெலி! நீ எப்போ வந்தே? குளிக்கப் போறப்போ கூட கேட்டேனே? நீ வரலை என்று அம்மா சொன்னாங்க!" என்று சிரித்தபடி திரும்பினான் அஷோக்.

"நீ குளிக்கப் போறப்போ நான் வரலை. சாதாரணமா ஒரு மனுஷன் குளிக்க எவ்வளவு நேரம் எடுத்துக்குவாங்க என்று ஏதாவது ஐடியா இருக்கா?" என்று சிரிப்போடு விசாரித்தாள் அஞ்சலி.

"ஹா! சாதாரணமான மனுஷங்க குளிக்கப் பத்து நிமிஷம் ஆகலாம்..."

"கரெக்ட், நீ எவ்வளவு நேரம் குளிச்சு இருக்க, தெரியுமா?"

"நில்லு, நான் இன்னும் முடிக்கவே இல்லையே? அதுக்குள்ளே பொறுமை இல்லாமல் இடையில் வந்தால் எப்படி? சாதாரண மனுஷங்களுக்குப் பத்து நிமிஷம். ஆனால் நான் சாதாரணமான மனுஷன் இல்லையே! நான் கல்யாண மாப்பிள்ளை. எனக்குக் கனவு காண, நடுவில் பியான்சியோடு போன் பேச, என்னோட அழகுக்கு அழகு சேர்க்க, இதுக்கெல்லாம் எனக்கு நேரம் ஆகாதா? அதனால் கூட அறுபது நிமிஷம்!" என்று கண் சிமிட்டிச் சிரித்தான் அஷோக்.



"சாதாரணமா எல்லோரும் பொண்ணுங்களைத்தான் இப்படிக் கண்ணாடி முன்னால் குடி இருக்காதே என்று கேலி பண்ணுவாங்க. இங்கே கதை உல்டாவா இருக்கும் என்று நினைக்கிறேன். மைதிலி உன்னை விட சீக்கிரம் மணவறைக்கு வந்துடப் போறா. அப்புறம் நீ வர ரொம்ப லேட் ஆகிடுச்சு என்று கையில் மாலையோடு சுயம் வரம் நடத்தி கல்யாண மண்டபத்திலேயே வேற மாப்பிள்ளை தேர்ந்தெடுக்காமல் இருந்தால் சரி. சீக்கிரம் வா, சாப்பிடலாம்; ஆன்ட்டி உனக்குப் போடாமல் எனக்குச் சாப்பாடு தர மாட்டாங்களாம். எனக்குப் பசிக்குது. வீட்டுக்கு வந்த விருந்தாளியை எவ்வளவு நேரம் பசியோடு நிறுத்தி வைப்பாய்?" என்று கிண்டலாகச் சொன்னாள் அஞ்சலி.

"விருந்தாளியா? நீயா? யார் சொன்னா? உன்னை முதலில் சாப்பிட விட்டால் அப்புறம் எங்களுக்குச் சாப்பாடு இருக்காது என்று பயந்து போய் இருப்பாங்க."

"கல்யாண மாப்பிள்ளை கொஞ்ச நேரம் சந்தோஷமா இருக்கட்டுமே என்று நூல் விட்டேன். அப்படியே நம்பிட்டாயே? ஹச்சோ பாவம்! பச்சைப் பிள்ளைடா நீ. குஷியைப் பாரு. வழியுது துடைச்சுக்கோ. நான் சாப்பிட்ட பிறகு இருக்கும் மிச்சம் மீதிதான் உனக்கு என்று ஆன்ட்டி

அப்பவே சொல்லிட்டாங்க!'' என்று சிரித்து விட்டு வெளியேறினாள் அஞ்சலி.

அதன் பிறகு வந்த அடுத்த இருபத்து நாலு மணி நேரமும் பேச்சும் சிரிப்புமாய்க் குதூகலமாய்க் கழிந்தது. ஓராண்டுக்கு முந்தைய அஞ்சலியாக, அஷோக்குடன் சேர்ந்து பதிலுக்குப் பதில் கலாட்டாவாகப் பேசிக் கவர்ச்சி யாய்ச் சிரித்தவளை ஆனந்தக் கண்ணீரோடு பார்த்து ரசிக்க அஷோக் உட்பட, வளர்மதியும் வாசுதேவனும் இருந்தாலும், அந்தச் சிரிப்பைப் பார்த்து முகம் சுழிக் கவும், 'அப்படி என்ன மணவறையில் அந்நிய ஆணுடன் சிரிப்பு வேண்டிக் கிடக்கு?' என்று எரிச்சலடையவும் இரு ஜோடிக் கண்கள் இருந்தன.

அந்த இரண்டு ஜோடிக் கண்களுமே, அஷோக்கை அவள் சுற்றிச் சுற்றி வந்து உரிமையாய்ப் பழகியதை, தொட்டுப் பேசியதை, சிரித்து மகிழ்ந்ததைப் பார்த்துப் பொறாமைத் தீயில் வெந்தாலும், திருமண நேரத்தில், வளர்மதி, அவளின் கையில் வெள்ளிக் காமாட்சி விளக் கைக் கொடுத்து, நாத்தனார் ஸ்தானத்தில் அஷோக் மைதிலியின் கழுத்தில் முடி போட என்று விளக்குப் பிடிக்க வைத்த வினாடியில், நிம்மதிப் பெருமூச்சைச் சத்தமின்றி வெளியேற்றியது.

அடுத்த கிடைத்த முதல் சந்தர்ப்பத்தில், பெருமூச்சு விட்ட ஜோடிக் கண்களுக்குச் சொந்தமான மைதிலி, ''அண்ணி, உங்களுக்குத்தான் இந்த ரெண்டு நாளில் எவ்வளவு வேலை! கொஞ்சம் ஏதாவது சூடா குடிச்சுட்டு வாங்க அண்ணி!'' என்று கரிசனையாகச் சொல்ல அஷோக் ஆச்சரியமாகத் திரும்பிப் பார்த்தான்.



''ஹேய் மைத்தி, இவளை அண்ணி என்றா கூப் பிட்டாய்? அவள் உன்னைவிடச் சின்னப் பொண்ணு. சும்மா பேர் சொல்லி வா போ என்று கூப்பிடு. அப்புறம் கோபிச்சுக்கப் போறா!'' என்று சிரித்தான்.

''நீ சும்மா இரு அஷோக். கோபம் எல்லாம் இல்லை மைதிலி. உங்களுக்கு எப்படி வசதியோ அப்படியே கூப்பிடுங்க.''

''உன்னைவிடப் பெரிய பொண்ணுதான். அதுக்காக என்னை விடச் சின்னப் பொண்ணான அவளை வாங்க போங்க! நான் மட்டும் வா போவா? இது என்ன நியா யம்?'' என்று சின்னக் குழந்தையாய்ப் பிடிவாதம் பிடித் தான் அஷோக்.

''டேய்...! உனக்குக் கொஞ்சமாவது...'' என்று அஞ்சலி பல்லைக் கடிக்க, ''ஹய்யோ! இது இன்னும் மோசம். கோபம் வந்தால் வாடா? எனக்கு மரியாதை இல்லாத போது அவளுக்கு மட்டும் என்ன மரியாதை? அவளை யும் ஒருமையிலேயே கூப்பிடு'' என்று விடாமல் வம் பிழுத்தான் அஷோக்.

''சாரி மைதிலி, இவன் கொஞ்சம்...''

''சாரி எல்லாம் வேண்டாம் அஞ்சலி. எனக்கு ஒன்றும் பிரச்னை இல்லை. என்னையும் நீ வா என்றே பேசலாம். ஐ டோன்ட் மைன்ட்'' என்று சொன்ன மைதிலியின் கண்ணிலும் குரலிலும், சில நிமிடங்களுக்கு முன்பு பொங்கிய பொறாமைத் தீ காணாமல் போய் இருந்தது.

அவர்களுக்குத் தனிமை கொடுத்து, மணவறையை விட்டுக் கீழே இறங்கிய அஞ்சலியை, 'ஹாய் அஞ்சலி, ஹவ் ஆர் யு? பார்த்து மூன்று வருடம் இருக்குமா?''

என்ற குதூகலக் குரல் எதிர்கொண்டது. அந்த சந்தோஷக் குரலில் திரும்பிய அஞ்சலியின் கண்களில் பட்டவனை அவளுக்கு இதற்கு முன்பு பார்த்த நினைவில்லை.

"ஹாய், உங்களுக்கு என்னை ஏற்கெனவே தெரியுமா? நாம் இதற்கு முன்பே சந்தித்து இருக்கிறோமா என்ன?" என்று லேசான குழப்பத்துடன் கேட்டாள் அஞ்சலி.

'நாம் இதற்கு முன்னால் பார்த்து இருக்கிறோமா?' என்ற வார்த்தைகளைக் கேட்டதும் ஏமாற்றத்தில் சுருங்கிய முகத்தை வினாடியில் சரி பண்ணிக் கொண்டவன், அஷோக்கின் திருமணத்திற்கு, அவள் நாத்தனார் முடிச்சு மைதிலியின் கழுத்தில் போடும் வினாடி வரை, பொறாமைத் தீயில் வெந்த அடுத்த ஜோடிக் கண்களுக்குச் சொந்தக்காரன்.

## 2

"அம்மா! எவ்வளவு நேரம்! நீங்க போய்ச் சேருவதற்குள் அங்கே கல்யாணமே முடிஞ்சுடப் போறது?" என்று ஹோட்டல் அறையின் கண்ணாடி முன்னால் நின்று தனது ஒப்பனையைச் சரி பார்த்துக் கொண்டு இருக்கும் தன்னை அவசரப்படுத்திய மகனைத் திரும்பி ஆராய்ந்தார் லலிதா.

"உன்னை யார் கல்யாணத்திற்குக் கூப்பிட்டா? நேற்று மாலையில் ஒரு டிராப் கேட்டதற்கு அவ்வளவு பந்தா பண்ணிக்கிட்ட? இப்ப நான் டாக்சி வரச் சொல்லி புக் பண்ணிய பிறகு, வேண்டாம் என்று சொல்லிட்டு,



ஆளுக்கு முன்னாடி நீ கிளம்பி இருக்க. என்ன விஷயம்?" என்று அவனைக் கூர்மையாகப் பார்த்தபடி கேலியாகக் கேட்டார்.

"நீங்க கேட்டா, உடனே எல்லா விஷயமும் இங்கேயே இப்பவே சொல்லிடணுமா? எங்களுக்கு எப்போ சொல்லணும் என்று தோணுதோ அப்ப மெதுவா சொல்வோம்!" என்று அலட்சியமாகச் சொல்லி வெளியேறியவன் பாலமுருகன், லலிதா - செல்வகுமார் தம்பதியினரின் ஒரே மகன்.

கோவையில் ஏற்கெனவே நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட அச்சகம், தற்போது மூன்று கிளைகளுடன், செயல்பட்டு வருகிறது. முதன் முதலில் தாத்தா ஆரம்பித்த அச்சகம், சிறிய அளவில், வீட்டிற்கு அருகே, அதிக மாற்றங்கள் இன்றிச் செயல்பட்டு வருகிறது. அடுத்தது செல்வகுமார் தன்னுடைய சொந்த முயற்சியில் ஆரம்பித்த அச்சகம், தமிழ்நாடு அரசுப் பாடநூல் நிறுவனத்திற்கான புத்தகங்களை மட்டும் பிரத்யேகமாக அச்சடிக்கும் இடமாகச் செயல்பட்டு வருகிறது.

கோவையிலேயே பீ ஈ மெகானிகல் எஞ்சினியரிங் முடித்த பின்பு, டெக்ஸ்டைல் டிசைனிங் அண்ட் பிரின்டிங் குறித்த பட்டப் படிப்பு படிக்க, பாலமுருகன் டெல்லி சென்று வந்தான். வந்த பிறகு கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தன்னுடைய பங்கிற்கு, படித்த படிப்பின் அடிப்படையில், லக்ஷ்மி மில்ஸ் நிறுவனத்துடன் இணைந்து, புதிதாக ஆடை வடிவமைப்பு மட்டுமில்லாமல், பிரிண்டிங் செய்யவும் தேவையான கருவிகளுடன் தொழிலைத் துவக்கி வெற்றிகரமாக நடத்தி வருகிறான்.

தொழிலில் கெட்டிக்காரன். அழகன். மகா மகா அழுத்தம். அம்மாவாகவே இருந்தாலும், அவன் மனதிற்குள் என்ன நினைக்கிறான்? ஒரு விஷயம் பிடித்து இருக்கா இல்லையா என்று ஒரு வார்த்தை அவன் வாயில் இருந்து அவ்வளவு சுலபத்தில் வாங்கிவிட முடியாது. கோவையில் இருந்து இந்த திருமணத்திற்கு வர வேண்டும் என்று லலிதா சொன்னபோது, அவனுக்கு முதலில் வர இஷ்டம் இல்லை. சென்னையில் தேசிய அளவிலான 'ட்ரேட் ஃபேர்' நடக்கிற தகவல் வந்த பிறகு, அவனுக்கு வர வேண்டிய வேலை இருந்ததனால், சென்னைக்கு வந்தான்.

முந்தைய நாள் மாலையில் மண்டபத்திற்கு வர அவ்வளவு யோசித்தவனை, இரவு அங்கிருந்து அவராகத்தான் கிளப்ப வேண்டி இருந்தது. அவருக்கே ஆச்சரியம் தாங்கவில்லை. மண்டபத்தில் இறங்கிய உடனே, 'நீ வேண்டுமானால் கிளம்பு பாலா, நான் டாக்சி பிடித்து ஹோட்டலுக்கு வந்து விடுகிறேன்!'' என்று சொன்னபோது இரு மனதாக இருந்தான்.

'பரவாயில்லை. உங்களுக்காக இருக்கிறேன். ஒரு மணி ரேத்தில் கிளம்பி விடலாம்.' என்ற ரீதியில் மணியைப் பார்த்துக் கொண்டே இருந்தவனிடம் இருந்து பதினைந்து நிமிடங்களுக்கு ஒரு முறை, மிஸ்ட் கால் வந்து கொண்டே இருந்தது. ஆனால் ஏழு மணிக்கு மாப்பிள்ளை அழைப்பு முடிந்த பிறகு அவனிடம் இருந்து தகவலே இல்லை.

முதலில் அவன் சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பி விட்டான் என்றே நினைத்து விட்டார் லலிதா. அது அவருக்கு ஒன்றும் புதிது இல்லை. ஆனால் ஒன்பது மணி அளவில் கிளம்பும்போது எதற்கும் ஒரு முறை கேட்டுப்



பார்த்து விடலாம், என்று போனில் அழைத்தால் அவன் அங்கே இருந்தான். அதுவே அவருக்கு அளவில்லாத ஆச்சரியம். இப்போது காலையில் மீண்டும் மண்டபத்திற்குக் கிளம்பி இருக்கிறான். என்ன விஷயம்? ஆராயும் பார்வையோடு வந்து காரில் ஏறி, 'நீ ட்ரேட் ஃபேர் போகலையா?' என்று விசாரித்தார் லலிதா.

'அப்படின்னு சொன்னேனா?' சுருக்கமான எதிர்க் கேள்வி உடனடியாய்ப் பாய்ந்து வந்தது.

'கல்யாணம் முடியப் பத்து பத்தரை ஆகி விடும். அதற்குப் பிறகு சாப்பிட்டுக் கிளம்ப குறைஞ்சது பன்னிரண்டு மணியாவது ஆகும். அங்கே வந்து சும்மா பத்து நிமிஷத்துக்கு ஒரு முறை கிளம்பலாமா கிளம்பலாமா என்று போனில் தந்தி அடிக்கக் கூடாது!' என்று அதட்டலாகச் சொல்லியபடி, அவனுடைய முகத்தை ஓரக்கண்ணால் பார்த்தார்.

அந்த மாதிரி அதட்டல் போட்டால், எப்போதும் உடனடியாக ஒரு முறைப்புக் கிடைக்கும். முகம் இறுகி விடும். மௌனத்தைக் குத்தகைக்கு எடுத்து விடுவான். அதைக் காணோம். இதழ்கள் புன்னகையில் விரிந்தே இருந்தன.

''உங்களை ஹோட்டல் ரூமில் விட்டு விட்டு, தேவைப் பட்டால் கிளம்புகிறேன்!'' என்ற பதிலைக் கேட்டு லலிதா மயங்கி விழாத குறைதான். அவரது பிரமித்த பார்வையைப் பார்த்தவன் சிரிப்போடு, ''கல்யாணம் முடிந்த பிறகு, மண்டபத்தில் இருந்து கிளம்பி விடலாமா? இல்லை, மைதிலியை அவங்க புகுந்த வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு வர வேண்டுமா?'' என்று விசாரித்தான்.

அவனின் அடுத்த கேள்வியைக் கேட்ட பிறகு, 'ஹா!...' என்று உள்ளிழுத்த மூச்சை வெளியே விடப் பல கணங்கள் மறந்து போனார் லலிதா. 'சொன்னது நீதானா சொல் சொல் என்னுயிரே...' என்று சிரிப்போடு சத்தமாகவே லலிதா பாடலை முணுமுணுக்க, அதற்கும் அவனிடம் இருந்து ஒரு புன்னகையே பதிலாகக் கிடைத்தது.

'நேற்று இல்லாத மாற்றம் என்னது? காற்று என் காதில் ஏதோ சொன்னது...!' என்று அவனை ஆழம் பார்த்தார். அதற்கும் ஒரு சிரிப்புதான். ஆனால் அவனுடைய அந்தப் புன்னகையே அவருக்கு ஆயிரம் செய்தி சொல்ல, மண்டபம் வந்த பிறகு, அவர் மணமேடையைக் கவனிப்பதை முழுசாய் மறந்து விட்டு, மகனின் பார்வையை மறைந்து இருந்து தொடர்ந்தார்.

அவனின் முகத்தில் நிலவிய கோபம் பார்த்து முதலில் கவலையாய் இருந்தது. நம்முடைய எண்ணம் தவறோ என்ற சந்தேகம் வந்தது. ஆனால் அவனின் பார்வை வினாடி கூட இடைவெளி இன்றி மணவறையில் அவ்வப்போது வந்து சென்ற பெண்ணை விடாமல் தொடர, அவரின் சந்தேகம் காணாமல் போனது. அந்தக் கோபத்தின் காரணத்தையும் ஊகிக்க முடிந்தது.

'ஓஹோ! கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கல்யாணம் வேண்டாம் வேண்டாம் என்று பஜனை பண்ணியதன் காரணம் இவளா? அதையாவது வாயைத் திறந்து சொன்னால்தானே தெரியும்? லூசு. இப்பவும் முறைத்துக் கொண்டே இருக்கிறானே தவிர, போய் அவளிடம் பேசுகிறானா பாரேன்! சரியான திமிர் பிடித்தவன்! அவள் மேலே என்ன கோபம்? அதை இன்றே சரிக்கட்டி உன்னை அவளிடம் பேச வைக்கவில்லை.... நான் உனக்கு அம்மா



இல்லைடா!' என்று மனதிற்குள் உறுதி எடுத்துக் கொண்டார் லலிதா. அந்த உறுதி, அந்தப் பெண்ணைப் பற்றிய தகவல்களை அடுத்த அரை மணி நேரத்தில் சேகரிக்க வைத்தது.

* * *

பெற்றோரை இழந்த பின் அதிகம் வெளியில் வராமல், தன்னுடைய இயக்கத்தை அந்த ஆசிரமத்தைச் சுற்றி அமைத்துக் கொண்டாள் அஞ்சலி. நீண்ட நாட்களுக்குப் பிறகு, அஷோக்கின் திருமணத்தில் கலந்து கொண்டாள். மணமேடையில் இருந்து சந்தோஷமாகக் கீழே இறங்கும்போது காதில் விழுந்த உற்சாகமான வரவேற்பைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தவள் விழிகள் வியப்பில் விரிந்தன. யார் இவன்? இவ்வளவு அக்கறையாக விசாரிக்கிறான்? எங்கே பார்த்து இருக்கிறோம்?

அம்மா வழியில் அல்லது அப்பா வழியில் உறவா? அப்பா அலுவலக வழியில் நட்பா? கல்லூரியில் சீனியர்? மண்டை குழம்பியது. அனிச்சையாய் வாய், 'ஏற்கெனவே நாம் சந்தித்து இருக்கிறோமா' என்று கேட்ட போதும், அஞ்சலியின் கண்கள் அவனை உச்சி முதல் பாதம் வரை அளவிட்டன.

அசாத்தியமான உயரம், அலை அலையாக அடர்ந்த கருநிறக் கேசம், மாநிறத்திற்கும் கூடுதலான நிறம், அவளின் எண்ணங்களை ஊடுருவ முயலும் லேசர் கண்கள், அந்தக் கூர்மையான கண்களை எங்கேயோ பார்த்து இருக்கிறோம். எங்கே? சட்டென்று நினைவு வரவில்லை.

கம்பீரமாய் ஏறி இறங்கிய புருவங்கள், கூர்மையான நாசி, புகை பிடிக்கும் பழக்கம் எனக்கு இல்லை என்று

சொல்லாமல் சொல்லும் சிவந்த இதழ்கள், பிடிவாதத்தைக் காட்டும் அழுத்தமான முகவாய், திருமணத்திற்கு விசேஷமான உடையோ? அது அவனின் செல்வச் செழிப்பைக் காட்டியது.

"பார்த்து முடிச்சாச்சா? இப்போ அடையாளம் தெரியுதா? இப்பவும் தெரியலையா?" கேலியாக அவனின் குரல் இடையிட்டது. என்ன இப்படிக் கேட்கிறான்? எங்கே பார்த்து இருக்கிறோம் என்றே தெரியவில்லையே என்ற குழப்பத்தோடு விழித்தாள் அஞ்சலி.

"நல்ல வேளை, ஆள் அழகா வசதியா இருக்கான் என்று தெரிந்த உடனே இப்போ எனக்குத் தெரிஞ்சுடுச்சு என்று நடிக்கவில்லை. அந்த வரைக்கும் ரொம்ப சந்தோஷம்!" என்று சொல்லி நகர்ந்தவனை, 'ஹலோ ஒரு நிமிஷம்!' என்ற அஞ்சலியின் குரல் நிறுத்தியது.

"நீங்க பாட்டுக்கு வந்தீங்க. எப்படி இருக்கிறாய் என்று விசாரித்தீங்க. நான் ஒரு கேள்வி கேட்டேன். அதுக்குப் பதில் சொல்லாமல் நீங்க இன்னொரு எதிர்க் கேள்வி கேட்டீங்க. அதுக்கு நான் பதில் சொல்லாமல் இருக்கும்போதே நீங்களா ஒரு முடிவுக்கு வந்து, ஏதேதோ உளறிவிட்டுப் பாதிப் பேச்சில் நகர்ந்தால் என்ன அர்த்தம்? முதலில் நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டுப் போங்க. நாம் ஏற்கெனவே பார்த்துப் பேசி இருக்கிறோமா?" என்று மிரட்டலாகக் கேட்டாள் அஞ்சலி.

நின்று திரும்பியவன், அவளைக் கூர்மையாகச் சில வினாடிகள் பார்த்து விட்டு, "இல்லை!" என்று ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னான். அந்தக் குரலில் அழுத்தம் இருந்தாலும், ஏனோ அவன் சொல்வது உண்மை இல்லை என்று அஞ்சலிக்குத் தோன்றியது.



"பின்னே ஏன், கொஞ்சம் முன்னாடி பார்த்து மூணு வருஷம் இருக்குமா என்று..."

"சாரி. ஐ ஆம் மிஸ்டேக்கன். உங்க கேள்விகளுக்குப் பதிலும் சொல்லி மன்னிப்பும் கேட்டாச்சு. இப்ப நான் போகலாமா?" என்றவன் குரலில் அனுமதி கேட்பது மாதிரி பவ்யம் இருந்தாலும், கண்ணில் கோபமே இருந்த மாதிரி அஞ்சலிக்குத் தோன்றியது. ஆனால் ஏன் என்று புரியவில்லை. இப்படிப் பேசினால் வேறென்ன கேட்பது என்று புரியாமல், சரி என்றும் இல்லாமல், இல்லை என்றும் இல்லாமல் மையமாகத் தலையை அசைத்தாள்.

அவளுக்கு மரியாதை செலுத்துவது மாதிரி இடை வரை குனிந்து நிமிர்ந்தவன், மேலே பேசாமல் விடுவிடென்று வெளியேறிவிட்டான்.

"ஹேய் பாலா! எங்கே போறே? கிப்ட் கொடுக்க வேண்டாமா?" என்று தனக்குப் பின்னால் இருந்த ஐம்பது மதிக்கத்தக்க ஒருவர் சத்தமாய் அழைப்பதே காதில் விழாமல் வெளியேறி விட்டான்.

'கடைசியாய் இவளிடம் பேசிக் கொண்டு இருந்தானே? என்ன சொல்லி விட்டுப் போனான் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்,' என்று அஞ்சலியைப் பார்த்துப் புன்னகைத்தபடி அருகில் வந்து, "ஹாய் அஞ்சலி, அஷோக்கிற்கு நீ என்ன வேண்டும்?" என்று விசாரித்தார் லலிதா. அவரின் கண்கள் அவளை மேலும் கீழும் அளவிட்டன.

'என்னடா இது வம்பாப் போச்சு? இவருக்கும் தெரியும் போல இருக்கே! நான் கேட்கும் கேள்விக்கு ஒருத்தரும் பதில் சொல்ல மாட்டாங்களா?' என்று அவள் குழம்ப, "என்ன சொல்லிட்டுப் போறார்? எங்கே போறாராம்?

எப்ப வருவாராம்?'' என்ற அவரின் குரல் கேட்டு மேலும் குழப்பத்திற்குப் போனாள் அஞ்சலி.

'அவன் எங்கே போனால் எனக்கென்ன? ஏன் என்னிடம் சொல்லி விட்டுப் போக வேண்டும்? முதலில் இவர் யார்?' ''ஹலோ மேடம்! அவர் எங்கே போய் இருக்கார் என்று என்னைக் கேட்கறீங்க! எனக்கு எப்படித் தெரியும்? அவர் ஏன் என்னிடம் சொல்லிட்டுப் போக வேண்டும்? முதலில் நீங்க யாரு? அவர் யாரு?'' என்று அதட்டலாகக் கேட்டாள் அஞ்சலி.

''ஆஹா! மேடமா? சூப்பர் ஜாடிக்கேற்ற மூடி. இப்படித்தான் இருக்கணும். என்னைத் தெரியாது. ஓகே. அறிமுகம் பண்ணிக் கொள்கிறேன். ஆனால் அவனையும் தெரியாதா? இது கொஞ்சம் ஓவர்தான். பரவாயில்லை. நான் லலிதா. மிசஸ் லலிதா குமார். இப்போதைக்குக் கோவையில் இருக்கிறேன். மைதிலி கல்யாணத்திற்காகச் சென்னைக்கு வந்தேன். அவர் என்னோட பையன். பேர் பாலமுருகன். நான் பாலா என்று கூப்பிடுவேன். நீ அவனைப் பாலா, முருகா, மாமா, மச்சான், அத்தான், அழகா... எப்படி வேண்டுமானாலும் கூப்பிட்டுக்கலாம்...''

''வா..ட் அ..ழ..கா..? நீங்க என்ன சொல்றீங்க?'' என்றவள் விழிகளில் திகைப்பு இருந்தது.

''அதான் சொல்லிட்டேனே! அது முழுக்க முழுக்க உன் இஷ்டம். அதில் நான் தலையிட மாட்டேன்!'' குரலில் இருந்த உரிமையும் நெருக்கமும் அவளைக் குழப்பியது.

அம்மா இறப்பதற்கு முன்பு ஒருவேளை அவனைத் தனக்கு மாப்பிள்ளை பார்த்து இருப்பார்களோ? அதனால் தான் அவனைத் தனக்குத் தெரிந்து இருக்கும் என்ற எதிர்பார்ப்புடன் ஆவலாக வந்து பேசினானோ?



போட்டோ அம்மாவோ அப்பாவோ காட்டிய மாதிரி இல்லையே? ஒருவேளை படிப்பை முடிக்கட்டும் என்று நினைத்து இருக்கலாம். அம்மா அப்பாவின் இறப்புக்கு இவர்கள் வந்த மாதிரி தெரியவில்லையே! வந்து தான் உணராமலும் இருந்து இருக்கலாம். ஆனால் ஒரு வருஷம் என்ன செய்து கொண்டு இருந்தார்கள்? இதுவரை ஏன் வரவில்லை?

''ஆ..ன்..ட்..டி.. உங்களுக்கு என்னை, என்னோட அம்மா அப்பாவை எல்லாம் முன்னாடியே தெரியுமா? சொந்தமா?'' என்று விசாரித்தாள் அஞ்சலி.

கேள்வி கேட்ட அஞ்சலிக்குப் பதில் சொல்லும் முன்பே அவருடைய மொபைல் அலறியது. எடுத்துப் பேசியவர், ''உனக்கென்ன? நான் யார் கூட வேண்டுமானாலும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசுவேன். என்னைக் கண்ட்ரோல் பண்ணும் அதிகாரம் உங்க அப்பாவுக்கே இல்லை என்றபோது நீ யாருடா? நான் சொன்ன பேச்சை நின்று கூடக் கேட்காமல் ஓடிப் போனவனை யார் என்றே எனக்குத் தெரியாது. வைடா போனை!'' என்று அதட்டலாகச் சொல்லி போனை வைத்ததைப் பார்த்துத் திகைத்துப் போய் நின்றாள் அஞ்சலி.

போனில் பேசியது அவனாகத்தான் இருக்க வேண்டும். திமிர் பிடித்தவன், இவங்க என்னுடன் பேசினால் அவனுக்கு எங்கே வலிக்கிறதாம்? பேசாதே என்று போனில் உத்தரவா? பெரிய இவனா? எரிச்சலோடு பொருமினாள்.

அவளுக்கு ஆறுதல் அளிக்கும் வண்ணம், ''அவன் கிடக்கிறான், நீ என்னமோ கேட்டாயே? நாம் சொந்தமா என்றுதானே? சொந்தம் என்றால் சொந்தம். இல்லை

எப்ப வருவாராம்?" என்ற அவரின் குரல் கேட்டு மேலும் குழப்பத்திற்குப் போனாள் அஞ்சலி.

'அவன் எங்கே போனால் எனக்கென்ன? ஏன் என்னிடம் சொல்லி விட்டுப் போக வேண்டும்? முதலில் இவர் யார்?' "ஹலோ மேடம்! அவர் எங்கே போயிருக்கார் என்று என்னைக் கேட்கறீங்க! எனக்கு எப்படித் தெரியும்? அவர் ஏன் என்னிடம் சொல்லிட்டுப் போக வேண்டும்? முதலில் நீங்க யாரு? அவர் யாரு?" என்று அதட்டலாகக் கேட்டாள் அஞ்சலி.

"ஆஹா! மேடமா? குப்பர் ஜாடிக்கேற்ற மூடி. இப்படித்தான் இருக்கணும். என்னைத் தெரியாது. ஓகே. அறிமுகம் பண்ணிக் கொள்கிறேன். ஆனால் அவனையும் தெரியாதா? இது கொஞ்சம் ஓவர்தான். பரவாயில்லை. நான் லலிதா. மிசஸ் லலிதா குமார். இப்போதைக்குக் கோவையில் இருக்கிறேன். மைதிலி கல்யாணத்திற்காகச் சென்னைக்கு வந்தேன். அவர் என்னோட பையன். பேர் பாலமுருகன். நான் பாலா என்று கூப்பிடுவேன். நீ அவனைப் பாலா, முருகா, மாமா, மச்சான், அத்தான், அழகா... எப்படி வேண்டுமானாலும் கூப்பிட்டுக்கலாம்..."

"வா..ட் அ..ழ..கா..? நீங்க என்ன சொல்றீங்க?" என்றவள் விழிகளில் திகைப்பு இருந்தது.

"அதான் சொல்லிட்டேனே! அது முழுக்க முழுக்க உன் இஷ்டம். அதில் நான் தலையிட மாட்டேன்!" குரலில் இருந்த உரிமையும் நெருக்கமும் அவளைக் குழப்பியது.

அம்மா இறப்பதற்கு முன்பு ஒருவேளை அவனைத் தனக்கு மாப்பிள்ளை பார்த்து இருப்பார்களோ? அதனால் தான் அவனைத் தனக்குத் தெரிந்து இருக்கும் என்று எதிர்பார்ப்புடன் ஆவலாக வந்து பேசினானோ!



போட்டோ அம்மாவோ அப்பாவோ காட்டிய மாதிரி இல்லையே? ஒருவேளை படிப்பை முடிக்கட்டும் என்று நினைத்து இருக்கலாம். அம்மா அப்பாவின் இறப்புக்கு இவர்கள் வந்த மாதிரி தெரியவில்லையே! வந்து நான் உணராமலும் இருந்து இருக்கலாம். ஆனால் ஒரு வருடம் என்ன செய்து கொண்டு இருந்தார்கள்? இதுவரை ஏன் வரவில்லை?

"ஆ..ன்..ட்..டி.. உங்களுக்கு என்னை, என்னோட அம்மா அப்பாவை எல்லாம் முன்னாடியே தெரியுமா? சொந்தமா?" என்று விசாரித்தாள் அஞ்சலி.

கேள்வி கேட்ட அஞ்சலிக்குப் பதில் சொல்லும் முன்பே அவருடைய மொபைல் அலறியது. எடுத்துப் பேசியவர், "உனக்கென்ன? நான் யார் கூட வேண்டுமானாலும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசுவேன். என்னைக் கண்ட்ரோல் பண்ணும் அதிகாரம் உங்க அப்பாவுக்கே இல்லை என்றபோது நீ யாருடா? நான் சொன்ன பேச்சை நின்று கூடக் கேட்காமல் ஓடிப் போனவனை யார் என்றே எனக்குத் தெரியாது. வைடா போனை!" என்று அதட்டலாகச் சொல்லி போனை வைத்ததைப் பார்த்துத் திகைத்துப் போய் நின்றாள் அஞ்சலி.

போனில் பேசியது அவனாகத்தான் இருக்க வேண்டும். திமிர் பிடித்தவன், இவங்க என்னுடன் பேசினால் அவனுக்கு எங்கே வலிக்கிறதாம்? பேசாதே என்று போனில் உத்தரவா? பெரிய இவனா? எரிச்சலோடு பொருமினாள்.

அவளுக்கு ஆறுதல் அளிக்கும் வண்ணம், "அவன் கிடக்கிறான், நீ என்னமோ கேட்டாயே? நாம் சொந்தமா என்றுதானே? சொந்தம் என்றால் சொந்தம். இல்லை

என்றால் இல்லை''... என்று அவர் பேச ஆரம்பித்த வினாடியில், எங்கிருந்தோ புயலாக வந்தவன், அவரின் கைப் பற்றி மணவறைக்கு இழுத்துச் சென்றான்.

## 3

அஞ்சலியை முதன் முதலில் புதுடில்லியில் ஒரு கண்காட்சியில் ஆகஸ்ட் ஒன்றாம் தேதி பார்த்தது முதல், இன்று வரை, கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளாக இவளின் முகத்தை நெஞ்சில் சுமந்த தன்னை அடையாளம் தெரியவில்லை என்று சொன்ன ஒருத்தியிடம் தன்னைப் பெற்றவர் நின்று சிரித்துப் பேசுவது பாலாவின் எரிச்சலைத் தூண்டியது.

போனில் 'பேசாதே' என்று சொன்ன பின்பும் வேண்டும் என்றே தன்னைத் தூக்கி எறிந்து அம்மா பேசியது, நெருப்பிற்கு மேலும் எண்ணெய் வார்க்க, அவரை அந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்துவது என்ற முடிவிற்கு வந்து அதைச் செயல்படுத்தினான் பாலமுருகன்.

''டேய், கையை விட்டுடா. நானே வருகிறேன்,'' என்று சொன்ன லலிதாவைச் சட்டையே செய்யாமல், இழுத்துச் சென்றவன், மைதிலியின் அருகில் போய் நின்ற பின்பே அவரின் கையை விடுவித்தான்.

'ஆன்ட்டி, வாங்க வாங்க, அண்ணா நீங்க கூடப் பெரிய மனசு பண்ணி உங்க ஆபீஸ் வேலை எல்லாம் விட்டுட்டு வந்து இருக்கீங்களா? ரொம்ப தேங்க்ஸ் அண்ணா!''



என்று வரவேற்ற மைதிலி, அஷோக்கிடம் திரும்பி அறிமுகம் செய்து வைத்தாள்.

''அப்பா கோவைல வேலை செய்தபோது, இவங்க வீட்டுக்குப் பக்கத்துல ஆறு வருஷம் குடி இருந்தோம். ஆன்ட்டிக்கு நான் ரொம்ப பெட். அவங்களுக்குப் பொண்ணு இல்லை என்பதால் எங்க அம்மாவை விட ஆன்ட்டிக்கு நான் ரொம்ப செல்லம்!'' என்று சந்தோஷமாய்ச் சொன்னாள் மைதிலி.

''உங்க அம்மாவைவிடச் செல்லம் என்பது பெரிய விஷயம் இல்லை. என்னைவிட ஆன்ட்டிக்கு நீதான் செல்லம் என்பதுதான் அதை விட முக்கியமான விஷயம்!'' என்று பொறாமை தொனிக்க அழுத்தமாகப் பாலா சொன்ன வினாடியில் அஷோக் அவசரமாய் அவனுக்குக் கை கொடுத்தான்.

''கை கொடுங்க பிரெண்ட், நாம் ரெண்டு பேரும் ஒரே ஜாதி. உங்க பீலிங்ஸ் எனக்கு நல்லா புரியுது. ஏன் என்றால் இதே கொடுமையை, நானும் கடந்த இருபது வருஷமா அனுபவிச்சுட்டு வரேன். உங்களுக்காவது ஆறு வருஷக் கொடுமை. அதுவும் முடிஞ்சுடுச்சு, எனக்கு இருபது வருஷம். இன்னும் தொடருது. அங்க பாருங்க''... என்று கை காட்டிய இடத்தில் வளர்மதி அஞ்சலியுடன் ஏதோ சிரித்துப் பேசிக் கொண்டு இருக்க, அதைப் பார்த்த அஷோக் பாலா இருவரின் முகத்திலுமே இளநகை மலர்ந்தது.

அவர்களின் புன்னகையைப் பார்த்த லலிதா, அதன் காரணத்தையும் கணித்து, ''மைதிலி, இவங்க வாய்தான் இப்படி எல்லாம் பேசும். ஆனால் செய்வதென்னவோ, சொல்றதுக்கு நேர் எதிராத்தான். உனக்கு கிப்ட் வாங்க

என்று நான் கொடுத்த பட்ஜெட்டிற்கு ரெண்டு மடங்கா செலவு பண்ணி வாங்கிட்டு வந்தான். கொடேன். ஏன் கையில வச்சுட்டு நிற்கிறாய்?'' என்று அதட்டினார் லலிதா.

''உங்களுடைய சந்தோஷமான திருமண வாழ்விற்கு எங்களுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்!'' என்று சொல்லி, வாங்கி வந்த ஜோடி கைக் கடிகாரங்களை இருவருக்கும் அணிவித்தான்.

இதய வடிவில் இருந்த டயலும், மத்தியில் வெள்ளை நிறப் பின்னணியில் இருந்த குட்டியான இரட்டைச் சிவப்பு ரோஜாக்களும், தங்க நிற செயினும், டைடனின் மேட் ஃபார் ஈச் அதர் என்ற வாழ்த்தும் இருவரின் முகத்திலும் மலர்ச்சியை வரவழைத்தது.

''ரொம்ப அழகா இருக்குண்ணா. ஸோ ஸ்வீட் ஆஃப் யு. தேங்க்ஸ்!'' என்று சந்தோஷமாக மைதிலி சொல்ல, அஷோக் லலிதாம்மாவிற்குப் பதில் சொல்ல முனைந்தான்.

''நாங்க சந்தோஷமா அவங்களுக்குச் செய்வோம் ஆன்ட்டி. எங்களுக்குக் கஞ்சத்தனம் எல்லாம் கிடையாது. ஆனால், நீங்க பெற்ற பிள்ளைகளைவிட உசத்தியா அவங்களை வச்சுப் பேசினால், அவங்களைக் காட்டி எங்களை மட்டம் தட்டினால், அதுதான் எங்களுக்குப் பிடிப்பதே இல்லை. என்ன பிரெண்ட், சரியா நான் சொல்வது?'' என்று பாலாவிடம் கேட்க, அவன் புன்னகையோடு தலை அசைத்தான்.

''ஹய்யோ பிரெண்ட்! என்ன இது? ரியாக்ஷன் அவ்ளோதானா?'' என்று ஆச்சரியமாக அஷோக் கேட்க,



அவன் ஒரு இரண்டு மில்லி மீட்டர் அளவிலான சிரிப்பைப் பதிலாகக் கொடுத்தான்.

''மை காட்! நீங்க இப்படி இருந்தால் அஞ்சு நிமிஷத்துல நான் தூங்கியே போய் விடுவேனே! மைதிலி நீ இப்படி இல்லையே?'' என்று அவசரமாக மனைவியின் புறம் திரும்பிக் கேட்டான்.

''நான் அப்படி இல்லாததால் தானே ஆன்ட்டிக்கு நான் செல்லம். கவலைப்படாதீங்க. நீ பேசியது போதும், வாயை மூடு என்று சொல்ற அளவுக்கு நான் பேசுவேன்!'' என்று சிரித்தாள் மைதிலி.

''அதெல்லாம் சொல்லவா செய்வாங்க?'' என்று மனைவியிடம் ரகசியமாகச் சொல்லிக் கண் சிமிட்டியவன், 'பிரெண்ட் பிரெண்ட் என்றே சொல்றேனே! பிரெண்டுக்குப் பேர் என்ன? அதை மேடம் சொல்லவே இல்லை. அவளுக்கு அண்ணா என்றால் எனக்கும் அப்படியே இருக்கட்டும் என்று நினைத்து விட்டாள் போல. நீங்க சொல்லுங்க.'' என்று விசாரித்தான் அஷோக்.

அஷோக்கின் கை பற்றிக் குலுக்கி, ''பாலமுருகன். கோவையில ஆடை வடிவமைப்பகம் வச்சிருக்கேன், மைதிலியைக் கலாட்டா பண்ணினேன். நல்ல பொண்ணு தான்!'' என்று அறிமுகம் செய்து கொண்டான்.

அவன் சொல்லி முடித்த உடனேயே, கைகளைத் தட்டி, 'அடேயப்பா! அண்ணா பத்து வார்த்தை சேர்ந்தாற்போல பேசிட்டாங்க என்பது முதல் ஆச்சரியம் என்றால், என்னைப் பற்றி பெருமையா சொல்றது இரண்டாவது ஆச்சரியம்!'' என்று சந்தோஷமாகச் சொன்னாள் மைதிலி.

''என் மைதிலி! அவரே பொழைச்சுப் போகட்டும் என்று உன்னை நல்ல பொண்ணு என்று சொன்னால் கூட உன்னால் நம்ப முடியலையா?'' என்று அஷோக் காலை வார, ஒரு சிரிப்பலை எழுந்தது.

''மைதிலி! உனக்குக் கணக்கும் தெரியலை. பத்து வார்த்தை இல்ல, ஒன்பது வார்த்தைதான் பேசினா தெரியுமா? அவ்வளவு சீக்கிரம் டபிள் டிஜிட் தொடமாட் டான் என் பிள்ளை. அவனை என்ன என்று நினை தாய்?'' என்று அவசரமாக லலிதா இடையிட அடுத்த சிரிப்பலை எழுந்தது.

'இல்லை ஆன்ட்டி! பத்து வார்த்தைதான் சொல்லி இருக்கார். நீங்க, நல்லா விரல் விட்டு எண்ணிப் பாருங்க!' என்று மைதிலி சிரிக்க, ''என்ன பாலா இப்படி என் நம் பிக்கையைப் பொய் ஆக்கிட்டாயே?' என்று போலியாய் லலிதா சலித்துக் கொள்ள, மீண்டும் மீண்டும் சிரிப்பலை எழுந்தது.

தாயின் புறம் திரும்பி, 'எனக்கு வேலை இருக்கு, நான் உங்களை ரூமில் விட்டுட்டுக் கிளம்பணும். போக லாமா?'' என்று கறாராகக் கேட்டான் பாலா.

'நீ ட்ரேட் ஃபேர் இருக்கு என்று சொன்னாயே! கிளம்பு நான் மைதிலியோட அவங்க வீட்டுக்குப் போயிட்டு அங்கே இருக்கேன். நீ ஸ்டேஷனுக்குப் போகும்போது அங்கே வந்து என்னைக் கூப்பிட்டுக்கோ. ஹோட்டல் ரூமில் தனியா உட்கார்ந்து எனக்கு போர் அடிக்கும்!' என்று வேண்டும் என்றே அவர்கள் முன்னிலையில் பரிதாபமாய் முகத்தை வைத்துக் கொண்டு சொன்னார் லலிதா.



அவரின் மனதில் என்ன இருக்கிறது என்பதை அறிந்ததால், அவர் சொன்னதற்குக் கொஞ்சமும் அசையாமல், ''ட்ரேட் ஃபேர் ப்ரோக்ராம் கான்சல் ஆகிடுச்சும்மா. நாம் இப்பவே விமானத்தில் கோவை கிளம்புறோம். மில்லில் இருந்து போன் வந்தது. ஒரு பெரிய எக்ஸ்போர்ட் ஆர்டர் வந்து இருக்காம், நைட் எட்டு மணிக்குக் கோவையில் எனக்கு பிசினெஸ் மீட் ஒன்றுக்குப் போகணும்!'' என்று சொன்னான் பாலமுருகன்.

'நாம் ஒன்று நினைத்தால் இவன் ஒன்று சொல்கிறானே?' என்று மனம் வாடியவருக்கு வேறு வழியும் தெரியவில்லை. 'சரி, அஞ்சு நிமிஷத்தில் கிளம்பலாம். மைதிலியிடம் ரெண்டு நிமிஷம் பேசிட்டு வரேன்,' என்று அவனை அந்த இடத்தில் இருந்து நகர்த்தினார்.

தான் அஞ்சலியிடம் பேசக்கூடாது என்பதற்காகவே, அவனுடைய வேலையை விட்டு விட்டுத் தன்னை அவசரமாகச் சென்னையில் இருந்து கிளப்புகிறான் என்பது புரிந்ததால், விமானப் பயணம் முழுவதும் லலிதா அவனிடம் பேசவே இல்லை.

இவன் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறான்? நான் பெற்றவள், பொறுத்துப் போகிறேன். எல்லோரும் எல்லா நேரமும் ஒரே மாதிரி இருக்க முடியுமா? இன்று இவன் என்னைச் சென்னையில் இருந்து நகர்த்தி விட்டால், இன்றோடு உலகம் அஸ்தமித்து விடுமா? நாளை என்று ஒன்று வராதா? நாளைக்கு என்னால் மீண்டும் சென்னைக்கு வந்து அவளைச் சந்திக்க முடியாதா?

பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகம் இருண்டு விடும் என்பது போன்று நடந்து கொள்கிறானே! பாவம் அந்தப் பொண்ணு! இவனைப் பார்த்துச் சிரித்த

மாதிரிதான் பேசினாள். இவன்தான் ஒரே நிமிஷத்துல முறுக்கிட்டுக் கிளம்பிய மாதிரி இருந்தது. இவன் கிளம்பிய பிறகும், அவளின் முகத்தில் குழப்பம் தான் இருந்ததே தவிர கோபம் இல்லை என்று வரும் வழி எல்லாம் பொருமிக் கொண்டே வந்தார் லலிதா.

பாலாவிற்கும் மனம் சரி இல்லை. அம்மாவின் அமைதி மட்டுமின்றி, கண் மூடித்தனமாய் அவள் மேல் தான் வளர்த்து வந்த காதலுக்கு அவளிடம் சின்னப் பிரதிபலிப்புக் கூட இல்லை என்பதும் அவனின் வேதனையைக் கூட்டியது. அவளுக்குத் தன்னை நினைவில்லை என்பதை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

அவளுக்குத் தான் யார் என்பதையும், எங்கே பார்த்து இருக்கிறாள் என்பதையும், தான் சொல்லாமலேயே நினைவு கூற வேண்டும். அதுதான் தன்னுடைய காதலுக்கு மரியாதை என்று எதிர்பார்த்தான். அது பொய்யாகி விட்டதே!

எண்ணங்களுக்கு வலிமை இருக்கிறது என்பது உண்மைதானே? தெரியாமல் தன்னிடம் சொல்லப்பட்ட அவளுடைய வார்த்தைகள் தன்னை இவ்வளவு பாதிக்க முடியும் என்றால், தான் தெரிந்து தினமும் அவளை நினைக்கின்ற எண்ணங்கள் அவளைப் பாதிக்க வேண்டாமா? பாதிக்கணும். பாதிக்கும். அதுவரை அவளைச் சந்திக்க எந்த முயற்சியும் எடுக்கப் போவது இல்லை.

'ஒருவேளை அவளுக்கு நினைவே வராவிட்டால்...' என்று மூளை குறுக்குக் கேள்வி எழுப்ப, மனம் சோர்ந்தது. எவ்வளவு நாள் காத்து இருப்பது? வாழ்நாள் முழுவதும் இருப்பேன் என்று சொல்வது எல்லாம் நடைமுறையில்



சாத்தியமா? இந்தக் காரணத்தை எல்லாம் வெளியே சொல்ல முடியுமா? அம்மா ஒத்துக் கொள்வார்களா? ஒரே பிள்ளைக்கு மணமுடிக்க வேண்டும் என்று அவர்கள் நினைப்பதில் தவறொன்றும் இல்லையே! மனம் இருகூறாய்ப் பிரிந்து வாதாட, களைத்துப் போன பாலமுருகன் கண்களை மூடித் தூங்க முற்பட்டான்.

* * *

திருமண மேடையில் அடுத்தடுத்து எழுந்த சிரிப்புச் சத்தம், கீழே நின்று இருந்த அஞ்சலியைத் தொந்தரவு செய்தது. அங்கே அவர்கள் சிரிப்பதே அவளைக் கேலி செய்துதான் என்பது புரியாமல் பொருமினாள் அஞ்சலி. இந்தச் சிடுமூஞ்சிக்குச் சிரிக்கக்கூடத் தெரியுமா? இங்கே என்னிடம் அப்படி உர்ருன்னு முறைத்தான்! கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லக் கூட அய்யாவுக்கு முடியாது. அங்கே என்ன சிரித்துச் சிரித்துப் பேச வேண்டி இருக்கு என்று மனதிற்குள் பொருமியவளுக்கு, வளர்மதி சொன்ன வேலைகள் மனசில் பதியவே இல்லை.

''அஞ்சலி, என்ன ஒரு மாதிரி இருக்க? உடம்பு சரி இல்லையா? காலையில் சீக்கிரம் எழுந்ததாய் இருக்கும். கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கறியா?'' என்று அக்கறையாக விசாரித்தார் வளர்மதி.

''அதெல்லாம் ஒண்ணும் இல்லை ஆன்ட்டி, ஏதோ யோசனை!'' என்று அஞ்சலி சமாளித்தாலும் வளர்மதிக்கு மனம் ஆறவில்லை.

''நீ கொஞ்ச நேரம் படு. நான் ஒரு மணி நேரத்துல வந்து எழுப்புறேன். அப்புறம் நிறைய வேலை இருக்கு!'' என்று வளர்மதி வலுக்கட்டாயமாக அனுப்பியதால் போய்ப் படுத்த அஞ்சலிக்குக் கண்களை மூடினாலும்

திறந்தாலும், அவன் சொன்ன வார்த்தைகளே திரும்பித் திரும்பி ஒலித்தன.

இரண்டு நிமிஷம் கூடத் தன் அருகில் நிற்காத ஒருவன் தன்னை இத்தனை தூரம் பாதிக்க முடியுமா? இருபது வார்த்தைகளுக்கும் குறைவாகப் பேசி, முறைத்து விட்டுப் போன ஒருத்தனைப் பற்றி மூன்று மணி நேரமாக நினைத்துக் கொண்டு இருக்கிறோமே என்று தன் மேலேயே எரிச்சல் வந்தாலும், அஞ்சலியால் அவனை நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தனியாக இருந்தால் அவனை மறக்கச் சிரமமாக இருக்கிறது. அஷோக்கின் அருகில் இருந்தால், இப்படித் தோன்றாது என்று வந்து மணவறையில் நின்ற போது, அவன் ஊருக்குக் கிளம்பிப் போய் விட்டதாக மைதிலி சொன்ன தகவல் அவளைச் சோர்வடைய வைத்தது. ஏன் என்ற காரணமும் புரியவில்லை. அவன் கொடுத்த பரிசைக் காட்டி அஷோக் சொன்ன கதையும், அவன் சாப்பிடாமல் போய் விட்டதற்காக வருத்தப்பட்ட மைதிலியும் அவளின் தலைவலியைக் கூட்டினர்.

அடுத்து வந்த மூன்று மணி நேரத்தைச் சிரமப்பட்டு நெட்டித் தள்ளியவள், அவர்களிடம் விடை பெற்று, ஆசிரமத்திற்குத் திரும்பி வந்தாள். அறையில் ஒரு கிப்ட் பார்சல் இருந்தது. அனுப்புபவர் பெயர் இல்லாமல் இருந்ததைத் திறந்து பார்த்தவள் திகைத்தாள். அது ஒரு மொபைல் போன். புதுசு. யார் தனக்குக் கொடுத்து இருப்பார்கள்? அவனா? அவன் எதுக்குத் தனக்குப் பரிசு கொடுக்கப் போகிறான்? ஒரு சிரிப்புக்கே வழி இல்லை. பரிசு வேறயா? ரொம்பதான் ஆசை அஞ்சலி உனக்கு...



ஒருவேளை அஷோக்கோ? அவனுடைய கல்யாணத்திற்குப் பரிசு கொடுக்க நினைத்தானோ? இருக்காதே! அவனுக்கு சர்ப்ரைசே சுத்தமாகப் பிடிக்காது. எப்போதுமே, சர்ப்ரைஸ் என்றாலே கடுப்பாகி விடுவான். அவன் செய்து இருக்க வாய்ப்பு இல்லை. எதற்கும் இருக்கட்டும் என்று அவனிடம் விசாரித்தாள்.

"என்ன அஷோக், உனக்கு கிப்ட் கொடுக்க வேண்டும் என்றால் கையில் நேரடியாகக் கொடுக்க மாட்டாயா? ஹாஸ்டலுக்கு பார்சலில் மொபைல் போன் எல்லாம் அனுப்புகிறாய்?" என்று கேலியாகக் கேட்பது போல விசாரித்துப் பார்த்தாள் அஞ்சலி.

"ஹேய் மவுஸ்! உனக்கு மொபைல் வேண்டும் என்று நேரடியா கேட்க வேண்டியதுதானே! நாளைக்கே வாங்கித் தரேன்!" என்று அவன் கேலி செய்ய, அவன் புது மொபைல் வாங்காமல் தடுக்க பிரம்மப் பிரயத்தனம் செய்ய வேண்டியதாகி விட்டது.

சாவித்திரி அம்மாவிடம் விசாரித்தாள். "யார் கொடுத்தார்கள் என்று பார்க்கலையே அஞ்சலி. எனக்குச் சந்தேகமே வரவில்லையே! முதலில் அது போன் என்றே எனக்குத் தெரியாதே! உன் பேர் அட்ரஸில் இருந்தது. வாங்கி உன் அறையில் வைத்தேன்!" என்று கைகளை விரித்து விட்டார்.

"உனக்கு யார் இந்த கிப்டைக் கொடுத்து இருந்தாலும் உன்னிடம் பேசுவார்கள் இல்லையா, அஞ்சலி? அப்போ தெரிஞ்சுடப் போகுது!" என்று சாவித்திரி அம்மா சொன்னதால், வரப்போகும் முதல் அழைப்பை எதிர்பார்த்து படபடப்புடன் காத்து இருந்தாள். அவனாக இருக்கலாம் என்று நூறு சதவிகிதம் நிச்சயமாகத் தோன்ற, அதே

நேரத்தில், அவன் எதற்காகத் தனக்குக் கொடுக்க வேண்டும் என்ற கோபத்துடன் கூடிய சந்தேகம் இரு நூறு சதவிகிதம் நிச்சயமாகத் தோன்றியது. இந்த முரண்பட்ட நிலை அவளுக்கு மேலும் எரிச்சலை மூட்டியது.

அவளது பொறுமையை வேண்டிய அளவு சோதித்து விட்டு, இரவு எட்டரை மணி அளவில், அந்த அலை பேசியில் முதல் அழைப்பு வந்த போது, அலைபேசியில் 'பாலா காலிங்...' என்ற எழுத்துக்கள் அவனின் புகைப் படத்தோடு மின்னியது.

# 4

லலிதாவும் பாலாவும் திருமணத்திற்காகச் சென்னைக் குச் சென்று இருக்க, அரை நாள் விடுப்புக் கொடுத்து வீட்டில் இருந்த வேலைக்காரர்களை அனுப்பி விட்டு, செல்வகுமார் சமையலில் இறங்கினார். அவருக்குத் தெரிந்த தக்காளிச் சாதம் செய்ய அரிசியைக் கழுவி குக் கரில் வைத்தவர், 'விழி மூடி யோசித்தால் அங்கேயும் வந்தாய் பெண்ணே! பெண்ணே!' என்று கார்த்திக்கை ஸ்பீக்கரில் உருகவிட்டபடி, தக்காளியை நறுக்கத் தொடங்கியபோது அழைப்பு மணி ஒலித்தது.

வந்து திறந்தவர் வாசலில் ஆளுக்கு ஒரு புறம் பார்த்த படி நின்று இருந்த மனைவியையும் மகனையும் பார்த்து வியப்படைந்து, 'நினைத்தேன் வந்தாய் நூறு வயது. கேட்டேன் சொல்வாய் ஏன் திடீர் வரவு?' என்று



சிரித்தபடி பாட்டிலேயே மனைவியிடம் கேட்டார் செல்வ குமார்.

'அதை அங்கே கேளுங்க...' வெடுக்கென்று சொல்லி விட்டு வேகமாகத் தன்னுடைய அறைக்குப் போனார் லலிதா.

''பாலா! அம்மாக்கு என்ன கோபம்?'' என்று மகனிடம் கேட்டால், அவனிடம் இருந்து அதிக பட்சப் பதிலான, 'ப்ச்!' வந்தது.

''நீங்க காலையில் வருவீங்க என்று சமையல் ஆளை அனுப்பி விட்டேன். நானே சமைக்கலாம் என்று நினைத் தேன். இப்ப உங்களுக்கும் சாப்பாடு பண்ணணுமா? சாப்பிடுவதில் உங்களுக்குப் பிரச்னை இல்லை என்றால் பண்ணுவது எனக்குப் பிரச்னை இல்லை. எப்படி வசதி?'' என்று விசாரித்தார்.

''அவனுக்கு வேண்டாம். அவருக்கு பெ...ரி..ய பிசி னெஸ் டின்னர் இருக்கு...'' என்று அதற்கும் பதில் லலிதாவிடம் இருந்தே வந்தது.

'பாலா, அம்மாவை அவளோட இஷ்டம் இல்லாமல் அங்கிருந்து கடத்திக் கொண்டு வந்து விட்டாயா?' என்று ரகசியமாக விசாரித்தார்.

'ஆமாப்பா!' என்று ஒற்றை வார்த்தையில் மகன் முடிக்க, 'பிசினெஸ் வேலையா? போகும்போது நீ அப்படிச் சொல்லவில்லையே? போக, சென்னையில் நடக்கும் கைத்தறிக் கண்காட்சியைப் பார்க்காமல் நீ வர மாட்டாயே? ரெண்டு வருஷமா ஒவ்வொரு கண்காட்சியை யும் தேடித் தேடிப் போவாயே? ஏன் பார்க்காமல் வந்து விட்டாய்? ரொம்ப முக்கியமான வேலையா?'' என்று துருவினார் செல்வகுமார்.

''அப்பா, தலை வலிக்குது. ஒரு காபி கிடைக்குமா?'' என்று நிதானமாகக் கேட்டான் பாலா. இது பற்றி மேலே பேச நான் விரும்பவில்லை என்பதைச் சொல்லாமல் சொல்லும் யுக்தி அது. மகனின் எல்லைக் கோட்டைத் தாண்ட விரும்பவில்லை என்றாலும் செல்வகுமாருக்குக் குறுகுறுவென்று இருந்தது. இன்று அவனுடைய வாழ்வில் முக்கியமான ஏதோ நடந்து இருக்கு. அது என்ன?

அவனுடைய கடந்த இரண்டு ஆண்டு காலப் பழக்கத்தைப் பற்றிய அந்தச் செய்தி என்ன? எந்த ஊரில் கண்காட்சி நடந்தாலும், தேடித் தேடிப் போய்த் தொழில் பக்தியோடு, பல விதமான விபரங்கள் சேகரித்து வரும் அவன் சென்னையில் நடைபெறும் தேசிய அளவிலான கண்காட்சியை மிஸ் பண்ண வைத்த அந்த விஷயம் என்ன என்று அவருக்கு மண்டை காய்ந்தது. ஒருவேளை முன்பு அவன் போனது தொழில் சம்பந்தமாக இல்லையோ?

தானும் இவ்வளவு அழுத்தம் இல்லை. லலிதாவும் அழுத்தம் இல்லை. அப்பா மாதிரியே இவன் ஏன் இப்படி எல்லாவற்றையும் மனதிற்குள் மூடி மூடி வைத்துக் கொள்கிறான்? பரம்பரைக் குணம் தொடருதோ, என்று மனதிற்குள் எண்ணியபடி காபியுடன் அவனின் அறைக்கு வந்தார்.

'பாலா! காபி வச்சு இருக்கேன். சாப்பாடு உனக்கும் செய்யட்டுமா?'

'வேண்டாம்பா! என்ற அவனுடைய சுருக்கமான பதில் பிசினெஸ் டின்னர் இல்லை என்பதை உறுதி செய்தது. யோசனையுடன் அறைக்கு வந்தவர் மனைவியிடம் என்ன துருவியும் விஷயம் சேகரிக்க முடிய



வில்லை. வாயைத் திறந்தால் அவனைத் திட்டுவது மட்டுமே பிரதானமாக இருந்தது.

''எனக்குத் தெரிந்தால் சொல்ல மாட்டேனா? நான் என்ன வச்சுக்கிட்டா வஞ்சனை பண்றேன்? அவன் என்ன நினைக்கிறான் என்று அவனுக்கே முழுசா தெரியுமோ தெரியாதா? சரியான லூசு, முட்டாள், திமிர் பிடித்தவன், சொல் பேச்சு கேட்காதவன், மகா அழுத்தம், உலகத்திலேயே தான் ஒருவன் மட்டும் புத்திசாலி என்ற நினைப்பு, அடுத்தவர்கள் எல்லோரும் இவனுக்குப் பணிந்து செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு...'' இன்னும் என்னென்னவோ சொல்லிப் புலம்பித் தள்ளினார் லலிதா.

''சரி, நீ கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு. நான் போய்ச் சமையலைப் பார்க்கிறேன்,'' என்று சொல்லிவிட்டு வெளியே வந்தார் செல்வகுமார்.

சமையலை முடித்து அடுத்து இரண்டு மணி நேரம், தொலைக்காட்சியில் எத்தனையோ சுவாரஸ்யமான நிகழ்ச்சிகளைக் காட்டி லலிதாவை அழைத்தபோதும் அவர் அறைக்குள் இருந்து வெளியே வரவே இல்லை. அம்மாவுக்கும் மகனுக்கும் இடையே அவ்வப்போது இது போன்ற சின்னச் சின்னச் சண்டைகள் வரும்தான். ஆனால் இவ்வளவு நேரம் நீடிக்காதே?

பெரும்பாலான சமயங்களில் லலிதா சிறு பிள்ளைத் தனமாகச் சண்டை போட்டாலும், அவன் அந்தப் பக்கம் நகர்ந்த உடனே சமாதானமும் ஆகி விடுவார். கிட்டத் தட்ட மூன்று மணி நேரம் இங்கேயும், அதற்கு முன்பும் சென்னையில் இருந்து கிளம்பி இங்கே வந்து சேர்வதற்கு ஆகி இருக்கக் கூடிய மூன்று மணி நேரமும் என

மொத்தமாக ஆறு மணி நேரம் அவர்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லை என்பதை அவரால் ஊகிக்க முடிந்தது.

யோசனையோடு, மகனுக்குப் 'பேசலாமா?' என்று மொபைலில் குறும்செய்தி அனுப்பினார். சில வினாடி களிலேயே அழைத்தவன், 'என்னப்பா?' என்று விசாரித் தான்.

''அம்மா மூணு மணி நேரமா ஒண்ணுமே பேசலை. ரூமை விட்டு வெளியே வரலை. அவளுக்கு அப்படி என்ன கோபம்? என்ன சொன்னாய் அவளை? சாப்பிடக் கூட வரமாட்டேன் என்கிறாள்? எனக்கு இது பிடிக்கலை. அவள் அப்படி இருக்கும் ஆள் இல்லை. உடனே என்ன சண்டையாக இருந்தாலும் அவளைச் சமாதானம் செய்யும் வழியைப் பாரு. ப்ரீயா இருந்தால் நேரில் வா, இல்லாவிட்டால் போனிலாவது உடனே பேசு!'' என்று அதட்டலாகச் சொல்லிவிட்டு அவனின் பதிலை எதிர்பாராமல் போனை வைத்து விட்டார் செல்வகுமார்.

* * *

திருமண வீட்டில் இருந்து தன் அறைக்கு வந்த பிறகு, ஏகப்பட்ட குழப்பங்களுடன், தீவிரமான சிந்தனை களுடன் பொழுதைக் கழித்த அஞ்சலிக்கு, இரவு உணவு கூடத் தேவைப் படவில்லை. இந்த மொபைல் கொடுத் தவர் யார் என்று தெரியாமல் அவளுக்குப் பசி கூட மரத்துப் போனது. சாவித்திரி அம்மாவின் வார்த்தை களில் இருந்த லாஜிக்கை நம்பி முதல் அழைப்பு வரப் படபடப்புடன் காத்து இருந்தாள் அஞ்சலி. இரவு எட்டரைக்கு போன் வந்தபோது 'பாலா காலிங்' என்ற எழுத்துக்களையும் அவனின் புகைப்படத்தையும் பார்த்து விக்கித்துப் போனாள்.



கடைசியில் இந்த மொபைலைப் பரிசாகக் கொடுத்தது பாலாதானா? இப்போது எதற்கு அழைக்கிறான்? என்ன பேசுவது? குழப்பத்தோடு போனை உயிர்ப்பித்த வளுக்கு, அவனிடம் சுமுகமாகப் பேசுவதா? நீ யார் எனக்குப் பரிசு கொடுக்க என்று சத்தம் போடுவதா என்ற குழப்பமே தீரவில்லை. அதனால் அவள் மௌனம் நீடித்தது.

''ப்ச்! எவ்வளவு நேரம் போனைக் காதில் வச்சுட்டுப் பேசாம இருப்பீங்க? இன்னுமா கோபம் தீரலை?'' என்ற பாலாவின் தண்மையான குரல் கேட்டு அவளுக்கு ஆச்சரியம் வந்தது.

'என்ன பேசுகிறான் இவன்? எப்ப பேசினாலும் தலை யும் இல்லாமல் வாலும் இல்லாமல்தான் பேசுவானா? பேசுவது எதுவுமே எதிரில் இருப்பவருக்குப் புரியக் கூடாது என்ற விரதம் எடுத்து இருக்கானா? கோபம் இருந்தது உண்மைதான். இவன் இப்படித் தழைந்து பேசினால் கோபம் குறைவது மாதிரி இருக்கு. ஒரு சாரி சொல்ல மாட்டானா?' அவளின் யோசனையை அவ னின் தொடர்ந்த குரல் கலைத்தது.

ஒரு நீண்ட பெருமூச்சை வெளியேற்றி, ''காலையில் உங்களிடம் அப்படி நடந்துகிட்டதுக்கு சாரி. போதுமா?'' என்று சொல்ல அஞ்சலிக்கு மூச்சடைத்தது. இவனுக்கு டெலிபதி தெரியுமா? தான் எண்ணி முடித்த வினாடி யில் ஸாரி சொல்லி விட்டானே!

அவன் இவ்வளவு தூரம் இறங்கிப் பேசும்போது தான் இன்னும் கோபமாக இருப்பது சரி இல்லை. முயன்று குரலைச் சீர்ப்படுத்தி, 'இட் இஸ் ஓகே!' என்று சொல்ல

முயன்றாள். முயற்சி வெற்றி அடையவில்லை. அதற்குள் அவனின் குரல் இடையிட்டது.

"என்னைப் பார்த்த ஞாபகமே அவளுக்கு இல்லைம்மா. அப்படி இருக்கும் போது அவளிடம் போய், நீங்க என்னைப் பற்றி ஏதாவது சொல்லுவது என்றால், எனக்கு என்னவோ யாசகம் கேட்பது மாதிரி இருக்கும்மா!" என்ற பாலாவின் வார்த்தைகளில் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"ஹய்யோ! அவன் அவங்க அம்மா என்று எண்ணிப் பேசிக் கொண்டு இருக்கிறான். எப்படி இந்தக் குழப்பம் நிகழ்ந்தது? இத்தனை நேரம் பேசாமல் இருந்ததை வேறு தப்பாக எடுத்துக் கொள்வானோ?" என்ற பதட்டத்தில் மேலும் தொண்டை அடைத்துக் கொண்டது.

"நான் அஞ்சலி... உங்க அம்மா இல்லை..." என்ற வார்த்தைகளைச் சொல்லி முடிப்பதற்குள் அவளுக்கு நாக்கு உலர்ந்து போனது.

"வா...ட்? அ...ஞ்..ச..லி..யா?" என்று ஒரே ஒரு வினாடி மட்டும் திகைத்தவன், அந்த அமைதிக்கும் சேர்த்து வைத்து அடுத்த சில வினாடிகளில் கேள்விக் கணைகளை அடுத்தடுத்துத் தொடுத்தான்.

"இவ்வளவு நேரம் வாயில் என்ன வச்சு இருந்தாய்? போனை எடுத்த உடனே ஒரு ஹலோ சொல்லி இருக்கலாம் இல்லையா? அம்மா போன் காணாமல் போய் விட்டதாக என்னிடம் சொல்லக் கூட இல்லையே! உன்னிடம் இந்த போன் எப்படி வந்தது? ஏதாவது பதில் சொல்லேன்..." என்று எரிச்சலோடு கேள்விகளை அடுக்கினான்.



அதுவரை இருந்த குழப்பத்தையும் தயக்கத்தையும் பாலாவின் இந்த ஆத்திரமான கேள்விகள் போக்கி விட்டன. என்ன இவன், எப்போது பார்த்தாலும் அடுத்தவரிடம் தப்புக் கண்டு பிடிப்பதிலேயே குறியாக இருப்பானா? யார் என்ன பேசுகிறார்கள் என்று பொறுமையாகக் கேட்கவும் மாட்டான். இவனும் தெளிவாகப் பேச மாட்டானா? திமிர் பிடித்தவன். இவனைச் சும்மா விடக் கூடாது என்று எண்ணியவளுக்குச் சுறுசுறுவென்று எரிச்சல் மூண்டது.

"ஹலோ மிஸ்டர் பால முருகன்! நீங்க உங்க மனசில என்னதான் நினைச்சுகிட்டு இருக்கீங்க? நானும் காலையில் இருந்து பார்க்கிறேன். உங்க வாய்க்கு வந்தபடி எல்லாம் என்னென்னவோ பேசறீங்க? நான் ஒண்ணும் அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படும் பொண்ணு இல்லை. முடிந்தால் என்னிடம் உள்ளதை அடுத்தவருக்குக் கொடுத்துதான் எனக்குப் பழக்கம்..."

"ஆமாம். அப்படிக் கொடுத்ததை மறந்து விடுவது பழக்கம்தான்..." குத்தலாக இடையிட்டது பாலாவின் குரல்.

"ஹலோ! சும்மா வாய்க்கு வந்தபடி உளறாதீங்க. யாருக்கு என்ன கொடுத்தாலும் அதை நினைவு வைத்துக் கொள்ளாமல் இருப்பது கொடுத்தவருக்கு ரொம்ப நல்லது. வாங்கியவர்கள் தான் நன்றி மறக்கக் கூடாது. வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக்கூடாது என்று எங்க அப்பா சொல்லி இருக்காங்க. இந்த மொபைல் இங்கே எப்படி வந்தது என்று எனக்குத் தெரியாது. புது மொபைல். கிப்ட் ராப் பண்ணி, என் பெயரிட்டு, ஆசிரம முகவரியில் கொடுத்து இருக்காங்க..."

''வாட்? ஆசிரமமா? ஏன்?....'' அவனின் அதிர்ந்த கேள்வியை லட்சியமே செய்யாமல் தொடர்ந்தாள்.

''அனுப்புனர் பகுதியில் எந்த முகவரியும் இல்லை. இதைக் கொடுத்தது யார் என்று கடந்த நாலு மணி நேரமா மண்டையைப் பிச்சுகிட்டு நான் இருக்கேன். யார் கொடுத்தாங்க என்று தெரியாமல் அதை நான் எப்படி யாரிடம் திருப்பிக் கொடுப்பது? எனக்கு யாரும் எந்தப் பரிசும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. நீங்க என்னடாவென்றால் நான் உங்களை மயக்க வந்த மோகினி மாதிரியும், நீங்க பெரிய விசுவாமித்திரர் மாதிரியும் பேசிகிட்டு இருக்கீங்க...''

''ஹேய் சாரி... நான்...'' தயங்கி இடையிட்ட அவனின் குரல் அவள் காதில் விழுந்த மாதிரித் தெரியவில்லை. ஆத்திரத்தில் சிவந்த கண்களுடன் பேசிக் கொண்டே போனாள்.

''இப்ப சொல்றேன், கேட்டுக்கோங்க, எனக்கு உங்க மேலே இஷ்டம் இல்லை. நீங்க மட்டும் இல்லை, எந்த விஸ்வாமித்திரரும் எனக்கு வேண்டாம். நான் உண்டு, என் ஆஸ்ரமக் குழந்தைகள் உண்டு என்று நிம்மதியா இருக்கிறேன். இன்னொரு முறை தேவை இல்லாமல் என்னைச் சீண்டாதீங்க. சொல்லிட்டேன். உங்க பரிசு எனக்கு வேண்டாம்...''

''அது நான் கொடுக்கவில்லை...'' என்று பலகீனமாக அவன் சொன்னது அவன் காதிலேயே விழுந்ததோ என்னவோ?

''... இந்த மாதிரிப் பொருளுக்கு ஆசைப்படும் சராசரிப் பொண்ணு நான் இல்லை. என்னால் இத்தனை நாள் ஒரு மொபைல் வாங்க முடியாமலா மொபைல் வைத்துக்



கொள்ளாமல் இருந்தேன் என்று நினைத்தீர்கள்? எனக்கு அந்த சக்தி இல்லையா என்ன? எனக்கு எந்த மாடர்ன் வசதியும் தேவை இல்லை. இந்த வசதிகளால் நான் ஏற்கெனவே இழந்ததே போதும். இனிமேல் இழக்க என்னிடம் ஒண்ணுமே இல்லை...'' என்று அதுவரை ஆத்திரமாகப் பேசியவளுக்கு அப்பாவின் நினைவில் கண்கள் கசிந்தன. கண்ணில் நீர் வரத் தொண்டைக்குள் வார்த்தைகள் சிக்கிக் கொண்டன.

அவளின் அந்தக் குழறலான வார்த்தைகளும், கண்ணீர்க் குரலும் பாலாவின் மனதை உலுக்க, 'அ..ஞ்..ச..லி...' என்று மென்மையாக அழைத்தான்.

சில கணங்கள் இடைவெளியில் தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''இந்த போன் இன்னும் ரெண்டே நாளில் உங்க முகவரி தேடி வந்து விடும். நாளைக்குக் காலையிலேயே அனுப்பி விடுகிறேன். இனி ஒரு முறை உங்களை நான் பார்க்கவோ, பேசவோ நிகழக் கூடாது என்று அந்த ஆண்டவனை நான் மனமார வேண்டிக் கொள்கிறேன். குட் பை!'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டு போனை வைத்தவளின் கண்களில் கண்ணீர் தாரை தாரையாய் வழிய ஆரம்பித்தது. அதைத் துடைக்கக் கூட மனமின்றி அப்படியே படுக்கையில் சரிந்து தேற்றுவார் இன்றித் தேம்பி அழ ஆரம்பித்தாள் அஞ்சலி.

# 5

அஞ்சலி தன்னிடம் பேச ஆரம்பிக்கும்போது முதலில் ஆத்திரமாகக் கேள்விகளை எழுப்பினாலும், அழுகையில்

பேச்சு வார்த்தையை முடித்ததைப் பார்த்து அதிர்ந்து போன பாலா பல வினாடிகளுக்கு இருந்த இடத்தை விட்டு அசையவே இல்லை. அவனுக்குப் பல அதிர்ச்சிகள் அடுத்தடுத்த சில வினாடிகளில் வந்து குவிந்து விட்டன.

அவள் ஏன் ஆசிரமத்தில் இருக்கிறாள்? அவளுடைய பெற்றோர்க்கு என்ன ஆச்சு? மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்த அந்த சந்தோஷமான குடும்பச் சூழல் இப்போது அவளுக்கு இல்லையா? என்ன ஆச்சு? இரண்டு பேருமே தவறி விட்டார்களா? ஏதாவது விபத்தாகத்தான் இருக்க வேண்டும்? இனிமேல் இழக்க என்னிடம் ஒன்றும் இல்லை என்ற அவளின் வார்த்தைகள் அவனின் மனதைத் துளைத்தன.

பெற்றோரை இழந்து நிராதரவாய் நின்ற அந்தச் சமயத்தில் அவள் எப்படி எல்லாம் வருந்தி இருப்பாள்? அப்போது அஷோக்கின் குடும்பத்தினர்தான் ஆதரவாய் நின்று இருக்க வேண்டும். அதனால்தான் அவள் அவனிடம் அத்தனை ஒட்டுதலாய் இருந்தாளோ? முன்பும் அப்படித்தான்.

அஷோக்கைத் தேடி வந்துதான் தன்னை... ப்ச்! ஏன் எனக்கு மட்டும் நாளைக்கு நூறு முறை அவளின் முகம் இப்படித் தோன்றி வதைக்க வேண்டும்?

அவளுக்குத் தன் முகத்தைப் பார்த்த நினைவு துளி கூட இல்லையா? அந்த இடத்தில் வந்து மீண்டும் சிந்தனை நின்று விட்டது. இருவர் பார்த்ததும் ஒரே அளவு நேரம்தானே! ஒரு நிமிடம் இருக்கலாமா? அந்த நேரத்தில் அவளின் முகம் தன்னை இவ்வளவு தூரம் பாதித்து இருக்கிறதே?



மிக அருகில், தொட்டு விடும் தூரத்தில், பார்த்தது தான் ஒரு நிமிடம். ஆனால் அப்புறம் அங்கே கண் படும் தூரத்தில் கண்காட்சியில் சுற்றியது இருபது நிமிடங்கள் இருக்கலாமே! அப்போது பார்த்தது இவளுக்கு நினைவில்லையா?

அவளை மீண்டும் பார்க்கும் ஆவலில் ஜவுளித்துறை நடத்தும் அத்தனை கண்காட்சிகளையும் தேடித் தேடி அலைந்து இருக்கிறேனே! அவள் சொன்ன ஒரு வார்த்தைக்காக, தன்னுடைய டெக்ஸ்டைல் டிசைனிங் நிறுவனத்திற்கு 'அழகன் டிசைனிங் சென்டர்' என்று பெயர் வைத்து இருக்கிறேனே! தான் அவளைக் கொஞ்சம் கூடப் பாதிக்கவில்லை என்ற உண்மை அவனை வதைத்தது.

பள்ளிக் குழந்தைகளுக்கே வசதியான பெற்றவர்கள் மொபைல் வாங்கிக் கொடுக்க, இவள் மொபைல் கூட வைத்துக் கொள்ள வில்லையா? அவளிடம் மொபைல் இல்லை என்பதே அவனுக்கு இப்போதுதான் தெரியும். அவளுக்கு யார் கிப்ட் கொடுத்து இருப்பார்கள் என்று யோசிக்க ஆரம்பிக்கும்போதே, அதில் இருந்த சிம் கார்ட் அவனுக்கு விளக்கம் சொன்னது. அம்மாவின் வேலையாகத்தான் இருக்கும்.

போன் எங்கே என்று கேட்பார்கள் என்ற தயக்கமோ அல்லது பழைய மொபைல் கொடுக்க வேண்டாம் என்ற எண்ணமோ தோன்றிப் புதுச வாங்கி விட்டார்கள். அவளுடன் தன்னைப் பேச வைக்க ஒரு சுலபமான வழி இந்த சிம்கார்டைப் போடுவதா? அம்மாவுக்குத் தன் மேல் அன்பு ஜாஸ்தி என்று தெரியும். ஆனால் தனக்கு அவளைப் பிடித்து இருக்குமோ என்ற சந்தேகத்தில் அஞ்சலிக்குப் புதிய மொபைல் பரிசளிப்பது என்றால் அம்மா கிரேட்தான்.'

செய்றதெல்லாம் செய்து விட்டு, கோபம் மாதிரி ஆக்டிங்கா? லலிதா மேடம்! நீங்க இவ்வளவு புத்திசாலியா இருக்க வேண்டாம். சிரிப்போடு, காரை வீட்டுக்குத் திருப்பினான் பாலமுருகன். வீட்டில் நுழையும் போதே ஹாலில் இருந்த அப்பாவிடம், 'சாப்பிட்டாச்சப்பா...?' என்று விசாரித்தான்.

'இன்னும் இல்லை. அம்மா வரவில்லையே!' என்று கவலையோடு சொன்னவரைப் பார்த்து, 'சீக்கிரம் வந்துடு வாங்க. போய்ச் சாப்பாடு எடுத்து வைங்க!' என்று அவரின் அறைக்குள் நுழைந்தான்.

'அம்மா, டின்னர் என்று கூப்பிட்டு ஸ்நாக் மட்டும் கொடுத்து கழுத்தை அறுத்துட்டாங்க. லக்ஷ்மி மில்ஸ் நிர்வாகத்தினர் எப்போதில் இருந்து இவ்வளவு கஞ்சமா எப்படி மாறினாங்க என்று தெரியலை. சாப்பிடலாமா?' என்று புலம்பியபடி கட்டிலில் அமர்ந்தான் பாலா.

'நீ வார்த்தைகள் பிரயோகம் பண்ணுவதில் தாராளமா ஆன உடனே அவர்கள் பணம் செலவு பண்ணுவதில் கஞ்சமா ஆகிட்டாங்க போல.'

'அவங்க கஞ்சமா, தாராளமா என்பது பற்றிய விவாதம் இருக்கட்டும். ஹோட்டல் ப்ளூ மவுன்ட்ல் இருந்து எனக்கு போன் பண்ணி இருந்தாங்க. நீங்க யாருக்கோ சென்னையில் ஏதோ ஒரு கிப்ட் பார்சல் கொடுக்கச் சொல்லி இருந்தீங்களாம். அதைச் சரியான இடத்துல சரியான நேரத்துல, டெலிவரி பண்ணிட்டோம் என்று எனக்கு போனில் சொன்னாங்க. வேலை சொன்ன நீங்க காண்டக்ட் பண்ண வீட்டு லேண்ட் லைன் நம்பரையும் குறிச்சுக் கொடுத்து இருக்கலாம்,' என்று சொல்லி விட்டுத் தன்னுடைய அறைக்குப் போய் விட்டான் பாலமுருகன்.



அவன் சொன்ன வார்த்தைகளில் லலிதாவிற்குத் தூக்கி வாரிப் போட்டது. இதை இன்று இல்லாவிட்டாலும் அவன் கண்டு பிடித்து விடுவான் என்று தெரியும்தான். ஆனால் அவனாகத் துப்பறிந்து கண்டு பிடிப்பது எப்படி? இப்படி ஹோட்டல் நிர்வாகத்தினர் போட்டு உடைப்பது எப்படி? இந்தக் கோபத்தையும் அவளின் மேல் காட்டுவானோ? முதலில் இவனுக்கு அவள் மேல் இன்ட்ரெஸ்ட் இருக்கு என்ற தன்னுடைய சந்தேகம் சரியா? அவசரமாக எழுந்து அவனின் அறைக்குப் பின்னாலேயே வந்தார் லலிதா.

முகத்தைத் துடைத்தபடி குளியல் அறையில் இருந்து வெளியே வந்தவன், ''என்னம்மா இங்கே இருக்கீங்க? டின்னர் ரெடியா?'' என்று கேட்டான்.

'டின்னர் தரேன். சென்னையில் இருந்து யார் பேசினாங்க?'

''நீங்க யார் எல்லாம் என்னிடம் பேசணும் என்று எதிர்பார்த்தீங்களோ, அவங்க எல்லோரும் பேசினாங்க!'' என்று அவனும் கவனத்துடன் பதில் சொன்னான்.

''நல்லபடியா பேசினாயா?'' என்று பதட்டத்துடன் கேட்டார் லலிதா.

''நல்லபடியா பேசாமல்? மைதிலியிடம் கோபப்படும்படி அவள் என்ன தப்பு பண்ணினாள்?''

''டேய்! நான் மைதிலியைச் சொல்லவில்லை...''

''அம்மா, நீங்க யாரைச் சொன்னீங்க என்று எனக்குத் தெரியும். அவங்களும் பேசினாங்க. ஆனால் நீங்க நினைச்ச மாதிரி இல்லை. எனக்கு என்று சில கொள்கைகள் இருக்கு. பார்ப்பவங்களுக்கு அது பைத்தியக்காரத்

தனமாத் தெரியலாம். அதை என்னால் யாருக்காகவும் மாற்றிக் கொள்ள முடியாது. நீங்க அவசரப்பட்டு எதை யாவது செய்தால், அது எங்களுக்கு இடையே உள்ள தூரத்தை இன்னும் அதிகப்படுத்தும், இ..ன்..று... ந..ட..ந்..த..து போ..ல இனிமேல் இப்படி எதுவும் அசட்டுத் தனமாகச் செய்ய முய்லாதீர்கள்!'' என்று முடித் தான்.

''எங்களுக்கு இடையில் உள்ள தூரத்தை அதிகப் படுத்தும். இன்று நடந்தது போல...'' என்ற பாலாவின் வார்த்தைகளில் அதிர்ந்து போனார் லலிதா. திகைப்புடன் அதிர்ந்து நின்றவரைத் தோளில் கை வைத்து உணவருந்த அழைத்துச் சென்றான் பாலமுருகன். கால்கள் தம் போக்கில் நடந்து கொண்டு இருக்க, மனம் யோசனையில் மூழ்கியது.

நாம் ஒன்று நினைத்தால் அது ஒன்று நடக்கிறதே! இவன் எப்போது கல்யாணத்திற்கு ஒத்துக் கொள்வான்? இவன் வயசில் இருக்கும் எல்லாருக்கும் கல்யாணம் முடிந்து விட்டது. மூன்று வருடமாக டிமிக்கி கொடுத் துக் கொண்டே இருக்கிறானே! 'கண்டேன் சீதையை' என்ற அவனின் கண்களில் தெரிந்த உற்சாகத்தைப் பார்த்து விரைவில் டும்டும் கொட்டலாம் என்று நம்பிக்கை வளர்த்தால், அந்தச் செடியின் வேரிலேயே வெந்நீர் ஊற்றிப் போகிறானே?

* * *

பாலாவிடம் போன் பேசி வைத்துவிட்டுப் படுக் கையில் சரிந்து வெகு நேரம் கண்ணீர் சிந்தியவள் அப்படியே உறங்கி இருக்க வேண்டும். இரவு உணவு உட்கொள்ளாமல் தூங்கி விட்டதால், அதிகாலை நாலு



மணிக்கு அஞ்சலிக்கு விழிப்பு வந்து விட்டது. அருகில் கிடந்த மொபைல் போன் முந்தைய இரவு நிகழ்ச்சிகளை மறு ஒளிபரப்பு செய்ய, அவளுக்குத் தானா அப்படி மனம் உடைந்து ஒரு மூன்றாவது நபரிடம், அதுவும் நேரில் கூட இல்லாமல் போனில் பேசும்போது அழுதது என்ற ஆச்சரியம்தான் முதலில் தோன்றியது.

அவன் வெடுக்கென்று எப்போதும் தன்னைக் குற்றம் சாட்டுவது போன்ற பாணியில் பேசுவது கோபம் வர வழைக்கிறது. அப்படிப்பட்ட கல் நெஞ்சம் படைத்த ஒருவனிடம் தான் மனம் உடைந்து அழுவது எப்படிச் சாத்தியம்? தன்னுடைய தந்தையின் மறைவிற்குப் பிறகு, அஷோக்கிடம் எப்போதாவது அவர் குறித்துப் பேசுவாள். ஆனால் அவள் ஆரம்பிக்கும்போதே அவன் பேச்சை மாற்றி விடுவான். தந்தை இறந்த வீட்டில் தவிர அதற்குப் பிறகு அவள் அழுதது கிடையாது. மனம் வாடிச் சோகமாக அமர்ந்து இருக்கிறாள். ஆனால் கண்ணீர் பெருக்கியது இல்லை.

அப்படி இருந்த தன்னை இந்த மொபைல் போன் இவ்வளவு தூரம் பாதித்து விட்டதா? பாலா போன் அனுப்பி இருக்க மாட்டான் என்று அந்த அழைப்பு வரும் முன்பு தனக்கு இருந்த உறுதி தகர்ந்து போனதை எண் ணும்போது அஞ்சலிக்கு சந்தோஷமும் துக்கமும் சேர்ந்தே தோன்றின. 'தான் என்ன நினைக்கிறோம்?' என்று தன் மனநிலையையே அவளால் கணிக்க முடிய வில்லை.

அவன் அனுப்பி இருக்க வேண்டும் என்ற அடி மனத் தின் ஆசையை அல்லவா இந்த சந்தோஷம் காட்டு கிறது? அப்படி என்றால், கண்ட வினாடியில் ஒருவரிடம்

தன் மனதைப் பறி கொடுக்க முடியுமா? அப்புறம் நேற்றுப் போனில் நீ மட்டுமில்லை, எனக்கு யாருமே வேண்டாம் என்று வீர வசனம் பேசியது எல்லாம் பொய்யா?

அவன் வசம் தன் இதயத்தை இழக்க, அவன் பிரிய மாகப் பேசவில்லையே! பேசியது எல்லாம் நெருப்பு போன்ற வார்த்தைகள். இல்லை, முதலில் பேசியது சந்தோஷமாக, ''ஹாய் அஞ்சலி, ஹவ் ஆர் யு? பார்த்து மூன்று ஆண்டுகள் இருக்குமா?'' என்ற வார்த்தைகள் மீண்டும் ஒலித்தன.

இவனைப் பார்த்து இருக்கிறோமா? கோவையில் இருப்பதாக அந்த ஆன்ட்டி சொன்னார்கள். மூன்று ஆண்டு களுக்கு முன்பு என்றால், அந்த வருடம் முழுவதுமே, கோவைக்கு அவள் போனதே இல்லையே! சண்டிகரில் அப்பாவின் பதவி உயர்வுடன் கூடிய பணி மாறுதலில் இருந்தாள்.

அந்தக் காலத்தில் தான் டில்லி பல்கலைக் கழகத்தில் ஜர்னலிசம் டிப்ளமோ படித்தாள். அவளுடைய டிகிரியே அவள் சென்னைக்கு வந்த பிறகுதான். ஒரு ஆண்டு இடைவெளி விட்டு, மூன்றாம் ஆண்டுத் தேர்வினை முடித்தாள். அந்த ஓராண்டு இடைவெளி விட்டதால் தான், இன்னும் முதுகலைப் பட்டப் படிப்பினை முடிக்க வில்லை.

இவனை எங்கே பார்த்து இருக்கக் கூடும்? அதுவும் ஏதோ கொடுத்தேன் என்று வேறு சொன்னானே? அப்படி என்னத்தைக் கொடுத்தேனோ? அப்பா அம்மா ஏதாவது செய்து இருக்கலாமோ? இல்லை, அதற்கு வழி இல்லை. அவர்கள் உதவி செய்வது என்றால், பண வசதியில் குறைந்தவர்களாக இருக்க வேண்டுமே!



கோவையில் இருந்து சென்னைக்கு அத்தனை ரயில்கள் இருக்க, விமானத்தில் வந்து போகும், பக்கத்து வீட்டில் இருந்து சும்மா பழகியவர்களுக்கு ஏழாயிரம் ரூபாய் மதிப்பில் கைக்கடிகாரம் பரிசளிக்கும் ஒருவனுக்கு, மத்திய தரக் குடும்பத்தைச் சார்ந்த தானோ தன் பெற்றோர்களோ என்ன கொடுத்து இருக்க முடியும்?

அந்தத் திமிர் பிடித்தவன் கோபத்தில் அரை குறை யாக உளறுவதற்கு அர்த்தம் தேடிக் கொண்டு இருந்தால் சரி வராது. ஏற்கெனவே சொன்னபடி, மைதிலியிடம் அவர்களின் முகவரியை வாங்கி, இந்த போனை அனுப்பி விடலாம்.

காலையில் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிய பிறகு சாவித்திரி அம்மாவிடம் சொல்லி விட்டு அண்ணா நகர் கிளம்பினாள். இன்று இரவு மைதிலியும் அசோக்கும் தேனிலவிற்குக் கிளம்பிவிடக் கூடும். திரும்பி வர ஒரு வாரம் பத்து தினங்கள் ஆகலாம். நடுவில் தொந்தரவு செய்வது நாகரிகமாக இருக்காது என்று அவசரமாகக் கிளம்பி வந்தாள் அஞ்சலி.

''ஹேய் அஞ்சலி! வாட் எ சர்ப்ரைஸ்? உன்னைப் பார்க் கத்தான் நாங்க அங்கே கிளம்பிக் கொண்டே இருந் தோம்!'' என்று அவள் வாசல் படியில் கால் வைக்கையி லேயே கிளம்பித் தயாராக நின்ற மைதிலியும் அஷோக் கும் ஒரே குரலில் சொன்னார்கள்.

''நீங்க வெளியே போகவில்லையா? அங்கே ஆஸ் ரமத்திற்கு வந்து... என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்க முடியாமல் பாதியிலேயே நிறுத்தினாள் அஞ்சலி.

''நேற்று நீ வீட்டுக்கு வராமலே பாதியில் மண்ட பத்தில் இருந்து அப்படியே கிளம்பி விட்டாயா? நைட்

போனில் பேசும்போது பாதியிலேயே வைத்து விட்டாய். இங்கேயும் நாங்க பிசி...'' என்று அஷோக் சிரிப்புடன் மைதிலியின் புறம் திரும்ப, அவள் அவனின் புறங்கையில் கிள்ளினாள்.

''நேற்று விசாரிக்கவில்லை. இன்றும் விட்டு விட்டால் நான் திரும்பி வரப் பத்து நாளாகுமே? போவதற்கு முன்னால் உன்னைப் பார்க்கலாம் என்று கிளம்பினோம்!'' என்று அக்கறையுடன் சொன்னான் அஷோக்.

''நீ நேற்று பிசியா இருப்பாய் என்றுதான் தெரியுமே! அதனால்தான் உன்னைத் தொந்தரவு செய்யவில்லை. உன் ரூம் கண்ணாடி என்ன சொல்லிச்சு? மைதிலியை அறிமுகப்படுத்தினாயா?'' என்று கேலியாகச் சிரிக்க அப்படியே பேச்சு திசை மாறிப் போனது.

''சரி மைதிலி. நீ அஞ்சலியோடு பேசிட்டு இரு. நான் அரை மணி நேரத்தில் திரும்பி வந்து விடுகிறேன். ஹோப் யு டோன்ட் மைன்ட்!'' என்று கொஞ்சலாக விசாரித்தவன் கண்ணாலேயே அவளுக்குச் சேதி சொன்னான்.

மைதிலி சம்மதம் சொல்ல, 'இதென்ன பழக்கம் கல்யாணம் ஆன முதல் நாளிலேயே அவசரமா அவங்களை விட்டுட்டுத் தனியா எங்கே போகிறாய்?'' என்று அதட்டினாள் அஞ்சலி.

''உன்னைத் திட்டக் கூடாது என்று பார்த்தாலும் நீ அதற்கு சான்ஸ் கொடுப்பதே இல்லை சுண்டெலி. ஒரு பெரிய மனுஷன் அவசர முக்கிய வேலையா வெளியே போகும்போது, எங்கே போறேன் என்று யாராவது கேட்பாங்களா?'' என்று முறைத்தான் அஷோக்.



''ஹய்ய! நீ பெரிய மனுஷனும் இல்லை. நீ இப்ப போகக் கூடியது முக்கியமான வேலையும் இல்லை. பேசாமல் உட்கார். இல்லை, மைதிலியையும் கூட்டிட்டுப் போ!'' என்று அதட்டலாகச் சொல்ல அஞ்சலியின் கை பற்றி அழுத்தினாள் மைதிலி.

''அஞ்சலி! நான் கொஞ்சம் பேசணும். அவர் போகட்டும்!'' என்று சொல்லக் குழப்பத்தோடு தலை அசைத்தாள். நேற்றுதான் அறிமுகம் ஆன தன்னிடம், அஷோக் இல்லாமல் மைதிலி என்ன பேசக்கூடும் என்ற யோசனையில் அவள் இருக்க, ஸ்வீட், காரம், லெமன் ஜூஸ் என்ற சிற்றுண்டித் தட்டுடன் வந்த வளர்மதி முன்னால் இருந்த டீபாயில் வைத்துவிட்டு, ''சாப்பிடுங்க!'' என்று இருவரையும் பார்த்துச் சிரித்து விட்டுப் போனார்.

''எடுத்துக்கோங்க அஞ்சலி. லலிதா ஆன்ட்டி இன்று காலை பேசி உங்களை நல்லபடியா பார்த்துக்கச் சொல்லிச் சொன்னாங்க. அவங்களை எப்படித் தெரியும்?'' என்று மைதிலி கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விக்கித்துப் போய் அமர்ந்து இருந்தாள் அஞ்சலி.



## 6

'லலிதா ஆன்ட்டியை உனக்கு எப்படித் தெரியும்?' என்ற சாதாரணமான கேள்விக்குப் பதில் சொல்லத் திணறிய அஞ்சலியைப் பார்த்து வியப்படைந்தாள் மைதிலி.

''அஞ்சலி, நான் ஏதாவது தப்பாகக் கேட்டு விட்டேனா? உங்களுக்கும் அவங்களுக்கும் ஏதாவது கருத்து வேறுபாடா? சொல்ல இஷ்டம் இல்லை என்றால் விட்டுடுங்க!'' என்று சொன்னாள் மைதிலி. அஷோக் மனதிற்கு இனிய தோழியைத் தான் வந்த முதல் நாளே வருத்தத்திற்கு ஆளாக்கியதாக இருக்க வேண்டாம் என்று அவசரமாக அவளைச் சமாதானம் செய்ய முயன்றாலும், மனதிற்குள் கேள்வி மறையவில்லை.

''அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை. நேற்று உங்க கல்யாண வீட்டில் முதல் முறையாகப் பார்த்து நாலு வார்த்தை பேசிய அந்த ஆன்ட்டியிடம் எனக்கு என்ன சண்டை வரப் போகிறது? நீங்க திடீர் என்று அவங்களைப் பற்றிக் கேட்டதும் எனக்கு எதுக்குக் கேட்கறீங்க? என்ன பதில் சொல்வது? என்றே புரியலை. லலிதா ஆன்ட்டி யாரு என்றே நான் ஒரு நிமிஷம் யோசிக்க வேண்டி இருந்தது!'' என்று உண்மையைச் சொன்னாள் அஞ்சலி.

அவள் சொன்னது உண்மை என்றாலும், அதை நம்ப மைதிலி தயாராக இல்லை. அதை முகத்திற்கு நேரே சொல்லி அவளைக் கஷ்டப்படுத்தவும் அவளுக்கு விருப்பம் இல்லை.

''அவங்க ஒன்றும் சொல்லவில்லை. நான் கோவையில ஆறு வருஷம் அவங்க வீட்டுக்குப் பக்கத்தில் இருந்தேன். இப்ப ஆறு மாசம் முன்பு தான் சென்னைக்கு அலுவலக மாறுதல் காரணமா வந்தோம். உங்களை அங்கே பார்த்த ஞாபகம் இல்லை. அதனால் சொந்தமா? நட்பா? எப்படி அவர்களைத் தெரியும் என்று ஒரு ஆச்சரியம். அவ்வளவுதான். கல்யாணத்தில் உங்களைப்



பார்த்த உடனே ரொம்ப இம்ப்ரெஸ் ஆகிட்டாங்க போல. அவங்க பையனுக்குப் பொண்ணு பார்க்கலாம் என்று...'' சொன்னவள், அஞ்சலியின் அதிர்ந்த பார்வையில் பேச்சை நிறுத்தினாள்.

''சாரி, நான் ஏதேதோ உளறுகிறேன். நாம் வேற பேசலாம். நீங்க எங்களை ஏதாவது விஷயமா பார்க்க வந்தீங்களா?'' என்று பேச்சை மாற்றினாள் மைதிலி.

''நீங்க வாங்க போங்க வேண்டாம் என்று சொன்னேனே மைதிலி. பேர் சொல்லி வா போ என்றே பேசலாம். உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்...'' நாக்கைக் கடித்துப் பேச்சை நிறுத்தினாள் அஞ்சலி.

இப்பதான் அவர்களை எனக்குத் தெரியாது. கல்யாணத்தில் தான் பார்த்தேன் என்று சொன்னது உண்மை என்றாலும், இப்ப அவர்களின் முகவரி கேட்டால் மைதிலி என்ன நினைப்பாள்? எதற்கு என்று கேட்டால் என்ன பதில் சொல்வது? பதிலைச் சொன்னாலும் வம்பு. சொல்லா விட்டாலும் வம்புதான். ஏன் இப்படி அம்மாவும் பிள்ளையுமாகச் சேர்ந்து தன்னைத் தர்ம சங்கடத்தில் நிறுத்தி வைக்கிறாங்க?

அந்த போன் அவங்க அம்மாதான் அனுப்பி இருக்க வேண்டும். அவனுக்குத் தெரியவில்லை. அம்மாவிடம் பேசுவது மாதிரிதான் போனில் ஆரம்பித்தான். இப்போ மைதிலியிடம் தன்னைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி இருக்காங்க! அவங்களுக்குத் தன் மேல் அப்படி என்ன அக்கறை?

''என்னை வா போ என்று பேசச் சொல்லிவிட்டு, நீ வாங்க போங்க என்று ஏன் சொல்லணும்? என்ன அஞ்சலி. ரொம்ப யோசிக்க யோசிக்கப் பேசுவது மாதிரி இருக்கு.

ஏதாவது பிரச்னையா? என்னிடம் சொல்லத் தயக்கமாக இருந்தால் அத்தையை வேண்டுமானால் வரச் சொல்லட்டுமா?'' என்று அன்பாக விசாரித்தாள் மைதிலி.

''ஹய்யோ! அதெல்லாம் ஒன்றும் இல்லை மைதிலி. இனிமேல் எனக்குப் பெரிசா என்ன பிரச்னை வர முடியும்? நான் உன்...னி...ட..ம்.. ஒரு அட்ரஸ் விசாரிக்கணும். அந்த லலிதா ஆன்ட்டி போன் என்னிடம் தவறுதலா தங்கி விட்டது. அதைத் திருப்பி அனுப்பணும். அவங்க வீட்டு முகவரி கொஞ்சம் கொடுக்க முடியுமா?'' மூச்சைப் பிடித்துக் கொண்டு கேட்டு விட்டாள் அஞ்சலி.

மைதிலியின் முகத்தில் மீண்டும் வியப்பும் குழப்பமும் போட்டி போட்டன. ஆன்ட்டியோட போன் இவளிடம் ஏன் தங்கணும்? அவங்க காலையில் பேசும்போது இந்த விஷயம் சொல்லவில்லையே! ஆன்ட்டி போனைத் தவறி விட்டு இருக்க மாட்டார்கள். வேண்டும் என்றே இவளிடம் விட்டு விட்டுப் போய் இருக்க வேண்டும்.

அது ஒரு புறம் இருக்க, அந்த போனிலேயே எல்லா நம்பரும் இருக்குமே? வீட்டு எண்ணும் இருக்கும். பாலா அண்ணனின் நம்பரும் இருக்கும். அவர்களிடம் பேசி, போனை அனுப்புகிறேன் என்று சொல்லி இருக்கலாம். முகவரியையும் அங்கேயே விசாரித்து இருக்கலாம். அதை விட்டு விட்டுத் தன்னிடம் வந்து இப்படி மென்று முழுங்க வேண்டிய அவசியம் என்ன?

இவளுக்குப் பாலா அண்ணாவையும் தெரிந்து இருக்க வேண்டும். ஆனால் இருவரிடமும் பேச மறுக்கிறாள். ஏன்? அப்புறமாகத் துப்பறியணும். ஊருக்குப் போயிட்டு வந்து கவனித்துக் கொள்கிறேன். பாலாண்ணா, அமுக்குணி, உங்களுக்கும் இருக்கு. பத்து நாள் காத்திருங்க...''



என்று மனதிற்குள் சொல்லிக் கொண்ட மைதிலி, ஒரு சின்ன பேப்பரில் லலிதாவின் முகவரியை எழுதிக் கொடுத்தாள்.

''அஞ்சலி, உனக்குத் தெரியுமா? ஆன்ட்டி நேற்றும், இன்றும் இங்கு தங்குவதாக இருந்தது. பாலாண்ணா, அது அவங்க பையன், இங்கே சென்னை ட்ரேட் சென்டர்ல நடைபெறும் கைத்தறிக் கண்காட்சிக்கு வேற வேலையா வந்து இருந்தாங்க. அப்புறம் வேற ஏதோ அவசர வேலை கோயம்புத்தூரில் வந்து விட்டதால், எதிர்பாராமல் கிளம்ப வேண்டியதாகி விட்டது. ஆன்ட்டிக்குப் போகவே இஷ்டம் இல்லை. உங்களைக் கூடத் தேடினாங்க...''

''ஓ! நான் காலையில் சீக்கிரம் எழுந்தது அசதியா இருந்ததால், ரூமிற்குப் போய் விட்டேன்!'' என்று சாதாரணமாக முகத்தை வைத்தபடி சொன்னாள் அஞ்சலி.

''ஆன்ட்டிக்கு உங்களிடம் சொல்லிவிட்டுப் போகவில்லை என்ற வருத்தம் இருந்து இருக்கும். ஆன்ட்டிக்கு மட்டும் இல்லை. அண்ணனுக்கும் அப்படித்தான் இருந்து இருக்கணும்...''

மைதிலியின் வார்த்தைகளைக் கேட்ட அஞ்சலிக்குத் தூக்கி வாரிப் போட்டது. இதென்ன கூத்து. இவள் இப்படி என்னென்னவோ பேசிக் கொண்டே போகிறாள்? அவன் ஏன் தன்னிடம் சொல்லிக் கொண்டு போகணும்? இவள் பேசுவது உண்மையா? இதற்குத் தான் என்ன பதில் சொல்வது?

அவளின் பாவனையை ஓரக் கண்ணால் கவனித்தவள், காணாதது போல் ஒதுக்கி மேலே பேச்சினைத் தொடர்ந்தாள். ''அண்ணன் கோவையில் அழகன்

கார்மென்ட் டிசைனிங் சென்டர் தனியா ஆரம்பிச்ச பிறகு...''

''வாட்? என்ன பேர் சொன்னீங்க?'' என்று அதிர்ச்சியுடன் இடையிட்டாள் அஞ்சலி. அழகனா? அதைத்தான் நேற்று அந்த ஆன்ட்டி சொன்னாங்களா? இவன் பேரோ, இவனின் பெற்றோர் பெயரோ அதன் தொடர்புடையதாகவோ எந்த வார்த்தையுமே இல்லையே? அப்படி இருக்க, உலகத்தில் அத்தனை ஆயிரம் பேர் இருக்க, இந்தப் பெயரை இவன் ஏன் வைத்தான்?

அவளுடைய அதிர்ச்சியை வியப்புடன் பார்த்த மைதிலி, ''எதுக்கு மேடம் இவ்வளவு ஷாக்? ட்ரெஸ் டிசைன் பண்ணுவதற்குப் பொருத்தமான பேர்தானே? அதனால் அழகன் கார்மென்ட் டிசைனிங் சென்டர். பாலாண்ணாக்குத் தொழில் பக்தி ரொம்ப ஜாஸ்தி. இந்த இரண்டு வருஷமா, எல்லாக் கண்காட்சியும், எந்த ஊரில் நடந்தாலும் ஒண்ணு விடாமல் போய் கவனமாப் பார்ப்பாங்க...'' என்று சொல்லி நிறுத்தி அஞ்சலியைக் கவனித்தாள் மைதிலி. அவள் அவசரமாக நிம்மதிப் பெருமூச்சு விடுவதைக் கவனித்தபடி சின்னச் சிரிப்புடன் தொடர்ந்தாள்.

''... போயிட்டு வந்தால் அடுத்த பதினஞ்சு நாள் வேலையில் முழுசா மூழ்கிடுவாங்க. வீட்டுக்குச் சாப்பிடக் கூட வரமாட்டாங்கன்னா பார்த்துக்கோங்க. தொழிலில் அவ்வளவு ஆர்வம்...'' என்று மைதிலி அடுக்க, முகத்தைச் சாதாரணமாக வைத்து இருக்க ரொம்ப சிரமப்பட்டாள் அஞ்சலி.

அவளை ரொம்ப நேரம் சோதிக்காமல், அஷோக் திரும்பி வந்து மைதிலிக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருந்து அஞ்சலியை மீட்டான்.



''ஹேய் மவுஸ், என்னோட கல்யாணத்தின் ஞாபகம் இருப்பது மாதிரி உனக்கு ஏதாவது பரிசு கொடுக்கணும் என்று ஆசைப்பட்டேன். அம்மாவும் சொல்லிகிட்டே இருந்தாங்க. நேற்று நீயே வாயைத் திறந்து கேட்டு விட்டாயா? எனக்கு ரொம்ப சங்கடமாப் போய்டுச்சு...''

''அஷோக், நீ கிப்ட் கொடுக்காவிட்டால், உன்னுடைய கல்யாணம் எனக்கு மறந்து விடுமா? லூசு, என்ன உளறல் இது?'' என்று அவசரமாக இடையிட்டாள் அஞ்சலி.

''நானே உனக்கு ஒரு மொபைல் வாங்கிக் கொடுக்கணும் என்று நினைத்தேன். வாங்கி வந்து விட்டேன். உனக்கு எப்போ தேவையோ, அப்போது யூஸ் பண்ணிக்கோ. நான் உன்னை கம்பெல் பண்ணவில்லை. சரியா?'' என்று சொல்லி அப்போதுதான் வாங்கி வந்த மொபைலை அவளிடம் நீட்டினான் அஷோக்.

''இதென்ன பைத்தியக்காரத்தனம்! எனக்கு எதுக்கு இப்போ மொபைல்? எனக்கு வேணும்னா நானே வாங்கிக்க மாட்டேனா? இதுக்குத்தான் அவ்வளவு அவசரமா போனாயா? சரியான லூசுடா...'' என்று எரிச்சலோடு சொன்னாள் அஞ்சலி.

''உனக்கு வேணும் என்று எப்போது தோணுமோ, அப்போ யூஸ் பண்ணிக்கோ, நான் லூசா இருந்துட்டுப் போறேன். தப்பே இல்லை. என்னைச் சரி பண்ணத்தான் அதி புத்திசாலியான நீ கூடவே இருக்கியே! அப்புறம் எனக்கென்ன கவலை?'' என்று அஷோக்கும், ''சும்மா வாங்கிக்கோ அஞ்சலி, ரொம்ப யோசிக்காதே. நாங்க பத்து நாள் வெளியூர் போறோமே. நடுவில் எங்களுக்குப்

பேசணும் என்று தோன்றினால் பேசுவோமே!'' என்று மைதிலியும் அவளை வற்புறுத்தினாள்.

''ஆசிரமத்திற்கு லேண்ட் லைன் போன் இருக்கே. நான் எங்கேயும் வெளியே போகப் போவதே இல்லை. நீங்க எப்போ பேசினாலும் நான் இருப்பேன்!'' என்று சிரித்தபடி விளக்கம் சொன்னாலும், அவர்கள் மனம் கோணாமல் இருக்க, அந்த போனை வாங்கிக் கொண்டாள்.

ஆனால் குதிரையை நீர் நிலைக்குக் கூட்டித்தான் போக முடியுமே தவிர, தண்ணீர் குடிக்க வைக்க முடியாது என்பதை நேரடி அனுபவத்தில் கண்டார்கள். ஏன் என்றால் அவள் அந்த மொபைலை அடுத்து வந்த இரண்டு மாதங்கள் பயன்படுத்தவே இல்லை. அதைப் பயன்படுத்த வேண்டிய சூழல் வந்தபோது, அவளின் வாழ்க்கை அடியோடு மாறிப் போனது.

* * *

அன்னா நகருக்கு அஞ்சலி கிளம்பிப் போன பிறகு காலை பத்து மணி அளவில் ஆசிரமத்து அலுவலக அறையில் அமர்ந்து தன்னுடைய பணிகளைப் பார்த்துக் கொண்டு இருந்தார் சாவித்திரி. அவருக்கு அஞ்சலி முந்தைய தினம் பரிசாக வந்த பார்சலுடன் கிளம்பிப் போனதைப் பார்த்து வருத்தமாக இருந்தது.

அவள் தன்னிடம் ஒன்றும் சொல்லவில்லை என்றாலும், அதைத் திருப்பி அனுப்பப் போகிறாள் என்பது அவருக்குப் புரிந்தது. அவளை நெருங்கி வரும் எல்லோரையும் விலக்கி வைத்துக் கொண்டே போனால் அவளுக்கு வேறு நல்ல குடும்ப வாழ்வு அமைவது எப்படி என்று கவலையாக இருந்தது. அவருடைய கவ



லைக்குப் பதில் அளிப்பது போலத் தொலைபேசி மணி ஒலிக்க, ''வணக்கம், அன்பு இல்லம்!'' என்று சொன்னார் சாவித்திரி.

''வணக்கம் மேடம், என் பெயர் பாலமுருகன். நான் கோவையில் இருந்து பேசுகிறேன். அஞ்சலி, வெளியே கிளம்பியாச்சா?'' என்று ஆரம்பித்தான் பாலா.

''அஞ்சலி பற்றி விசாரிக்கிறீங்க. நீங்க அவளுக்கு...'' என்று இழுத்தார். அவரின் புலன்கள் கூடுதல் கூர்மை பெற்றன. அஞ்சலிக்குப் பரிசு அனுப்பியது இவனாக இருக்க வாய்ப்பு இருக்கிறது. அவரின் அந்த ஆசையில் அவனது அடுத்த பதில் கூடை மண்ணை வாரிக் கொட்டியது.

''அஞ்சலிக்கு நான் ஸ்பெஷலா எதுவும் இல்லை. நேற்று அவங்களைத் திருமணத்தில் பார்த்தேன். இந்த ஆசிரமம் பற்றிச் சொன்னாங்க. நான் கார்மெண்ட் டிசைனிங் சென்டர் ஒண்ணு கோவையில் நடத்துகிறேன். என்னுடைய நிறுவனத்தின் நிகர லாபத்தில் அரை சதவிகிதத்தை ஏதாவது தொண்டு நிறுவனத்திற்குக் கொடுப்பது வழக்கம். கடந்த நிதி ஆண்டின் வரவு செலவுக் கணக்குகள் தணிக்கை முடிந்து இப்போதுதான் அறிக்கை வந்தது. இந்த ஆண்டில் நான் செலவு பண்ணக்கூடிய தொகை முப்பதாயிரம் ரூபாய். அதை உங்க ஆசிரமத்திற்குக் கொடுக்கலாம் என்று முடிவு பண்ணி விட்டேன். அதைப் பணமாகவா பொருளாகவா எப்படிக் கொடுக்கட்டும்?'' என்று சாதாரணமான குரலில் நிதானமாக விசாரித்தான் பாலா.

அஞ்சலிக்கு நான் ஸ்பெஷலா எதுவும் இல்லை என்ற அவனின் ஆரம்ப வார்த்தைகளில் மனம் வாடிய சாவித்

திரி அவன் தொடர்ந்து பேசப் பேச மனம் மகிழ்ந்தா இந்த மாதிரி நல்ல உள்ளங்கள் உதவி செய்வதால்தானே ஆசிரமம் நல்லபடியாக நடைபெறுகிறது. எனவே, முதலில் தோன்றிய வருத்தத்தை ஓரம் கட்டிவிட்டு, உற்சாகமாகப் பேச்சைத் தொடர்ந்தார்.

''ரொம்ப சந்தோஷம் மிஸ்டர் பாலமுருகன். உங்களை மாதிரி நல்ல உள்ளங்கள் இருப்பதால்தான்...''

''அது பரவாயில்லை மேடம். இன்னொரு முக்கிய மான விஷயம். பொருளாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று முடிவெடுக்கும் பட்சத்தில், அந்தப் பொருளை உடைகளாகக் கொடுப்பது என்றால், நான் இதே தொழிலில் இருப்பதனால், இரண்டு மடங்கு அதிக மதிப்பில் துணிகளை என்னால் வழங்க முடியும். இதை யும் மனசில் வைத்து நீங்க உங்க முடிவைச் சொல்ல லாம்!'' என்று ஆலோசனை சொன்னான் பாலமுருகன்.

''இந்த ஐடியா ரொம்பப் பிரமாதமா இருக்கு மிஸ்டர் பாலமுருகன். சில தொண்டுள்ளம் படைத்தவர்கள், அவர்களுக்குத் தெரிந்தவர்களிடம் சேகரித்து இலவச மாக வழங்கும், பழைய உடைகளைச் சீரமைத்துத்தான் இங்கிருக்கும் குழந்தைகள் போடுவார்கள். இவர்களுக்குப் புது உடை, இவர்களுக்கு என்று பிரத்யேகமாகத் தைத்த ஒரு விசேஷ நாளிலாவது வழங்க முடியுமா என்று நான் மனசில் பல தடவை நினைத்து இருக்கிறேன். அதை நிறைவேற்ற ஒரு வாய்ப்புக் கிடைத்தால் விடுவேனா? நீங்க உடைகளாகவே வழங்கலாம்...''

''சந்தோஷம் மேடம். அப்படியே செய்து விடலாம். ஆனால் உங்களின் தேவை என்ன என்று எனக்குத்



தெரியாது. எத்தனை குழந்தைகள்? ஆணா? பெண்ணா? என்ன விதமான ஆடைகள்? அது பற்றி நீங்க விபரம் சொன்னால் அதற்குத் தகுந்த மாதிரி நான் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்!'' என்று விசாரித்தான் பாலா.

''நீங்கள் வேறு ஏதாவது வேலையாகச் சென்னைக்கு வருவீர்கள் என்றால், இங்கே வரலாமே! நாங்கள் வாயால் எங்களின் தேவையைச் சொல்வதைவிட, நீங்களே பார்த்தால், உங்களுக்கு நிறைய ஐடியா தோன்றலாம். முடிந்தால் வாங்க!'' என்று நிறைந்த மனதுடன் அழைப்பு விடுத்தார் சாவித்திரி.

''நான் வருவது கஷ்டம் மேடம். என்னுடைய வருகைக்காக உங்களின் தேவை காத்திருக்க வேண்டாம். உங்களுக்கு அவசியம் என்றால், எங்களுடைய டெலர் ஒருவரை அங்கேயே அனுப்பி, உடைகளைத் தயார் பண்ணித் தரச் சொல்கிறேன். எனக்கு இரண்டு வாரம் டைம் கொடுங்க!'' என்று பேச்சினை முடித்துப் போனை வைத்து விட்டான் பாலா.

ஆசிரமத்திற்கு வருவதற்கு முன்பே, வழியிலேயே, மைதிலியிடம் வாங்கிய முகவரிக்கு, அந்தப் போனை அனுப்பி விட்டு நுழைந்த அஞ்சலியை சந்தோஷமாக எதிர் கொண்டார் சாவித்திரி.

''அஞ்சலி! நீ போன கொஞ்ச நேரத்திற்கு எல்லாம் நீ கிளம்பி விட்டாயா என்று கேட்டுக் கோவையில் இருந்து போன் வந்தது...'' என்று ஆரம்பித்து உற்சாகமாக அவர் விபரம் சொல்ல அவள் திகைத்துப் போய் அமைதியாக இருந்தாள்.

அவனிடம் நான் ஆசிரமம் பற்றி எதுவும் பேசவில்லை என்று சொல்ல வாய் வரவில்லை. முதலாவது, பிறகு அவனுக்கு எப்படி இந்த ஆசிரமம் பற்றித் தெரியும்? உன்னைப் பற்றி ஏன் பொய் சொல்ல வேண்டும் என்ற கேள்வி எழும். அவனைப் பற்றித் தவறான எண்ணத்தை விதைக்கும். அதற்கு என்ன பதில் சொல்வது என்ற தயக்கம் எழுந்தது.

யார் அவனைப் பற்றி என்ன நினைத்தால் தனக்கு என்ன? அந்தத் தயக்கம் ஏன் வந்தது என்று அப்போது யோசிக்கத் தோன்றவில்லை. அதையும் மீறி, அவன் ஆசிரமக் குழந்தைகளுக்குச் செய்ய நினைப்பதை ஏன் தடுக்க வேண்டும் என்ற எண்ணமும் சேர்ந்து கொள்ள, அவள் அமைதியாக இருந்து விட்டாள்.

அடுத்து வந்த இரண்டு தினங்களில், அவன் சாவித்திரியிடம் வாக்களித்தபடி தையல்காரரை அனுப்பி, ஆசிரமத்தில் இருந்த ஐம்பத்து மூன்று குழந்தைகளுக்கும், அவர்களுடைய அளவைக் குறித்துக் கொண்டு, அஞ்சலியுடன் பேசி, யாருக்கு என்ன விதமான உடை என்பதையும் குறித்துக் கொண்டு போக ஏற்பாடு செய்தான்.

சாவித்திரி அம்மாவிடம் கேட்ட இரண்டு வாரங்கள் முடிவடையும் தினத்தன்று, ஆசிரமத்திற்குப் பாலா போன் பண்ண, அதை எடுத்தது அஞ்சலி. அவள் கையில் இருந்த பேப்பரில் கவனமாக இருந்தபடி பேச ஆரம்பிக்கும் முன்பே அவள் காதுகளைத் தழுவிய, 'ஹலோ...' என்று ஆரம்பித்த 'அந்த'க் குரலில் அஞ்சலியின் ஒவ்வொரு செல்லிலும் புத்துணர்வு ஒரே வினாடியில் பரவியது.



# 7

அலுவலக வேலையில் கண்களைப் பதித்தவாறே போனை எடுத்த அஞ்சலியின் மனம், 'ஹலோ' என்ற அந்த ஒற்றை வார்த்தையில் துள்ளியது. இது பாலாவின் குரல் அல்லவா? இவன் இப்போது எதற்காக இங்கே பேசுகிறான்? தன்னிடம் பேசவா?

அஷோக்கின் திருமணம் நடந்த இரவில் தான் அழுகையும் ஆத்திரமுமாகப் பேசிப் போனை வைத்த பிறகு, கடந்து போன பதினைந்து தினங்களில் அவன் அவளை எந்த விதத்திலும் தொடர்பே கொள்ளவில்லை. தான் அவர்களின் முகவரிக்கு அனுப்பிய மொபைல் போன் வந்து விட்டது என்ற தகவல் ஏதாவது ரூபத்தில் வரும் என்று எதிர்பார்த்தாள். வரவில்லை.

அவனிடம் இருந்துதான் வரவில்லை. லலிதா ஆண்ட்டி ஏதாவது சொல்வாங்க என்று எதிர்பார்த்தாள். அவர்களிடம் இருந்தும் எந்தத் தகவலும் இல்லை. நேரிடையாக இல்லை என்றாலும் குறைந்த பட்சம் மைதிலி மூலமாக ஒரு தகவல் வரும் என்று எதிர்பார்த்துக் கடந்த பத்து தினங்களாகக் காத்து இருந்தவளுக்கு ஏமாற்றமே!

இப்போது எதற்குத் துரை இங்கே பேசுகிறார்? தன்னிடம் பேசவா? இல்லை, சாவித்திரி அம்மாவிடம் குழந்தைகள் உடைக்காகப் பேசப் போகிறானா? அவனைப் பார்க்க வேண்டும் போல ஒரு ஆவல் முதன் முதலாக இதயத்தில் முளை விட்டது. என்ன சொல்லப் போகிறான்

என்பதைக் கேட்க ஆவலுடன் காதுகளைத் தீட்டிக் கொண்டு காத்து இருந்தாள் அஞ்சலி.

தான் பேசாமல் இருப்பதையும் தவறாக எடுத்துக் கொள்வானோ என்ற சந்தேகம் வந்ததும், அவசரமாக "ஹலோ, வணக்கம்! அன்பு இல்லம்!" என்று சாதாரணமான குரலில் நாலு வார்த்தைகள் பேசச் சிரமப்பட்டாள் அஞ்சலி.

தான் அவனுடைய குரலை ஒற்றை வார்த்தையில் கண்டு பிடித்த மாதிரி அவனும் தன்னுடைய குரலைக் கண்டு பிடித்து விடுவான் என்ற நம்பிக்கையில் ஆவலோடு காத்து இருந்தவளுக்கு மீண்டும் ஒரு முறை ஏமாற்றம் கிட்டியது.

"வணக்கம், சாவித்திரி மேடம் இருக்காங்களா? அவங்களிடம் நான் கொஞ்சம் பேசணும்," என்று சர்வ சாதாரணமாகச் சொன்ன பாலாவின் அழுத்தத்தில், 'ஏன் என்னிடம் பேச மாட்டாயோ?' என்று அஞ்சலிக்குச் சுறுசுறுவென்று எரிச்சல் ஏறியது. அவன் ஏன் தன்னிடம் பேச வேண்டும் என்ற கேள்வி அப்போது எழவில்லை.

"மேடம் பிசியா இருக்காங்க. நீங்க யார் சார் பேச நீங்க? என்ன விஷயம் என்று சொன்னால் அவர்களிடம் கொடுக்கலாமா வேண்டாமா என்று நான் முடிவு பண்ண வசதியா இருக்கும்!" என்று அவளும் அவனுக்குச் சளைக்காத குரலில் அழுத்தமாகச் சொன்னாள்.

"நீங்க யாருங்க? நான் அவர்களிடம் பேசலாமா வேண்டாமா என்பதை முடிவு பண்ணும் அதிகாரம் உங்களுக்கு அவங்க கொடுத்து இருக்காங்களா?"

"நான் அஞ்சலி. இந்த ஆசிரமத்தின் கணக்கு வழக்குகளை நான்தான் நிர்வகிக்கிறேன்..."



"அக்கவுண்டன்ட். அவ்வளவுதானே? இருந்துட்டுப் போங்க..." மேலே அவன் என்ன சொல்லி இருப்பானோ, அதற்குப் பதிலாக அஞ்சலி என்ன சொல்லி இருப்பாளோ? அவர்களின் பேச்சு வார்த்தை தடிக்கும் முன்பே, "யார் அஞ்சலி போனில?" என்று சாவித்திரி அம்மா வந்து விட்டார்.

"மிஸ்டர் பாலமுருகன். கோவையில இருந்து பேசுகிறார்..." என்று ரிசீவரை மூடியபடி அஞ்சலி கடித்த பற்களுக்கிடையே எரிச்சலுடன் சொன்னது பாலாவின் காதுகளிலும் விழுந்தது.

"பரவாயில்லையே! என் பேர் சொல்லாமலேயே, நான் யார் என்று கண்டு பிடித்து விட்டாயா?" என்ற சந்தோஷம், அவன் முகத்தில் இரண்டு மில்லி மீட்டர் புன்னகையை வரவழைத்தது. 'பேர் சொல்லாமலே குரல் அடையாளம் தெரிகிறதுதானே? அப்புறம் தன்னைத் தெரியாத மாதிரி நடிக்க வேண்டுமா? உனக்கு மட்டும் தான் நடிக்கத் தெரியுமா? எனக்குத் தெரியாதா?' என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டவனுக்குப் புன்னகை மேலும் விரிந்தது.

பாலமுருகனிடம் அஞ்சலி முகத்தைச் சுழித்துக் கோபமாகப் பேசும் அளவிற்கு அவன் என்ன சொல்லி இருப்பான் என்ற யோசனையோடு ரிசீவரை வாங்கியவர், "சொல்லுங்க மிஸ்டர் பாலமுருகன், நல்லா இருக்கீங்களா?" என்று விசாரித்தார் சாவித்திரி.

"ஒவ்வொரு முறையும் மிஸ்டர் போட வேண்டுமா மேடம்? பாலா போதுமே!"

"பரவாயில்லை சார், எங்களுடைய டோனர் நீங்க. உங்களை மரியாதையாகச் சொல்வதில் நாங்கள்

குறைந்து விடப் போவதில்லை. போக, நீங்க என்னை மேடம் என்றுதானே சொல்றீங்க?''

''ஓ! அதுதான் பிரச்னையா? அப்ப நான் ஆன்ட்டிக்கு மாறி விடுகிறேன்!'' என்றவன் குரலில் நிச்சயம் சந்தோஷம் தான் கொப்புளித்தது. இந்த மன நிலையில் இருப்பவன் அஞ்சலியிடம் என்ன கோபமாகச் சொல்லி இருக்கக் கூடும்?

''சொல்லுங்க பாலா, என்ன விஷயமா போன் பண்ணி னீங்க?'' என்று விசாரித்தார். உடைகள் தயாராகி விட்டன என்று அவனாகச் சொல்லும் வரை நாமாகக் கேட்காமல் இருப்பது கௌரவமாக இருக்கும் என்று அந்தப் பேச்சைத் தவிர்த்தார் சாவித்திரி.

''குழந்தைகளுக்கான உடைகள் தயாராகி விட்டன, ஆன்ட்டி. அதைப் பார்சலில் அனுப்பட்டுமா அல்லது ஆள் மூலம் கொடுத்து விடட்டுமா என்று கேட்க போன் பண்ணினேன்.''

''என்ன பாலா, எவ்வளவு பெரிய உதவி செய்றீங்க! அதைப் போய் பார்சலில் கொடுத்து அனுப்புகிறேன் என்று சொல்றீங்களே! நேரில் வந்து கொடுங்க. இப் போதைக்கு அவசரமான வேலை இருந்தால், ஓரிரண்டு நாட்கள் தாமதம் ஆனாலும் பரவாயில்லை. நீங்க நேரில் வந்து கொடுத்தால் எனக்குச் சந்தோஷமாக இருக்கும்.''

''குழந்தைகள் புத்தாடையைப் பார்க்க ஆசைப்படுமே ஆன்ட்டி...''

''எஸ் பாலா. அந்த ஆசை நிறைவேறும்போது அந்தக் குழந்தைகள் அடையும் சந்தோஷத்தை நீங்க நேரில் பார்க்க வேண்டுமே! சந்தோஷத்திலேயே பெரிய



சந்தோஷம் அடுத்தவரைச் சந்தோஷப்படுத்திப் பார்ப்பது தான் பாலா. உங்களால் வேலை நாட்களில் முடியாது என்றால் சனி ஞாயிறு வாங்க...''

''வருவதைப் பற்றி ஒன்றும் இல்லை, ஆன்ட்டி. ஆனால் வலது கை கொடுப்பதை இடது கை அறியக் கூடாது. மேலும் அப்படிக் கொடுத்ததைக் கொடுத்த வர்கள் அப்போதே மறந்துவிட வேண்டும் என்று பெரிய வங்க சொல்லி இருக்காங்களே, ஆன்ட்டி. அதுக்குத்தான் யோசித்தேன்!'' என்று சொல்லும்போதே, பேசுவது தான்தானா என்று பாலாவிற்கு ஆச்சரியம் வந்தது. இது அஞ்சலி சொன்னது. இது எப்படியும் அவளின் காதிற்கும் போகும்தானே! போக வேண்டும் என்றுதானே அதைச் சொல்வதே என்று புன்னகை செய்தான் பாலா.

''ரொம்ப நல்ல பாலிசிதான். ஆனால் கோவிலில் லைட் போட்டுவிட்டு, அந்த விளக்கில் இருந்து வெளிச்சமே வராத அளவிற்குத் தன்னுடைய பெயரைப் பெரிதாக எழுதும் ஆட்களின் மத்தியில், இந்தக் காலத்தில் இப்படி ஒரு ஆளா என்று ஆச்சரியம்தான் வருது. பரவா யில்லை பாலா, இந்த ஒரு முறை வாங்க!'' என்று மீண் டும் வற்புறுத்த, அஞ்சலிக்கு எரிச்சல் மேலும் கூடியது.

வயதில் பெரியவங்க எத்தனை முறை சொல்றாங்க. சு..ம்..மா ப..ந்..தா பண்ணிக்கிறானே என்று மனதிற்குள் குமுறியபோது அடுத்து ஒலித்த சாவித்திரியின் வார்த் தைகள் அதிர வைத்தன.

''ச்சே! ச்சே! என்ன பாலா, அஞ்சலியைப் பார்த்து இப்படி ஒரு வார்த்தை சொல்லிட்டிங்க. அவளால் அல்லவா இந்தக் காரியம் சாத்தியமானது. அவளுக்கு நீங்க வரு வதில் என்ன பிரச்னை இருக்க முடியும்? சொல்லப்

போனால் நீங்க வருவதில் அவள் சந்தோஷம்தானே அடைய வேண்டும். இதோ அவளையே அதைச் சொல்லச் சொல்கிறேன்,'' என்று புன்னகையோடு அஞ்சலியிடம் ரிசீவரை நீட்டினார் சாவித்திரி.

''ராஸ்கல்! திமிர் பிடித்தவன். வேண்டும் என்றே தன் வாயால் அவனை வரச் சொல்ல வைக்க என்ன எல்லாம் டிராமா போடுகிறான்!'' என்று மனதிற்குள் பல்லைக் கடித்தபடி, சாவித்திரி அம்மாவிடம் இருந்து போனை வாங்கியவள், ''சொல்லுங்க டோனர் சார், நான்தான் இந்த ஆசிரமத்தின் கணக்கு வழக்குப் பார்க்கும் அக்கவுண்டன்ட் அஞ்சலி பேசுகிறேன் சார். நீங்க இங்கே வருவதற்கு நான் என்ன சார் உங்களுக்கு அனுமதி கொடுப்பது?'' என்று அவள் கேட்டதும் அவளை வியப்பாகத் திரும்பிப் பார்த்தார் சாவித்திரி.

டோனர் சார் என்று அழைப்பதில் தப்பு இல்லை. ஆனால் சார் என்ற அழைப்பில் மரியாதை இருந்தாலும் இவனிடம் இவ்வளவு எரிச்சலோடு பேசுகிறாளே! முதலிலும் அப்படித்தான் பேசினாள்.

''நான் அங்கே வர உங்களிடம் அனுமதி எதுவும் கேட்கவில்லை. உங்க மேடம்தான் உங்களை ஏதோ சொல்லச் சொன்னார்கள். இஷ்டம் இருந்தால் சொல்லுங்க. அல்லது அவர்களிடம் விளக்கம் சொல்லிக் கொள்ளுங்கள். உங்க மேடம் அளவுக்கு இல்லாவிட்டாலும் ஏதோ எங்கள் அளவுக்கு நாங்களும் இப்போது பிசி. வைத்து விடட்டுமா?'' என்று வார்த்தைகளில் இருந்த அவசரத்திற்குப் பொருந்தாத விதத்தில் சாவகாசமாய் விசாரித்தான்.



சாவித்திரி அம்மாவிடம் என்ன விளக்கம் சொல்வது என்று ஒரு விநாடி திகைத்து விட்டு, ''மேடம் சொன்னது சரிதான் சார். நீங்க வருவதில் எனக்கு சந்தோஷம்!'' என்று வார்த்தைகளில் இருந்த சந்தோஷம் குரலில் துளி கூடத் தப்பித் தவறி வெளிப்பட்டு விடாமல், பொங்கிய எரிச்சலை அடக்கியபடி, சொன்னாள் அஞ்சலி.

''சந்தோஷத்தில் பெரிய சந்தோஷமே, அடுத்தவங்களைச் சந்தோஷப்படுத்திப் பார்ப்பதுதான் அக்கவுண்டன்ட் மேடம். பஹூத் பஹூத் ஷுக்ரியா. ஸீ யு ஆன் சண்டே!'' என்று போனை வைத்தவன் முகம் புன்னகையில் மலர்ந்து இருந்தது.

இனி நானாக உன்னை வந்து பார்க்க மாட்டேன் என்று அஷோக்கின் திருமணம் முடிந்து விமானத்தில் திரும்பி வரும்போது எடுத்த முடிவு காற்றோடு காணாமல் போனது. அஞ்சலியின் பெற்றோர் இல்லை என்ற உண்மை ஏற்படுத்திய தாக்கத்தில், கொஞ்சம் தன்னுடைய கோட்பாடுகளைத் தளர்த்திக் கொள்ளலாம் என்று முடிவெடுத்த பாலா, உற்சாகமாக அஞ்சலியைச் சந்திக்கத் தயாரானான்.

அவளைப் பார்க்க வேண்டும். பழைய கதைகளைக் கண்ணோடு கண் பார்த்துப் பேச வேண்டும். அவளுக்குத் துணையாக வாழ்நாள் முழுவதும் வருவேன் என்ற உண்மையை உணர்த்த வேண்டும். 'இனி எதற்கும் கலங்காதே. நான் உன்னோடு என்றும் இருப்பேன்!' என்று தேற்ற வேண்டும் என்று பல பல கனவுகளுடன் பயணத்தைத் துவக்கிய பாலா, அந்தப் பயணத்தின் முடிவிலேயே தன் முடிவைத் தானே மாற்றிக் கொள்வோம் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

* * *

பெற்றோர்கள் பார்த்து முடிவு பண்ணிய திருமணம் என்பதால், கல்யாணத்திற்கு முன்னால் தனிமையில் சந்தித்துப் பழகி இல்லாத போதும், திருமண தினத்தில் அஷோக் - மைதிலி இருவருக்கும் இடையே முளை விட ஆரம்பித்த நெருக்கம், பத்து நாட்கள் தனிமையில் தேனிலவில் கழித்த பிறகு மேலும் கூடி இருந்தது.

சென்னைக்கு வந்து இருவரும் தங்களுடைய வழக்கமான வேலையைப் பார்க்க ஆரம்பித்த பிறகும், அவர்களிடையே இருந்த நெருக்கம் கூடிப் போனதே தவிர குறையவே இல்லை. அதற்கு மைதிலியின் நடவடிக்கையும் காரணமாக இருந்தது. தேனிலவில் இருந்து திரும்பி வந்த பிறகு, ஒரு நாள், திருமண தினத்தில் தான் அஞ்சலியைப் பார்த்துப் பொறாமைப்பட்டதை மைதிலி வெளிப்படையாகச் சொல்லி அஷோக்கிடம் மன்னிப்புக் கேட்க, அவன் அவளிடம் சரணாகதி ஆனான்.

''ரொம்ப சந்தோஷம் மைத்தி. நீ நினைத்து இருந்தால் இதை என்னிடம் சொல்லாமல் இருந்து இருக்கலாமே? நீ இதைச் சொன்னது எனக்கு ரொம்பப் பிடித்து இருக்கிறது. நமக்கிடையே எந்த ரகசியமும் இருக்காது மைத்தி. இது சத்தியம்...''

''ஹேய்! என்ன இவ்வளவு சீரியஸா சத்தியம் அது இது என்று பேசுறீங்க. எனக்கு இப்ப உங்க மேலே பரிபூரணமான நம்பிக்கை இருக்குப்பா...'' என்று அவசரமாக இடையிட்டாள் மைதிலி.

''தேங்க்ஸ் மைதிலி. ஆனால் இந்த விஷயம் மட்டும் சொல்லி விடுகிறேன். இதை வேறு யாராவது திரித்துச் சொல்லி உனக்குத் தெரிவதை விட நானே சொல்லி விடுவது பெட்டர். ஆரம்பத்தில் அங்கிள் இறந்தபோது,



அம்மா அவளை எனக்குக் கல்யாணம் பண்ணலாமா என்று யோசித்தாங்க. அதுக்கு நாங்க இருவருமே ஒத்துக் கொள்ளவில்லை...''

''ஓ! அப்படியா விஷயம்!'' என்று வியந்தவளின் சிந்தனை எங்கோ நழுவியது.

''ஆமா! ஆனால் அவளை எங்களால் விடவும் முடியாது. அவள் தொடர்ந்து இங்கே வந்து போய் இருக்க வேண்டுமே என்றுதான், ஊர் வாயை நிரந்தரமாக மூடக் கல்யாணத்தில் அம்மா எனக்குத் தங்கையாக அவளை நிற்க வைத்தாங்க. அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுத்து விட்டால் எனக்குப் போதும். ரொம்ப நல்ல பொண்ணுதான். ஆனால் கொஞ்சம் சென்சிடிவ். நல்லவனாகப் பார்க்க வேண்டும்...'' என்று அக்கறையோடு பேசிக் கொண்டே போனான் அஷோக்.

தான் சொல்லும் விஷயத்தில் மனைவியின் கவனம் இல்லை ஏன்பதை உணர்ந்த அஷோக், ''அப்புறம் ரெயின் ரெயின் கோ அவே என்று சின்ன வயசில் பாடிய ரைம்ஸ் சொன்னால் நல்ல மாப்பிள்ளை கிடைப்பான் என்று பத்து வருஷம் முன்பு செத்துப் போன எங்க பாட்டி கனவில் வந்து சொன்னதால், தினமும் ஒரு நாளைக்கு நூற்று எட்டு முறை, நானும் அவளும் விடாமல் அந்த ரெயின் ரெயின் கோ அவேயைச் சொல்லிக் கொண்டு இருக்கிறோம்...'' என்று நிறுத்தாமல் கேலியாகப் பேசினான்.

செத்துப் போன பாட்டி என்ற வார்த்தையில், சுய நினைவுக்கு வந்த மைதிலி, அவன் தன்னைக் கேலி செய்வதை உணர்ந்து. ''ஹேய் ராஸ்கல்! என்ன கிண்டலா? உன்னை என்ன செய்கிறேன் பாரு...'' என்று மேலே பாய்ந்து செல்லமாய்ச் சண்டை போட்டு அவர்கள்

சமாதானம் ஆன போது பதினைந்து நிமிடங்கள் காணாமல் போய் இருந்தன.

அப்போதைக்கு அந்தப் பேச்சு நின்று விட்டாலும், அன்றே இரவு உணவு முடித்த பின், தோட்டத்தில் சின்ன நடைப் பயணம் சென்றபோது, "என்னங்க, நான் உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லணுமே!" என்று பேச்சை மீண்டும் ஆரம்பித்தாள் மைதிலி.

"சொல்லேன்! என்ன பீடிகை பலமா இருக்கு? இன்னொரு மன்னிப்பா? கேளு. எத்தனை தப்பு என்றாலும் தாராளமா மன்னிக்கிறேன். ஒவ்வொரு மன்னிப்புக்கும், ஏதாவது கூலி வசூலித்துக் கொள்கிறேன்!" என்று அவள் புறம் சரிந்து கொஞ்சினான் அஷோக்.

"ஆமாமா, பெரிய வசூல் ராஜா எம்.பி.பி.எஸ்.தான். சீரியசா பேசும்போது பேச்சை மாத்தாதீங்க. நான் அஞ்சலி சம்பந்தமா ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்!" என்று அவனின் தோளைப் பிடித்து லேசாகத் தள்ள, அஞ்சலி என்ற பெயரில் சீரியசாகி அவள் சொல்வதைக் கேட்கத் தயார் ஆகினான்.

"அஞ்சலி அப்போது கல்யாணம் வேண்டாம் என்று சொல்லும்போது, அவளுக்கு வேறு ஏதாவது காதல் மாதிரி..."

"ச்சே ச்சே! என்ன மைதிலி, இப்படிச் சொல்லிட்டே? எனக்குத் தெரிஞ்சு அவளுக்கு அந்த மாதிரி எந்த விவகாரமும் கிடையாது!" என்று ஆணித்தரமாகச் சொன்னான் அஷோக்.

"அவசரப்படாதீங்கப்பா. நான் ஒண்ணும் அஞ்சலியைக் குறை சொல்லவில்லை. லவ் பண்றது தப்பா என்ன?



என்ன உண்மை என்று தெரிஞ்சுக்கக் கேட்கிறேன்!" என்று சமாதானமாகச் சொன்னாள் மைதிலி.

"என்ன உண்மை என்றால் என்ன அர்த்தம்? உனக்கு என்ன சந்தேகம் என்று எனக்குப் புரியலையே?" குழப்பத்தோடு பார்த்தான் அஷோக்.

"இது என்னுடைய ஊகம்தான். முழுசா உண்மை தெரியும் முன்பு, அவசரப்பட்டு எதுவும் அஞ்சலியிடம் கேட்க வேண்டாம். சரியா?' என்று நூறு முறை அறிவுறுத்தி விட்டு, பலத்த பீடிகையுடன், பாலா, லலிதாம்மாவின் அக்கறை, அவர்கள் மொபைல் விட்டுப் போனதாகச் சொல்லி, அதைத் திருப்பிக் கொடுக்க முகவரி அஞ்சலி விசாரித்தது, அப்போது தன்னுடைய கேள்விகளுக்கு அவள் பதில் சொல்லத் தடுமாறியது பற்றி எல்லாம் சுருக்கமாகச் சொன்னாள் மைதிலி.

அவள் சொல்லச் சொல்லக் கண்களை விரித்துக் கேட்டு இருந்தவன், 'என்னுடைய கல்யாண வீட்டில் இத்தனை விஷயம் நடந்து இருக்கா? இது எல்லாம் எனக்குத் தெரியாமல் போச்சே!" என்று ஆச்சரியமாகச் சொன்னான் அஷோக்.

"உங்க கண்ணு கல்யாண வீட்டில் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் போனால்தானே? மணவறையில் பக்கத்தில் இருந்த பொண்ணை மட்டுமே பார்த்துக் கொண்டு இருந்தால் எப்படி..." என்று மைதிலி கேலி பண்ணிச் சிரிக்க, 'அதுக்குக் காரணம் நான் இல்லைப்பா. நீதான்!' என்று அவளுடன் உல்லாசமாய்ச் கூடச் சேர்ந்து சிரித்தான்.

"சரி சரி; முடிஞ்ச கல்யாணத்தைப் பற்றியே கதை பேசாமல், நடக்க வேண்டிய கல்யாணத்தைப் பற்றி

யோசிக்கலாமே!'' என்று மைதிலி அறிவுறுத்த, அவனும் நிகழ்வுக்கு வந்தான்.

''நீ சொல்றது என்னாலே நம்பவே முடியலை மைதிலி. எனக்குத் தெரிஞ்சு, கோவைக்கு அஞ்சலி போனதே இல்லையே! பின்னே எப்படி பாலாவுடன் அவளுக்குப் பழக்கம் ஏற்பட்டு இருக்கும்?'' என்று குழம்பினான் அஷோக்.

''அஞ்சலி கோவைக்கு வரவில்லை என்றால் என்ன? பாலாண்ணா சென்னைக்கு வருவாங்களே!''

''சென்னையில் என்க்குத் தெரியாமல் அஞ்சலி தனியாக எங்கேயும் போகவே மாட்டாளே மைதிலி...'' என்று இன்னும் நம்ப முடியாமல் தவித்தான் அஷோக்.

''சரி. இப்போ அதுவா முக்கியம்? அஞ்சலி மனசில் பாலாண்ணா இருக்கிறாங்களா என்று கண்டுபிடிக்க என்ன செய்யலாம். அதைப் பற்றி யோசிங்க?'' என்று இடையிட்டாள் மைதிலி.

''சரி விடு. வரும் ஞாயிற்றுக் கிழமை, அவளை ஹைஜாக் பண்ணி எங்கேயாவது கூட்டிட்டுப் போய் கிடுக்கிப் பிடி போட்டு விசாரிக்கலாம்!'' என்று நம்பிக்கையோடு சொன்னான் அஷோக்.

ஆனால் அவன் வரும் ஞாயிற்றுக் கிழமை என்று ஆரம்பித்ததுமே, ''இந்த சண்டே எந்த ப்ரோக்ராமும் வேண்டாம் அஷோக். நான் பிசி. அடுத்த வாரம் போகலாம்.'' என்று தீர்மானமாக மறுத்து விட்டாள்.

அவள் வர மறுத்தால் என்ன? நாம் ஆசிரமம் போகலாம். அவளை இன்னும் ஒரு வாரம் விட்டு வைக்கக் கூடாது என்ற முடிவில், அஷோக்கும் மைதிலியும்



அவளிடம் சொல்லாமலே ஆசிரமத்திற்குச் சென்ற போது, அங்கே வருகை தந்து இருந்த பாலாவைப் பார்த்து மூக்கின் மேல் விரல் வைத்தனர்.



## 8

கோவையில் இருந்து சென்னைக்கு விமானத்தில் வந்த பாலமுருகன், ஆசிரமத்துக்கு எட்டரை மணி அளவில் வந்து சேர்ந்தபொழுது, அவனுக்குத் தன் மனம் கவர்ந்தவளைச் சந்திக்கப் போகிறோம் என்ற இனிய பரபரப்பு இருந்தது. அவள் தன்னை எதிர்பார்த்துக் காத்திருப்பாளோ என்ற எண்ணம் ஏற்படுத்திய சந்தோஷ அலைகள் அவன் முகத்தைத் தாமரையாக மலரச் செய்தன.

ஆசிரமத்தின் உள்ளே அடி எடுத்து வைக்கும் முன்பே, வாசலுக்கு வந்த அந்த ஐம்பது வயது மதிக்க தக்க பெண்மணி சாவித்திரியாக இருக்கக் கூடும் என்று எளிதில் ஊகிக்க முடிந்தது. எனவே கரங்களைக் குவித்து, ''வணக்கம் ஆன்ட்டி, நான் பாலா!'' என்று அறிமுகம் செய்து கொண்டான்.

''வாங்க பாலா, உங்களைச் சந்தித்ததில் சந்தோஷம். நான் சொன்னதற்காக உங்கள் எத்தனையோ வேலைகளுக்கிடையே இங்கே நேரில் வரச் சம்மதித்தது எனக்கு உண்மையிலேயே ரொம்ப சந்தோஷம் பாலா. நீங்க மட்டும்தான் வந்தீங்களா?'' என்று மன நிறைவோடு வரவேற்றவருக்கு அவனுடைய தோற்றம் வியப்பை

அளித்தது. வேஷ்டி சட்டையா? அதுவும் கதரில்? இவன் முப்பதைக் கூடத் தாண்டி இருக்க மாட்டான் போல இருக்கே! பேச்சு மத்திய தர வயது மாதிரி அவ்வளவு மெச்சூர்டாக இருந்ததே!

"நான் ஒரே பையன்தான் ஆன்ட்டி. அம்மா அப்பா எல்லோரையும் இன்னொரு நாள் கூட்டிட்டு வரேன். உள்ளே எல்லாரும் இருக்காங்களா? எங்கேயாவது வெளியே போய் இருக்காங்களா?" என்று விசாரித்தபடி உள்ளே வந்தவன் கண்கள் அஞ்சலியை வலை போட்டுத் தேடின.

"சண்டே வழக்கமா எங்கேயும் போவதில்லை. பாலா, மணி ஒன்பதாச்சே! டிபன் சாப்பிடலாமா? உங்களுக்காக இன்று ஸ்வீட் செய்தோம்!" என்று உபசரித்தார் சாவித்திரி.

"பரவாயில்லை ஆன்ட்டி. மெதுவா சாப்பிடலாம். ஒன்றும் அவசரம் இல்லை. குழந்தைகள் சாப்பிட்டாச்சா? சமையலுக்கு ஆள் இருக்கா?" என்று கேட்டவனுக்கு அஞ்சலியை எப்படிப் பேச்சில் இழுப்பது என்ற யோசனையே பிரதானமாக இருந்தது.

"சமையலுக்கு ஒரு அம்மா இருக்காங்க, கொஞ்சம் வயசானவங்க. நானும் அஞ்சலியும் சேர்ந்து ஹெல்ப் பண்ணுவோம்!" என்று அவரே அவனுக்கு ஒரு வாய்ப்பளித்தார்.

"அஞ்சலி இங்கே வந்து எவ்வளவு நாள் ஆகிறது ஆன்ட்டி?"

"போன ஜூனில் வந்தாள். பாவம், நல்ல வசதியான வீட்டுப் பொண்ணு. இங்கே இருக்கணும் என்று ஆண்டவன் எழுதி வைத்து விட்டான். அவங்க அப்பா நேஷனல்



டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷனில நல்ல வேலையில் இருந்தார். போன ஜூன் மாசம் இறந்து விட்டார்..."

"அவங்க அம்மா இல்லையா?" அவசரமாக இடைமிட்டான் பாலா.

"அவங்க அம்மா, அப்பா இறப்பதற்கு ஒன்றரை மாதம் முன்னாடிதான் த்ரோட் கேன்சரில இறந்தாங்க. அவங்க அம்மாவாவது பரவாயில்லை. உடல் நிலை சரி இல்லாமல் மருத்துவமனையில் சிகிச்சை தொடர்ச்சியா பல ஆண்டுகளாக எடுத்து வந்தவங்க. ஆனால் அவங்க அப்பா இறந்தது ரொம்ப அநியாயம் பாலா..." என்று சொன்னவருக்கு எதற்கு இத்தனை விபரங்களையும் இவனிடம் சொல்கிறோம் என்ற காரணம் புரியவில்லை.

"ஏதாவது ஆக்சிடெண்டா, ஆன்ட்டி?" அவர் தயங்காமல் சொன்ன போதும், அதை உண்மையான அக்கறையோடு கேட்டு வந்த பாலா, வருத்தத்துடன் விசாரித்தான்.

"விபத்துதான் பாலா. ஆனால் என்ன மாதிரி விபத்து தெரியுமா? மழை இரவில் லாப்டாப்பில் வேலை செய்த போது, இடி தாக்கியதால், அதிகபட்ச மின்சாரம் அவர் உடலில் பாய்ந்து மரணம் அடைந்தார்..."

"வாட்?" என்று அதிர்ந்தவனுக்கு இரண்டு வாரங்கள் முன்பு, 'எனக்கு எந்த மாடர்ன் வசதியும் தேவை இல்லை. அதற்கு நான் இழந்தது எல்லாம் போதும். இனிமேல் என்னிடம் இழக்க ஒன்றுமே இல்லை!' என்று அவள் கதறியதன் உண்மையான அர்த்தம் புரிந்தது. அவள் ஏன் மொபைல் வைத்துக் கொள்ள மறுக்கிறாள் என்ற காரணத்தையும் ஏற்றுக் கொள்ள முடிந்தது.

''இங்கேதான் முகப்பேரில் சொந்த வீடு இருக்கு. அதில் இருந்து வாடகையே ஆறாயிரம் ரூபாய் வருது. அதுல முக்கால் வாசியை இங்கேதான் செலவு பண்ணுகிறாள். வெளியே எங்கேயாவது வேலைக்குப் போனால் எவ்வளவோ சம்பளம் வரும். ஆனால் அந்த வசதி எதுவும் வேண்டாம் என்று இந்த ஆசிரமத்தில் உட்கார்ந்து இருக்கிறாள். ரொம்ப நல்ல பொண்ணு பாலா...''

''இப்போ அஞ்சலி எங்கே ஆன்ட்டி?''

''இங்கே பக்கத்தில் ஒரு ஆஞ்சநேயர் கோவில் இருக்கு. அதற்குச் சனிக்கிழமை வழக்கமா போவாள். நேற்றுப் போக முடியவில்லை என்பதால் இன்று போய் வருகிறேன் என்று காலையிலேயே கிளம்பி விட்டாள். வரும் நேரம்தான்.''

''குழந்தைகளுக்கு உடைகள் போட்டுக் காட்டலாமா ஆன்ட்டி? உதவிக்கு இன்னொரு ஆள் இருந்தால், போட்டுப் பார்த்துத் திருத்தங்கள் ஏதாவது தேவைப் பட்டாலும் உடனே செய்து விடலாம். அதற்கு ஆள் வரச் சொல்லி இருக்கிறேன்...''

''அஞ்சலி வந்த பிறகு, போட்டுப் பார்க்கலாம் பாலா. உங்களுக்கு உதவியாக இருப்பாள். நான் உங்களுக்கு டிபன் எடுத்து வருகிறேன். நீங்க பேப்பர் பாருங்க!'' என்று உள்ளே போனார் சாவித்திரி.

அந்த அறையின் ஜன்னல் வழியாக வெளியே தெருவை ஆராய்ந்தவனுக்குத் தூரத்தில், இளம்பச்சை நிறத்தில், மெரூன் கரையிட்ட மைசூர் சில்க் சேலையில், ஒற்றை வரிசை மல்லிகைச் சரத்தில், பிறை நெற்றியில் முத்து முத்தாய்ப் பூத்திருந்த வியர்வைத் துளியை ஒற்றை விரலால் துடைத்தபடி அஞ்சலி நடந்து வருவது



தெரிந்தது. இவளுக்குத் தன்னை முதன் முதலில் பார்த்த நினைவு எப்போது வரும்? அது அவளுக்கு நினைவில் வந்த அடுத்த வினாடியே கல்யாணம்தான்.

'அடுத்த வினாடியேவா? உங்க அம்மா அப்பாவுக்காவது அழைப்பு உண்டா பாலா?' என்ற கேள்வியை மனச்சாட்சி எழுப்ப, 'கவலைப்படாதே! நிச்சயம் உண்டு!' என்று சொல்லியபடி தனக்குள் சிரித்துக் கொண்டான்.

அவள் ஆசிரமத்தை நெருங்கி விட்டாள் என்பது தெரிந்த உடன் வேகமாக உள்ளே வந்து முன்பு அமர்ந்திருந்த நாற்காலியில் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டான். மூடிய கண்களில் அவளின் பிம்பமே நிழலாடியது. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவன் பார்த்தபோது, ஏ.சி. குவாலிஸ் காரில் அந்த ஆறு பேர் உற்சாகமாய்ப் பேசிச் சிரித்தபடி உலா வந்தது நினைவில் ஆடியது.

அவ்வளவு நேரம் இருந்த நெகிழ்ந்த மனம் மாறி அவளைச் சீண்ட வேண்டும் என்று தோன்றிய எண்ணத்தை அவனால் அடக்க முடியவில்லை. எனவே அவளின் காலடி ஓசை அறைக்குள் வந்து நின்றதை உணர்ந்த பின்னும் அவன் கண்களைத் திறக்கவே இல்லை.

கோவிலில் பிரார்த்தனையை முடித்து விட்டுத் திரும்ப வந்த அஞ்சலிக்கு அந்தத் தெருவில் நுழைந்ததுமே ஆசிரம வாசலில் நின்ற கார் பட்டு விட்டது. அதற்குள் வந்து விட்டானா? பத்து மணியாகும் என்று நினைத்தாளே? ஓட்டமும் நடையுமாக உள்ளே வந்தவளுக்கு மூச்சு வாங்கியது.

கொஞ்சம் சமப்படுத்திக் கொண்டு பேசலாம் என்று சில வினாடிகள் வாசலில் நின்றவளுக்கு அவனின் உடை வியப்பளித்தது. தூய வெள்ளையில் ஆன கதர் ஆடை.

இந்த வயசில் கதர் உடையா? இவன் என்ன காந்திய வாதியா? போக, இவனே செயற்கை இழையில் தயாராகும் துணிகளில் ஆடை வடிவமைத்து ஏற்றுமதி செய்து கொண்டு இருக்கும்போது இவன் கைத்தறி ஆடை அணிந்து இருப்பது ஆச்சரியம் அளித்தது. அதோடு பிடித்தது.

ஆசிரமத்தில் உள்ள குழந்தைகளுக்குப் பராமரிக்கச் சுலபமாகவும், செலவு கம்மியாக ஆகும் என்பதாலும், செயற்கை இழையில் ஆன ஆடைகள் பயன்படுத்தினாலும், தனக்குச் சொந்த உபயோகத்திற்கு என்று வாங்கும்போது பருத்தி ஆடைகள், அதிலும் கையால் நெய்யப் பட்டவையே வாங்குவது அவளுக்குப் பழக்கம்.

அப்பா, அவரின் துறை சார்பில் நடக்கும் கருத்தரங்குகளில் விளம்பரப்படுத்தப்படும் ஒரு வாக்கியம் 'கைத்தறி ஆடைகள் அணிவது கொஞ்சம் காஸ்ட்லியாக இருந்தாலும், அது நெசவாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் ஒரு செயல். முடிந்த வரையில் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு இரண்டு கைத்தறி ஆடைகளாவது கட்டாயம் விலைக்கு வாங்க வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தும் அவரின் குரல் நினைவுக்கு வந்து கண்கள் பனித்தன.

அந்த நெகிழ்வுடனே அருகில் வந்து, ''ஹாய்! மேடம் பார்த்தாச்சா?'' என்று மெல்லிய குரலில் கேட்கும் போதே முதலில் சொன்ன 'ஹாய்' கிசுகிசுப்பாய்க் காற்றில் தொலைந்து போனது.

அந்தக் குரலில் திரும்பிய பாலா, அவளின் நேரடிப் பார்வையைச் சந்திக்காமல், அவளுக்குப் பின்னாலும், தனக்குப் பின்னாலும் திரும்பித் திரும்பிப் பார்த்தான். அஞ்சலி தன்னிடம் பேசியதை அவனால் நம்ப முடிய



வில்லை என்பதைச் சொல்லாமல் சொன்ன அவனின் பாவனை, அவளுக்குச் சற்று முன்பு இருந்த நெகிழ்வான மன நிலையை முற்றிலுமாக மாற்றியது.

வேண்டும் என்றே மேஜைக்குப் பின்னால் சாவித்திரி அம்மா அமரக்கூடிய இருக்கையில் போய் அமர்ந்தாள். ''சொல்லுங்க சார், நீங்க என்ன விஷயமா வந்து இருக்கீங்க? யாரைப் பார்க்கணும்?'' என்று அமர்த்தலாகக் கேட்டாள் அஞ்சலி. அவளுடைய பாவனை நான் இங்கே இருப்பவள் என்பதைச் சொல்லாமல் சொல்ல, அவனுக்குப் புன்னகை வந்தாலும் வெளிக்காட்டவில்லை.

ஏற்கெனவே இவளைச் சந்திக்கத் தானாக வரக்கூடாது என்று அஷோக் - மைதிலி திருமணத்தின்போது எடுத்த முடிவினை, இவளின் பெற்றோர் இழப்பை அறிந்த உடன் தளர்த்தியாகி விட்டது. இதற்கு மேலும் அவளுக்குத் தங்களுடைய முந்திய சந்திப்பைப் பற்றி எதுவும் சொல்ல முடியாது. சொல்ல வேண்டிய அவசியம் இருக்கா என்ன? இவள் ஒருவேளை தன்னைத் தெரியாத மாதிரி நடிக்கிறாளோ என்ற சந்தேகமும் பாலாவிற்குத் தோன்றியது.

''இது நீங்க நடத்தும் ஆசிரமமா? ஐ மீன் சாவித்திரி மேடம் உங்க அம்மாவா?'' என்று நிதானமாக விசாரித்தான். அவனும் அஞ்சலியைத் தெரிந்து கொண்டது போலவே காட்டிக் கொள்ளவில்லை.

இரண்டுக்கும் பொதுவாக அவள் ஒரு 'ஆமா'முடன் நிறுத்திக் கொள்ள, ''மேடமுக்குக் கல்யாணம் ஆகவில்லை என்று கேள்விப்பட்டேனே! ஒரு வேளை நீங்க அடாப்டட் சைல்டா?'' என்று விடாமல் துருவினான் பாலா.

அவனின் அழுத்தத்திலும், துருவலிலும் மேலும் எரிச்சல் மூள, "மேடமுக்கு இங்கே இருக்கும் என்னையும் சேர்த்து ஐம்பத்து நான்கு குழந்தைகள்!" என்று அழுத்தமாகச் சொன்னாள் அஞ்சலி.

"ஓ! ஐ ஆம் சாரி, அப்படி என்றால் நான் கொண்டு வந்த ஆடைகளில் உங்களுக்கு எதுவும் இல்லையே! குழந்தைகள் பற்றியே பேசிக் கொண்டு இருந்ததில் மேடம் உங்களை மறந்து விட்டார்களா? சரி, அவங்கதான் ஏதோ வேலையில் சொல்லவில்லை. இங்கே இருந்த உங்க அக்கவுண்டன்ட்டும் வந்து இருந்த டைலரிடம் சொல்லவில்லை பாருங்க..." என்று அப்பாவியாய்ப் பொய்க் கோபத்துடன் அவன் நடிக்க, அஞ்சலிக்கு ரத்த அழுத்தம் ஏறியது.

"என்னமா நடிக்கிறான்! திமிர் பிடித்தவன், எனக்கு ட்ரெஸ் வேண்டும் என்று இவனிடம் நானே கேட்க வேண்டுமா? எனக்கு வேண்டும் என்பதை நானே வாங்கிக் கொள்ள மாட்டேனா? நீ என்னடா எனக்கு வாங்கித் தருவது? உனக்கு வேண்டும் என்றால் நானே வாங்கித் தருகிறேன். எடுத்துட்டுப் போடா, இடியட். என்னை யார் என்றே தெரியாத மாதிரி... என்னை இதற்கு முன்னால் பார்த்ததே இராத மாதிரி என்ன ஒரு நடிப்பு!" என்று மனதிற்குள் பொருமினாள் அஞ்சலி.

அதில் பாதியையாவது வெளியே காட்டி விட வேண்டும் என்ற எண்ணத்தில், "நான் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட, சுயமாய்ச் சம்பாதிக்கும் திறமை கொண்ட, சுய வருமான முள்ள ஒரு பெண் சார். எனக்கு இந்த ஆசிரமத்து டோனர்கள் யாரும் துணி வாங்கித் தர வேண்டிய



தில்லை. எனக்கு வேண்டியதை என்னால் வாங்கிக் கொள்ள முடியும். அது துணியாக இருந்தாலும் சரி, வேறு எதுவாக இருந்தாலும் சரி, அடுத்தவர் பொருளுக்கு நான் என்றுமே ஆசைப்படுவதில்லை..."

"ஹய்யோ! நீங்க அடுத்தவர் பொருளுக்கு ஆசைப் படுறீங்க என்று நான் எப்போது சொன்னேன்? நீங்களும் இந்த ஆசிரம வாசியாக இருக்கும் பட்சத்தில், சாவித்திரி அம்மா உட்பட, எல்லோருக்கும் என்னுடைய செலவில் புதிய ஆடைகள் கொடுக்கும்போது, உங்களுக்கு மட்டும் நான் கொண்டு வரவில்லையோ என்ற வருத்தத்தில் சொன்னேன்..."

சாவித்திரி அம்மாவுக்கும் ட்ரெஸ் கொண்டு வந்து இருக்கிறானா? இது கொஞ்சம் வித்தியாசமாக இருக்கிறதே! இது சேவை என்ற நிலையைத் தாண்டி எங்கேயோ... மீண்டும் அவன் புறம் சாயத் துடித்த மனதை அவசரமாய்த் தடுத்து நிறுத்தினாள்.

"இந்த ஆசிரம விதிகளின்படி, பதினெட்டு வயதுக்கு மேலே இங்கே தங்க வைப்பது கிடையாது. அதற்கு முன்னதாகவே தொழில் கல்வி கற்றுச் சுயமாகச் சொந்தக் காலில் தனியாக நிற்க அவர்களை நாங்கள் தயார் செய்து விடுவோம். அந்த விதிப்படி பார்த்தால் நான் ஆசிரம வாசி இல்லை. எனவே நீங்கள் துணிகள் அந்த ஐம்பத்து மூன்று குழந்தைகளுக்கு மட்டும் கொடுத்தால் போதும். உங்களுக்கு வேண்டுமானால் சொல்லுங்க, நான் உங்களுக்கு என்னுடைய சொந்தச் செலவில் வாங்கித் தருகிறேன்!" என்று ஒரு ஆத்திரத்தில் வரிசையாக அடுக்கியவள், கடைசி வரியைச் சொன்ன பிறகு ஏன் சொன்னோம் என்று நாக்கைக் கடித்துக் கொண்டாள். மனதிற்குள்

நினைத்ததோடு நிறுத்திக் கொண்டு இருக்கலாமே என்று இப்போது தோன்றியது.

"அட பரவாயில்லையே! இந்த மாதிரி என்னிடம் யாருமே இதுவரை சொன்னதே இல்லை. நானும் அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படும் ஆள் இல்லை. ஆனால் அதே சமயத்தில் எனக்காக அடுத்தவர் வாங்கித் தரும் பொருளை அலட்சியப்படுத்தித் திருப்பி அனுப்பும் ஆளும் இல்லை. அதனால், நீங்க என்ன வாங்கிக் கொடுத்தாலும் சந்தோஷமா நன்றி சொல்லி வாங்கிக் கொள்வேன்!" என்று நிதானமான குரலில் அவன் சொல்ல அஞ்சலிக்குத்தான் மேலும் சூடேறியது.

"அது யார் வாங்கித் தராங்க? எதற்காக? எப்படி அதை ஒருவரிடம் ஒப்படைக்கிறாங்க? இதை எல்லாம் பொறுத்தது!" என்று எரிச்சலோடு இடையிட்டாள். இதென்ன வம்பாப் போச்சு? இப்போ அவனுக்குக் கட்டாயம் தான் ஒரு ஆடையாவது வாங்கித் தர வேண்டிய கட்டாயமாகி விட்டதே! நுணலும் தன் வாயால் கெடும் என்ற பழமொழி தனக்குத்தான் நன்றாகப் பொருந்துகிறது!

இவன் இப்படி அழுத்தமாய் நிதானமாய், இயல்பாகப் பேசிக் கொண்டு இருக்க, சில நிமிடங்களுக்கு ஒரு முறை தன் ரத்த அழுத்தத்தை உயர்த்திப் பார்ப்பதே இவனுக்கு வேலையாகிப் போய் விட்டதே என்று மனதிற்குள் பொரும, சாவித்திரி அம்மா வரும் ஓசை கேட்டது.

"அஞ்சலி! வந்து விட்டாயா? உன்னைத்தான் தேடிக் கொண்டு இருந்தேன். எல்லாக் குழந்தைகளுக்கும் ட்ரெஸ் போட்டுப் பார்க்கணும் என்று பாலா சொன்னார்.



தையல்காரர் ஒருவரையும் வரச் சொல்லி இருக்கிறாராம். அது பற்றிதான் பேசிக் கொண்டு இருந்தீங்களா?" என்று ஆர்வமாகச் சாவித்திரி கேட்க, அஞ்சலி ஆம், இல்லை இரண்டுக்கும் பொதுவாகத் தலை அசைத்து வைத்தாள். ஆனால் பாலாவோ தலையில் கை வைத்தபடி, 'ஒரு உச்சுக் கொட்டலுடன்', நகர்ந்து ஜன்னலுக்குப் போனான்.

"என்ன ஆச்சு பாலா?" என்று குழப்பத்தோடு சாவித்திரி விசாரிக்க, 'ரொம்ப சாரி ஆன்ட்டி. அவங்கதான் அஞ்சலியா? நான் எனக்கு ஏற்கெனவே பார்த்த ஞாபகம் இல்லாமல், ஏதேதோ பேசி விட்டேன். அவங்க நிச்சயம் என்னைத் தப்பா நினைச்சு இருக்கப் போறாங்க..." என்று கவலையாகச் சொன்னான்.

"என்னை இதற்கு முன்னால் பார்த்த ஞாபகம் உங்களுக்கு இல்லையா? என்று ஆத்திரத்தோடு அஞ்சலி விசாரிக்க, அவன் அவளைப் பார்த்து வருத்தமாய்ப் புன்னகை செய்தபடி மறுப்பாய்த் தலை அசைத்தான்.

"என்ன பாலா, பார்த்து ரெண்டு மூணு வாரம்தானே இருக்கும்? அதுக்குள்ளே மறந்துடுச்சா? புதன் கிழமை போனில் கூடப் பேசினாயே? நினைவில்லையா?"

"ப்ச்! சாரி ஆன்ட்டி, பார்த்த மாதிரி இருந்தது. அன்று போனில் ரொம்பக் கடுமையா பேசினாங்க. இன்று ரொம்ப சாஃப்ட்டா... பேசினாங்களா... அதான்... ஆனால் முகம் ரொம்ப பரிச்சயமா இருந்தது..." அவன் பேசப் பேசப் பொங்கிய எரிச்சலை அடக்கவும் முடியாமல், அதைச் சாவித்திரி அம்மாவின் முன்னிலையில் காட்டவும் முடியாமல், "நான் போய்க் குழந்தைகளை அசெம்பிள் பண்ணுறேன் அம்மா!" என்று முணுமுணுத்துவிட்டுத் திரும்பி நடந்தாள் அஞ்சலி.

அவள் எரிச்சலோடு போவதைப் புன்னகையோடு பார்த்து இருந்தவன், "ஐ ஆம் சாரி அஞ்சலி மேடம்..." என்று வேண்டும் என்றே குரல் உயர்த்திச் சொன்னான்.

* * *

கோவையில் தனது வீட்டில் இருந்த லலிதாவிற்கு இருப்பே கொள்ளவில்லை. அன்று காலை ஆறு மணி அளவில் பாலா, 'அம்மா, நான் ஒரு முக்கியமான வேலையாகச் சென்னை வரை போய் விட்டு இன்று இரவே திரும்பி விடுவேன்!' என்று சொல்லிக் கிளம்பியதில் இருந்து இப்படித்தான் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டு இருக்கிறார்.

"இவ்வளவு ரெஸ்ட்லெசா இருப்பதற்கு, அவன் சொல்லும்போதே எங்கே போகிறாய் என்று கேட்க வேண்டியதுதானே?" என்று சிரிப்போடு மனைவியைப் பார்த்துக் கேட்டார் செல்வகுமார்.

"எதுக்கு? அவனிடம் நான் வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டவா? அம்மாவும் பையனும் ரெண்டு நாள் சேர்ந்தாற் போலச் சிரித்துப் பேசினால் உங்களுக்குப் பொறுக்காதே! உடனே சண்டை மூட்டிவிட வேண்டுமா?" என்று அவரிடம் பாய்ந்தார் லலிதா.

"ஆமா! நான் தான் உங்க ரெண்டு பேருக்கும் சண்டை மூட்டி விட வேண்டுமாக்கும்? ஒரு நாளைக்கு நூறு சண்டை அம்மாவும் பிள்ளையும் போட்டுப்பீங்க. அதெல்லாம் மறந்து போய் இப்ப பழி என் மேலா?" என்று சிரித்துக் கொண்டே அச்சகத்திற்குக் கிளம்பினார் செல்வகுமார்.

"எங்கே கிளம்பிட்டீங்க? வீட்டில் இருப்பது மூணு பேர். ஒருத்தன் பொழுது விடிஞ்சும் விடியாமல் வெளியே போயாச்சு. நைட் எப்போ வருவானோ யாருக்கும் தெரியாது. நீங்களாவது இன்னிக்கு வீட்டில் இருக்கக் கூடாதா? ஞாயிற்றுக்கிழமைகூட அச்சகத்தில் அப்படி என்னதான் இருக்கோ? இங்கே ஒருத்தி தனியா புலம்பிட்டு இருக்கேனே. கூட இருந்து ஏதாவது பேசிட்டு இருப்போம் என்று தோணாது!" என்று அதற்கும் லலிதா அங்கலாய்த்தார்.



"ஒரு ரெண்டு மணி நேரம் வேலை இருக்கும்மா. சீக்கிரம் மதியச் சாப்பாட்டுக்குள்ளே வந்து விடுவேன்!" என்று சமாதானம் செய்து விட்டுக் கிளம்பினார்.

அவர் வெளியே கிளம்பிப் போன பிறகு பாலா அஞ்சலியைத் தான் பார்க்கப் போய் இருக்கிறானா என்பது தெரியாமல் தன்னால் நிம்மதியாக இருக்க முடியாது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டார் லலிதா. தன்னுடைய மகனிடம் நேரடியாகக் கேள்வி கேட்டு, அவனுடைய தனிப்பட்ட உரிமையையும் பறிக்க விரும்பவில்லை.

அதே சமயம் அவனை வேவு பார்ப்பது மாதிரியும் இருக்கக் கூடாதே! அவன் மேல் தனக்கு நம்பிக்கை இல்லாமல் போய் விட்டதோ என்ற சந்தேகம் அவனுக்கு வந்து விடக் கூடாது என்பதிலும் அவர் உறுதியாகவே இருந்தார். நீண்ட யோசனைக்குப் பின்பு மைதிலிக்குப் போன் போட்டார் லலிதா.

"ஹலோ ஆன்ட்டி, வாட் எ சர்ப்ரைஸ்? ஞாயிற்றுக்கிழமை பொழுது இப்போதுதான் விடிந்ததா? நல்ல தூக்கமா ஆன்ட்டி? எப்படி இருக்கீங்க?" என்று கேலியாக விசாரித்தாள் மைதிலி.

"நீ தூங்குவதைப் போல என்று நினைத்தாயாக்கும்? நானெல்லாம் காலை ஆறு மணிக்கு யோகா செய்யும் கும்பலில் இருப்பவள்..." என்று சந்தோஷமாகப் பதில் சொன்னவருக்கு எப்படிப் பாலா சென்னையில் அஞ்சலி தங்கி இருக்கும் ஆசிரமத்துக்கு வந்து இருக்கிறானா என்பதைக் கேட்பது என்று புரியவில்லை.

சுற்றி வளைத்து, அவளின் நலன், அவளுடைய தேனிலவு, அலுவலகப் பணி, புகுந்த வீடு பற்றிப் பல வேறு தகவல்களை விசாரித்த பின்பு, 'இன்று நீ ப்ரீயா மைதிலி? எங்கேயும் ப்ரோக்ராம் இருக்கா?' என்று விசாரித்தார் லலிதா.

"அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை, ஆன்ட்டி இங்கே சும்மா பக்கத்தில் வந்து இருக்கிறோம். என்ன விஷயம் சொல்லுங்க."

"நீ ப்ரீயா இருந்தால், அஞ்சலி எப்படி இருக்கிறாள் என்று ஒரு நடை போய்ப் பார்த்துவிட்டு வர முடியுமா, மைதிலி? அவள் என்னுடைய போனைத் திருப்பி அனுப்பி விட்டாள். அது வந்து சேர்ந்ததை இன்னும் அவளிடம் சொல்லவில்லை. இரண்டு முறை ஆசிரமத்திற்குப் போன் போட்டேன். அவள் இல்லை போல. ஒரு நன்றி சொல்ல வேண்டும். என் சார்பில் நீ சொல்லி விடுகிறாயா? முடியுமா?" என்று லலிதா கேட்டு முடிக்கும் போது மைதிலி வாய் விட்டுச் சத்தமாகச் சிரிக்க ஆரம்பித்து இருந்தாள்.

"ஹேய் மைதிலி, என்ன ஆச்சு இப்படிச் சிரிக்கிறாய்?" என்று பக்கத்தில் இருந்த அசோக்கும் எதிர் முனையில் இருந்த லலிதாவும் மாறிக் கேட்டும் அவளால் சிரிப்பை



அடக்க முடியவில்லை. ஆசிரமத்தின் உள்ளே இருந்த அஞ்சலிக்கோ, பாலாவுக்கோ இந்தத் தகவல் கேட்டு விடக் கூடாது என்று அவசரமாக வாயிலுக்குள் வந்தாள்.

"ஆன்ட்டி, நீங்க சந்தோஷப்படுவது மாதிரி ஒரு ஸ்பெஷல் ஸ்வீட் நியூஸ் இப்ப நான் சொன்னால் நீங்க எனக்கு என்ன தருவீங்க?" என்று சிரிப்பை அடக்க முடியாமல் கேட்டாள் மைதிலி.

"எனக்கு ஸ்பெஷல் ஸ்வீட் நியூஸ் இப்போதைக்கு என் பையனோட கல்யாணம் சம்பந்தப்பட்டதுதான். அது பற்றி நீ ஏதாவது சொல்வதாக இருந்தால், உனக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு மூணு பவுனில் தங்க செயின் வாங்கிப் போடுகிறேன். போதுமா?" என்று ஆர்வமாகச் சொன்னார் லலிதா.

"அடேயப்பா! அவ்வளவு ஆசை எல்லாம் எனக்கு இல்லை, ஆன்ட்டி. போக, அதுக்கு அட்லீஸ்ட் பத்து மாசம் காத்து இருக்கணுமே! வேற ஒண்ணும் பெரிசா இல்லை என்றாலும் ஒரு ஸ்வீட் பாக்ஸ், சொன்ன உடனே கொடுப்பது மாதிரி, ஏற்பாடு பண்ணுங்க. அப்பத்தான் சொல்வேன்!" என்று பிகு பண்ணிக் கொண்டாள் மைதிலி.

"கொடுத்துட்டாப் போச்சு. அதென்ன பெரிய சமாச்சாரம்? நீ சொல்லு, நான் ஏற்பாடு பண்ணுகிறேன்."

"அதுதான் லல்லி ஆன்ட்டி ஸ்பெஷல், தேங்க்ஸ் ஆன்ட்டி. அதுக்காகவே இப்ப ஒரு ஸ்வீட் நியூஸ் சொல்றேன், கேட்டுக்கோங்க. நீங்க ஆசைப்பட்ட மாதிரியே உங்க பையன் கூடிய சீக்கிரம் கல்யாணத்துக்கு ஒத்துக் கொள்வார். அதுக்கு நான் கேரன்ட்டி..." என்று உற்சாகமாகச் சொன்னாள் மைதிலி.

''ஹேய் மைதிலி! நிஜமாவா சொல்கிறாய்? உன் வாயில ஒரு கிலோ சர்க்கரை கொட்டணும்!'' என்று நம்ப முடியாமல் வியப்போடு கேட்டார் லலிதா.

''என்ன ஆன்ட்டி நான் ஸ்வீட் கேட்டால் நீங்க சர்க்கரை தரீங்க. சர்க்கரையும் ஸ்வீட் என்று கடிச்சுடாதீங்க ப்ளீஸ். அது சரி, பொண்ணு யார் என்று நீங்க கேட்கலையா? கொஞ்ச நேரம் முன்னாடி எதுக்கு நான் அப்படிச் சிரித்தேன் தெரியுமா?'' என்று உற்சாகமாக மைதிலி பேசிக் கொண்டே போக, லலிதா அவசரமாக இடையிட்டார்.

''ஹேய்! எனக்குத் தெரியும். நீ இப்போ ஆசிரமத்தில் அஞ்சலி பக்கத்தில்தான் இருக்கிறாயா? பாலாவும் அங்கே வந்து இருக்கிறான்தானே?'' என்று குதூகலமாக விசாரித்தார் லலிதா.

''ஆன்ட்டி! நீங்க இருந்தாலும் இவ்வளவு ஷார்ப்பா இருக்க வேண்டாம் ஆன்ட்டி, எங்களோட சரிக்குச் சரி கெஸ் பண்றதுல போட்டி போடுறீங்களே! கலக்குங்க!'' என்று சந்தோஷமாக மைதிலி சிரிக்க, அந்தச் சிரிப்பில் உடன் இணைந்து கொண்டார் லலிதா.

# 9

அஞ்சலி குழந்தைகளை அழைத்து வருகிறேன் என்று அறையில் இருந்து வெளியேறியதும், சாவித்திரி அம்மா அவனை ஆச்சரியமாகத் திரும்பிப் பார்த்தார்.

''பாலா, உங்களுக்கு அஞ்சலியை முன்னாடியே தெரியுமா?'' என்று நிதானமாக விசாரித்தார்.



''ஆன்ட்டி! அஷோக் - மைதிலி கல்யாணத்தில் பார்த்தன் என்று ஏற்கெனவே சொன்னேனே!''

''சொன்னீங்க. ஆனால் அதற்கும் முன்னாடியே உங்களுக்குத் தெரியும் என்று...'' யோசனையாடு இழுத்தார்.

''ஏன் அப்படிச் சொல்றீங்க ஆன்ட்டி?''

''அன்று நீங்க போனில் பேசிய போதும் அஞ்சலி ரொம்ப டிஸ்டர்ப்பா இருந்தாள். கொஞ்சம் முன்னாடி நீங்க அவளை நினைவில்லை என்று பேசியது உண்மை இல்லையோ என்று தோன்றியது. அது அவளுக்கு உங்களை நினைவில்லையோ என்ற வருத்தத்தில் சொன்ன மாதிரி...''

''என்ன ஆன்ட்டி, நேரில் இருந்து பார்த்த மாதிரி என்னென்னவோ சொல்றீங்க!'' என்று அவசரமாக இடையிட்ட பாலாவின் முகத்தில் வியப்பே பிரதானமாய் இருந்தது.

''நான் சொல்வது சரியா, தெரியலை. அஞ்சலி நீங்க செஞ்ச உதவி எதையாவது மிஸ் பண்றாளோ என்ற சந்தேகம் எனக்கு. ஒருவேளை அவள் அவ அம்மா அப்பா இறந்த அதிர்ச்சியில், உங்களை நினைவு இல்லாமல் ஏதாவது சொல்லி இருந்தால், அதை இக்னோர் பண்ணிடுங்க...'' என்று யோசனையோடு சொன்னார் சாவித்திரி.

''இல்ல ஆன்ட்டி. அஞ்சலி எதையும் மிஸ் பண்ணவில்லை. பண்ணவும் மாட்டாள். எனக்கு நம்பிக்கை இருக்கு!'' என்று அழுத்தமாகச் சொல்ல, அவனை மீண்டும் வியப்போடு பார்த்தார்.

"அப்ப என்னோட சந்தேகம் சரிதானா?"

"என்னைத் துப்புறியுறவங்க லிஸ்ட் ஜாஸ்தி ஆகுது. ஆன்ட்டி. நாம் உள்ளே போகலாம். அஞ்சலி குழந்தைகளோடு வெயிட் பண்ணுவாங்க..." என்று சிரித்தபடி உள்ளே நகர்ந்தான் பாலா. அவனுடைய பாவனையே தன்னுடைய சந்தேகத்தை உறுதி செய்தது. அவன் எங்கேயும் அவளைப் பார்த்ததில்லை என்று உறுதியாக மறுக்கவே இல்லை. எதிர்க் கேள்விதான் கேட்டான்.

"ஆன்ட்டி, நீங்க தப்பா நினைச்சுக்காதீங்க, நான் உங்களுக்கு இரண்டு புடவை எடுத்து வந்தேன். நான் எங்க அம்மாவிற்கு எடுத்துக் கொடுப்பது மாதிரி என்று எண்ணித் தருகிறேன், வாங்கிக்கோங்க ப்ளீஸ்!" என்று சொல்லிப் பாலா முதலில் தன்னிடம் நீட்டிய இரண்டு புடவைகளையும் பார்த்த சாவித்திரி புன்னகை புரிந்தார்.

"அம்மா என்று சொல்லி விட்டதால் வாங்கிக்கறேன். ஆனால் ஒண்ணு போதும்பா. ரெண்டு எல்லாம் வேண்டாம். இந்த மாதிரி ஜரிகை வைத்த புடவை நான் கட்டுவதே கிடையாது..."

"நான் உங்களுக்கு என்று கொடுத்து விட்டேன். நீங்க கட்டவில்லை என்றால் உங்களுக்குப் பிடிச்ச, இந்த மாதிரி புடவை அணியும் யாருக்காவது கொடுத்தால் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை ஆன்ட்டி!" என்று சொன்னவனுக்கு இருநூறு சதவிகிதம் நிச்சயமாக அஞ்சலிக்குத்தான் அது போகும் என்பது தெரிந்து இருந்ததால், அவன் தப்பித் தவறிக்கூட அவளின் புறம் திரும்பவில்லை.



"நீங்க குழந்தைகள் உடையைச் சரி பாருங்க, எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. இன்னிக்கு சண்டே இல்லையா? நிறைய போன் வரும். விசிடர்சும் ஜாஸ்தியா இருப்பாங்க. நான் அதைப் பார்க்கிறேன்!" என்று சொல்லிவிட்டு அலுவலக அறைக்குச் சென்று விட்டார் சாவித்திரி. அவர்கள் ஏதாவது பேச வேண்டும் என்றாலும் பேசட்டுமே என்று எதிர்பார்த்தார். அது மட்டும் நடக்கவில்லை.

அடுத்து வந்த அரை மணி நேரம், ஒவ்வொரு குழந்தைக்கும் உடைகளை அணிவித்து, அவர்களின் முகம் மலர்வதை சந்தோஷமாக ரசித்துவிட்டு, கொண்டு வந்த மூன்று செட் உடைகளான நூற்று ஐம்பத்து ஒன்பது ஆடைகளில், சீரமைக்க வேண்டிய நான்கு ஆடைகளை மட்டும் தனியே எடுத்து வைத்துவிட்டு வந்த பாலாவும் அஞ்சலியும், அந்த ஹாலை விட்டு அலுவலக அறைக்குத் திரும்பி வரும்வரை நேரடியாக ஒரு வார்த்தைகூடப் பேசிக் கொள்ளவே இல்லை.

உன்னை நான் பார்க்கும்போது மண்ணை நீ பார்க்கின்றாயே!

விண்ணை நான் பார்க்கும்போது என்னை நீ பார்க்கின்றாயே...

என்பது மாதிரி ஒருவர் பார்க்காத நேரத்தில் அடுத்தவரின் தோற்றத்தை ரசித்தனர். குழந்தைகளிடம் இதமாகப் பேசுவதை ரசித்தனர்.

"ஹாய், உன் பேர் என்ன குட்டி, உனக்குப் பிடித்த கலர் என்ன?" என்று விசாரித்துப் பெரும்பாலான குழந்தைகள் சொன்ன மஞ்சள், ஆரஞ்சு, பிங்க் ஆகிய வண்ணங்

கள் சின்னதாக எங்காவது ஒட்டிக் கொண்டு இருந்ததைக் காட்டி, உனக்காக ஸ்பெஷலா செஞ்ச ட்ரெஸ். பிடிச்சு இருக்கா? இந்த பலூன் பார்த்தாயா? இந்த பழம் அழகா இருக்கா? இந்தப் பூ எப்படி இருக்கு?'' என்று மண்டியிட்டு, அவர்களின் உடையில் இருந்தவற்றைக் காட்டி, குழந்தைகளுக்குச் சரியாகப் பேச்சு கொடுத்தபடி, ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான ஆடையை அணிவித்துச் சரி பார்த்த பாலாவைக் காணாமல் கண்டு ரசித்தாள் அஞ்சலி.

''ஹேய் ராஜு, அடுத்த வாரம் உனக்கு ஸ்கூலில் பேச்சுப் போட்டி இருக்கு இல்லையா? தயார் பண்ணி விட்டாயா? அன்று இந்த ட்ரெஸ் போட்டுட்டுப் போக லாமா? ப்ரியங்கா, நீ கேட்ட பைன் ஆப்பிள் இதுதான். உன்னோட ப்ராக்கிலேயே இருக்கு பார்த்தாயா? சாந்தி, ஃபுல் பாண்ட் கேட்டீங்கதானே? சைஸ் சரியா இருக்கா?'' என்று ஒவ்வொருவரையும் பேர் சொல்லி அழைத்து அவர்களின் ரசனை தேடல்களை இணைத்து ஒவ்வொரு ஆடையையும் அவர்களுக்கு அணிவித்தபடி சரி பார்த்த அஞ்சலியைப் பெருமிதமாகப் பார்த்து ரசித்தான் பாலா.

குழந்தைகள் எல்லோரிடமும் நல்லாத்தானே பேசகிறாள்? என்னிடம் பேசும்போது மட்டும் எங்கிருந்து தான் அவ்வளவு கோபமும் அழுகையும் முக்கியமா ஈகோவும்... ஈகோ என்று சொல்ல வேண்டாம்... ரோஷம்... அப்படிப் பொத்துக் கொண்டு வருதோ தெரியலையே! ஆமாமா! உனக்கு ரோஷம் ரொம்ப ரொம்ப கம்மி பாரு. உனக்குப் பொருத்தமா இருக்கட்டும் என்றுதான்... கேள்வியும் பதிலுமாக மனதிற்குள்ளேயே வாக்குவாதம் நடத்திச் சிரித்துக் கொண்டான்.

* * *



வேலை முடித்து அலுவலக அறைக்குள் நுழைந்த பொழுது அங்கே அமர்ந்து இருந்த அஷோக் - மைதிலி இருவரையும் பார்த்துப் பாலா அஞ்சலி இருவரும் திகைத்து நின்றனர்.

''ஹேய்... மைதிலி... ஹவ் ஆர் யு? எங்கே இங்கே?'' என்று திணறலாகப் பாலா மைதிலியையும், ''அஷோக், நீ இங்கே வரேன் என்று சொல்லவே இல்லையே?'' என்று முனகலாக அஞ்சலி அஷோக்கையும் விசாரித்தபடி அருகில் வந்தனர்.

''ஹலோ சார்! நான் கேட்க வேண்டிய கேள்வியை நீங்க கேட்கறீங்க! நான் உள்ளூர். இன்று விடுமுறை. அஞ்சலியைப் பார்த்து ரெண்டு வாரம் ஆச்சு. அதனால் அவளைப் பார்த்து ஹலோ சொல்ல வந்தேன். நீங்க கூடத்தான் கோவையில இருந்து இங்கே வரப் போவதாக எனக்குச் சொல்லவே இல்லை. என்ன விஷயமா யாரைப் பார்க்க வந்தீங்க...?'' என்று குறும்புச் சிரிப்போடு விசாரித்தாள் மைதிலி.

''ஏன் மைதிலி, நீ மட்டும்தான் அஞ்சலியைப் பார்க்க வரணுமா? நாங்க எல்லாம் வர மாட்டோமா?'' என்று அஷோக் மனைவியைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சிரிப்போடு கேட்க ஒரு நிமிடம் பாலா அஞ்சலி இருவருக்குமே தூக்கி வாரிப் போட்டது.

''அஷோக்! என்ன உளறுகிறாய்? அவர் ஆசிரமக் குழந்தைகளுக்கு ட்ரெஸ் கொண்டு வந்தார்...'' என்று அவன் முதுகில் லேசாகத் தட்டி, கண்டிக்கும் தொனியில் அஞ்சலி இடையிட்டாள்.

''நான் பாலாவை ஒண்ணும் சொல்லவில்லை தாயே. கோபித்துக் கொள்ளாதே. ஏன் நான் உன்னைப் பார்க்க வரமாட்டேனா? வரக்கூடாதா என்று நான் என் பெண் டாட்டியைக் கேட்டேன் அஞ்சலி. அதுக்கு ஏன் நீ இவ்வளவு டென்ஷன் ஆகிறாய்?'' என்று சர்வ சாதா ரணமாக அஷோக் சொல்ல பாலா - அஞ்சலி இருவரும் நிம்மதிப் பெருமூச்சு ஒன்றினை வெளியேற்றினர். அது அவர்களை ஆராய்ந்து கொண்டு இருந்த மைதிலி - அஷோக் இருவரின் கண்களிலும் தப்பாமல் பட்டது.

அஷோக் - மைதிலி இருவரும் இங்கே வந்து விட்டதால், இனித் தனிமையில் அஞ்சலியைச் சந்திக்கும் வாய்ப்பும் கிடைக்காது என்பதோடு, இவர்களின் வாயில் ஏன் விழ வேண்டும் என்ற கவனமும் தலை தூக்க, ''சரி ஆன்ட்டி, நான் கிளம்புகிறேன். தையல்காரர் ஒரு மணி நேரத்தில் எல்லாம் சரி செய்து விடுவார் ஆன்ட்டி!'' என்று சொல்லியபடி சாவித்திரியிடம் விடைபெற முயன்றான் பாலா.

அதற்கு அவர் பதில் சொல்லும் முன்பே, ''என்ன பாலா எங்க ஊருக்கு வந்து இருக்கீங்க. எங்க வீட்டுக்கு வரவேண்டாமா? கல்யாணம் நடந்த அன்றுதான் அவ சரமா வேலை வந்து கிளம்பிட்டீங்க. நாங்க அஞ்சலியை வெளியே சாப்பிடக் கூப்பிட்டுப் போகத்தான் வந்தோம். இப்ப இன்னொரு ஆள், என்னோட கம்பெனிக்கு. வாங்க பாலா...'' என்று அழைப்பு விடுத்தான் அஷோக்.

''அவங்க ப்ரீயா என்று கேட்காமல் இஷ்டத்துக்குச் சொல்லாதீங்கப்பா. அஞ்சலி மேடம் வேற ஏதாவது ப்ளான் வச்சு இருக்காங்களோ என்னவோ? இந்த சண்டே



முக்கியமான வேலை இருக்கு என்று சொன்னது மறந்து போச்சா?'' என்று மைதிலி தன் பங்கிற்கு இடையில் செருகினாள்.

அஷோக் தான் பாலாவுடன் தனிமையில் இருக்க விரும்புவதாகத் தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாதே என்று அவசரமாக, இருவருக்கும் பொதுவாகப் பதில் சொன்னாள் அஞ்சலி. 'அப்படி எல்லாம் ஒண்ணும் இல்லை. நான் நீங்க புதுமணத் தம்பதிகள் தனியா டைம் ஸ்பென்ட் பண்ணட்டும் என்ற அர்த்தத்தில் சொன் னேன். நீயாக வேறு ஏதாவது கற்பனை பண்ணிக் கொள் ளாதே!'' என்று மைதிலிக்குப் பதில் சொல்லும்போதே கண்கள் பாலாவை ஒரு வினாடி தொட்டுத் தடவி, 'இந்தத் தகவல் உனக்கும்தான்!' என்று சேதியும் சொன்னது.

மைதிலி, அஷோக், சாவித்திரி மூவருமே மாறி மாறி, ''வந்த வேலைதான் முடிந்ததே? இன்னும் என்ன செய்யப் போறீங்க?'' என்று வற்புறுத்த, அஞ்சலியுடன் கூடக் கொஞ்ச நேரம் செலவழிக்க அவனின் ஆசை மனம் தூண்ட, மாலை ஆறு மணிக்குத் தானே விமானம் என்று அறிவும் பச்சைக் கொடி காட்ட, பாலா அவர்களுடன் வெளியே வரச் சம்மதித்தான்.

காரில் போகும்போது, அஷோக் வண்டியை ஓட்ட, அவன் அருகில் மைதிலி அமர்ந்து கொண்டதால், வேறு வழி இன்றி பின்சீட்டில், பாலாவின் அருகே அமர்ந்த அஞ்சலிக்குப் படபடப்பாய் இருந்தது. கூடிய வரையில் தள்ளி, கதவை ஒட்டி அமர்ந்து இருந்தவளுக்கு, இதே காரில் அஷோக்குடன் தனியாகப் போகும்போது, இப்படி எல்லாம் உணர்ந்ததே இல்லையே? ஆனால் நாலு பேர் இருக்கும் போது, இவன் தன்னை என்ன செய்து விடு

வான் என்று இப்படி வேகமாக இதயம் துடிக்கிறது என்று அவளுக்கு விளங்கவில்லை.

அஷோக் எத்தனை இயல்பாக, 'நான் அஞ்சலியை வெளியே சாப்பிடக் கூப்பிட்டுப் போக வந்தேன்!' என்று உரிமையாகச் சொல்கிறான். அது மாதிரி அவளைத் தான் நினைத்த இடத்திற்கு, நினைத்த நேரத்தில் கூட்டிப் போகும் வேளை எப்போது வருமோ என்ற ஏக்கத்தில் வந்த பெருமூச்சை அடக்கினான் பாலா. அவளின் அருகாமை தந்த இனிமையை அனுபவித்தபடி, ஆனால் அந்த மயக்கம் வெளியே தெரிந்து விடாத அளவிற்கு முகத்தை இறுக்கமாக வைத்தபடி வெளியே பார்த்துக் கொண்டு வந்தான் பாலா.

''என்னங்க, பாலாண்ணா கெட் அப் பார்த்தீங்களா? நம்மூரு அரசியல்வாதி மாதிரி செமையா இல்லை?'' என்று கேலியாகக் கேட்டாள் மைதிலி.

''நீ சும்மா இருக்க மாட்டாயா? கல்யாணம் அன்னிக்கு ஒரு நாள் நான் வேஷ்டியோடு மல்லுக் கட்டினது போதாதா? அஞ்சலியிடம் கேளு, இந்த விஷயத்தில் நமக்கு ஒரு சூப்பர் எக்ஸ்பீரியன்ஸ் இருக்கு. அதுவும் அன்று எனக்குப் பிறந்த நாள் வேற''... என்று கேலியாக அஷோக் சொன்னதை மைதிலியாவது அஞ்சலியாவது காதில் வாங்கிப் பதில் சொல்லி இருந்தால் நன்றாக இருந்து இருக்கும். ஆனால் இருவருக்கும் அதில் ஆர்வம் இல்லாமல் போகவே, அது காற்றோடு போனது.

''ஹேய் மைதிலி! உன்னோட வாய் கல்யாணம் ஆன பிறகு கொஞ்சமாவது குறையும் என்று பார்த்தால் முன்னாடி இருந்ததை விட ஜாஸ்தி ஆன மாதிரி இருக்கு.



உனக்கு என்னைப் பார்த்தால் அரசியல்வாதி மாதிரியா இருக்கு? வேஷ்டி நம்முடைய தேசிய உடை. நெசவு நம்முடைய பாரம்பரியத் தொழில். மகாத்மா காந்தியே நூல் நூற்றுக் காட்டி இருக்கிறார் தெரியுமில்லையா? வசதி உள்ள ஒவ்வொருவரும் ஆண்டுக்கு இரண்டு செட் கைத்தறி ஆடைகளாவது வாங்கிப் பயன்படுத்தினால் நெசவுத் தொழில் புரிவோரின் வாழ்வு மேம்பாடடையும் தெரியுமா?'' என்று அதட்டினான் பாலா.

''பேச்செல்லாம் நல்லாத்தான் இருக்கு. ஆனால் அய்யாவை நான் வேஷ்டி சட்டையில் அடிக்கடி பார்த்தது இல்லியே! அதுதான் ஆச்சரியமாக இருந்தது!'' என்று மைதிலி அவனுக்குப் பதில் சொல்லும்போதே, அஷோக்கும் அஞ்சலியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''உங்க வீட்டுல யாராவது என்.டி.சி.ல வேலை செஞ்சாங்களா, பாலா?'' என்று ஆச்சரியமாகக் கேட்டான். அந்தக் கேள்விக்கு உரிய பதிலைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் அஞ்சலியின் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது.

''ஏன் அப்படிக் கேட்கறீங்க?''

''இல்லை, அஞ்சலியோட அப்பா அங்கே வேலை செஞ்சாங்க. எங்க அப்பா இன்னும் சர்வீஸ்ல இருக்காங்க. வழக்கமா எங்க வீட்டுல அடிக்கடி பேசப்படும் வார்த்தைகள் இது. அதனால் கேட்டேன்!'' என்று விளக்கம் சொன்னான் அஷோக்.

''என்ன சார் இது? என்.டி.சி.-ல வேலை செஞ்சாத் தான் இந்தக் கொள்கை விளக்கம் தெரியுமா? நெசவு, கைத்தறி, தொழிலாளர் மேம்பாடு இதுக்கும் என்.டி.சி.க்

கும் என்ன சம்பந்தம்? சில விஷயங்கள் ஒரே பார்வையிலேயே பிடித்து விடும். அப்படி நடக்குமா? எல்லோராலும் ஒத்துக்கொள்ள முடியுமா? இந்த மாதிரி அறிவுப்பூர்வமான கேள்விகளுக்கு அங்கே இடமில்ல!'' என்று தீர்மானமாக முடித்தவன் பார்வை பேச்சை ஆரம்பிக்கும்போது ஓரப் பார்வையாக இருந்தாலும், முடிக்கும்போது அவள் கண்களை நேராகச் சந்தித்தது.

அழுத்தமான குரலில் தெளிவாக அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும், அவளுக்கு அவளுடைய அப்பாவை அப்படியே கண் முன்னால் கொண்டு வந்து நிறுத்தியது.

''.... சந்தோஷமாக இருப்பதற்கும், புத்திசாலியாக இருப்பதற்கும் சம்பந்தமே இல்லை அஞ்சலி. நீ புத்திசாலி. சில விஷயங்களைக் காசு கணக்கால் எடை போட முடியாது. கைத்தறி ஆடைகள் விலை அதிகம். பராமரிப்புச் செலவும் கூடுதல். நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் சொந்த வாழ்க்கையில் அறிவுபூர்வமான வாதங்களுக்கு இடமில்லை அஞ்சும்மா!'' என்ற அப்பாவின் வாதத்தை ஏற்றுக் கைத்தறி ஆடைகளை அவள் அணிய ஆரம்பித்தாள்.

முதன் முதலில் அவள் வாங்கியது அப்பாவிற்கு ஒரு சட்டை. அது இன்று வரை பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அவரின் மரணம் நிகழ்ந்த தினத்தில் இருந்து ஒரு வாரம் தள்ளி வர இருக்கும் அவருடைய பிறந்த தினத்திற்காக, அவள் சந்தன நிறத்தில், ஷர்ட் வாங்கி, அதன் சட்டைப் பையைச் சுற்றிலும் பூ வேலை செய்து இருந்தாள். இது பற்றிய நினைவு இப்போது ஏன் வந்தது?





# 10

ஒரு ஆண்டுக்கு முன்னால் அப்பாவின் பிறந்த நாளைக்காகத் தான் பிரத்யேகமாக வாங்கிய, இன்று வரை பயன்படுத்தப் படாமல் இருக்கும் அந்தச் சட்டை பற்றிய நினைவு திடீர் என்று ஏன் வந்தது என்று ஒரு நிமிடம் திகைத்தாள் அஞ்சலி. அவளின் தலை அவளையும் அறியாமல் பக்கவாட்டில் திரும்பிப் பாலாவை அளவெடுத்தது.

அசோக் கொஞ்சம் பூசினாற் போல இருப்பான். அப்பாவின் சட்டை அவனுக்குப் பத்தாது என்று ஒரு பார்வையிலேயே தெரியும். ஆனால் பாலாவிற்கு அந்தச் சட்டை சரியாக இருக்கும் என்று தோன்றிய பிறகே, இப்போது எதற்கு இந்தக் கணக்கீடு என்ற எண்ணம் தோன்றியது.

அவளின் கண்கள் பாலாவை அளவெடுத்ததை அவனும் உணர்ந்தாலும், அவள் புறம் திரும்பவில்லை. அலைபேசியில் மெசேஜ் அனுப்பும் பணியில் தீவிரமாக இருந்தான்.

''என்ன பாலாண்ணா, குனிஞ்ச தலை நிமிராமல் வரீங்க? நீங்க என்ன கல்யாணப் பொண்ணா?'' என்று கேலியாக விசாரித்தாள் மைதிலி.

''நீ எந்தக் காலத்தில் இருக்கிறாய் மைதிலி? கல்யாணப் பொண்ணு என்றால் தலை குனிந்து இருக்கணுமா? நீ அப்படி இல்லையே? பக்கவாட்டில், முன்

னால் என்று உன் பார்வை சுற்றிக் கொண்டே இருந்ததை நான் பார்த்தேனே! அந்தச் சட்டம் உனக்குப் பொருந்தாது!'' என்று மடக்கினான் பாலா.

''அதெப்படி உங்களுக்குத் தெரியும் பாலா? வேற முக்கியமான ஆளை அல்லவா வினாடி விடாமல் உங்களின் பார்வை தொடர்ந்து கொண்டு இருந்தது?'' என்று மைதிலி திருமண தினத்தில் நடந்ததாகச் சொன்னதை வைத்துச் சீண்டினான் அஷோக்.

''ஆமா, மைதிலி எனக்கு முக்கியமானவள் இல்லையா? அதனால் மணவறையைத் தான் விடாமல் பார்த்துக் கொண்டு இருந்தேன்!'' என்று சின்னச் சிரிப்போடு பார்வையை அஞ்சலி மேல் பதித்துப் பதில் மட்டும் அசோக்கிற்குச் சொன்னான் பாலா.

''அதான் அண்ணா. பார்வை மணவறையில் இருந்ததென்னவோ நிஜம். ஆனால் என் மேல் என்பதைத்தான் என்னால் நம்ப முடியவில்லை!'' என்று கண் சிமிட்டிச் சொன்னாள் மைதிலி.

''நான் உன்னைப் பார்க்கவில்லை என்பதை நீ என்னைப் பார்த்தால்தானே மைதிலி சொல்ல முடியும்? உன் பார்வைதான் என் மேல் இல்லையே!'' என்று விடாமல் பாலா மடக்க, மேலே பதில் சொல்ல முடியாமல் மைதிலி வாயை மூடிக் கொண்டாலும் அஞ்சலிக்குக் குறுகுறுப்பாய் இருந்தது.

இவர்கள் பேசிக் கொள்வதைப் பார்த்தால், இவன் பார்வை தன்னை விடாமல் தொடர்ந்தது மாதிரி அல்லவா இருக்கிறது. இவனின் பார்வை தன்னை ஏன் தொடர வேண்டும்? அவனுக்கு அப்படி என்ன அக்கறை?



அந்த அக்கறைக்குத் தன்னிடம் பிரதிபலிப்பு இல்லை என்றுதான் கோபம். இவனை நாம் இதற்கு முன்பே எங்கோ பார்த்து இருக்க வேண்டும். எங்கே?

சின்ன யோசனைக்குப் பின் மெல்ல, ''நீங்க சென்னைக்கு அடிக்கடி வருவீங்களா? எங்க ஆசிரமம் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று விசாரித்தாள் அஞ்சலி.

''நமக்குத் தேவையான விஷயங்களைத் தேடிக் கண்டு பிடிச்சுக்க வேண்டியதுதான்!'' என்று சத்தமாகச் சொன்னவன், வேறு புறம் திரும்பி, ''எல்லோருக்கும் உன்னை மாதிரி யார் என்று கண்டுபிடித்த பின்பு, தெரியாத மாதிரி நடிக்க முடியுமா என்ன?'' என்று முனகியது அஞ்சலியின் காதில் விழுந்தது.

''நீங்க என்ன சொல்றீங்க?'' என்று குழப்பத்தோடு கேட்டாள்.

இன்னும் எத்தனை நாள் நடிப்பாள் என்று எண்ணியபடி, ''கோன் பனேகா க்ரோர்பதி பார்ப்பீங்களா?'' என்று நிதானமாக அவளின் முகத்தை அளந்தபடி கேட்டான். அவளின் முகத்தில் அவன் எதிர்பார்த்த எந்தப் பிரதிபலிப்பும் இல்லை. குழப்பம் தான் கொஞ்சம் கூடின மாதிரி இருந்தது.

இதென்ன சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் இப்படி ஒரு கேள்வி, என்று மனதிற்குள் குழம்பியபடி. ''முன்னாடி பார்த்து இருக்கேன். இப்போ புதுசா வருவது பார்க்கலை. வயசானால் கூட அமிதாப் ஸ்பெஷல் இல்லியா?'' என்று அஞ்சலி சொல்ல, அஷோக் விழுந்து விழுந்து சிரித்தான்.

''பாலா, உங்களுக்குத் தெரியுமா? அஞ்சலிக்கு ஷாருக் கன்னத்தில் விழும் குழி பிடிக்கும். நான் அதை டொக்கு என்று கேலி பண்ணும்போது சண்டைக்கு வருவாள். ஆனால் ஷாருக் நடத்திய கோன் பனேகா க்ரோர்பதி பார்த்தபோது, மேடமுக்கு மனசே இல்லை. அப்பப்போ அமிதாப் பற்றி சொல்லிப் புலம்புவாள். ஆனால் ஷாருக் நல்லா இல்லை என்று சொல்ல மனசு வராது. இப்ப திரும்பி அமிதாப் நடத்த ஆரம்பிச்சாச்சு இல்லியா? அதுக்காக மேடம் டி.வி. இப்போ பார்க்க ஆரம்பிச்சு இருக்காங்க!'' என்று அஷோக் சிரிக்க, பாலாவின் பார்வை அஞ்சலியின் மேல் அழுத்தமாய்ப் பதிந்து நகர மறுத்தது.

பாலாவுக்கு அஞ்சலி நடிக்கிறாள் என்று தோன்றியது. ஏன் என்று புரியவில்லை. அவளின் கண்கள் தம்மை அவ்வப்போது தேடுவதும், தான் அவளைப் பார்க்கும் போது அவசரமாகப் பார்வையை விலக்கிக் கொள்வதும் ஏன்? பெற்றோர் இல்லை என்று தயங்குகிறாளா? பணத்தினால் வரும் ஏற்றத் தாழ்வு பார்த்துக் குழம்புகிறாளா? தன்னைப் பார்த்தால் அப்படி அந்தஸ்து பார்க்கிறவன் மாதிரியா இருக்கு?

''ஜர்னலிசம் படிக்கிறாயே அஞ்சலி, பயணக் கட்டுரைகள், உலகப் பொருளாதாரம், வரலாறு, அரசியல், எந்த மாதிரித் துறையில் தனித்துவம் பெற ஆசை?'' என்ற அவளுடைய பொருளாதாரத்தை மேம்படுத்த மேற்கொண்டு என்ன செய்யலாம் என்ற யோசனையில் [illegible]வினான் பாலா.

''எனக்கு நீங்க பேசுவதே புரியலை மிஸ்டர் பாலா. அங்கங்கே நடுவில் என்னவோ விஷயம் சொல்ல விட்டுப் போனது மாதிரி ஒரு ஃபீலிங் வருது.''



''அஞ்சலி! உங்க படிப்பைப் பற்றி விசாரிக்கிறார். இதுல புரியாமல் போக என்ன இருக்கு?'' என்று மைதிலி அவசரமாக இடையிட்டாலும், பாலாவின் தீட்சண்யமான பார்வை இன்னும் சொல்லப்படாத வேறு விஷயம் இருப்பதை அஞ்சலிக்கு உறுதிப் படுத்தியது.

''பயணக் கட்டுரைகள் படிக்கப் பிடிக்கும். வரலாற்று நூல்கள் எழுதப் பிடிக்கும். அதிலும் குறிப்பா தமிழ்நாட்டில் வாழ்ந்த, உலகளவில் புகழ் பெறாத நம்ம ஹீரோக்களை, வெளி உலகத்திற்கு ஆங்கிலத்தில் எழுதி அறிமுகப்படுத்த வேண்டும் என்ற ஆசை உண்டு...'' என்று சொல்லும்போதே மைதிலி சிரிக்க ஆரம்பித்தாள்.

''என்ன மைதிலி இப்படிச் சிரிக்கிறாய்? பாவம் அஞ்சலி, என் ஒருத்தரைச் சமாளிப்பது போதாது என்று நீ வேற அவளைக் கேலி பண்ணச் சேர்ந்து கொண்டாயா?'' என்று கேலியாக விசாரித்தான் அஷோக்.

''ஹய்யோ! நீங்க வேற, நான் பாலாண்ணனுக்குத் துணைக்கு ஆள் கிடைச்சுடுச்சு என்ற சந்தோஷத்தில் சிரித்தேன்!'' என்று சொல்லும்போதே ஆச்சரியமாகத் திரும்பிய அஞ்சலியின் விழிகள், பாலாவின் விழுங்கும் பார்வையைப் பார்த்துத் திகைத்துப் போனது.

''பாலா அண்ணனுக்குச் சரியான கம்பெனி கிடைச்சாச்சு. அண்ணா, இனிமேல் நீங்க நாடகம் போட்டால், அஞ்சலியைத் துணைக்கு வச்சுக்கோங்க...'' என்று மைதிலி சிரிக்க, பாலா இடைமிட்டான்.

''படிச்சு முடித்த பிறகு, நான் நாடகமே போடவில்லையே? அஞ்சலியின் துணை நாடகத்துக்கு மட்டும் போதுமா மைதிலி? நான் செய்யும் ஒவ்வொரு வேலை

யிலுமே அஞ்சலி விரும்பினால்... சம்மதித்தால் துணையாக இருக்கலாமே?'' என்று கேள்வியை மைதிலியிடம் கேட்டவன் பார்வை மட்டும் அஞ்சலியின் கண்களை விட்டு விலகவே இல்லை.

''நான் என்ன உங்களுக்கு உதவி செய்ய?'' அஞ்சலிக்குத் தொண்டையில் இருந்து வார்த்தைகள் வெளிவரத் திக்கித் திணறின.

''என்னுடைய தொழிலை மேம்படுத்த, நான் ஒரு பத்திரிகை 'ஃபேஷன் டுடே' என்ற பெயரில், ஆங்கிலத்தில் ஆரம்பிக்கலாம் என்று பார்க்கிறேன். நீ நினைத்தால் அந்தப் பத்திரிகை உருவாக உதவலாமே!'' என்று நேரடியாகக் கேட்டான் பாலா.

''பத்திரிகை நடத்த அனுபவம் எல்லாம் வேண்டாமா? நான் இன்னும் படிப்பே முடிக்கவில்லை. இந்த நிலையில், நான் உங்களுக்கு என்ன உதவி செய்ய முடியும்?'' என்று தயங்கினாள் அஞ்சலி.

''எனக்கு நேரம் காலம் பார்க்காமல் உழைக்கத் தயாரான, ஒரு நேர்மையான, புத்திசாலி வேண்டும். அனுபவம் இருப்பவர்களையும் அருகில் வைத்துக் கொள்ளலாம். உன் முடிவைச் சொல்லேன். கோவைக்கு வரக் கஷ்டமோ? ஆசிரமத்தைக் கோவைக்கு மாற்ற ஏற்பாடு செய்யலாமா? அது இங்கே வாடகைக் கட்டடத்தில்தானே இருக்கு?'' என்று கேட்டான் பாலா.

''நோ நோ, அது சொந்தக் கட்டடம், குழந்தைகள் எல்லாம் படிக்கிறாங்க. அவ்வளவு சீக்கிரம் அதை எல்லாம் மாற்ற முடியாது. ஆசிரமத்தால் எனக்குப் பலன் அதிகமே தவிர, என்னால் அதற்குப் பலன் அதிகம் இல்லை. நான்



அங்கே இருப்பது ஒரு வருடமாகத்தானே? அதற்கு முன்பே முப்பது வருடமா அங்கே இருக்கு...'' என்று சொன்னவள் கண்கள் லேசாகக் கலங்கின.

அவளின் கலக்கத்தை மாற்றி அப்பாவின் நினைவில் இருந்து திசை திருப்ப, ''ஷ்! அஞ்சலி, உனக்குப் பிடிச்ச பாட்டு வருது பாரு. இதை எழுதியது யார்? தாமரையா?'' என்று வேண்டும் என்றே தப்பாகக் கேட்டான் அஷோக்.

''உனக்கு இதோட நூறு தடவை சொல்லியாச்சு, இந்த பாட்டு எழுதியது கபிலன். படம் வேட்டைக்காரன். பாட்டைச் சத்தமாக வை!'' என்று அஷோக்கின் தோளில் தட்டியவள் பாடலைக் கண்களில் கேட்டாள்.

''பத்த வச்ச மத்தாப்பு போல மினுமினுக்குது பல்லு... பல்லு இல்லை பல்லு இல்லை... பதிச்ச வைரக் கல்லு...'' என்று ஆரம்பித்துத் தொடர்ந்த பாடலை விரிந்த புன்னகையுடன், ஆடாமல் அசையாமல் கேட்டு இருந்த அஞ்சலியை வியப்புடன் பார்த்து இருந்தான் பாலா.

''இந்தப் பாட்டு உனக்கு ரொம்பப் பிடிக்குமா அஞ்சலி...?'' என்று கேட்டவனின் கண்களில் நிச்சயம் கிறக்கம் இருந்தது.

அவனின் பாவனையை உணராமல், பொங்கிய உற்சாகத்துடன், ''ஆமா பாலா, கரிகாலன் காலைப் போல கருத்திருக்கு குழலு... சிம்பிளான தமிழில் அழகான வார்த்தைகள். இப்ப தமிழ் வார்த்தைகளில் வரும் பாட்டுக்கள் ரொம்ப ரொம்ப கம்மி. அப்படி வரும் சில பாட்டுக்களில் இந்தப் பாட்டு எனக்கு ரொம்பப் பிடிக்கும்!'' என்று சேர்த்துச் சொன்னவள் கண்களில் ஆர்வமும் சந்தோஷமும்

போட்டி போட்டு மின்ன, அதைப் பார்த்தவனுக்கும் அந்த உற்சாகம் தொற்றிக் கொண்டது.

"உங்களுக்குப் பிடிக்குமா?" என்று வேகமாக அஞ்சலி திருப்பிக் கேட்க, சந்தோஷமாகத் தலை அசைத்த பாலாவின் சம்மதம் பாட்டுக்கா அல்லது வேறு காரணத்திற்கா என்று அவனுக்கு மட்டுமே தெரியும்.

நாலு மணி நேரம் செலவு பண்ணி, பல கதைகளைப் பேசி, மதிய உணவு முடித்து மூன்றரை மணி அளவில் ஆசிரமத்திற்குத் திரும்பி வந்தபோது, வெளியில் கிளம்பிய போது பாலாவிற்கும் அஞ்சலிக்கும் இடையே இருந்த தூரம், மனதளவில் குறைந்தது மட்டுமில்லாமல், காரில் வரும்போது அமர்ந்து இருந்த தூரத்திலும் குறைந்து இருந்தது. அவளுடைய மைசூர் சில்க் புடவைத் தலைப்பு காற்றில் அசைந்த போது, அவன் தோளில் உரசும் அளவிற்கு இருந்த நெருக்கம் இருவருக்குமே ஒரு இதத்தைத் தந்து ரசிக்க வைத்தது.

அந்தச் சுகமான பாவனையில் ஆசிரமத்திற்குள் சென்ற அஞ்சலி தன்னுடைய அறையில் பாலா சாவித்திரி அம்மாவிற்குத் தந்த ராமர் நீல வண்ண சில்க் காட்டன் புடவையைப் பார்த்ததும் அந்த இதம் மேலும் கூடிப் போனது. தனக்கு அவன் நேரடியாகக் கொடுத்த பாவனையில், அந்தப் புடவையை மெல்ல வருடினாள். தனக்குப் பரிசு கொடுத்தவனுக்குத் தானும் உடனே பரிசு தர வேண்டும் என்று தோன்ற, தன்னுடைய அலமாரியை ஆர்வமாகத் திறந்தாள்.

கண் முன்னே இருந்த அப்பாவின் சட்டை அவளின் விழிகளை விரிய வைத்தது. மதியம் காரில் போகும் போது அவனுடைய பக்க வாட்டுத் தோற்றத்தை ஏற்



கனவே அளந்த விழிகள், இந்தச் சட்டை அவனுக்குச் சரியாக இருக்கும் என்று அறிவுறுத்த, அதை எடுத்துப் பார்த்தாள். அப்பாவின் உடல் அமைப்பு, கதர் ஆடை அணிய அவன் தந்த விளக்கம், அமிதாப், இலக்கியம், வரலாறு, வண்ணம் என்று ஒன்றுக்கு மேற்பட்ட விதத்தில், தன்னுடைய ரசனையோடு ஒத்துப் போன அவனுடைய ரசனை, எல்லாம் சேர்ந்து, அந்தச் சட்டையை அவனுக்குக் கொடுக்கலாம் என்ற முடிவிற்கு அவளை வரவைத்தது.

அப்பாவிற்கென வாங்கி வைத்து இருந்த அந்தச் சட்டையை எடுத்து வந்து கீழே அலுவலக அறையில் அமர்ந்து இருந்த பாலாவிடம் நீட்டினாள்.

அஞ்சலி தன்னிடம் காலையில் 'உனக்கு வேண்டுமானால் நான் வாங்கி தருகிறேன்!" என்று சொன்ன வார்த்தையை இவ்வளவு சீக்கிரம் நிறைவேற்றுவாள் என்பதை எதிர்பார்த்து இராததால், பாலாவுக்குத் திகைப்பு உண்டானது. அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை.

"ஹேய் இதென்ன? எப்போது வாங்கினாய்? காலையில் இருந்து என்னுடன்தானே இருக்கிறாய்? எப்போது? எப்படி..." என்று மகிழ்ச்சி வெள்ளத்தில் சிக்கித் திக்குமுக்காடிப் போய்ப் பேசத் திணறினான்.

## 11

அவளுக்குத் தன்னை எங்கே பார்த்தோம் என்பது நினைவு வந்து விட்டதோ? அதனால் முன்னதாகவே

போய் வாங்கி வைத்து இருந்தாளோ என்ற சந்தேகமும் தோன்றியதால் அந்த மகிழ்ச்சி பல மடங்காகப் பெருகியது. அவள் காலையிலேயே தன்னிடம் ஓடி வந்து மூச்சு வாங்கியபடி பேச நின்றாள். தான் அவளைக் கண்டு கொள்ளாமல் பேசியதில் வெறுப்பாகி, மேலே அந்தப் பேச்சைத் தொடராமல் கோபத்தில் போய் விட்டாளோ?

அவள் தன்னைத் தெரியாத மாதிரி நடிக்கிறாள் என்று சந்தேகப்பட்ட தன்னை என்ன செய்வது என்று அவசரமாகத் தன்னைத் தானே கடிந்து கொண்டவன், அவசரமாக இருக்கையில் இருந்து எழுந்து அவளை நெருங்கி, 'அஞ்சும்மா...' என்றபடி ஆர்வமாக அவளின் கைகளைப் பற்றினான். அவனின் அஞ்சு என்ற அழைப்பில் திகைத்தாலும், கைகளை அவனின் பிடியில் இருந்து உடனடியாக விலக்கிக் கொள்ள, கொஞ்சமும் அஞ்சலி யோசிக்கவில்லை.

"இது ஏற்கெனவே போன ஆண்டே நான் என் அப்பாவின் பிறந்த நாளுக்காக வாங்கி வைத்து இருந்தேன். ஆனால் அந்தப் பிறந்த நாள் கொண்டாட அப்பா என்னுடன் இல்லை. அந்த நாள் வருவதற்கு முன்பே..." என்றவள் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள் அஞ்சலி.

அவசரமாகக் கைகளை விலக்கிக் கொண்ட அவளின் பாவனையில், தன்னுடைய சோகத்தை அவன் கண்கள் பார்த்துப் பகிர்ந்து கொள்ளத் தயாராக இல்லாமல் வேறு புறம் முகம் திருப்பி அஞ்சலி நின்ற விதத்தில், அப்பாவின் பிறந்த நாளுக்கு என்று வாங்கிய சட்டை என்று அவள் சொன்னதில், நொறுங்கிப் போன பாலா இறுகிப் போனான்.



இன்னும் எத்தனை முறை எத்தனை விதமாக நடிப்பாள்? அமிதாப் பிடிக்கும். கரிகாலன் பாட்டுப் பிடிக்கும். வரலாற்றுக் கட்டுரைகள் பிடிக்கும். என்னை ஓரக் கண்ணால் பார்க்கப் பிடிக்கும். பரிசுகள் வாங்கிக் கொள்ளவும் கொடுக்கவும் பிடிக்கும். ஆனால் தன்னைக் கை தொட விடமாட்டாள். தன்னைத் தெரிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ள மாட்டாளா? இவள் சொன்னதை நம்பி, தொழில் துவங்கிய நிறுவனத்தின் பெயரில் இருந்து கடந்த மூன்று ஆண்டுகளாக இவளையே நினைத்துக் கொண்டு இருக்க... இவள் என்னடாவென்றால்... என் மனதை உடைப்பதே குறி என்று இருக்கிறாள்.

முதல் முறை கொடுத்தது அஷோக்கின் பிறந்த நாளுக்கு வாங்கியது. இந்த முறை கொடுத்தது அப்பாவின் பிறந்த நாளுக்கு வாங்கியதா? இவள் தனக்காக ஏதாவது எப்போதாவது வாங்குவாளா? பொருள் வாங்குவது இருக்கட்டும். தான் யார் என்பதையும், அவளையே கடந்த மூன்று ஆண்டுகளாக எண்ணிக் கொண்டு இருக்கும் தன்னுடைய ஆசையையும் உணர்வாளா? இவளுக்கு இன்னும் தன்னைப் பார்த்த நினைவு வரவில்லை. ஆனால் தனக்கோ, இவளைச் சந்தித்த வினாடியில் இருந்து இப்போது வரை அது மறக்கவே இல்லை.

அதீதமாகக் கற்பனை செய்து கொண்டு ஒவ்வொரு முறையும் ஏமாறுவதே தனக்கு வேலையாகிப் போய் விட்டது. இனி ஒரு முறை ஏமாந்தால் தன்னுடைய மனம் தாங்குமோ என்னவோ? அவளாகத் தன்னுடைய காதலை அஞ்சலி உணர்ந்து அதை வெளிப்படையாகத் தன்னுடன் பகிர்ந்து கொள்ள வராத வகையில், இனி இவளுடன் பேசுவது சரியாக இருக்காது.

அவளின் கைகளைப் பற்றி இருந்த தன்னை விட்டு விலகி, அனிச்சையாய் இரண்டடி பின்னால் போய் இருந்த அவளைக் கவனித்தவன் மனம் மேலும் புண்ணாய்ப் போனது. காரில் கூட இரண்டு பேர் இருக்கும்போதே கதவை ஒட்டிக் கொண்டு அமர்ந்து இருந்தாள். அதுவே 'என்னை விட்டு எட்டி நில்!' என்ற குறிப்பைத் தனக்குக் காட்டவில்லையா? அவள் கொடுக்கும் குறிப்பைப் புரிந்து கொள்ளாமல், இப்போது கையைத் தொட்டால் சும்மா இருப்பாளா என்று நொந்து கொண்டவனுக்குத் திரும்பி வரும் போது அவளின் புடவை தன் தோளில் உரச, நெருங்கி அமர்ந்த கோலம் நினைவிற்கு வரவில்லை.

தேவை இல்லாமல் மேலே மேலே அஞ்சலி தன்னை நெருங்கி வர விரும்பவில்லை. தன்னை விட்டுத் தூரமாக நிற்க நினைக்கிறாள், என்று எண்ணித் தன் மனதையே புண்ணாக்கிக் கொண்டவன், இப்போது பேசினால் எதையாவது அதிகமாகப் பேசிவிடுவோம் என்ற நினைப்பில், திரும்பி வெளியே நடக்க முயன்றான்.

அவனின் இறுகிய முக பாவனையையும், ஒன்றுமே பேசாத அமைதியையும் அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த அறைக்குள் அவள் நுழையும் போதே, இந்தச் சட்டையைத் தான் அவனிடம் நீட்டிய போது எல்லாம் மலர்ந்து இருந்தானே! அதற்குள் என்ன ஆச்சு? அப்பாவின் நினைவில் லேசாய்க் கண் கலங்கிச் சமாளித்துத் திரும்பிய அந்தச் சில வினாடிகளுக்குள் அவன் மாறிய விதம் புரியாமல் குழம்பினாள் அஞ்சலி. தான் கைகளை விலக்கிக் கொண்டதுதான் அதற்குக் காரணம் என்பது புரியவில்லை. இதுவரை பேசாமல் தன்னை



வெறித்துப் பார்த்தபடி நின்றான் என்றால் இப்போது திரும்பி நடக்கிறானே!

சட்டையைப் பாலாவிடம் கொடுத்தபோது, அவன் ஆர்வமாய்த் தன்னுடைய கைகளைப் பற்றிய வேளையில் பதட்டத்தில் கீழே தவறவிட்ட சட்டையை அவசரமாகக் குனிந்து எடுத்த அஞ்சலி, 'கி..ள..ம்..பி..ட்..டீ..ங்..களா?'' என்று கேட்டாள்.

''ஆமா, ஆன்ட்டியிடம் சொல்லி விடுங்க...'' என்று அவளைத் திரும்பிப் பாராமலே சொல்லிவிட்டு, அவன் தொடர்ந்து நகர, அவள் திகைத்து நின்றாள். இதென்ன மறுபடியும் மரியாதைப் பன்மை வந்து விட்டதா? காரில் போகும்போது, ஹோட்டலில் சாப்பிடும்போது, டி.வி. ப்ரோக்ராம் பற்றி, திரை இசைப் பாடல்கள் பற்றி, சினிமா நடிகர்கள் பற்றி எல்லாம் ஊரில் இல்லாத கதைகள் பேசியது எல்லாம் மறந்து விட்டதா? மதியம் ஹோட்டலில் பேசும்போது ஒருமையில் பேசிச் சிரித்தானே! இப்போது விடைபெற்று ஊருக்குக் கிளம்பும்போது என்ன ஆச்சு? முறையாக விடை பெறாமல், முகத்தைக் கூட நேரில் பார்க்காமல் கிளம்புகிறானே!

அஷோக் எங்கே போய் விட்டான்? அவனைக் கூடப் போய் வழி அனுப்பி விட்டு இதைக் கொடுக்கச் சொல்லலாமா? ப்ச்! வேண்டாம். உன் அப்பாவிற்கு என்று வாங்கிய இந்தச் சட்டையை இவனுக்கு ஏன் கொடுக்கிறாய் என்று கேட்டால் என்ன பதில் சொல்வது? இவனே வந்த வாடகை கார் இங்கே காத்து இருக்கும்போது அஷோக்கைத் தனியாக இன்னொரு காரில் கூடப் போய் வழி அனுப்பு என்று சொல்வது சுத்தப் பைத்தியக்காரத்தனமாக இருக்குமே!

அஷோக்கிடம் சொல்வது சரி வராது என்று தோன்றியதால், தானே கொடுத்து விடலாம் என்று முடிவெடுத்து வெளியே வந்தாள் அஞ்சலி. 'ச்சை! ஒவ்வொரு முறையும் இவன் விலகி விலகிப் போக, தானே வலிய வலியப் போய் இவனிடம் பேசுவது மாதிரி வருகிறதே!' என்ற எரிச்சல் வந்தது.

காலையில் வாயை வைத்துக் கொண்டு சும்மா இராமல், என் செலவில் உனக்குத் துணி வாங்கித் தருகிறேன் என்று ஏன் சொன்னாள்? தான் சொன்னதை அவனே கண்டு கொள்ளாமல் இருக்கையில், இத்தனை நாள் அலமாரியில் தூங்கிய, அப்பாவிற்கு வாங்கிய சட்டையை இப்போது அவசரமாகத் தான் ஏன் எடுத்து வந்து கொடுக்க வேண்டும்?

காரிலும் ஹோட்டலிலும் அவன் பேசிய வாக்கியங்கள், தந்தையின் எண்ணப் போக்கோடு அப்படியே ஒத்துப் போனதால், அவனுக்குத் தரலாம் என்று தோன்றி விட்டதா? அவனுக்குச் சட்டையைப் பிடிக்கலையோ? சீ! சீ! அப்படி இருக்காது. தான் அதைக் கொடுத்த பின்பு அவன் அதை எடுக்காமல் போவது மனதிற்குக் கஷ்டமாய் இருக்கிறதே!

முகத்தைச் சிரமப்பட்டுச் சீராக வைத்துக் கொண்டு, கார் அருகே வந்தவள், அந்தக் கவரை அவனிடம் நீட்டி, ''ஹலோ! காலையில் நான் உங்களுக்குத் தருவதாகச் சொன்ன வார்த்தையை நான் காப்பாற்றி விட்டேன். இதை நீங்க எடுத்துப் போய் விடுங்க. பயன்படுத்துவதும், பயன்படுத்தாமல் இருப்பதும் முழுக்க முழுக்க உங்க இஷ்டம்...''



குறுக்கே ஏதோ பேச வந்தவனைக் கை காட்டித் தடுத்து நிறுத்தி விட்டு, ''காலையில் நீங்க சாவித்திரி அம்மாவிடம் சொன்ன வார்த்தை மறந்து விட்டதா? நீங்களே வச்சுக்கோங்க. இல்லை வழியில் போகும்போது யாருக்காவது தானமாகக் கொடுத்து விட்டுப் போங்க. ஐ டோண்ட் கேர்...'' என்று வேகமாகச் சொல்லியவள் சட்டையைக் காரில் முன் சீட்டில் போட்டு விட்டு, அவனது பதிலுக்காகக் காத்திராமல், திரும்பி ஆசிரமத்திற்குள் சென்று விட்டாள்.

தான் பெரிதும் மதிக்கும் தன் தந்தைக்கு என்று வாங்கிய அந்தச் சட்டையை இவனுக்குக் கொடுக்க வந்த வேளையில், அப்படித் தான் என்ன சொல்லி விட்டோம் என்று இவன் கோபித்துக் கொண்டு 'விருட்' என்று கிளம்பி விட்டான் என்ற ஆத்திரம் அஞ்சலிக்குப் பொங்கியது.

'ஒவ்வொரு முறையும் இவளிடம் ஆசையாய் நெருங்கி நெருங்கி அவமானப்படுவதே வேலையாகிப் போய் விட்டது!' என்று தன் மேலேயே ஆத்திரம் பாலாவிற்குப் பொங்கியது. ஆனால் அத்தனை ஆத்திரத்திலும், அவளை முதலில் சந்தித்த இடமும் நேரமும், கோலமும் இந்த வினாடியிலும் தோன்றி அவனை இம்சித்ததைத் தான் அவனால் தாங்கவே முடியவில்லை.

இருவருக்குமே அந்த ஆத்திரம், அணையாத நெருப்பாக உள்ளுக்குள்ளே கனன்று கொண்டே இருந்ததால், அடுத்த கட்ட நடவடிக்கையைப் பற்றி இருவருமே சிந்திக்கவில்லை.

கடந்த மூன்று ஆண்டுகளாக ஒவ்வொரு நாளும் நடப்பது போலவே அன்றும் அவன் படுக்கையில் விழுந்

தது, அவளை முதன் முதலாக டெல்லி லால் பகதூர் ஸ்டேடியத்தில் பார்த்த நினைவு மீண்டும் ஒரு முறை படமாய் மனக் கண்ணில் ஓடியது.

* * *

புதுடெல்லியில் உள்ள லால்பகதூர் ஸ்டேடியத்தில் உள்ள அந்த வளாகத்திற்குள் நுழையும் போதே அனைத்து மாநிலங்களிலும் இருந்து வந்த நெசவாளர்களின் கை வண்ணத்தில் உருவான ஆடைகள் மற்றும் துணிகளின் வண்ண மயமான அணிவகுப்பு அவனின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது.

அதிலும் குறிப்பாக வாசலில் வைக்கப்பட்டு இருந்த, 'நெசவாளர்களின் துயர் துடைக்க, ஒவ்வொரு ஆண்டுக்கும் இரண்டு கைத்தறி ஆடைகள் கட்டாயம் வாங்க வேண்டும்!' என்ற அர்த்தத்தில் ஆன மகாத்மா காந்தியின் அந்த வாசகம், ரூபாய் நோட்டில் உள்ளது போலவே இந்தியாவின் கரன்சியில் அச்சடிக்கப்பட்டு உள்ள அங்கீகரிக்கப்பட்ட பதினைந்து மொழிகளிலும் விளம்பரமாக அங்கங்கே வைக்கப்பட்டு இருந்தது அவனுக்குப் பிடித்து இருந்தது.

நாடகத் தயாரிப்பில் கவனம் செலுத்த வேண்டி இருந்ததாலும், எட்டு மணி வரை கண்காட்சி இருக்கும் என்று விளம்பரப் பலகை சொன்னதாலும், நேரே போட்டி நடக்கும் அரங்கத்திற்குச் சென்று விட்டான். ஆறு மணி அளவில் அவன் மேற்பார்வையில் அரங்கேறிய கரிகால் சோழன் பற்றிய அந்த நாடகம் முடிந்த பிறகு, வெளியே வந்தான்.

கரிகாலன் தோற்றத்தைக் கொண்டு வர, அவனுடைய காலில் ஊற்றி இருந்த கருப்பு வண்ண மை அலர்ஜியை



உருவாக்குவது போல இருந்ததால், கையில் இருந்த தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி எரிச்சலைக் குறைக்க அவன் முயன்று கொண்டு இருந்தான்.

''டேய் அழகா! அஞ்சு நிமிஷம் கடைக்குப் போய் விட்டு வருவதற்குள் எங்கே போய் விட்டாய்? உன்னை எங்கே எல்லாம் தேடுவது? இங்கே என்ன பண்ணுகிறாய்?'' என்ற உற்சாகத்தில் குளித்த குரல், தன் காதருகே கேட்ட போதும், 'அது தன்னைக் குறித்துச் சொல்லப்பட்டது', என்பதை முதலில் அவன் நம்பவில்லை.

''பரிசுக்காக மூக்கால் அழுத என் அழகு சுந்தரமே! இந்தா வச்சுக்கோ! இன்னைக்கும் என்னைக்கும், நாளொரு சண்டையும் பொழுதொரு சமாதானமுமாக, நம் வாழ்நாளின் இறுதி வரைக்கும், இதே மாதிரி சின்னச் சின்னப் பரிசுகள் கொடுத்து வாங்கிக் கொண்டு இருப்போம், சரியா?'' என்று வினாடிக்கும் குறைவான நேரத்தில், தன் கழுத்தில், கருப்புக் கயிற்றில் பச்சை ஆரஞ்சு வெள்ளை வண்ண கிறிஸ்டல் மணிகளை டாலராக இணைத்த மாலையைக் கழுத்தில் மாட்டியபடி சொன்ன அவளின் குரல் இப்போதும் புதிதாய் அவன் காதுகளில் ஒலித்தது.

அந்த உற்சாகக் குரலுக்குச் சொந்தமான முகத்தைப் பார்க்க அவன் அவசரமாக நிமிர்ந்த வினாடியில் அந்தச் சுற்று வட்டாரத்தில் மின் வெட்டு நிகழ்ந்தது. அவனை முதன் முதலாகப் பார்க்கும்போது அபசகுனமாக அப்போது தோன்றவில்லை. அழகாக இருந்தது.

மாலை மயங்கி இரவு ஆரம்பித்த அந்த வேளையில் தூரத்தில் எரிந்த தெரு விளக்குகளின் வெளிச்சத்தில்

தெரிந்த அவளின் முகத்தைத் தான் பார்த்தது முப்பது வினாடிகள் இருக்கலாமா? அல்லது அதிக பட்சமாய் நாற்பது வினாடிகள். இருவரும் நேருக்கு நேர் கண்ணோடு கண் பொருத்திப் பார்த்தது ஒரு நிமிடத்திற்கும் குறைவாகத்தான் இருந்து இருக்க வேண்டும். அந்த அவகாசத்தில் அவளின் அதிர்ந்த அசைவற்ற தோற்றம் மனதில் பதிந்தது.

"ஹேய் மவுஸ்! எங்கே இருக்கிறாய்?" என்று அழைத்தபடி கையில் ஒரு லைட்டருடன் வந்தவன் முகம் அவன் மனதில் பதியவில்லை, ஏன் அவளைத் தவிர உலகில் எதுவுமே கண்ணில் படவில்லை. அவளின் அமைதியைப் பார்த்து வியந்த அஷோக்! - அப்போது பேர் தெரியவில்லை - 'என்ன ஆச்சு?' என்று ஆச்சர்யமாகக் கேட்டபடி, அவளின் முகத்திற்கு நேரே லைட்டரைத் தூக்கிப் பிடித்தான்.

'ஒன்றும் இல்லை' என்று அவனுக்குத் தலை அசைத்து மறுப்பைச் சொல்லியபடி, தன் புறம் திரும்பிய அவளின் முகம், அந்த மஞ்சள் ஜோதி வடிவத்தில், மேலும் பொலிவு பெற்றது. ஏற்கெனவே மனதில் பதிந்து இருந்த அவளின் உருவம், மேலும் அழகாய், அழியாத சித்திரமாய்ப் பாலாவின் மனதில் பதிந்தது.

அடுத்த சில வினாடிகளில் மின்சாரம் வந்தது. அந்த இடைவெளியில், அவள் நகர்ந்து விட்டதால், கண்களைச் சிமிட்டி, நினைவிற்கு வர முயன்றான். ஒரு பெருமூச்சை வெளியேற்றி, கனவில் இருந்து விழிக்க முகத்தை அழுந்தத் துடைத்தபோது கையில் பட்ட தாடி மேலும் எரிச்சலை மூட்டியது. ப்ச்! அவளுக்குத் தன்னுடைய இயல்பான முகம் தெரியாமல் போய் விட்டதே?



அவசரமாய்த் தன்னுடைய பொருட்கள் இருந்த இடத்தை அடைந்தவன், வேஷத்தைக் கலைத்து விட்டு, முகத்தைக் கழுவித் துடைத்தான். மின்னல் வேகத்தில் உடை மாற்றி, மீண்டும் அவளைச் சந்தித்த இடத்திற்கு வந்து சேர ஐந்து ஆறு நிமிடங்கள் ஆகி இருக்கலாம். அதற்குள் அவள் வெளியேறி இருக்கக் கூடாதே என்று ஆயிரம் முறை இறைவனிடம் பிரார்த்தனை நடத்தினான்.

அங்கேயே நின்று இருந்தனர். அவர்கள் ஆறு பேர். இரண்டு குடும்பமாக இருக்க வேண்டும். மணமானவர்களா? அவளின் கழுத்திலும், காலிலும் அதற்கு எந்த அடையாளமும் இல்லை. திருமண நிச்சயம் ஆகி இருக்குமோ? இவளைப் பார்த்தால், இன்னும் இருபத்தோரு வயது ஆகி இருக்காது. படிக்கும் பெண் மாதிரிதான் தெரிகிறது. சட்டம் சொல்லும் வயது இருபத்தொன்று இல்லையா? அதற்கு முன்னால் செய்வார்களா? கேள்விகளும் பதிலுமாய், அவனின் மனம் போராடிக் கொண்டு இருந்தாலும், அவனின் விழிகள் அவளிடம் இருந்து விலகவே இல்லை.

உடை மாற்றினாலும், முகம் கழுவினாலும், அவள் போட்டு விட்ட அந்த கருப்புக் கயிற்றினைக் கழற்றவே இல்லை. அவன் இந்த மாதிரி ஃபேன்ஸியாக வண்ண வண்ணக் கழுத்தணிகள் போடும் ஆள் இல்லை. ஆனாலும் அதைக் கழற்ற மனம் இல்லை. அவள் சொன்ன வார்த்தைகள் மீண்டும் மீண்டும் ஒலித்தன.

டேய் அழகா உன்னை எங்கே எல்லாம் தேடுவது?

பரிசுக்காக மூக்கால் அழுத என் அழகு சுந்தரமே!

எப்போதும் இதே மாதிரி...

நாளொரு சண்டையும் பொழுதொரு சமாதானமுமாய்...

சின்னச் சின்னப் பரிசுகள் கொடுத்து வாங்கிக் கொண்டு...

வாழ்நாள் முழுவதும் சேர்ந்தே இருப்போம்...

அன்றில் இருந்து இன்று வரை, இந்த மூன்று ஆண்டு களில், அவள் பேசிய இந்த வார்த்தைகள் ஒரு நாளைக்குப் பத்து முறை என்ற கணக்கில் பார்த்தால் கூடப் பத்தாயிரம் முறை அவன் காதுகளில் ஒலித்து இருக்கும். அவனின் நினைவிலும் கனவிலும் நொடிக்கு நூறு முறை நினை வில் வலம் வருபவளுக்குத் தன்னைப் பார்த்த நினைவே இல்லை என்பதை அஷோக்கின் திருமண வீட்டில் அறிந்து கொண்டவனுக்கு இதயம் வெடித்தது போல இருந்தது.

அவளைக் கடந்த மூன்று ஆண்டுகளாக நேரில் பார்க்கவில்லை என்பதோ, அவளிடம் நேருக்கு நேர் நின்று பேசியதே இல்லை என்பதோ, அதனால் அவ ளுக்குத் தன்னை நினைவு இருக்க வாய்ப்பு இல்லை என்பதோ, அப்போது அவனுக்கு மனதில் படவில்லை. கோபம் மட்டுமே பிரதானமாய் இருந்தது. அன்று இரவே, அவளின் பெற்றோர்களின் அகால மறைவைக் கேட்ட போது மறுபடியும் மனம் உருகி, அவள் வசம் ஓடத் தயா ரானது.

ஆனால், ஆசிரமத்தில், குழந்தைகளோடு கழித்த அந்த ஒன்றரை மணி நேரத்தில், அவள் தன்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேச முயலவில்லை என்பது அவனுக்கு எரிச்சலை மூட்டியது.

ஹோட்டலில் நல்லபடியாகப் பொழுதைக் கழித்து விட்டு, மீண்டும் ஆசிரமத்திற்கு வந்த உடனே, தான்



கொடுத்த புடவைக்குப் பதிலாக என்று உடனுக்குடன் கடனைக் கழிக்கும் வகையில், ஏற்கெனவே தன்னிடம் இருந்த சட்டையை அவ்வளவு அவசரமாக அவள் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன என்ற ஆத்திரம் மீண்டும் அவனைக் கடினப்படுத்தி விட்டது.

அவளைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும், ஆசை தீரப் பழக வேண்டும், கை அணைப்பில் நிறுத்திக் கொஞ்ச வேண்டும். பெற்றோர்களின் மறைவை அவள் நினைத்து வருந்தாமல் இருக்க, தாயுமானவனாய் நின்று கண்ணுக்குள் வைத்துக் காக்க வேண்டும் என்று ஏகப்பட்ட ஆசைகள் மனதில் உலா வந்தாலும், அதை அவளிடம் வெளிப்படுத்த இன்னும் நேரம் வரவில்லை. பெருமூச்சாக ஆத்திரமும் ஏக்கமும் கலந்து வெளியேறி யது.

# 12

ஆசிரமத்தை விட்டுப் பாலா கோபத்துடன் வெளி யேறிய போது, இருவரும் இருந்த மனநிலையில் மேற் கொண்டு பேச்சைத் தொடராமல் இருந்ததே தேவலாம் என்று இருவருக்குமே தோன்றினாலும், அந்த இறுக்க மான சூழலை இலகுவாக்க, நாற்பது நாட்கள் பிடித் தது. அவர்களுக்குத் தாங்க முடியாத வலியைத் தந்தது.

அடுத்து வந்த ஆறு வாரங்கள் பாலாவிடம் விதம் விதமாகப் பேசி, நடித்து விஷயத்தைக் கிரகிக்க முயன்ற லலிதா, மைதிலி இருவருமே தோல்வியைத் தழுவி

னார்கள் என்றால், அஞ்சலியுடன் பேச முயன்ற சாவித்திரி, அஷோக்கிற்கும் அதே நிலைதான். மைதிலியிடம், லலிதா அஷோக் இருவருமே மாறி மாறிப் புலம்பினார்கள்.

"என்ன மைதிலி, பாலா சீக்கிரமே கல்யாணத்திற்கு ஓகே சொல்வான் என்று அவ்வளவு உறுதியா சொன்னாய்? இன்னும் அவன் பிடி கொடுத்துப் பேசவே இல்லையே? அவனாகப் பேசவில்லை என்றாலும் நான் கேட்கும் கேள்விகளுக்குக் கூடப் பதில் சொல்ல மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறானே! அன்று என்னதான் நடந்தது என்று சொல்லேன்!" என்று இந்த நாற்பது நாளில் நூறாவது முறையாக ஆதங்கத்துடன் விசாரிக்க அவளுக்கே கஷ்டமாக இருந்தது.

"அன்னிக்கு எங்க முன்னாடி ஒண்ணும் வித்தியாசமா நடக்கவில்லை ஆண்ட்டி. கிட்டத்தட்ட நாலு மணி நேரம் நாங்க நாலு பேரும் ஒண்ணாதான் இருந்தோம். பேசிச் சிரித்தோம். பாலா அண்ணன் கூட ரொம்ப அமுக்குணியாக எல்லாம் இல்லை. நான் காரில் போகும்போது அவங்க ட்ரெஸ் பற்றி கேலி பண்ணியதற்குப் பிரமாதமா லெக்சர் கொடுத்தாங்க. 'என்னோட வாய் கல்யாணம் ஆகியும் அடங்கவே இல்லை என்று திட்டினாங்க. எல்லாம் நல்லாத்தான் போச்சு ஆண்ட்டி. என்ன ஆச்சு என்றே எனக்கும் புரியலை!" என்று பரிதாபமாக விழித்தாள் மைதிலி.

"ஹோட்டலில் எப்படி இருந்தான்?" என்று மேலும் துருவினார். ஏற்கெனவே பலமுறை சொன்ன விஷயங்கள் என்றாலும் ஏதாவது துப்புக் கிடைக்காதா என்ற



அவாவில் அவர் வினவ அவளும் பொறுமையாகப் பதில் சொன்னாள்.

"ஹோட்டலிலும் சந்தோஷமாகத்தான் இருந்தாங்க. அஞ்சலிக்கு அப்பப்போ சாப்பாடு எல்லாம் சர்வ் பண்ணினாங்க ஆண்ட்டி. வீட்டில் அவங்களுக்கு வேண்டிய தண்ணி கூடத் தானாக எடுத்துக் குடிக்க மாட்டாங்க தானே? எனக்கு அதுவே ஆச்சரியமா இருந்தது. ஹா! இன்னொரு முக்கியமான விஷயம்.

'நான் சொல்ல மறந்துட்டேனே! எனக்குத் தெரிஞ்சு, உங்களோடு கூட ஹோட்டலில் சாப்பாடு ஷேர் பண்ணி இந்த ஆறு வருஷத்தில பார்த்ததில்லை. ஆனால் அஞ்சலியிடம் சாப்பாடு ஷேர் பண்ணிட்டாங்க..."

"ஹா! நிஜமாவா?" என்று பிரமிப்போடு கேட்டார் லலிதா.

"எஸ் ஆண்ட்டி. அஞ்சலி என்னிடம் இருந்து பனீர் பட்டர் மசாலா கொஞ்சம் எடுத்துச் சாப்பிட்டு விட்டு, நல்லா இருக்கு என்று சொன்ன போது காலியாகி விட்டது. இன்னொன்று ஆர்டர் பண்ணிக்கலாம் என்று 'அவங்க' சொன்னப்ப, வேண்டாம், எனக்கு அவ்வளவு எல்லாம் சாப்பிட முடியாது. மிச்சம் வேஸ்ட் ஆகி விடும் என்று அஞ்சலி தயங்கினாள். அப்போ பாலாண்ணா...." என்று பேசிக்கொண்டு இருக்கும் போது அஷோக் வரும் அரவம் கேட்கவே திரும்பியபோது சில வினாடிகள் அவளின் பேச்சில் தடை ஏற்பட்டது.

"பாலா என்ன சொன்னான் என்று சொல்ல உனக்கு ஸ்வீட் வாங்கித் தர வேண்டுமா? சரி. மணி ஆர்டர் அனுப்புறேன். கிருஷ்ணா ஸ்வீட்ஸ்-ல என் பேரைச்

சொல்லிப் பாதுஷா வாங்கிச் சாப்பிடு. விஷயத்தைச் சீக்கிரமா சொல்லு." என்று அவசரப்படுத்தினார் லலிதா.

"ஹையோ ஆன்ட்டி! நான் ஸ்வீட்டுக்காகப் பேச்சை நிறுத்தலை. அவங்க ஆபிஸ்ல இருந்து திரும்பி வந்துட்டாங்க. அதுல சின்ன கேப் விழுந்தால் இப்படி ட்விஸ்ட் பண்ணிட்டீங்களே! எனக்குப் பாதுஷா வேண்டாம். நாட்டுல லஞ்சம் எப்படிப் பெருகுது என்று இப்பதான் புரியுது ஆன்ட்டி...." என்று மைதிலி சிரித்தாள்.

"இதை ஏன் லஞ்சம் என்று சொல்கிறாய்? நான் அன்பினால் வாங்கித் தருவது என்று வச்சுக்கோ. பாதுஷா வேண்டாம் என்றால் மைசூர்பாக் வாங்கிக்கோ, விஷயத்தைச் சொல்லு..." என்று மீண்டும் அவசரப்படுத்தினார் லலிதா.

"மைசூர்பாக்கும் வேண்டாம் என்றால்..."

"நீ பாலாக்கு மேலே பந்தா பண்ணுகிறாயே? நீ போனை வை. நான் அஞ்சலியிடம் பேசிக்கறேன்!" என்று எரிச்சலோடு சொன்னார் லலிதா.

"அச்சோ ஆன்ட்டி, இதுக்கு எல்லாம் கோபித்துக் கொண்டால் எப்படி? அஞ்சலியிடம் என்ன என்று சொல்லிக் கேட்பீங்க? அப்புறம் பாலா அண்ணனுக்கு அந்த விஷயம் போய் விட்டால், அவங்களிடம் எப்படி சமாளிப்பீங்க? யோசிங்க ஆன்ட்டி. சரி சரி, அதுக்கும் ப்ளாக் மெயில் பண்ணுகிறேன் என்று கோபிச்சுக்காதீங்க, நானே சொல்றேன்...." என்று சமாதானப்படுத்தினாள் மைதிலி.

"உன் மேலே கோபம் இல்லை மைதிலி. அவன் என்ன சொன்னான் என்று தெரிந்து கொள்ள ஒரு ஆர்வம். சரி. சொல்லு..." என்று ஊக்கினார் லலிதா.



"உனக்குப் பிடித்து இருந்தால், வாங்கிக்கோ அஞ்சலி, சாப்பிடும்போது ரொம்ப யோசிக்கக் கூடாது. அதே மாதிரி எல்லா விஷயத்தையும் காசு கணக்கில் பார்க்கக் கூடாது. சில விஷயங்கள் உணர்வு பூர்வமா அணுகணும். தினம் தினமா சாப்பிட வெளியில் வருகிறோம்? இது நினைத்தவுடனே நாம் வீட்டில் செய்து கொள்ளும் சாப்பாட்டு வகையும் இல்லையே! அப்படியே உணவுப் பொருள் வேஸ்ட் ஆகக் கூடாது என்று நீ நினைத்தால், நாம் நாலு பேர் இருக்கோமே, வேஸ்ட் ஆகாமல், ஆளுக்குக் கொஞ்சமா ஷேர் பண்ணிக்கலாம் என்று சொன்னாங்க. நான் அசந்து போய் விட்டேன்..." என்று முடித்த போது மைதிலியின் பிரமிப்பை லலிதாவால் உணர முடிந்தது.

"உண்மைதான். என்னாலும் நம்ப முடியலை மைதிலி. பாலாவா இவ்வளவு பேசியது? வார்த்தைக் கணக்கு ஒருபுறம் மலைக்க வைக்கிறது என்றால் பேசிய வார்த்தைகள் இன்னொரு விதமாக மலைக்க வைக்கிறது. அஞ்சலி பாலாக்கு ஸ்பெஷல் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்று புரியுது. ஆனால் பாலா கிட்டத்தட்ட ஒரு மாசமா, சரியாவே பேசறதில்லை. எந்நேரமும் வேலை வேலை வேலைதான். அதான் குழம்பிட்டேன். சரி. அதை விடு... நீ சொல்லும்மா. என்ன விஷயமா போன் பண்ணினாய்? இவ்வளவு நேரமா நான் கேட்கலை பாரு..." என்று விசாரித்தார் லலிதா.

"அம்மா உங்களிடம் சொல்லவில்லையா ஆன்ட்டி? எ...ல்...லா...ம் ந...ல்..ல வி..ஷ...ய...ம் தா...ன்..." என்று இழுத்த மைதிலியின் முகம் சிவப்பு நிறத்தைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டது.

"நல்ல விஷயமா? ஹேய் வாழ்த்துக்கள் மைதிலி. இது கட்டாயம் ஸ்வீட் கொடுத்துக் கொண்டாட வேண்டிய விஷயம்தான். உங்க அம்மா சொல்லலையே! அவளிடம் அப்புறமா நான் சண்டை போட்டுக்கறேன். முதலில் பாலாக்கு போன் பண்ணி எனக்குச் சென்னைக்கு வர டிக்கெட் போடச் சொல்றேன். உடம்பைப் பார்த்துக்கோ...." என்று அடுக்கிய லலிதாவின் மனம் வேகமாய்த் திட்டமிட ஆரம்பித்தது.

அஷோக்கும், சாவித்திரி அம்மாவும் மாறி மாறி வெவ்வேறு விதமாகக் குடைந்த பின்னும் அஞ்சலியிடம் இருந்து விஷயம் வாங்க முடியவில்லை.

ஆசிரமக் குழந்தைகளுக்கு உடை வழங்கியது தொடர்பாக ஏதாவது பாலாவிடம் நன்றி சொன்னாயா? அவரின் தொழில் எப்படிப் போகிறது? என்பது போன்ற சாவித்திரி அம்மாவின் விசாரணைக்கு, 'ஆமா. சொன்னேன்', 'தெரியலைம்மா. பார்க்கவில்லை' போன்ற ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னாள் அஞ்சலி.

'நீ சொன்ன ஒரு வார்த்தைக்காகக் கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களைக் கொண்டு வந்து கொடுத்து இருக்கிறாரே? இது மாதிரி மனிதர்களைப் பார்ப்பது ரொம்ப அபூர்வம் அஞ்சலி. உங்க அப்பாவை அவருக்கு ஏற்கெனவே தெரியுமோ?' என்ற சாவித்திரி அம்மாவின் கேள்விகள் தொடர்ந்தன.

"ப்ச்! அதை அவரிடம்தான் கேட்கணும்..."

"ம்ம்ம். ஆமாம்..."

"தெரியலை, ஞாபகம் இல்லை..."



என்பது மாதிரியான பதில்கள் அஞ்சலியிடம் இருந்து வந்தன.

சாவித்திரி அம்மாவின் முயற்சிகள் வார நாட்களில் பலன் அளிக்கவில்லை என்பதால், வார இறுதி நாட்களில் மைதிலியோடு ஆசிரமத்திற்கு விஜயம் செய்து, "அஞ்சலி, நீ நம்ப மாட்டாய். நான் கல்யாணம் என்பது ஒரு விலங்கு என்பது மாதிரி நண்பர்களுடன் சேர்ந்து கலாட்டா செய்து இருக்கிறேன். ஆனால் இப்போ அது எவ்வளவு பெரிய விஷயம் என்பதை உணர்கிறேன்...." என்று தத்துவார்த்தமாகப் பேசிய போதும் சரி.

"உங்க அம்மா அப்பா இருந்தால் உன்னை இப்படித் தனியாக ஆசிரமத்தில் விட்டு வைத்து இருப்பார்களா? அவர்களின் மனதிற்கு வருத்தம் அளிக்கும் ஒரு விஷயத்தை நீ தொடர்ந்து எத்தனை நாள் செய்வாய் அஞ்சலி? ஒரு கல்யாணம் பண்ணிக் கொண்டு உன் சேவையைத் தொடர்ந்து செய்யக் கூடாதா?" என்று சென்டிமென்டாகப் பேசிய போதும் சரி.

"உன் மனதில் யாராவது இருந்தால் சொல்லு அஞ்சலி. அவரையே உடனே பேசிக் கல்யாணம் பண்ணி வைத்து விடுகிறேன்!" என்ற அஷோக்கின் வாக்குறுதிக்கும் சரி, அவளின் பதில் பெரும்பாலும் மௌனம் அல்லது சொல்றேன், பார்க்கலாம் போன்ற ஒற்றை வார்த்தைப் பதில்களே.

அன்றைய தினம் காலையில் மைதிலி கர்ப்பமுற்ற செய்தியில் உற்சாகத்தின் எல்லையைத் தொட்டான் அஷோக். இதைக் காரணம் காட்டியாவது வீட்டிலே வந்து தாங்கிக் கொள்ள அவள் சம்மதிக்கா விட்டாலும், அடுத்த காம்பவுண்டில் இருக்கும் அவளுடைய வீட்டிலாவது

வந்து குடியிருக்க வைத்து விட வேண்டும் என்று எண்ணி ஆசிரமத்திற்குச் சென்றான் அஷோக்.

''ஹேய் அஞ்சலி, உனக்கு ஒரு சந்தோஷமான செய்தி வைத்து இருக்கிறேன்!'' என்று உற்சாகமாக நுழைந்தான்.

''என்ன விஷயம்? எப்போது பார்த்தாலும் அங்கிள் கிட்ட காருக்குச் சண்டை போடுவியே? அந்தச் சண்டை இப்போதாவது நிற்கட்டும் என்று உங்க ஆபீஸ்ல உனக்குப் புதுசா வண்டி வாங்கத் தர ஒத்துக்கொண்டார்களாக்கும்!'' என்று சந்தோஷமாக மலர்ந்த முகத்துடன் கேட்டாள் அஞ்சலி.

''இது ஆபிஸ் விஷயம் இல்லை, மேடம், பெர்சனல்....''

''பெர்சனலா...? அப்போ மைதிலிக்கு ஏதாவது விசேஷமா? கங்க்ராட்ஸ் மேன்...'' என்று வேகமாகக் கை குலுக்கிப் பாராட்டினாள் அஞ்சலி.

''நிஜமாவே சந்தோஷமா?'' சின்ன கேலியோடு தலை சரித்த அவளைப் பார்த்துக் கேட்டான்.

''ஓசு! நீ அப்பாவாகப் போகிறாய். இதென்ன கேள்வி? நிஜம்மாவே ரொம்ப சந்தோஷம் தான்!'' உறுதியாகச் சொன்னாள் அஞ்சலி.

''இப்ப இருக்கும் இதே சந்தோஷமான மூடில், என்னையும் சந்தோஷப் படுத்துவது மாதிரி ஒரு நல்ல விஷயம் சொல்லி விடு பார்ப்போம்....'' என்று பூடகமாய்க் கேட்டான் அஷோக்.

''உனக்கு இந்த நியூஸ் சந்தோஷமா இல்லையா? இதை விட சந்தோஷமான நியூசை நான் எப்படிச்



சொல்ல முடியும்....'' என்று புரியாமல் கேட்டாள் அஞ்சலி.

''இதை விடவும் எனக்கு அதிக சந்தோஷம் கொடுக்கும் விஷயம் எனக்கு இருக்கு. அதை உன்னால் கொடுக்க முடியும் என்று சொன்னால் அதை எனக்காகச் செய்வாயா?'' என்று கேட்டான் அஷோக். அவன் திருமணம், அல்லது அது தொடர்பான விஷயம் பேசப் போகிறான் என்பது புரிந்து விட்டது. அதனாலேயே அஞ்சலியால் வாக்குக் கொடுக்க முடியவில்லை.

''சத்தமே காணோம்? எனக்காக எதுவும் செய்ய மாட்டாயோ?'' கேலியாகக் கேட்டான்.

''அப்படி இல்லைடா.... அது வந்து...''

''இந்த இழுவை எல்லாம் வேண்டாம். செய்வாயா மாட்டாயா? நேரடியா பதில் சொல்லு.'' கறாராக நின்றான் அஷோக்.

''கல்யாணத்துக்கு அப்புறம் நீ ரொம்ப மாறி விட்டாய் அஷோக். முன்னாடி எல்லாம் உன்னை ஈசியா சமாளிச்சுடலாம். இப்ப முடியலை...'' என்று அவள் கெஞ்சலாகச் சொல்லியும் அவன் பதிலே பேசவில்லை.

வழக்கமாக இந்த வாக்கியத்தில் அவன் குழைந்து, 'நான் எப்போதும் திருமணத்திற்கு முன்னும் பின்னும் ஒரே மாதிரிதான் இருக்கிறேன்!' என்பதைக் காட்டச் சரி என்று சொல்லி விடுவான். ஆனால் இவள் இதைத் தடுப்புக் கவசமாக ஒவ்வொரு முறையும் பயன்படுத்துகிறாள் என்பது புரிந்து விட்டதால் அமைதியாக இருந்தான்.

அவனின் மௌனம் அவளைக் கஷ்டபடுத்த, ''சரிடா, நீ சொல்லப் போறது என்ன என்று எனக்குத் தெரியும், அதைச் செய்றேன். ஆனால் உடனே இல்லை. ஒரு ரெண்டு மாசம் டைம் கொடு...'' என்று பேரம் பேசினாள் அஞ்சலி.

''ம்கூம், போன ஜூனில் என்ன சொன்னாய், நினைவிருக்கா? இப்படி ரெண்டு மாசம் என்று ஆரம்பித்து இந்த ஆசிரமத்திற்கு நீ வந்து ஒண்ணே கால் வருஷம் ஓடி விட்டது. இன்னும் நீ சொன்ன ரெண்டு மாசம் முடியவில்லை. அது என்ன கணக்கோ? அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம் அதெல்லாம் முடியாது. உடனே கிளம்பு!'' என்று வற்புறுத்தினான்.

''என்னடா இப்படி ஒரேயடியா கழுத்தில் கத்தி வைக்கிறாய்? கொஞ்சமும் மூச்சு விட அவகாசம் கொடு. இங்கே சாவித்திரி அம்மாவிற்கு மாற்று ஏற்பாடு எதுவும் செய்யத் தேவை இல்லையா?'' என்று சமாளிக்கப் பார்த்தாள் அஞ்சலி.

''அஞ்சலி, எனக்கு என்ன மாற்று ஏற்பாடு செய்யப் போகிறாய்? எனக்கு இரவில் ஆள் எதுவும் தேவை இல்லை. நீ எங்கே போனாலும், வீட்டில் இருந்து கூட காலையில் வழக்கமாக எல்லோரும் வேலைக்குப் போவது மாதிரி நீ இங்கே வரலாம். பகலில் இங்கே கூட மாட இருந்து விட்டு, இரவில் நீ வீட்டுக்குக் கிளம்பி போகலாமே? போக, நீ இங்கே வருவதற்கு முன்பும் இந்த ஆசிரமம் இருந்தது. நீ இங்கே இருந்து கிளம்பி விட்டாலும் ஆசிரமம் தொடர்ந்து நடைபெறும். உலகத்தில் எத்தனையோ பெண்கள் தனியாக வீட்டில் வசிப்பதில்லையா? என்ன பயம்?'' என்று உடனடியாக நடுவில் வந்து புகுந்தார் சாவித்திரி.



''அம்மா! இத்தனை நேரம் நீங்க இங்கேயா இருந்தீங்க?'' என்று ஆச்சரியமாக விசாரித்தாள். சாவித்திரி அம்மாவும் இவனுடன் கூட்டுச் சேர்ந்து விட்டாரே என்று வருத்தமாக இருந்தது.

''இல்லை. இப்போதுதான் வந்தேன். நீங்க பேசுவது காதில் விழுந்தது. இது இன்றைக்கு அஷோக் புதுசா பேசும் பேச்சு இல்லையே! அடிக்கடி பேசுவதுதானே! எனக்கு நீ இந்த மாதிரி உதவிகள் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை அஞ்சலி. நீ நினைத்தால், பாலா மாதிரி நிறையப் பெரிய மனுஷர்களிடம் அவரவர் மனதிற்குத் தகுந்த மாதிரி பேசி, நிரந்தரமாக இந்த ஆசிரமத்திற்குப் பல உதவிகள் கிடைப்பதில் உதவி செய்யலாம். போதுமான அளவு உதவி கிடைத்தால், நீ செய்யும் இந்த வேலைகளை நான் ஆசிரியரை அமர்த்தியோ, உரிய பணியாட்களை அமர்த்தியோ செய்து கொள்ளலாமே! அதனால் நீ எனக்காகப் பார்க்காதே. உன்னுடைய நிம்மதியான எதிர்காலத்தைப் பார்த்து நல்ல சேதி சொல்லு,'' என்று தீர்மானமாக முடித்தார்.

''நான் இங்கே இருப்பதில் உங்களுக்கு ஏதாவது கஷ்டம் இருக்கிறதாம்மா? என்னை இப்படிப் போ போ என்று துரத்துறீங்க?'' என்று கேட்ட அஞ்சலிக்குத் தான் கேட்கும் கேள்வி அபாண்டம் என்ற உணர்வு இருந்தது.

''என்னை மடக்கிக் கேள்வி கேட்பதாக நினைத்துக் கொண்டு கண்டபடி உளறாதே. எத்தனையோ பேர் இருக்கும் இந்த ஆசிரமத்தில் நீ இருப்பதால் எனக்கென்ன புதுசா கஷ்டம் வந்து விடப் போகிறது? இன்னும் சொல்லப் போனால் நீ இருப்பது எனக்கு ரொம்ப வசதிதான்.

ஆனால் என்னுடைய வசதிக்காக உன்னுடைய எதிர் காலத்தைப் பாழ் பண்ணி விடக் கூடாதே என்ற அக்கறையில் நான் பேசுகிறேன் என்பது தெரியாத மாதிரி நடிக்க வேண்டாம். சீக்கிரம் கிளம்புற வழியைப் பாரு!'' என்று சிரித்தபடி முடித்தார்.

''ஆளாளுக்கு என்னைப் பந்தாடுறீங்க. நான் என்ன பண்ண? வீட்டில் வாடகைக்கு இருப்பவர்களைக் காலி பண்ணச் சொல்ல வேண்டாமா? திடு திப் என்று எனக்கு வீடு வேண்டும் என்றால் அவங்க எங்கே போவாங்க?'' என்று புதிதாக ஒரு காரணம் கண்டு பிடித்தாள் அஞ்சலி.

''அதைப் பற்றி நீங்க கவலைப் படாதீங்க மேடம். கடந்த இரண்டு மாசமாவே உங்க வீடு காலியாகத்தான் இருக்கு. அவங்க பணி மாறுதல் வந்து, ஸ்கூல் ஆரம்பிக்கும் சமயத்தில் காலி பண்ணிட்டுப் போய்ட்டாங்க. அதனால் அந்தக் கவலை வேண்டாம்....''

''அட பாவி, அப்புறம் ரெண்டு மாசமா நீ வாடகை என்று கொண்டு வந்து கொடுத்த பணம்...''

''முதல் மாசம், கல்யாணம் நடந்த போது வந்த நிறைய உறவினர்கள் அங்கே தங்கி இருந்தாங்க. அவங்களை ஹோட்டலில் தங்க வைத்து இருந்தால் செலவாகி இருக்கக் கூடிய பணத்தைத் தான் கடந்த இரண்டு மாதமாகப் பிரித்துக் கொடுத்தேன். ஏன், நான் உன் வீட்டைப் பயன்படுத்தக் கூடாதா? அதுக்கு உன்னிடம் பெர்மிஷன் வாங்கணுமா?...''

''ஹேய், முட்டாள் மாதிரி பேசாதே! நான் நீ பயன்படுத்தியதையா தப்பு என்று சொன்னேன்? அதுக்கு நீ வாடகை தரணுமா? நான் ஒன்று சொல்ல வந்தால், நீ



அதை எப்படி எல்லாம் ட்விஸ்ட் பண்ணுகிறாய்?'' என்று பல்லைக் கடித்தாள்.

''சரி சரி.... ஷாந்தி. உன் வீட்டுக்கு நான் வாடகை கொடுக்கிறேன் என்று சொன்னால் நீ ஒத்துக் கொள்வாயா? அதனால் தான் வீடு காலியானதைச் சொல்லவில்லை. எங்களுக்கும் அந்த வீடு தேவையாக இருந்தது. பயன்படுத்திக் கொண்டோம். இப்ப என்ன? எல்லா விஷயமும் உடனே சொல்லவில்லை என்று கோபமா? அதுக்குத் தான் சொல்றேன். நீ பக்கத்துல குடி வந்து விட்டால், மணிக்கு ஒரு முறை கூட வந்து பேசலாம். உடனே உடனே தகவல் தெரிந்து கொள்ளலாம். நீதான் கேட்க மாட்டேன் என்கிறாய்!'' என்று சிரித்தான் அஷோக்.

இனிமேல் சொல்ல சாக்குப் போக்குச் சொல்ல எதுவும் இல்லை என்று அஷோக் கொண்டு வந்து நிறுத்திய பின்பு, ''சரிடா, வரும் புதன் கிழமை உன்னுடைய பிறந்த நாள் வருதே. அன்னிக்கு வருகிறேன்!'' என்று வேறு வழி இன்றிச் சம்மதம் அளித்தாள் அஞ்சலி.

## 13

மைதிலி கருவுற்றிருக்கும் சேதி கேட்ட பிறகு லலிதாவிற்கு மகிழ்ச்சியாக இருந்தாலும், அதைச் சாக்கிட்டுச் சென்னைக்குப் பயணம் மேற்கொள்ளலாம் என்று முடிவு பண்ணியது அஞ்சலியைச் சந்திக்கும் ஆவலில் தான் என்பதை வெளியில் சொல்லவில்லை. உடனே மகனைப் போனில் அழைத்தார்.

''பாலா, இப்ப பேசலாமா? ஏதாவது முக்கியமான வேலையாக இருக்கிறாயா?'' என்று விசாரித்தார்.

''அது நீங்க பேசப் போகும் விஷயத்தைப் பொறுத்தது!'' கவனமாக வந்தது பாலாவின் பதில்.

''உன்னுடைய கல்யாண விஷயம் இல்லை. போதுமா?'' எரிச்சலோடு சொன்னார் லலிதா.

''அப்ப பேசலாம், சொல்லுங்க....'' என்று அவசரமாக அவன் பதில் சொன்ன வேகத்தைப் பார்த்து எரிச்சலில் இருந்த லலிதா அம்மாவிற்கே சிரிப்பு வந்து விட்டது.

''ஏன் பாலா உனக்கென்ன ஏதாவது லவ் பெயிலியரா? இப்படி கல்யாணம் என்றால், காத தூரம் ஓடுகிறாய்?''

''இதுக்குதான் பேசணும் என்று சொன்னீங்களா? போனை வைங்க...''

''டேய் டேய்... இரு. வச்சுடாதே. முக்கியமான விஷயம் பேசணும். மைதிலி கன்சீவ் ஆகி இருக்கா. நாம ரெண்டு பேரும் போய்ப் பார்த்து விட்டு வரலாமா?'' என்று அவசரமாக இடைமிட்டார் லலிதா.

''ப்ச்! என்னம்மா குழந்தை பிறந்தால் போய்ப் பார்த்து விட்டு வரலாம். இப்ப என்ன அவசரம்? அப்படிக் கட்டாயம் போகணும் என்றால் நீங்க மட்டும் போய்ட்டு வாங்க. இந்த மாதிரி விசேஷத்துக்கு எல்லாம் என்னால் வர முடியாது. போனில் பேசி க்ரீட் பண்றேன். அவ்ளோதான் என்னால் முடியும்.'' அழுத்தம் திருத்தமாய்த் தன் மறுப்பை உடனடியாக உரைத்தான் பாலா.

''என்ன பாலா? கல்யாணத்திற்கு வர உங்க அப்பா பந்தா பண்ணிகிட்ட போது நீதானே வந்தாய். என்ன



பேச்சுப் பேசி, எப்படி எல்லாம் சண்டை போட்டாலும், நீதான் பாலா எனக்கு எல்லா உதவியும் செய்கிறாய். அதே மாதிரி...'' என்று அப்பாவியாய்க் கொக்கி போட்டார் லலிதா.

''எனக்கு ஒரு வயசு முடியும்போதே காது குத்தி னீங்க போல இருக்கே! மறந்துடுச்சா?'' என்று அவன் சொன்ன பாவனையில் விழுந்து விழுந்து சிரித்தார் லலிதா.

''அப்பாவிடம் கேட்டேன் பாலா, அவருக்கு ஸ்கூல் புக்ஸ் டெண்டர் முடியும் வரை எங்கேயும் வர முடியாது என்று தீர்மானமா சொல்லி விட்டார். இந்த ஒரு முறை மட்டும் என்னுடன் துணைக்கு வரக்கூடாதா?'' என்று விசாரித்தார்.

''துணைக்கு உங்களுக்கு ஆள் வேண்டுமா? ம்ம்ம். இதை நான் நம்பணுமா? நீங்க என்ன ப்ளான் போடுறீங்க என்று எனக்குத் தெரியும். அதுக்கு எல்லாம் வேற ஆளைப் பாருங்க. என்னால் வர முடியாது. நான் நாளைக்கு டெல்லி போறேன். அடுத்த மூன்று நாட்கள் அங்கேதான். வியாழன் அன்றுதான் திரும்பி வருவேன். உங்களுக்கு என்னுடைய வருகையைத் தவிர வேறென்ன வேண்டுமோ அதைச் சொல்லுங்க. ஏற்பாடு பண்ணித் தருகிறேன்!'' என்று முடிவாகச் சொன்னான் பாலா.

''ம்கூம். இந்தப் பிசாத்து டிக்கெட்டை ஒரு போன் பண்ணி ட்ராவல் ஏஜென்சியில் சொன்னால் வீட்டில் கொண்டு வந்து தரமாட்டானாக்கும்!'' என்று மனதிற்குள் முணுமுணுத்தாலும், தன்னுடைய தேவையை அவனிடம் விளக்கமாகச் சொன்னார்.

"உடனே சென்னைக்குக் கிளம்பணும். நாளைக்குத் திங்கள் காலை ரயிலிலோ, விமானத்திலோ டிக்கெட் போடு. ஒரு நாலு நாள் சென்னையில் தங்கி விட்டு வருகிறேன். நீயும் ஊருக்குப் போகிறாயே? அப்பா மேனேஜ் பண்ணிப்பார். நான் வியாழன் அல்லது வெள்ளியன்று வருகிறேன். இத்தனை நாள் உன்னைக் கேட்டுக் கொண்டு இருந்தேன். இனிமேல் கேட்கவே மாட்டேன். எனக்குப் பிடித்த பெண்ணை நானே தேர்ந்தெடுத்துக் கொள்கிறேன்..."

"நீங்களே தேர்ந்தெடுத்து அப்படியே நீங்களே கல்யாணமும் பண்ணிக்கோங்க!"... எரிச்சலோடு இடையிட்டான் பாலா.

"ஆமா, எனக்குதான் இத்தனை வருஷத்திற்குப் பிறகு கல்யாணத்துக்குப் பார்க்கிறாங்களா? அதுவும் பொண்ணு... முட்டாள்! நினைச்சு நினைச்சுப் பேசுறியே? போன வருஷம் என்ன சொன்னோம் என்பது மறந்து விட்டதா? நீ சொன்ன ஒரு வருஷக் கெடு. இந்த ஆகஸ்ட் ஒன்றாம் தேதியோடு முடிவடைகிறது. நான் முடிவு பண்ணிட்டேன். ஆகஸ்ட் முப்பத்தோராம் தேதி வரை கெடு. அதுக்குள்ளே நீ பொண்ணு பார்த்து நீயா கல்யாணத்துக்குச் சம்மதம் சொல்வதா இருந்தா சொல்லு. இல்லை என்றால் நான் பொண்ணு தேர்ந்தெடுத்தாச்சு. செப்டம்பர் ஒண்ணாம் தேதி நான் போய்ச் சம்பந்தம் பேசப் போறேன். இனிமேல் நீ சொல்ற ஒட்டையான சாக்குப் போக்குகளை என்னால் கேட்க முடியாது. குட் பை"... என்று இறுதியாகச் சொல்லி விட்டுப் போனை வைத்து விட்டார் லலிதா.



போன வருடம், அவள் எங்கே இருக்கிறாள் என்பதே தெரியாத போது, ஊர் பேர், எதுவுமே தெரியாத சூழலில், அவள் இன்னும் மணமாகாமல் இருக்கிறாளா என்பது சந்தேகமாய் இருந்த வினாடியில், அம்மாவின் வாயை அடைக்க ஒரு வருட அவகாசம் கேட்டான்.

ஆனால் அம்மாவிடம் கேட்ட அந்த அவகாசம் முடியும் முன்பே, அவள் கண் முன்னால் வந்து விட்டாள். இன்னும் மணமாகவில்லை. இந்தச் சூழலில், இவளைத் தவிர வேறு ஒருத்தியைத் தன்னால் ஏற்றுக் கொள்ள முடியுமா? இவளையே திருமணம் செய்து கொள்வது என்றாலும், தன்னுடைய மனமே அதற்கு ஒத்து கொள்ளவில்லையே! தன்னுடைய புலன்களே தனக்கு எதிராய் அமைந்ததை எண்ணி விக்கித்துப் போய் நின்றான் பாலா.

பாலாவிடம் பேசிவிட்டுப் போனை வைத்த லலிதாவின் முகம் யோசனையில் ஆழ்ந்து இருந்தது. பாலாவிடம் இந்த மாதிரி மிரட்டல் எப்போதுமே வேலைக்கு ஆகாதே? இப்ப மட்டும் கல்யாணத்திற்கு ஓகே சொல்லி விடுவானா? அவன் ஓகே சொல்லாமல், அஞ்சலியை அவனுக்குப் பிடித்து இருக்கு என்று எப்படி முடிவிற்கு வருவது? அஞ்சலியாவது அவனைப் பிடித்து இருக்கு என்பது மாதிரி நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒரு துப்புக் கொடுக்காமல் எந்த தைரியத்தில் இவர்கள் இருவருக்கும் திருமணம் முடிக்க ஏற்பாடு செய்வது?

பெற்றோர்கள் இல்லாத அந்தப் பெண்ணிற்கு நல்லபடியான திருமண வாழ்க்கை அமைத்துக் கொடுக்க வேண்டாமா? பாலாக்கு கோபம் வந்தால் நாலு நாட்கள் கூட எவ்வளவு வேண்டியவர்களாக இருந்தாலும், நிமிர்ந்து

ஒரு பார்வை கூடப் பார்க்காமல், பேசாமல் இருப்பானே! கல்யாண விஷயத்தில் அவன் சம்மதம் இல்லாமல் ஏற்பாடு செய்வது ரிஸ்க் இல்லையா? அது அவன் மட்டுமில்லாமல் இன்னொரு பெண்ணின் வாழ்வையும் பாதிக்கக் கூடிய விஷயம் ஆச்சே என்பது அவரைத் தயங்க வைத்தது. அஞ்சலிக்குப் பெற்றோர் இல்லை என்பது இன்னும் பயமுறுத்தியது.

அறைக்குள்ளே செல்வகுமார் வந்தது கூடத் தெரியாமல் லலிதா யோசனையில் மூழ்கி இருக்க, அவர் ஆச்சரியமாக அருகில் வந்து, "என்ன அப்படி ஒரு தீவிர யோசனை? எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போறீங்க மேடம்?" என்று கேலியாக விசாரித்தார்.

"டெல்லியில் இருக்கும் செங்கோட்டையைப் பிடிக்கலாம் என்று யோசனை. வரும் ஆகஸ்ட் பதினஞ்சு நான் அங்கே நின்று தேசியக் கொடி ஏற்றிச் சுதந்திர நாள் விழா உரை நிகழ்த்தணும். அதுக்கு உங்களால் ஏற்பாடு பண்ண முடியுமா?" என்று கேட்க, செல்வகுமார் அடக்க மாட்டாமல் சிரித்தார்.

"இதெல்லாம் நடக்கிற காரியமா? அதுவும் ரெண்டே வாரத்துல. என்னால முடியாது லலிதா. ஆனால் வேற ஒன்று செய்ய முடியும்..." என்ற பீடிகை போட்டு நிறுத்தினார்.

"என்ன கமர்கட் வாங்கி தரப் போறீங்களா?"

"என்ன லலிதா, என்னை அவ்வளவு சீப்பா எடை போட்டு விட்டாயே! அவங்க ரொம்ப பெரிய ஆள் தெரியுமா? எப்படியும் பாலா ஆகஸ்ட் ஒண்ணாம் தேதி டெல்லி போவான். அவனோடு கூட நீயும் போனால்.



இதுதான் செங்கோட்டை, என்று தூரத்தில் இருந்து காண்பிக்கச் சொல்கிறேன். முடிந்தால் சுற்றிக் காட்டலாம். அவ்வளவுதான் இப்போதைக்கு என்னால் முடியும்..."

"பாலா டெல்லி போவது உங்களுக்கு எப்படித் தெரியும்? அவன் சொன்னானா என்ன?"

"அவன் தான் ரெண்டு வருஷமா ஆகஸ்ட் ஒண்ணாம் தேதி அங்கே போயிட்டு இருக்கானே. இந்த வருடம் போகமாட்டானோ என்று நினைத்தேன். ஆனால் கிளம்பி விட்டான்..."

"என்ன! ஒவ்வொரு வருஷமுமா போகிறான்? ஏன் இந்த வருஷம் போக மாட்டான் என்று நினைத்தீங்க?" என்று குழப்பத்துடன் கேட்டார் லலிதா.

"கல்யாணத்திற்குப் பிடி கொடுக்காமல் இருக்கிறானே? ஏதோ காதல் விவகாரம் என்று முன்பு நினைத்தேன். அவன் ஆசைப் பட்ட பெண்ணைத் தேடித்தான் அங்கே போகிறானோ என்ற சந்தேகம் போன வருஷமே வந்தது. அஞ்சலிதான் அவனுடைய மனம் கவர்ந்தவள், என்று குடம் ஏற்றி அணைக்காத குறையாக நீ சொன்னதை நம்பி, அவன் இந்த வருஷம் டெல்லிக்குப் போக மாட்டான் என்று நினைத்தேன். ஆனால் என்னுடைய எண்ணம் தப்பாகி விட்டதே! அதனால் உன்னுடைய எண்ணம் தப்..."

"சும்மா இருங்க! உங்களுக்கு என்ன தெரியும்? பாலாவையும் தெரியாது. அஞ்சலியையும் தெரியாது. அவங்க ரெண்டு பேரும் கல்யாண வீட்டில் பேசியதை என் ரெண்டு கண்ணால் பார்த்தவள் நான்.

"அஞ்சலியை ஒரு நிமிஷம் என்றால் ஒரு நிமிஷம் கூட விடாமல் தொடர்ந்தது அவனின் கண்கள். அந்தக்

கண்ணில்தான் எத்தனை பொறாமை? கோபம்? ஆற்றாமை? அவள் அவனிடம் வந்து பேசவில்லை என்று அவ்வளவு கோபம்! எனக்குப் பாலாவோட ஈகோ பற்றி நல்லா தெரியும். அவனுக்கு அவளை ரொம்ப பிடிச்சு இருக்கு. ஆனால் அவளா வரணும் என்று நினைக்குது இந்த பேக்கு. வேற ஒரு பிரச்னையும் இல்லை. எனக்கு நிச்சயமா தெரியும்...'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார் லலிதா.

''எப்படி லலிதா அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறாய்?''

''முதலில், மைதிலி கல்யாணத்திற்கு முதல் நாள் மாலையில் அவனை இழுத்துட்டுப் போகாத குறையாக அழைத்துப் போனேன். ஆனால் அன்று இரவு அங்கிருந்து கிளம்பவே அவனுக்கு மனம் இல்லை. போதாக்குறைக்கு, மறுநாள் காலையில் ஆளுக்கு முன்னால் கிளம்பி நின்றான். இரண்டாவதா, அவனுக்குத் தெரியாத எந்தப் பெண்ணிடம் அவனாகத் தேடிப் போய்ப் பேசி இருக்கிறான்? அஞ்சலியிடம் அவனாகப் போய்ப் பேசியதை நான் பார்த்தேன். மூன்று, என்னோட சிம் கார்டைப் போட்டு அஞ்சலிக்குக் கொடுத்த மொபைலில்...''

''அதைத்தான் அவள் உடனே அடுத்த நாளே திருப்பி அனுப்பி விட்டாளே! தெரியாத யாரிடமும் பரிசு வாங்கக் கூடாது என்ற அவளின் எண்ணம் தானே அது!'' என்று அவசரமாக இடையிட்டார் செல்வகுமார்.

''நீங்க ரொம்ப புத்திசாலிதான். ஒத்துக்கறேன். கொஞ்சம் முழுசா என்னைப் பேச விடுறீங்களா? நான் இப்ப பேசிட்டு இருப்பது எல்லாமே பாலாக்கு அஞ்சலியைத்



தெரியும். அவளைப் பிடிக்கும் என்பது பற்றி. அஞ்சலிக்கு அவனைப் பிடிச்சு இருக்கா என்ற ஆராய்ச்சி இனிதான் நான் சென்னைக்குப் போய்ப் பண்ணணும். புரிந்ததா?'' என்று எரிச்சலோடு முறைத்தார் லலிதா.

''ஓகே ஓகே. சாரி!'' என்றவர் கை காட்டி வாய் பொத்தி நின்ற பாவனையில் கொஞ்சம் இளகிப் புன்னகையோடு பேச்சைத் தொடர்ந்தார் லலிதா.

''மூன்று, நான் பாலாவோடு மொபைல் பில் பார்த்தேன். அந்தக் குறிப்பிட்ட நாளில், அவன் அஞ்சலியிடம் பதினெழு நிமிடம் பேசி இருக்கிறான். உடனே அவன் பேசினான் என்று உனக்கு எப்படித் தெரியும் என்று கடிக்க வேண்டாம். அவன் பேசாவிட்டாலும், அவள் பேசியதைத் தொடர்ந்து அவன் கேட்டு இருக்கிறானே? அது காதல் வசனமாக இருக்க வேண்டும் என்று கூட அவசியம் இல்லை. அவனுக்கு நேரடியாக அறிமுகம் இல்லாத வயசுப் பெண்ணிடம், என்னுடைய சிம் கார்ட் போட்ட போன் இருக்கிறது என்று தெரிந்த உடனே, அவன் போனை கட் பண்ணி இருக்க வேண்டும். அதிக பட்சம் முப்பது நாற்பது வினாடிகள் தான் அவன் பேச வாய்ப்பு இருக்கு. ஆனால் அவன் பேசியது பதினேழு நிமிடங்கள். ராத்திரி எட்டரை மணிக்கு மேலே அவ்வளவு நேரம் பேச அவனுக்கு என்ன விஷயம் இருக்கு. சொல்லுங்க பார்ப்போம்? அவர்கள் இருவருக்கும் இடையே தொழில் தொடர்பு எதுவும் இல்லை.....''

''ஏன் இல்லை? அடுத்து வந்த இரண்டே வாரத்தில் அவன் சென்னைக்கு அஞ்சலி தங்கி இருக்கும் ஆசிரமக் குழந்தைகளுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் துணி வாங்கிக் கொடுத்தானே! அது தொழில் தொடர்பு

இல்லையா? அது பற்றி அவர்கள் பேசி இருந்து இருக்கலாமே!''

''ஹய்யோ! அறிவுக் கொழுந்தே. அந்த ஐம்பதாயிரம் ரூபாய் செலவு பண்ணியதே அஞ்சலிக்காக. அது பாலாக்கு அஞ்சலியைப் பிடித்து இருக்கு என்பதன் நாலாவது சாட்சி. அன்று மதியம் ஒரு மணிக்கு, அவளிடம் பேசிக்கொண்டு இருந்த என் கையைப் பிடித்து இழுத்து வந்து, அவளிடம் உனக்கென்ன பேச்சு என்று கடித்தவன், அன்று இரவு எட்டரை மணிக்கு, அவளுடன் அரை மணி நேரம் பேசுகிறானா? அதுவும் என்னுடைய சிம் கார்டில்? கொஞ்சம் கூட யோசிக்கவே மாட்டீங்களா?''

''ஒரு வீட்டில் இரண்டு புத்திசாலிகள் இருந்தால் வீட்டுக்கு ஆகாதாம் லல்லிம்மா. அதனால் துப்பறியும் வேலையை நீயே செய், அடுத்த பாயின்ட்டுக்குப் போகலாம்.'' என்று சிரிப்போடு சொன்னார் செல்வகுமார்.

''அது சரி, விட்டால் விடிய விடிய ராமாயணம் மாதிரி கேட்டுட்டு இருப்பீங்க போல. அவ்வளவுதான். இத்தனை காரணம் போதாதா? பாலாக்கு அஞ்சலியைப் பிடிச்சு இருக்கு என்று சொல்வதற்கு....'' என்று அவரையே திருப்பிக் கேட்டார் லலிதா.

''ம்ம்ம்.... போதும். ஆனால் பாலாவும் அஞ்சலியும் எங்கே மீட் பண்ணி எப்படிப் பழகி இருப்பாங்க? நேரில் பார்த்துதான் காதலை வளர்க்கணும். போனில் பேசியே வளர்த்தான் என்று சொல்ல, பாலாவோ கலகல டைப் இல்லை. அவள் கோவைக்கு வந்த மாதிரி தெரியலை. இவன் சென்னைக்கு ஓரிரண்டு நாள் தொழில் முறைப் பயணம் தவிர அங்கே தங்கி இருக்கவில்லை. பின்னே



எப்படி.... அதுதான் இடிக்குது...'' என்று யோசனையோடு இழுத்தார்.

''இப்படியே சந்தேகப்பட்டுட்டே இருங்க. உருப்படியா அவங்களைச் சேர்த்து வைக்க வழி ஒண்ணும் சொல்லாதீங்க?'' என்று சலித்துக் கொண்டார் லலிதா.

''நீ சொல்றதைப் பார்த்தால் ரெண்டு பேரும் அழுத்தமா மனசை மூடி வச்சுகிட்டு இருக்காங்க. அவங்களா வாயைத் திறந்தால்தான் முடியும். அவங்களைத் திறக்க வைக்க என்ன பண்ணுவது? நீ சென்னைக்குப் போய் அஞ்சலியைப் பார்த்துப் பேச வேண்டியதுதானே?''

''ம்கூம். வாயைத் திறந்தால்தானே? அதுக்குள்ள உங்க பையன் வேறு பிடிச்சி இழுத்துட்டு வந்துட்டான்...''

''முடிஞ்சதையே பேசிட்டு இருக்கக் கூடாது. இப்பதான் சென்னைக்குப் போறியே? அப்ப பேசு...''

''நான் மைதிலியைப் பார்க்கப் போகிறேன். அவள் ஆசிரமத்தில் இருக்கிறாள். அங்கே போய் எவ்வளவு நேரம் பேசுவது? அஞ்சு பத்து நிமிஷம். அட மிஞ்சி மிஞ்சிப் போனால் அரை மணி நேரம்..... அதுக்குள்ளே எப்படி என்ன பேசுவதாம்?''

''ஓகே, நீ பேசாமலே அவனைப் பற்றி நிறைய விஷயம் அஞ்சலிக்கு ஞாபகப்படுத்துவது மாதிரி ஏதாவது ஒன்னை அவளிடம் விட்டுட்டு வந்துடு. ம்ம்ம், ஏதாவது போட்டோ ஆல்பம்.... வேண்டாம். அது பெரிசா இருக்கும்... சீடீ.... மாதிரி எதாவது கொண்டு போய் அவளிடம் விட்டு விட்டு வந்திடு....''

''ம்கூம்... சீடீ... அதை அவள் பார்ப்பாள் என்று என்ன நிச்சயம்?''

"மேலே கவர்ல, அஷோக் கல்யாணம் என்று எழுதி வச்சுடு...."

"ஹய்யோ! சூப்பரா தான் ஐடியா கொடுக்குறீங்க... ஆனால் வொர்க் அவுட் ஆகுமா என்றுதான் தெரியலை...."

"முதலில் ஆல்பம் ரெடி பண்ணு. அவனோட கடந்த அஞ்சு வருஷ வாழ்க்கையில் நடந்த குறிப்பிடத்தக்க விஷயங்கள் எல்லாவற்றையும் தொகுத்து ஒரு சீடி ரெடி பண்ணித் தருகிறேன். அதை அவள் பார்க்கட்டும். அப்புறம் பாரு அவள் ரியாக்ஷனை..." என்று பெருமையாகச் செல்வகுமார் சவால் விட்டதை நம்பி உற்சாகத்துடன் அந்த சீடியுடன் சென்னைக்குக் கிளம்பிய லலிதாவிற்கு அடுத்த மூன்று நாட்களில் அதற்கான பலன் கை மேல் கிடைத்தது.

## 14

லலிதா சென்னைக்கு மைதிலியைப் பார்க்க வருவதாக அவளிடம் ஏற்கெனவே தொலைபேசியில் சொல்லி இராததால், அவரைக் கண்டதும் மைதிலிக்கு உற்சாகம் கரை புரண்டு ஓடியது.

"ஆன்ட்டி! எங்க அம்மா வருவாங்க என்று தெரியும். ஆனால் வெளியூரில் இருந்து நீங்க கிளம்பி வருவீங்க என்று நான் நினைக்கவே இல்லை!" என்று அவரைக் கட்டி அணைத்துக் கொஞ்சினாள்.



"பாலா ரெண்டு நாள் டெல்லிக்குப் போறேன் என்று கிளம்பிட்டான். சரி, நீயும் போன் பண்ணினாயா? உன்னையும் பார்த்து விட்டு, அப்படியே அஞ்சலியையும் பார்க்கலாம் என்று வந்தேன்!" என்று சிரிப்போடு சொன்னார் லலிதா.

"பார்க்க வேண்டிய ஆட்கள் வரிசை மாத்திதானே சொல்லி இருக்கீங்க...." என்று ஒரு விரல் காட்டி மைதிலி செல்லமாக மிரட்ட, "மாத்தி இல்லியே! உன்னிடம் இந்த வரிசைதான். கரெக்டாதானே சொல்லி இருக்கேன். அஞ்சலியிடம் மாத்தி..." என்று லலிதா கண்சிமிட்ட இப்போது மைதிலி சத்தமாகச் சிரிக்க ஆரம்பித்தாள்.

மைதிலியின் சிரிப்புச் சத்தம் கேட்டு வெளியே வந்த வளர்மதி, "வாங்க வாங்க. உங்களைப் பார்த்ததில் ரொம்ப சந்தோஷம். கல்யாணம் முடிந்த உடனே அங்கிருந்து அப்படியே கிளம்பி விட்டீர்கள் போல. உங்களைப் பற்றி மைதிலி நிறையச் சொல்லுவா. குளிச்சுட்டு வாங்க, சாப்பிடலாம்!" என்று முகம் மலர வரவேற்றார்.

"என்னைப் பற்றி உங்களிடம் நிறையச் சொல்லி இருக்கிறாளா? உங்களைப் பற்றி என்னிடம் நிறையச் சொல்லி இருக்கிறாள். நீங்க நைட் ஆனால் ரொம்ப மிரட்டுறிங்களாமே....?" என்று நிறுத்தி அவர் விட்ட இடைவெளியில் வளர்மதிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"ஆன்ட்டி, அவங்க பயந்துடப் போறாங்க. சொல்றதை இடைவெளி விடாமல் முழுசா சொல்லுங்க," என்று மிரட்டினாள்.

"நைட் பால் குடிப்பது என்றால் மைதிலிக்குப் பிடிக்காதே! அப்படி இருக்க அவளைக் குடிக்கச் சொல்லி

ரொம்ப கட்டாயப்படுத்துறீங்களாமே?'' என்று அவர் சொன்ன தொனியில் விழுந்து விழுந்து சிரித்தார் வளர்மதி.

''ஹையோ! அஷோக்கும் அஞ்சலியும் இருந்தால் இப்படித்தான் ரெண்டு பேரும் சேர்ந்து என்னை ஓட்டிட்டு இருப்பாங்க. அது ஒரு சந்தோஷமான காலம். ஒரு வருஷத்திற்குப் பிறகு, அந்த சந்தோஷம் இப்ப எனக்கு நினைவு வந்தது. உங்களைப் பார்த்ததுல ரொம்ப சந்தோஷம். கடவுள் புண்ணியத்துல ஒரு வழியா மனசு மாறி, இவ்வளவு நாளைக்குப் பிறகு இங்கே வர அஞ்சலி ஒத்துக் கொண்டாள்...''

''நிஜமாவா, எப்போ வரப் போகிறாள்?'' என்று லலிதா கேட்ட வேகத்தில் திகைத்துப் போனார் வளர்மதி. இவருக்கு என்ன அப்படி ஒரு ஆர்வம்?

''ஆன்ட்டிக்கு அஞ்சலியை ரொம்ப பிடிச்சு இருக்கு அத்தை. அவங்களுக்கு ஒரு பையன் இருக்கார். பேர் பாலா. என்னோட கல்யாணத்துக்குக் கூட வந்து இருந்தார். நீங்க விசாரிச்சா... வாட்ச் செட் செலெக்ட் பண்ணினது அவர்தான். இன்னும் கல்யாணம் ஆகவில்லை...'' என்று இழுத்து இழுத்து உரிய ஏற்ற இறக்கங்களுடன் மைதிலி சொல்ல, வளர்மதி கண்களை விரித்தார்.

''ஓ! லலிதா மேடம், எனக்கு அஞ்சலியை இங்கேயே கூட்டி வந்து விட ஆசைதான். முன்னாடியே அவங்க அப்பா இறந்த போதே, எனக்கு மருமகளாக்கிக் கொள்ளக் கேட்டேன். நாங்க ரெண்டு பேரும் நல்ல பிரெண்ட்ஸ்ம்மா என்று ரெண்டு பேருமே அழுத்தம் திருத்தமா சொல்லிட்டாங்க. அப்புறம்தான் நான் வெளியே வரன் பார்த்தேன். மைதிலி வந்து அஞ்சலியை எப்படி நடத்துவாளோ என்ற பயம் கொஞ்சம் இருந்தது....''



''அத்தை.... இது டூ மச். சொல்லிட்டேன். இது மாதிரி எத்தனை சந்தேகம் என் மேலே வச்சு இருந்தீங்க? அதுல இன்னும் எத்தனை தீராமல் இருக்கு?'' என்று சோகத்துடன் கேட்டாள்.

''அந்த லிஸ்ட் பெரிசாச்சே மைதிலி. நிதானமா யோசிச்சு தான் சொல்லணும்!'' என்று மைதிலியிடம் பதில் சொல்லி விட்டு, லலிதாவிடம் தொடர்ந்தார்.

''.... அதுக்காகவே, அவளை மணவறையில் அஷோக்கின் தங்கையாக நிறுத்தி வைத்தேன். எங்க சொந்தத்தில கூட கொஞ்சம் வருத்தம்தான். ஆனால் அவங்களை எல்லாம் வருஷத்திற்கு ஒரு முறை எங்கேயோ பார்ப்போம். ஆனால் மைதிலியையும் அஞ்சலியையும் நான் அடிக்கடி சந்திக்கணுமே...!''

''அப்போ உங்களுக்கு அஞ்சலியிடமும் மைதிலிடமும் ரொம்ப பயம் என்று சொல்லுங்க. ரெண்டு பேரும் ரொம்ப அடாவடியோ?'' என்று அப்பாவியாக விசாரித்தார் லலிதா.

''மைதிலி பற்றி, எனக்குத் தெரிந்ததை விட உங்களுக்குத்தான் அதிகம் தெரிந்து இருக்குமே! அஞ்சலியை எனக்குப் பிறந்ததிலிருந்து தெரியும். ரொம்ப நல்ல பொண்ணு. அவர்களுக்கிடையில் சுமுகமான ஒரு உறவு இருக்க வேண்டும் என்று ஆசைப் பட்டேன். அந்த விஷயத்தில் மைதிலி என்னை ஏமாற்றவில்லை. அவளோட முக ராசி அப்படி. அவளைப் பிடிக்கவில்லை என்று யாராலும் சொல்ல முடியாது. ரொம்ப நல்ல பாசமான பொண்ணு. பொறுப்பான பொண்ணு. எந்தப் பொருளுக்கும் அனாவசியமா ஆசைப் பட மாட்டாள்...''

"அது நீங்க சொல்ல வேண்டாம் அத்தை. ஆன்ட்டிக்கு ஏற்கெனவே அனுபவம் இருக்கு!" என்று ஆரம்பித்து, கல்யாண தினத்தில் நடந்த கதையின் சுருக்கத்தை மைதிலி சொல்ல, வளர்மதியின் முகம் ஆச்சரியத்தில் மலர்ந்தது.

"இவ்வளவு விஷயம் நடந்து இருக்கு. இந்தப் பொண்ணு என்னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை பாரேன்! அவளை இன்னைக்கே ஆசிரமத்தில் இருந்து தூக்கிட்டு வந்து விடுகிறேன். இன்னும் நாலு நாளில் அவளுக்கு நாம் கல்யாண விஷயம் பேசி முடிவு பண்ணியே ஆகணும்...." என்று உறுதியாக வளர்மதி சொல்ல, அவரின் கை பற்றி அழுத்தமாக வலிக்கும் அளவுக்குக் குலுக்கினார் லலிதா.

"இது... இதைத் தான் நான் எதிர்பார்த்தேன். அஞ்சலியை ஆசிரமத்தில் இருந்து ஹைஜாக் பண்ணிட்டு வாங்க. நாம் அவளை ஒரு வழி பண்ணிடலாம்...." என்று உற்சாகமாக லலிதாவும் அதில் இணைந்து கொள்ள, மைதிலி இடையிட்டாள்.

"இது ரொம்ப ஓவர் ஆன்ட்டி. அங்கே பாலா அண்ணனிடம் காட்ட முடியாத வீரத்தை இங்கே வந்து அஞ்சலியிடம் காட்டுவது நியாயமே இல்லை. நான் அஞ்சலிக்கு தான் சப்போர்ட். அவள் ரொம்ப மனசு கஷ்டப்படுற மாதிரி தெரிஞ்சால், நானும் அவரும், உங்க ப்ளானைப் போட்டு உடைச்சுடுவோம்!" என்ற உடன்படிக்கையுடன் முடித்தாள் மைதிலி.

மறுநாள் அஷோக்கின் பிறந்த நாள் என்பதை முன்னிட்டு அன்றே ஆசிரமத்தில் இருந்து கிளம்ப வேகப் படுத்தினார் வளர்மதி.



"நாளைக்கு நாள் நல்லா இருக்கு ஆன்ட்டி, அப்படியே வந்து வீட்டில் பால் காய்ச்சலாம் என்று நினைத்தேன்!" என்று இழுத்தாள்.

"நாளைக்கு நாள் நல்லா இருந்தால், அந்த வீட்டுக்கு நாளைக்குப் போ அஞ்சலி. ஒரு நாள் இங்கே எங்க வீட்டில் தங்கினா பூச்சாண்டி பிடித்துக் கொள்ளுமா?"

"அது வந்து ஆன்ட்டி.... அங்கே கெஸ்ட் எல்லாம் வந்து இருக்காங்களே.... அப்ப நான் அங்கே வந்தால்... ஏதாவது சொல்வாங்களோ"....?

"ப்ச்! அஞ்சலி! என்ன இது சின்னப் பிள்ளை மாதிரி? மைதிலி வீட்டுக்கு வந்த பிறகு, அஷோக்கிற்கு வரும் முதல் பிறந்த நாள் இது. கிராண்டா கொண்டாட வேண்டாமா? அதோடு பேரக் குழந்தை வேறு வரப்போகிறது. நான் நெருங்கிய உறவு நட்பு என்று வேண்டியவர்களுக்குச் சொல்லி, சின்ன பார்ட்டி நாளைக்கு மாலையில் ஏற்பாடு பண்ணி இருக்கேன். அறுபது எழுபது பேர் வருவாங்க. அதுக்கு நீயும் கடைசி நிமிஷத்தில் வந்து விருந்தாளி மாதிரி கலந்து கொள்ளப் போகிறாயா? ஒரு நாள் முன்னதாக வீட்டு ஆளாக வந்து எனக்குக் கூட மாட கொஞ்சம் ஒத்தாசை செய்து தாக் கூடாதா?"

"ஹய்யோ! அப்படி இல்லை ஆன்ட்டி. நான் இன்னும் திங்ஸ் எல்லாம் பேக் பண்ணவில்லை. இன்று தான் பண்ணலாம் என்று இருந்தேன்..." என்று அடுத்த சாக்கினை அடுக்கினாள் அஞ்சலி.

"ஒண்ணும் பிரச்சனையே இல்லை. நீ நாளைக்குப் போட்டுக் கொள்ள வேண்டிய ட்ரெஸ் மட்டும் எடுத்துக்கோ. மிச்சத்தை எல்லாம் நாளை மறுநாள் வந்து நம்ம

ரெண்டு பேருமா சேர்ந்து பேக் பண்ணி எடுத்துட்டுப் போகலாம். இங்கே இருக்கும் எந்தப் பொருளையும் எந்தக் காக்கையும் வந்து தூக்கிப் போகாது சரியா?'' என்று விதம் விதமாகப் பேசிக் கரைத்து, அவளைக் கையோடு கூட்டிக் கொண்டு திரும்பினார் வளர்மதி.

வீட்டுக்குள் நுழையும் போதே, அஞ்சலிக்கு அங்கே லலிதா அம்மாவிடம் எப்படிப் பேசுவது? பாலா பற்றிய கேள்விகள் வந்தால் அதற்கு என்ன மாதிரி பதில் சொல்வது? என்ற குழப்பம் இருந்தது. ஆனால் அவளின் குழப்பம் வீண் என்பது போல, லலிதா, வளர்மதி, மைதிலி மூவருமே, பாலாவைப் பற்றித் தப்பித் தவறிக் கூட பேச்சை ஆரம்பிக்கவில்லை. அஷோக் அலுவலகத்திற்குச் சென்று இருந்ததால், பெண்கள் எல்லோரும் வேலையாட்களை வைத்துக் கொண்டு வீட்டைச் சுத்தப் படுத்தும் வேலையில் இறங்கினார்கள். வேலை நடக்கும் போதே தகவல்களும் பரிமாறப்பட்டன.

''அஞ்சலி எப்படி அத்தை அஷோக்கிற்குப் பழக்கம்?'' என்று ஆரம்பித்தாள் மைதிலி.

''எங்கேயும் புதிதாகப் பார்த்துப் பழக்கம் இல்லை மைதிலி. நான் பிறந்த பத்தாவது நிமிஷம் அவன் மடியில் தான் வைத்தார்களாம். எங்க அம்மா சொல்லி இருக்காங்க!'' என்று சிரித்தாள் அஞ்சலி.

''ஆமா! அஞ்சலி அப்பா, இவங்க ரெண்டு பேருக்கும் அலுவலகப் பழக்கம் தான். அஞ்சலி பிறக்கும் போது அஷோக்கிற்கு ஆறு வயசு இருக்கும். ரெண்டு குடும்பமுமே ரொம்ப க்ளோஸ். அதனால்தான், இரண்டு பேரும் சேர்ந்து திட்டமிட்டு, இந்த இடத்தை வாங்கி,



ஒரே மாதிரி ப்ளான் போட்டு, இந்த வீடு கட்டினாங்க. அன்றில் இருந்து போன வருஷம் அவங்க அப்பா தவறும் வரை, தினமும் பார்த்துப் பேசிக் கொள்வோம்''....

''நடுவில் ஒரு வருஷம் வெளியே போனதா அவர் சொன்னாரே அத்தை?''....

''ஆமா, அஞ்சலியோட அப்பாவிற்கு ப்ரோமோஷன் வந்த போது வேறு வழி இல்லாமல் போனாங்க. அந்த மாற்றம் வந்த போது படிக்கிற பொண்ணைப் பாதிப் படிப்பில் ஏன் கூட்டிட்டுப் போறீங்க? ஆன்ட்டிக்கு உடம்பு சரி இல்லை என்றால் அவங்களைக் கூட்டிட்டு போங்க. அஞ்சலி ஹெல்த் நல்லாதானே இருக்கு. நாங்க பார்த்துக்கறோம் என்று அஷோக், அஞ்சலி அப்பாவோட சண்டை. என் பெண்ணை என்னோட கூட்டிட்டுப் போக உன் பையனிடம் பெர்மிஷன் வாங்க வேண்டி இருக்கே என்று அதைச் சொல்லிச் சிரிப்பாங்க அந்த அண்ணன்!'' என்று வளர்மதி சொன்ன போது, அஷோக்கின் அன்பினால் வந்த பெருமிதம், அஞ்சலியின் முகத்தைப் பூரிக்கச் செய்தது.

''ஒரே ஒரு வருஷம் தான். அதுவும் அஞ்சலி அம்மாவிற்கு உடல் நிலை சரி இல்லை என்பதால் அவங்களைத் தனியா விட்டுட்டுப் போக இஷ்டம் இல்லை என்பதால் சண்டிகர் போனாங்க...'' அந்த சண்டிகர் என்ற வார்த்தையில் லலிதாவிற்கு விளக்கெரிந்தது. நம்ம பையன் அங்கே டெல்லியில் இருந்த நேரமும் இதுவும் ஒன்றாக இருக்குமோ? ''சண்டிகரா? எப்போ?'' என்று அவசரமாகக் கேட்டார்.

''அது மூணு வருஷத்துக்கு மேலே இருக்குமே! ஜூன் மாசம் என்று நினைக்கிறேன். இதே மாதிரி ஆகஸ்ட்

மாசத்தில் அஷோக்கின் பெர்த்டேயும், பிரெண்ட்ஷிப் டேயும் ஒண்ணா வந்ததால், அன்று அஞ்சலியைக் கட்டாயம் பார்க்கணும் என்று அஷோக் கிளம்பி விட்டான். பார்த்து மூணு மாசம் ஆச்சே. அவங்களையும் பார்த்து விட்டு, அப்படியே கொஞ்சம் சுற்றிப் பார்த்து விட்டு வரலாம் என்று போனோம். அன்று இவனைப் பார்த்த சந்தோஷத்தில் அவளுக்குத் தலை கால் புரியவில்லை. அஞ்சலி அஷோக்கிற்கு வேஷ்டி எடுத்துக் கொடுத்து, கட்டச் சொல்லி ஒரே கலாட்டாவாகிப் போச்சு. அவங்க இரண்டு தடவை இங்கே வந்தாங்க. நாங்க இரண்டு முறை அங்கே போய் விட்டோம்!'' என்று சந்தோஷமாக அவர்களின் மலரும் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார் வளர்மதி.

மூன்று வருஷம் என்றால் கணக்குச் சரியாகத்தான் இருக்கு. அவனும் ஜூன் முதல் மார்ச் வரைதான் டெல்லியில் இருந்தான். ''அந்த ஒரு வருஷம் நீ என்ன பண்ணினாய் அஞ்சலி?'' என்று விசாரித்தார் லலிதா.

''நான் டெல்லி யுனிவர்சிட்டியில் ஒரு வருஷம் டிப்ளமோ கோர்ஸ் இன் ஜர்னலிசம் பண்ணினேன் ஆன்ட்டி. அப்புறம் இங்கே வந்துதான் பட்டப் படிப்பை முடித்தேன்!'' என்று சர்வ சாதாரணமாகச் சொல்ல, லலிதாவிற்கு அவர்கள் டெல்லியில் தான் சந்தித்து இருக்க வேண்டும் என்பது உறுதியாகிவிட்டது.

''பாலா கூட டெல்லியில் ஒரு வருஷம் இருந்தான். அவன் டிப்ளமோ இன் டெக்ஸ்டைல் டிசைனிங். டெல்லி யுனிவர்சிடி இல்லை. வேற டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்''.... என்று சொல்லி அஞ்சலியின் முகத்தை ஆராய்ந்தார்.



''அப்படியா''.... என்ற ஒற்றை வார்த்தையைச் சொல்வதற்குள் அவளுக்கு வியர்த்து விறுவிறுத்து விட்டது. ஏறத்தாழ இரண்டு மணி நேரம் அவனைப் பற்றிய பேச்சு வரவில்லையே என்று சந்தோஷப்பட்டாள். இதோ வந்து விட்டதே! அங்கே தன்னை அவன் பார்த்து இருக்க வேண்டும். அதனால் தான் அன்று அஷோக்கின் கல்யாணத்தில் வலிய வந்து தன்னிடம் பேசினானா? ஆனால் டெல்லி யுனிர்வசிட்டி என்றாலும் அவள் டெல்லி யில் படிக்கவில்லை.

மூன்று முறை தொலைத் தொடர்பு வகுப்புகளுக்கும், ஒரு முறை இரண்டு குடும்பமும் சேர்ந்து சுற்றிப் பார்க்க என்றும் டெல்லிக்குப் போய் வந்தாள். சண்டிகரில் இருந்த போது, இவர்கள் அங்கே வந்த இரண்டு முறையிலும் சேர்த்து பதினைந்து தினங்கள், வட இந்தியாவில் இருக்கும் பாதி சுற்றுலா தலங்களைப் பார்த்தார்கள். இவன் தன்னை எங்கே எப்போது பார்த்தானோ?

ஆனால் அவனிடம் நேரடியாக நின்று பேசிய நினைவு அவளுக்கு இப்போதும் வரவில்லை. அவனுக்கு எதற்கு முதல் முறை தன்னைப் பார்த்த போது அவ்வளவு கோபம் வந்தது என்று இன்று வரை புரியவில்லை. யாரிடம் கேட்பது? லலிதாவிடம் அவர்கள் பையனைப் பற்றி விசாரித்தால் அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று மனதிற்குள் குழம்பிக் கொண்டு இருந்தாள் அஞ்சலி.

அவளின் திகைப்பையும் திணறலையும் பார்த்த லலிதாவிற்கு முன்பு இருந்த சந்தேகம், இப்போது இருநூறு சதவிகிதம் உறுதியாகி விட்டது. அதனால் அந்த சீடியை அவளை எப்படியும் பார்க்க வைத்து விட வேண்டும் என்று முடிவெடுத்து மைதிலியிடம்

கண்ணைக் காட்டியபடி, 'மைதிலி, நீ பாலாவிடம் அவனின் டெல்லி காம்பஸ் பற்றி உங்க மாமா விபரம் கேட்டாங்க என்று சொல்லி இருந்தாயாம், அது ஒரு சீடீல பாலா கொடுத்தான்!'' என்று கைப்பையில் இருந்த அந்த சீடீயை அஞ்சலியின் கண் முன்னால் மைதிலியிடம் நீட்டினார் லலிதா.

''அவன் இன்று டெல்லிக்குப் போய் இருக்கான். இன்னும் ரெண்டு நாள் அங்கேதான் இருப்பான். நாளை இரவு விமானத்தில் அங்கிருந்து கிளம்புவான்!'' என்று எல்லா விபரங்களையும் யாரும் கேட்காமல் இருக்கும் போதே வாரி வழங்கினார் லலிதா.

''ஹய்யோ! அஞ்சலியைக் கூட்டி வருவதற்கு முன்பு மூணு பேரும் பேசி வைத்து இருந்ததென்ன? அதை அப்படியே கிடப்பில் தூக்கிப் போட்டு விட்டு, இப்படித் தேவை இல்லாமல் பாலா அண்ணன் பற்றி இவ்வளவு விஷயம் அடுத்தடுத்துப் போட்டு உடைக்கிறார்களே! ஏன்? என்று காரணம் புரியாமல் வளர்மதியும் மைதிலியும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர்.

## 15

லலிதா ஆன்ட்டி, மைதிலியிடம் கொடுத்த சீடீயை அவள் கணினி அருகே வைத்து விட்டு நகர்ந்து விட்டாள். வளர்மதி, லலிதா, மைதிலி மூன்று பேரும் வெவ்வேறு வேலையாக வேறு இடத்தில் இருந்தாலும், அனைவரின் கவனமும் கணினி மேஜையில் இருந்த சீடியிலேயே இருந்தது.



மதிய உணவிற்கு முன்பு பன்னிரண்டு மணி அளவிலேயே சீடீ அங்கே வைக்கப்பட்டு விட்டாலும், தேநீர் இடைவேளை வரை மூவரும் கண்காணித்தும் அது அஞ்சலியால் எடுக்கப் படவில்லை. அவள் மனதிற்குள் என்ன நினைக்கிறாள் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. தேநீர் அருந்தும் வேளையில் அவசரமாய்க் குட்டி மாநாடு நடத்தி, மைதிலி சொன்ன யோசனையைச் செயல்படுத்த ஒப்புக்கொண்டனர்.

அதன்படி, அந்த சீடீயை கணினியில், ஸ்லைட் ஷோவாகப் போட வைத்து, ரிபீட் மோடிலும் போட்டு விட்ட மைதிலி, சில நிமிடங்கள் அதைக் கவனித்த பின்பு அஷோக் அலுவலகத்தில் இருந்து வர, அந்த இடத்தில் இருந்து நகர்ந்து விட்டாள். ஆனாலும், அவள் கணினியை நிறுத்தவில்லை. கணினி தன் வேலையை இடைவிடாமல், சீடீயில் இருந்த பாலாவின் புகைப்படங்களைத் திரும்பத் திரும்பக் காட்ட ஆரம்பித்தது.

ஹாலில் இருந்த ஷோ கேசைச் சுத்தப்படுத்திக் கொண்டு இருந்த அஞ்சலியின் கண்கள் அவ்வப்போது கணினியில் பதிந்து மீண்டன.

அலுவலகத்தில் இருந்து வந்த அஷோக் முகம் கழுவி உடை மாறி வந்து ஹால் சோபாவில் அமர்ந்தபடி, ''என்ன மேடம், என்னிடம் நாளைக்குதான் வருவேன் என்று அவ்வளவு பந்தா பண்ணிகிட்டீங்க. இப்ப அம்மா சொன்னதும் உடனே வந்தாச்சா? நம்ம பிரெண்ட்ஷிப்புக்கு அவ்வளவுதான் மரியாதை. பெரிய மனுஷி ஆகிட்டீங்க!'' என்று சலித்துக் கொண்டான்.

''ஹேய் அல்பம். அப்படின்னா, உனக்கு நான் இங்கே வருவதில் உண்மையான சந்தோஷம் இல்லை. நீ

சொல்லி நான் வரணும். அதாவது உன் பேச்சை மட்டும் நான் கேட்கணும் என்பதுதான் முக்கியம் போல...'' என்று அவளும் முறுக்கிக் கொண்டாள்.

''ஆமா! நான் ஒரு விஷயம் சொல்லி அதை நீ உடனே கேட்டுட்டாலும்...'' என்றவன் பார்வை தற்செயலாய்க் கணினியில் பதிந்தது.

''ஹேய்! அமிதாப் கெட் அப்ல, யார் இந்த ஓல்ட் மேன்? அஞ்சலி எனக்கு டெல்லில வாங்கிக் கொடுத்த ரெடிமேட் பஞ்சகச்சம் வேஷ்டி மாதிரி இருக்கு மைதிலி. அன்றைக்கு செம காமடி தெரியுமா?'' என்று கண்களை விரித்து ஆச்சரியமாகக் கேட்டான்.

அஷோக்கிற்குச் சிற்றுண்டி காபி எடுத்து வந்து அருகில் அமர்ந்த மைதிலி, ''அதென்ன அன்னிக்கு ஒரு நாள் காரில் போன போதும் சொன்னீங்க. இன்னிக்கு காலையில் அத்தையும் சொன்னாங்க. இப்ப மறுபடியும் நீங்க சொல்றீங்க. அன்னிக்கு என்னதான் ஆச்சு?'' என்று ஆர்வமாக விசாரித்தாள்.

''என்ன அஞ்சலி, சொல்லிடலாமா?'' என்று கண் சிமிட்டிக் கேலியாக விசாரித்தான் அஷோக்.

''ஆமா! நான் சொல்ல வேண்டாம் என்று சொன்னால், உடனே நீ கேட்கப் போகிறாயாக்கும்! எதுக்கு இந்த பில்ட் அப்? நீ என்னிக்கு நான் சொல்வதைக் கேட்கிறாயோ, அன்றுதான் நீ சொல்றதை நான் கேட்பேன்...'' என்று சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''ஹேய் அஞ்சலி! கோபமா? அப்படி என்றால் எனக்கு அந்த விஷயம் தெரியவே வேண்டாம்...''



''ஹையே! கோபம் இல்லை மைதிலி. இந்த டையலாக், நீ காபி எடுக்க உள்ளே போய் இருந்த போது, நாங்க பேசியதன் தொடர்ச்சி. அவ்வளவுதான். என்னை அசடு வழிய வைக்கும் நிகழ்ச்சி. அதனால் அதைப் பற்றி பேசுவது எனக்கு கொ...ஞ்...சு...ண்...டு பிடிக்காது. இட் இஸ் ஓகேமா. எ...வ்...வ...ள...வோ பா...ர்...த்...து...ட்...டோ...ம். இதைப் பார்க்க மாட்டோமா...'' என்று சிரித்தாள் அஞ்சலி.

''மூணு வருஷத்துக்கு முன்னாடி, ஆகஸ்ட் ஒன்றாம் தேதி ஒரு ஞாயிற்றுக் கிழமை...'' என்று புன்னகையோடு சொல்ல ஆரம்பித்தான் அஷோக்.

''அட அட!!! என்ன ஒரு ஞாபக சக்தி. இதுக்கே உங்களுக்கு ஒரு அவார்ட் கொடுக்கணும்...''

''அப்படி இல்லை மைதிலி, அது ஞாயிற்றுக் கிழமை என்பதால் ஸ்பெஷல் டே, உலகம் முழுவதும் ஆகஸ்ட் மாத முதல் ஞாயிற்றுக் கிழமையை நட்பு தினமா அனுசரிக்கிறாங்க. அது தற்செயலா அஷோக்கின் பிறந்த நாளோடு சேர்ந்து வந்துடுச்சு. அதுக்கு சார் அடிச்ச ரகளை இருக்கே! அப்பப்பா! சின்னக் குழந்தை மாதிரி, இதுக்கு தனியா அதுக்கு தனியா ரெண்டு பரிசு வேண்டும் என்று ஒரே அடம்''.... என்று சிரித்தாள் அஞ்சலி.

''ஹைய்யே! என்ன சிரிப்பு! முதலில் பரிசு வேண்டும் என்று அடம் பிடிச்சது யாரு...?''

''நான் உனக்குப் பிறந்த நாளுக்கு ஒரு ட்ரெஸ் எடுத்துக் கொடுத்துட்டுதான் கேட்டேன்...''

''கொடுத்தாய் சரி. சந்தோஷமா உடனே அதைப் போட்டுக்குற மாதிரியா கொடுத்தாய்? வாழ்க்கையில்

அதுவரை வேஷ்டியே கட்டி இருக்காத எனக்கு ஒரு தண்டனை மாதிரி கொடுத்தாய். அதுக்குப் பேர் பரிசா? வலது கையால, எனக்குப் பிறந்த நாள் பரிசு என்று ஒரு வேஷ்டி ஜிப்பாவைக் கொடுத்துட்டு. இடது கையால, இன்று பிரெண்ட்ஷிப் டே, எனக்கு நீ என்ன வாங்கி வந்தாய் என்று என்னிடம் கேட்டவள்தானே?''

''ஏன்டா இப்படி பொய் சொல்கிறாய்? அன்று நிஜமா என்ன நடந்தது என்று ஆன்ட்டியிடம் கேட்போமா? என்னை என்ன உன்னை மாதிரி அல்பம் என்று நினைத்தாயா? நான் ஒன்றும் உன்னை மாதிரி பரிசுக்கு அலையும் ஆள் இல்லை...''

''பரிசுக்கு அலையும் ஆள் இல்லை என்று மட்டும் சொல்லு. அதென்ன உன்னை மாதிரி என்று ஒரு அடைமொழி''....

''அமைதி... அமைதி... அஞ்சலி! அதென்ன நீ மற்ற எல்லோரிடமும் ரொம்ப அமைதியா, விட்டுக் கொடுத்து, நடந்து கொள்கிறாய்? அஷோக்கிடம் மட்டும் இந்தப் போடு போடுகிறாய். நான் எதிர்பார்க்கவே இல்லை.''

''ஏன் என்றால், நான் அவளோட ஃப்ரெண்ட் ஃப்ரெண்ட் என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? ஊருக்கு இளைச் சவன் இந்தப் பிள்ளையார் கோவில் தெரு முனை வீட்டு அஷோக்...''

''அடடா! எனக்கு என்னவோ காமடி சொல்லப் போறீங்க என்று நான் பார்த்துக் கொண்டு இருக்க, சம்பந்தம் இல்லாமல் இங்கே சண்டை சீன் நடக்குது? விஷயம் சொல்லப் போறீங்களா இல்லியா?'' என்று மைதிலி ஒரு அதட்டல் போட அஷோக் விஷயத்திற்கு வந்தான்.



''மூணு வருஷம் முன்னாடி''...

''ஆகஸ்ட் ஒண்ணாம் தேதி ஞாயிற்றுக் கிழமை, இதையே இன்னும் எத்தனை தடவை சொல்லப் போறீங்க?'' என்று எரிச்சலோடு இடைமிட்டாள் மைதிலி.

''மைதிலி, எனக்கு ஞாபக சக்திக்கு அவார்ட் கொடுக் கிறேன் என்று சொன்னாய் அல்லவா? பதிலுக்கு நானும் உனக்கு அவார்ட் கொடுக்கலாம் என்று பார்க்கிறேன். நீ தான் இந்த உலகத்திலேயே பொறுமையின் சிகரம்!'' என்று அஷோக் வம்பிழுக்க, அவள் முறைத்தாள்.

''சரி சரி...'' என்று தோப்புக்கரணம் போடுவதாகப் பாவனை செய்துவிட்டுத் தொடர்ந்தான்.

''அப்போது அங்கிள் குடும்பத்தோடு சண்டிகர் போய் மூணு மாசம் ஆச்சு. பார்த்துவிட்டு வரலாம் என்று நான் அம்மா அப்பாவோடு கிளம்பினேன். இந்த அம்மாதான் பெஸ்ட் பிரெண்ட் என்று நான் செலெக்ட் பண்ணி, இவங்களோடு நட்பு தினத்தைக் கொண்டாட வேண்டும் என்று நான் இரண்டு பவுன் ''பேர்ல் நெக்லசோடு' போனால், அம்மா எனக்கு சூப்பரா அல்வா கொடுத் தாங்க''....

''அல்வாவா? டேய், நீ சம்பாதிக்கிறாய். நகை வாங் கினாய். நான் படிச்சுட்டு தானே இருந்தேன். ஏன் அப்பா வாங்கித் தந்த ப்ரேஸ்லெட் கணக்கு இல்லையா?''

''அஞ்சலி! ப்ளீஸ் எனக்காக அஞ்சு நிமிஷம் சும்மா இரேன். விஷயத்தைச் சொல்லி முடிக்கட்டும். அப்புறம் அவர் சொன்னதுல என்ன சரி இல்லையோ, அதை நீ சரிப்படுத்து!'' என்று மைதிலி பொறுமை இழந்து கெஞ்சலாகக் கேட்க, 'சரி. உனக்காக அஞ்சு நிமிஷம்

நான் மௌன விரதம்!'' என்று சொல்லி விட்டு வேலையில் மூழ்கினாள்.

''இனிமேல் அஞ்சலிக்கு அஞ்சு நிமிஷம் வாய் பேசாது மட்டும் இல்லை. காதும் கேட்காது. ஏன் என்றால் அங்கேதான் காமடி நடந்தது. அங்கிள் அலுவலகப் பணியாக டெல்லி போக வேண்டியதிருந்தது. அங்கே மூன்று நாள் ஒரு கைத்தறிக் கண்காட்சி நடந்தது. அங்கிள் டெல்லியில் இருந்ததால், அவரைப் பார்க்காமல் திரும்ப எங்களுக்கு மனசில்லை. அதனால் நாங்க அஞ்சு பேரும் கிளம்பி டெல்லி போனோம். சரி. நம்ம அஞ்சலி ஆசையா கொடுத்தாளே, என்று அந்த வேஷ்டியைக் கட்டிக் கொண்டு கிளம்பினேன்....''

''காரில்தானே?....''

''அதுல என்னம்மா உனக்குச் சந்தேகம்? காரில் போன பயண நேரம் ஓரளவிற்கு ஸ்டெடியா போய்டுச்சு. லால் பகதூர் ஸ்டேடியத்தில் நடந்த அந்தக் கைத்தறிக் கண் காட்சியில் இறங்கி நடக்க நடக்க, எனக்கு எப்போ வேஷ்டி அவிழ்ந்து விடுமோ என்ற பயம் ஜாஸ்தியானது. மேடத்திடம் நான் ட்ரெஸ் மாற்றப் போகிறேன் என்று சொல்லப் பயம். மாற்றி வந்த பிறகு அவளால் என்ன செய்ய முடியும் என்ற தைரியம்....''

''அடடா! அஞ்சலியிடம் பேசவே பயப்படும் வீர தீர சிங்கமா நீங்க? இத்தனை நாள் இது எனக்குத் தெரியாமல் போச்சே!''

''கொஞ்சம் முன்னாடி நீயே பார்த்தியே? வார்த்தைக்கு வார்த்தை மல்லுக்கட்டுவா. அதனால் அங்கிளிடம் சொல்லி. ரெடி மேட் குர்த்தா ஒன்று வாங்கி நான் உடை மாற்றச் சென்று விட்டேன். சாயங்காலம் ஆறரை மணிக்கு....



டோட்டடைங்...'' என்று இடைவெளி விட்டான் அஷோக்.

''ஓஹோ! லால் பகதூர் ஸ்டேடியத்தில் அந்த இன்டர் காலேஜ் காம்படிஷன் நடந்தது. ஆனால் தேதி நினைவில்லை. அங்கேதான் இருவரும் சந்தித்து இருக்க வேண்டும். அதனால்தான் அஞ்சலி இந்தப் பேச்சைத் தொடர விரும்பவில்லை...'' மைதிலியின் புலன்கள் கூர்மை அடைந்தன.

''லால் பகதூர் ஸ்டேடியமா? அங்கே கல்சுரல்ஸ் நடக்குமா? பாலா அண்ணன் அங்கே ஒரு இன்டர் காலேஜ் கல்சுரல்ஸில் கலந்துகிட்டு பரிசு கூட வாங்கி இருக்காங்க''.... என்று ஆர்வமாக அஷோக்கிடம் கேட்டாலும், அவளின் ஓர விழிப் பார்வை அஞ்சலியை அளவிட்டது.

''பக்கத்திலேயே பில்டிங் ஒண்ணும் இருக்கு. கண் காட்சி நடந்தது திறந்த வெளி அரங்கத்தில்...''

''நீங்க சொல்ற இடம் இதுவா பாருங்க...'' என்று எழுந்து போய், கணினி திரையில் 'அந்த போட்டோவை' ப்ரீஸ் செய்தாள் மைதிலி.

அவளைப் பின் தொடர்ந்து கணினி திரையின் அருகே போய்ப் பார்த்த அஷோக், ''அட ஆமா! இதே இடம் தான். ஹேய்! அமிதாப் ஸ்டைல் ஓல்ட் மேன் கெட் அப்பில் இருப்பது நம்ம பாலாவா? ஏதாவது ஃபேன்சி ட்ரெஸ் காம்படிஷனா? எப்போது எடுத்தது?'' என்று சிரித்தான் அஷோக்.

''ஃபேன்சி ட்ரெஸ் காம்படிஷனில் கலந்துக்க பாலாண்ணா என்ன குழந்தையா? இது ட்ராமா. இன்டர் காலேஜ் கல்சுரல்ஸில் எடுத்தது...''

"ஹேய் நான் இதை எதிர்பார்க்கவில்லையே! பாலா அதில் எல்லாம் கலந்து கொள்ளும் ஆளா?"

"இதென்ன கேள்வி? பாலாண்ணா அரட்டை அடிக்க மாட்டாங்க. கல கல என்று நம்மளை மாதிரி பேசிச் சிரிக்க மாட்டாங்க. அவ்வளவு தான். மற்றப்படி கற்பனை வளம் ஜாஸ்தி. இந்த மாதிரி வேலை எல்லாம் செய்வாங்க. அவங்கதான் கதை, திரைக்கதை வசனம். அவங்க குணத்திற்கு ஏற்ற வேஷம் இது. என்ன கதை தெரியுமோ? நம்ம கரிகால் சோழன், நீதி வழங்க, இளம் வயதிலேயே முதியவர் வேடம் அணிந்து தீர்ப்புச் சொன்ன கதை...."

"வாவ்! நிறைய தமிழ் ஆட்களுக்கே இந்தக் கதை தெரியுமோ தெரியாதோ? அதை டெல்லியில் அரங்கேற்றி இருக்காரா பாலா? என்ன மொழியில்....?" என்று விசாரித்தான் அசோக்.

"ஹிந்திதான். அங்கே தமிழும் ஆங்கிலத்திலுமா செய்ய முடியும்? நம்முடைய சரித்திர கால ஹீரோக்களைத் தேசிய அளவில் பிரபலமாக்க, பாலா அண்ணானோட முயற்சி அது. மெசேஜ் எல்லோரையும் சென்றடைய, பாப்புலரான ஆளாக இருக்கட்டும் என்று அமிதாப் ஸ்டைல் மேக் அப். செய்வது எதுவா இருந்தாலும், பெர்பெக்டா செய்யணும் என்று நினைக்கும் ஆளாக்கும்...."

"தான் பெர்பெக்டா இருக்கணும் என்று நினைப்பதில் எந்த தப்பும் இல்லை மைதிலி. ஆனால்..."

"ஆனால் என்ன ஆனால்? நான் எப்படி வேண்டுமானாலும் இருப்பேன். நீ மட்டும் சரியாக இரு என்று



சொல்லும் ஆள் இல்லை பாலா அண்ணன். தன்னிடம் இருக்கும் பெர்பெக்ஷன் எல்லோரிடமும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் ஆள். தான் செய்யாமல் எதிர்பார்ப்பது இல்லையே! அதில் என்ன தப்பு?

"அம்மா தாயே அகிலாண்டேஸ்வரி, நான் உங்க பாலா அண்ணனை ஒண்ணுமே தப்பு சொல்லவில்லை. ஆளை விடும்மா. உங்க பாலா அண்ணன் நல்லவர்.... வல்லவர்.... நாலும் தெரிஞ்சவர்..." என்று கேலியாக அஷோக் அடுக்கிக் கொண்டு இருக்கும் போதே, இருவருக்கும் இடையில் இருந்த இடைவெளியில் நுழைந்த அஞ்சலியைத் திகைப்புடன் திரும்பிப் பார்த்தான்.

கணினிக்கும் ஷோ - கேஸ் அலமாரிக்கும் இடையே இருந்த சுமார் பதினைந்தடி தூர இடைவெளியும், கணினிக்கும் அவளுக்கும் இடையே அவர்கள் திரையை மறைத்தவாறு நின்று இருந்ததும், கணினி திரையில் இருந்த புகைப்படம் அவளுக்குத் தெரியாததும். அவர்கள் பேசிய வார்த்தைகளும், அஞ்சலியின் ஆவலைத் தூண்ட, கை வேலையை நிறுத்தி விட்டு, அங்கே வந்து திரையைப் பார்த்தவள் உறைந்தாள்.

"இது பாலாவா? ஐந்து வருஷத்திற்கு முந்தைய அமிதாப் கெட் - அப்பான, வெள்ளைத் தாடியில், பஞ்சகச்சம் வைத்த வேஷ்டியும், ஜிப்பாவும், பின்னணியில் இருந்த செங்கோட்டையும் பாலாவைச் சந்தித்து இருக்கக் கூடிய நேரத்தையும் இடத்தையும் துல்லியமாகச் சொல்லியது.

புது டில்லியில்,

லால் பகதூர் சாஸ்திரி திறந்த வெளி அரங்கில்,

நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்பரேஷன் சார்பில்

அப்பாவின் பொறுப்பில் நடந்த அந்தக் கைத்தறிக் கண்காட்சியில்....

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு....

பிரெண்ட்ஷிப் தினமும், அசோக்கின் பிறந்த நாளும் ஒன்றாக வந்த

அந்த ஆகஸ்ட் ஒன்றாம் தேதி....

மாலையும் இரவும் சங்கமிக்கும் சந்தியா காலத்தில்,

ஆறு மணி அளவில்....

பஞ்சாப் - ஹரியானா மாநிலங்கள் வைத்து இருந்த அந்த ஸ்டாலில் அவனைப் பார்த்தாள்.

பார்த்தது மட்டுமல்ல, அன்று தனியாகப் பிறந்த நாள் பரிசு தவிர, இன்னொரு பரிசு வேண்டும் என்று தன்னிடம் அடம் பிடித்துக் கேட்டது அஷோக் என்றாலும் அவனுக்காகத் தான் கண்காட்சியிலேயே, உடனடியாக வாங்கிய, அந்த பிரெண்ட்ஷிப் டே - க்கான பரிசை தட்டிச் சென்றதும் இந்தப் பாலாவேதான்.

## 16

கணினி திரையில் தெரிந்த பாலாவின் 'அந்த' புகைப் படத்தைப் பார்த்துத் திகைத்துப் போன அஞ்சலிக்குச் சுற்று புறம் மறந்து போனது. அவளின் பாவனையைக் கவனித்த அஷோக்கும் மைதிலியும் ஒருவரை ஒருவர் திகைப்புடன் பார்த்தனர். அவள் இங்கே இல்லை என்பது அவளின் பாவனையில் தெளிவாகவே தெரிந்தது.



சத்தம் இன்றி அஷோக்கும், மைதிலியும் அந்த இடத்தில் இருந்து நகர்ந்து விட, கால்கள் தொய்ந்து, கணினி முன்பு இருந்த சுழலும் நாற்காலியில் அமர்ந்த அஞ்சலியின் மனமும் கடந்த காலத்தை வேகமாகச் சுற்றி வந்தது. எண்ணி எண்ணி அவன் பேசிய வார்த்தைகளின் உண்மையான அர்த்தம் இப்போது சுலபமாகப் புரிந்தது.

'எப்படி இருக்கிறாய்? நாம் பார்த்து மூன்று ஆண்டுகள் இருக்குமா?' என்ற அவனின் உற்சாகமான கேள்வி, நாம் ஏற்கெனவே பார்த்துப் பேசி இருக்கிறோமா என்ற தன்னுடைய கேள்விக்கு, யோசனையுடன் கூடிய அவனது 'இல்லை' என்ற ஒற்றை வார்த்தைப் பதில், ஆமாமா கொடுத்ததை மறந்து விடுவாய் என்ற குத்தல், அமிதாப் பிடிக்கும் என்றதில் வந்த பெருமிதம், கரிகாலன் பாட்டு பிடிக்கும் என்று சொன்னதில் வந்த அளவில்லா சந்தோஷம், 'வாட் ஆச்சரியமா?' என்ற அவனின் அதிர்ச்சி, எல்லாமே அவன் கடந்த மூன்று ஆண்டுகளாக அவள் தன்னை மறக்கவே இல்லை என்பதைக் காட்டியது. அது மட்டுமல்ல, லலிதா ஆன்ட்டியும், மைதிலியும் அவ்வப் போது சொன்ன வார்த்தைகளின் அர்த்தமும் இப்போது முழுமையாகப் புரிந்தது. லலிதா தன் மகனை எப்படி வேண்டுமானாலும் கூப்பிட்டுக்கோ என்று சொன்ன பெயர் வரிசையில், அழகன் என்ற பெயர் வந்த போது அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

ஆனால் அதற்கான காரணம் இப்போதுதானே தெரிகிறது. அவன் தன்னுடைய தொழில் நிறுவனத்திற்கு 'அழகன்' என்று பெயர் வைத்ததன் காரணம் தானா? அவனைத் தான் அவ்வளவு தூரம் பாதித்து இருக்கிறோமா?

''நாட்டில் நடக்கும் அனைத்துக் கைத்தறிக் கண்காட்சி களுக்கும் தவறாமல் ஆஜர் ஆகி விடுவார். அதை முடித்து வந்தால், அடுத்த இரண்டு வாரங்களுக்கு வேலை வேலை என்று அதிலேயே மூழ்கி விடுவார். சாப்பிடக் கூட வரமாட்டார்....'' என்ற மைதிலியின் வார்த்தைகளில் பொதிந்து இருந்த உண்மையான அர்த்தம் புரிந்தது.

அந்தக் கண்காட்சிகள் விசிட், தன்னைத் தேடித்தான் என்பதையும், அடுத்த இரண்டு வாரங்கள் வேலையில் மூழ்குவது தன்னுடைய ஏமாற்றத்தை மறைக்க என்ப தையும் மைதிலி சொல்லவில்லை. ஆனால் தனக்கு அவனை நினைவில்லை என்பது தெரிந்த போது அவ னுக்கு வந்த அடக்க முடியாத கோபம் அதைச் சொன்னது.

தன்னுடைய மனதை அவன் அம்மாவிடம் முழுசாக இல்லாவிட்டாலும் லேசாக இவளை எனக்குப் பிடித்து இருக்கு என்ற ரீதியில் சொல்லி இருக்க வேண்டும். தங்களுக்குள் என்ன பிரச்னை என்பது புரியாததாலும், தான் பாலாவைத் தெரிந்தது போலவே காட்டிக் கொள்ளாத தாலும், லலிதா அம்மா குழம்பித் தனக்குப் போன் அனுப்பி இருக்க வேண்டும். அதிலும் அவர்களின் சிம் கார்டைப் போட்டு அனுப்பியதுதான் அங்கே ஹைலைட்.

இப்போதும், இன்று கூட அவன் டெல்லிக்குப் போய் இருக்கிறான். இன்றும் நாளையும் அங்கே இருப்பான். நாளை இரவு விமானத்தில் கிளம்பி வருவான் என்று லலிதா ஆன்ட்டி சொன்னது நினைவிற்கு வந்தது. இன்று அவன் போனது கூடத் தொழில் முறைப் பயணம் இல்லை. தன்னுடைய நினைவாக, தான் அங்கே



நிச்சயம் வர வாய்ப்பு இல்லை என்பது தெரிந்தும் அங்கே அவன் போய் இருக்கிறான் என்றால் அவனின் தீவிர மான மனது புரிந்தது.

அவன் பெயர் கூடத் தெரியாத தன்னைத் தேடி ஊர் ஊராய் அலைந்தான் என்பது ஒரு புறம் இருக்க, அவனை ஏற்கெனவே பார்த்தது நினைவில் சுத்தமாக இல்லாத வேளையிலும், முதல் முறையாகப் பார்த்துச் சில வார்த் தைகள் சண்டை போடுவது மாதிரி பேசிய ஒருவ னிடம், தான் தன்னுடைய தந்தை இறந்த சோகத்தைப் பகிர்ந்து கொள்ள முன் வந்தது. அதுவும் கண்ணில் பொங்கி வடியும் கண்ணீரோடு பேச்சு வார்த்தையை முடித்தது, அவனும் தன் மனதிற்கு நெருங்கியவனாக இருப்பதைத் தானே காட்டுகிறது? இன்னும் என்ன யோசனை? கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள் அஞ்சலி.

ஜூலை முப்பத்து ஒன்று இரவு எட்டு மணி அளவில் ஹோட்டல் ரூமிற்குள் நுழைந்த பாலாவின் மனம் சோர்வாக இருந்தது. இந்த இடத்திற்கு அவன் வருவது மூன்றாவது முறை. முதல் இரண்டு முறை ஒருவேளை அவளை இங்கே சந்திக்க நேரலாமோ என்ற சந்தேகத்தில் வந்தான். அதனால் டெல்லிக்கு வரும்போது இருக்கும் ஆர்வமும், தேடலும், உற்சாகமும் அவளைப் பார்க்க முடியவில்லை என்ற ஏக்கத்துடன், ஊருக்குத் திரும்பிப் போகும்போது காணாமல் போய்விடும்.

அந்தக் கவலையை மறக்க, அடுத்து வரும் இரண்டு வாரங்கள் வேலையில் மூழ்கிப் போய் விடுவான். டெல்லி பயணம் மட்டுமில்லாமல், எந்த ஊரில் எல் லாம் கைத்தறிக் கண்காட்சி நடக்கிறதோ அங்கெல்லாம்

தவறாமல் சென்று அவளைத் தேடி விட்டு ஏமாற்றத்துடன் திரும்பும்போது இது நடக்கும்.

ஆனால் இந்த முறை அவள் சென்னையில் அஷோக்கின் வீட்டில் இருக்கிறாள் என்பதும் தெரியும். அவள் இங்கே வர மாட்டாள் என்பதும் தெரியும். அவளை இங்கே நிச்சயம் பார்க்க முடியாது என்று தெரிந்த பிறகு எதற்கு இங்கே வந்தான்? அவனுக்கே புரியவில்லை.

அவளை நேரில் சந்திக்கவில்லையே தவிர, அவளைப் பற்றிய தகவல்கள், அம்மா, மைதிலி, சாவித்திரி என்று யார் மூலமாவது வந்து காதில் விழுந்து கொண்டே இருந்தன. இன்று அவள் ஆசிரமத்தை விட்டு வெளியேறுகிறாள் என்பது வரை அவன் அறிந்தே வைத்து இருந்தான். நாளைக்கு அஷோக்கின் பிறந்த நாள். நிச்சயம் அவள் அவனை விட்டு விட்டு வர வழியே இல்லை. தனக்கும் அழைப்பு இருக்கு. அங்கே போனால் அவளைக் கண்ணாலாவது பார்க்கலாம். அதை விட்டு விட்டு இங்கே வந்து இருக்கிறான்.

மூன்று ஆண்டுகளாக அவள் எங்கே இருக்கிறாள் என்பது தெரியாமல் பார்க்க முடியவில்லை. ஆனால் இப்போது எங்கே இருக்கிறாள் என்று தெரிந்து பார்க்கத் தன்மானம் இடம் கொடுக்கவில்லை. எல்லோரையும் போல, மறப்போம் மன்னிப்போம் என்று எனக்கு ஏன் தோன்றவில்லை? இன்றைய நிலையில் அவளைக் குறை நிறைகளோடு ஏற்றுக் கொள்வோம் என்று நினைக்க முடியவில்லையே என்று பெருமூச்சு வெளியேறியது.

விழிப்புமாய் கனவுமாய்ப் படுக்கையில் புரண்டு கொண்டு இருந்த பாலாவின் காதுகளில் மொபைலில்



மெசேஜ் வந்த ஒலி கேட்க, பொழுது விடியும் முன்பே யார் மெசேஜ் அனுப்புவது என்று ஆச்சரியமாக மணி பார்த்தான். மணி ஐந்து. இந்த நேரத்தில் யார் தனக்கு மெசேஜ் அனுப்புவது? ஆவலாக எடுத்துப் பார்த்தான். தெரியாத எண்.

'மெனி மோர் ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆப் தி டே!' என்று வாழ்த்துச் சொல்லி இருக்க அவன் வியப்பில் ஆழ்ந்தான். இன்று தனக்கு பிறந்த நாள் இல்லையே! இன்றைய தினம் சிறப்பாக அமைய யார் தனக்கு வாழ்த்துச் சொல்லி இருப்பார்கள். தொழில் ஆரம்பித்த தினம், அம்மா, அப்பா பிறந்த நாள், கல்யாண நாள் என்று எதுவுமே இல்லையே! பின்னே...? இது யார் அனுப்பியது? இந்த வாழ்த்தின் அர்த்தம் என்ன?

இன்றைய தின ஸ்பெஷல் என்றால்... அஷோக்கின் பிறந்த தினம்... அவனுக்கு அனுப்ப வேண்டிய வாழ்த்து தவறிப் போய் மைதிலி... நோ... திஸ் இஸ் அஞ்சலி... செல் எல்லாம் புத்துணர்வு பரவ, வேகமாக அந்த எண்ணை அழைத்தான்.

''புது டில்லி லால் பகதூர் ஸ்டேடியம் உங்களை அன்புடன் வரவேற்கிறது!'' என்ற ஹிந்தி வாக்கியம், காதில் விழுந்தது. பதிவு பண்ணிய குரலாக இருக்க வேண்டும். மூளை விட்ட சந்தேகம் உறுதியானது. குளியல் அறைக்குள் தாவிச் சென்றவன், அடுத்து வந்த ஐந்தாவது நிமிடம் அறை வாசலைப் பூட்டிக் கொண்டு இருந்தான். பதினோராவது நிமிடம் லால் பகதூர் ஸ்டேடியம் வாசலில் நின்றவன் விழிகள் அந்தத் திறந்த வெளி மைதானத்தை முழுமையாய்ச் சலித்தன.

பொழுது விடிந்ததும் விடியாத அந்தக் காலைப் பொழுதில், ஜாகிங் வாக்கிங் என்று உடல் பயிற்சி செய்யும் ஆட்களின் நடமாட்டம் ஆரம்பித்து இருந்தது. மைதானத்தின் விளிம்பில் ஓடிய நடை பாதை ஓரத்தில் அங்கங்கே இருந்த பெஞ்சுகளை ஒவ்வொன்றாய் அலசியவன் அவளை அடையாளம் கண்டு புன்னகையோடு நகர்ந்தான்.

அந்த பெஞ்சின் பின்னால் சென்று, அவளின் கழுத்தில், அவளுக்கென்று பிரத்யேகமாய் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வாங்கிய இரண்டு இதயங்கள் ஒட்டினாற்போல அமைந்த பெண்டண்டில், மையமாகப் பதித்த இரண்டு வைரக் கற்களோடு மின்னிய அந்த நெக்லசை அணிவித்து, குனிந்து கன்னத்தில் முத்தமிட்டவனைத் திரும்பிப் பார்த்து வேகமாகத் தள்ளி விட்ட அந்தப் பெண்மணிக்கு ஐம்பது வயது இருக்கலாமா? தலையில் ஓடிய நரை அப்படிச் சொன்னது. முகம் வேறு கதை சொல்ல, வாய் இன்னொரு புதுக் கதை சொன்னது.

''யார் மேன் நீ? இங்கே பின்னால் வந்து நின்று என் கழுத்தில் என்ன பண்ணுகிறாய்? நீ என்ன திருடனா? தனியாக இருக்கும் வயதான பெண்ணிடம் வம்பு பண்ணுகிறாயா? நான் போலீசைக் கூப்பிடட்டுமா?'' என்று சரளமாக ஹிந்தியில் கேள்விகளை அடுக்கினாள் அஞ்சலி.

அவன் நிதானமாக அவள் அருகே வந்து, தோளோடு தோள் உரசும்படி நெருங்கி அமர்ந்து, அவளின் தோளில் கை போட்டு இழுத்து அணைத்து,

''ஓராயிரம் பார்வையிலே உன் பார்வையை நான் அறிவேன்!



உன் காலடி ஓசையிலே உன் காதலை நான் அறிவேன்''

என்று அவள் காதுகளில் பாட அவள் பிரமித்துப் போனாள். மூன்றாண்டுப் பிரிவுத் துயரம் இன்று முடிவிற்கு வந்ததில், அவனின் மனம் எல்லை இல்லாத மகிழ்ச்சியில் ஆழ்ந்து இருந்தது.

தன்னம்பிக்கை மிளிரும் அவனின் பாடலைக் கேட்டு அஞ்சலி பிரமிப்பின் உச்சிக்குச் சென்றாள் என்பது உண்மைதான். அவனுக்குத் தன் காதலின் மேல் எவ்வளவு நம்பிக்கை இருந்தால், தன்னிடம் ஒரு வார்த்தை கூட 'உன்னை விரும்புகிறேன்' என்ற ரீதியில் சொல்லாமல் இவ்வளவு உறுதியாக இங்கே வந்து காத்து இருப்பான் என்ற ஆச்சரியம் வந்தது.

ஒரு நாள் இல்லை, இரண்டு நாள் இல்லை, மூன்று ஆண்டுகள் தன்னுடைய நினைவுகளை நெஞ்சில் சுமந்து இருக்கிறான். அந்தக் காதலின் பிரதிபலிப்பைத் தன்னிடம் எதிர்பார்த்து இருக்கிறான். அவனுடைய முகம் தனக்கு நினைவில் இருக்க வேண்டும் என்று என்ன தைரியத்தில் எதிர்பார்த்தான் என்பதுதான் புரியவில்லை.

''ஹலோ மிஸ்டர், எனக்குத் தமிழ் தெரியாது. நீ யார்? உனக்கு என்ன வேண்டும் என்பதை ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எனக்குப் புரியும்படி சொல்வாயா? முதலில் என் மேல் நீ வைத்து இருக்கும் கையை எடு!'' என்று அதட்டலாகக் கேட்க முயற்சி செய்தாள் அஞ்சலி. ஆனால் அந்த முயற்சி பலிக்கவில்லை.

''வணக்கம் மிஸ் அஞ்சலி. உங்களுக்குத் தமிழ் தெரியாத போது, நான் பேசியது தமிழ் என்று எப்படிச் சரியா

கண்டு பிடிச்சீங்க? அதே மாதிரி நான் பேசப் போகும் மிச்சத்தையும் புரிஞ்சுக்கோங்க. என் பெயர் பாலமுருகன். நான் கோவையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக 'அழகன் ஆடை வடிவமைப்பகம்' ஒன்று நடத்தி வருகிறேன். என்னோட நிறுவனத்திற்கு நான் அந்தப் பெயர் தேர்ந்தெடுக்கக் காரணம் நீங்க. என்னை நீங்க ஏற்கெனவே சந்தித்து இருக்கிறீர்கள். அது உங்களுக்கு நினைவிருக்கிறதா என்று தெரியவில்லை...'' என்று ஆங்கிலம் கலக்காத தூய தமிழில் பேச்சை ஆரம்பித்தவன் விழிகள் குறும்பில் குளித்து இருந்தன. கைகள் அணைப்பை இறுக்கி இருந்தன.

அவனது அணைப்பு அவளை என்னவோ செய்ய, அவள் நெளிந்து விலக முயற்சி செய்ய. ''ஷ்! அஞ்சலி, இன்னும் கோபம் என்ன கோபம்?'' என்று அதட்டினான்.

''கோபம் எனக்கா? உங்களுக்கா?'' என்று வேகமாகத் திருப்பிக் கேட்டாள்.

''எனக்குக் கோபமே இல்லை. இந்த நிமிஷம் உலகத்திலேயே அதிக சந்தோஷத்தில் மிதக்கும் மனிதன் நாணாகத்தான் இருப்பேன்!'' என்று சந்தோஷமாகச் சொன்னான் பாலா.

''நீங்க மட்டும் சந்தோஷமாக இருந்தால் போதுமா? உங்களைச் சுற்றி இருப்பவர்கள், உறவு, நட்பு எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டாமா? அதுக்கு நீங்க ஒண்ணுமே செய்ய மாட்டீங்களா?'' என்று அதட்டலாகக் கேட்டாள். அதுவரை பேசி வந்த ஹிந்தியைக் கை விட்டதுடன், தலையில் இருந்த விக்கையும் கழட்டினாள் அஞ்சலி.



''ப்ச்! அஞ்சலி, கோபம் மூக்கு மேலே வருது என்று சொல்வாங்களே! அது எனக்கு நூறு சதவிகிதம் பொருந்தும். கோபம் வந்தால் ஏதாவது கன்னா பின்னாவென்று எதிரில் இருப்பவர் மனம் நோகப் பேசி விடுவேனோ என்பதாலேயே, கோபம் வந்தால் நான் அந்த இடத்தில் இருந்து நகர்ந்து விடுவேன். அது எதிரில் இருப்பவர் மனம் வாடக் கூடாது என்ற நல்ல எண்ணம் தானே தவிர, அவர்களை அலட்சியப்படுத்த நிச்சயம் இல்லை அஞ்சலி. நான் இங்கே இருக்கிறேன் என்று உனக்கு எப்படித் தெரியும்? அம்மா சொன்னாங்களா?'' என்று புன்னகையோடு கேட்டான்.

''வேறவழி? உங்க அம்மாவும் மைதிலியும் இல்லாவிட்டால் நான் எப்படி உங்களை முதலில் எங்கே பார்த்தோம் என்று கண்டு பிடித்து இருப்பது? இப்படித்தான் படுத்துவதா? ஏதாவது வாயைத் திறந்து பேசுறீங்களா? எல்லாம் அதுவா வந்து உங்க மடியில் வந்து விழணுமாக்கும்?'' இன்னும் கோபம் குறையாத ஆதங்கத்தோடு கேட்டாள்.

''அஞ்சலி, என்ன இது? என்னுடன் சண்டை போடணும் என்பதற்காகவே சென்னையில் இருந்து விமானத்தில் கிளம்பி வந்தாயா?''

''அஷோக் கல்யாண வீட்டில் உங்களுக்கு ஏன் பாலா அவ்வளவு கோபம் வந்தது? ஒரு வார்த்தை கூடப் பேசாமல் கிளம்பிட்டீங்க! சரி நீங்கதான் கிளம்பிட்டீங்க. என்னிடம் பேசிட்டு இருந்த உங்க அம்மாவையும் கையைப் பிடிச்சு இழுத்துட்டுப் போயிட்டீங்களே? ஆனாலும் அராஜகம். அட்டூழியம் தாங்க முடியலை. உங்க அம்மா இருப்பதால், நீங்க நினைச்சது எல்லாம்

எப்படியோ நிறைவேறிட்டு வருது. இல்லை என்றால் தெரிஞ்சு இருக்கும். அமிதாப் வேஷம்தானே போட்டீங்க. நிஜமாவே பிக் பாஸ் என்ற நினைப்பு போல!'' என்று பொரிந்து தள்ளினாள் அஞ்சலி.

''அமிதாப் வேஷமா? என்ன வேஷம் அஞ்சு... எப்போ?'' அப்பாவியாய்க் கண்களை விரித்தான் பாலா.

அவனின் தாடையில் முஷ்டியை இறுக்கி வேகமாகக் குத்தியவள், ''இந்த மாதிரி அப்பாவியா வேஷம் போடுறதுல உங்களை பீட் பண்ண இந்த உலகத்துல ஆளே இல்லை. இன்னும் எத்தனை நாள் இங்கே வந்து, இந்த காலி ஸ்டேடியத்தைக் காவல் காக்க உத்தேசம்! இன்றைக்கு நான் வரவில்லை என்றால் என்ன பண்ணி இருப்பீங்க?'' என்று எரிச்சலோடு கேட்டாள்.

''இந்த மூணு வருஷமும் என்ன நடந்ததோ, அதே நீ வரும் வரை தொடர்ந்து நடக்கும். என்ன, கைத்தறிக் கண்காட்சிகள் சுற்றும் வேலை மிச்சம்!'' என்று கைகளைக் கழுத்துக்குப் பின்னால் கொடுத்து, பெஞ்சில் நன்றாகச் சாய்ந்து அமர்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

''டோன்ட் பீ ஸ்டுபிட் பாலா. நீங்க கடைசியா என்னைப் பார்த்து இன்றோடு ஆறு வாரம் முடிஞ்சு மூணு நாள் ஆச்சு தெரியுமா? உங்க மனசில எவ்வளவு ஆசை வச்சு என்ன பிரயோஜனம்? அதை யாரிடமாவது வெளிப்படுத்த வேண்டாமா? மூன்றாவது நபரிடம் வேண்டாம். சம்பந்தப்பட்ட ஆளிடமாவது ஒரு கோடி கூடக் காண்பிக்காமல் இருந்தால் எப்படி பாலா?''

''அஞ்சலி... முடிஞ்சதை விடேன்...''

''எப்படி விடுவது? என் இப்படி வாயை மூடிட்டு கடைசி வரைக்கும் மௌனமாகவே இருந்துட்டீங்க?



என்னிடம் வாயைத் திறந்து பேசி இருக்கலாமில்லையா? அப்படி என்ன ஈகோ?''

''எப்படியோ. உனக்குத் தெரிய வேண்டிய விஷயம் தெரிஞ்சதா இல்லையா? இதை விடவே மாட்டாயா?''

''ஏன் விடணும்? நீங்க என் மேலே வச்சு இருக்கும் காதலை உங்களைத் தவிர வேறு யாரால எடுத்துச் சொல்ல முடியும்? எதற்கு நான் அடுத்தவங்க உதவியை எதிர்பார்க்கணும்? நீங்க நேரிடையா சொல்லணும் என்று நான் எதிர்பார்க்கக் கூடாதா?''

''எல்லாவற்றையும் என்னால் வார்த்தைகளால் சொல்ல முடியாது, அஞ்சலி...''

''வார்த்தைகள் வேண்டாம். சில ஜாடைகள், செயல்கள், பார்வைகள்...'' ஆதங்கத்தோடு வந்து விழுந்த வார்த்தைகள் முடியும் முன்பே, அவளின் இதழ்கள் அவனின் இதழ்களால் மூடப்பட்டு இருந்தன. இதழ் அணைப்பு எவ்வளவு நேரம் நீடித்ததோ? சுற்றுப் புறம் உணர்ந்து விலகிய பாலா அவளை மார்போடு சேர்த்து அணைத்து அவளின் உச்சியில் தன் தலையைச் சாய்த்துக் கொண்டான்.

# 17

''நீ என் வாழ்வில் இன்றியமையாதவள். என் மனதிற்கு மிகவும் நெருக்கமானவள். உன்னுடைய நல வாழ்விற்காக, நீ சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதற்காக என்ன வேண்டுமானாலும், செய்வேன்!'' என்று

அவளை அணைத்துக் காதில் சொன்ன பாலாவை என்ன செய்வது என்று அஞ்சலிக்குப் புரியவில்லை.

அணைப்பிற்கு முன்னால் இருந்த கோபமும் வேகமும் கொஞ்சம் மட்டுப்பட்டு இருந்தாலும், இன்னும் முழுமையாக அஞ்சலிக்குத் தீரவில்லை. இன்னும் இவன் தன்னையும் வருத்திக் கொண்டு, தன்னைச் சுற்றி இருப்பவர்களையும் பாடாய்ப் படுத்தி இருக்கிறானே என்ற வருத்தம் மிச்சம் இருந்தது.

தன்னை அஷோக்கின் திருமண வீட்டில் சந்திப்பதற்கு முன்னால் நடந்ததை விட்டு விட்டாலும், அதற்குப் பிறகாவது பேசி இருக்கலாமே என்ற ஆதங்கம் அவளுக்கு இருந்தது. அதனாலேயே, ''அதெல்லாம் செய்வீங்க. ஆனால் வாயை மட்டும் திறக்க மாட்டீங்க. அப்படித்தானே?'' என்று ஆற்றாமையோடு கேட்டாள் அஞ்சலி.

''உனக்கு எப்போது எப்படி என்னை முதன் முதலில் பார்த்த நினைவு வந்தது அஞ்சலி?''

''நான் உங்களைப் பேசச் சொன்னால் நீங்க என்னைக் கேள்வி கேளுங்க... அழுத்தம்.. மகா மகா அழுத்தம்...'' என்று ஆத்திரமாகச் சொன்னாள் அஞ்சலி.

''அப்படியே எங்க அம்மா என்னைப் பார்த்துப் பல்லைக் கடிக்கிற மாதிரியே இருக்கு. ஸோ ஸ்வீட்...'' என்று அவளின் கன்னத்தை வருட, ''ஷட் அப்...'' என்று எரிச்சலுடன் அவசரமாக அவனின் கையைத் தட்டி விட்டாள்.

''என்ன அஞ்சலி பேசு என்று சொல்ற? அடுத்த நிமிஷமே வாயை மூடு என்கிறாய்? நான் எதைச் செய்யட்டும்? நீயே ஒரு முடிவிற்கு வந்து சொல்லு.''



''யூ... யூ... ராஸ்கல்... உன்னைத் தேடி அர்த்த ராத்திரியில கிளம்பி வந்தேன் பாரு. என் புத்தியை...''

''லுக் அஞ்சலி. உனக்கு இப்போ என்ன தெரியணும்? எனக்கு என்ன கோபம்? ஏன் உன்னைப் பார்த்த உடன் பழைய விஷயங்களைப் பற்றி எதுவும் பேசவில்லை என்பதற்கான காரணம்தானே? இதோ கேட்டுக்கோ...'' என்று கடினமான குரலில் சொன்னவன் இருந்த இடத்தை விட்டு எழுந்து இரண்டு அடிகள் தள்ளிப் போய் நின்று தன்னுடைய தலையை அழுத்தமாகக் கோதிக் கொண்டான். அவனுக்குத் தன்னிலை விளக்கம் சொல்வது பிடிக்கவில்லை என்பது அவன் நின்ற பாவனையிலேயே தெரிந்தது.

ஆனால் அதைப் போனால் போகட்டும் என்று விடும் நிலையில் அஞ்சலி இல்லை. இப்படி முட்டாள் தனமாகத் தன்னை நினைத்து மூன்று ஆண்டுகள் தன்னுடைய இளமைக் காலத்தை வீணடித்து விட்டானே? அவன் நல்லவனாக இருக்கட்டும். தன் மேல் அளவில்லாத காதலை வைத்து இருக்கட்டும். அந்தக் காதல் தன்னிடம் வந்து சேராவிட்டால், அதன் நிலை என்ன என்பதை அவன் ஒரு வினாடியாவது யோசித்துப் பார்த்தானா?

இது வரை இல்லை என்றாலும் இப்போதாவது தன்னுடைய தவறை உணர்ந்து கொள்ளட்டும். இவனால் எத்தனை பேர் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள்? என்னை விடுங்க. அம்மா அப்பா சந்தோஷத்தைப் பற்றி கொஞ்சமாவது நினைத்தானா?

ஒரு நீண்ட பெருமூச்சை வெளியேற்றியவன், அவள் அமர்ந்து இருந்த இடத்திற்கு அருகிலேயே மீண்டும் வந்து அமர்ந்து, ''எனக்கு எதையுமே... யாரிடமுமே... ஐ

ரிபீட்.... யாரிடமுமே கேட்டு வாங்குவது பிடிக்காது. எனக்கு என்று விதிக்கப்பட்டு இருந்தால், அது என்னை நிச்சயம் வந்து சேரும். அதை யாராலும் தடுக்க முடியாது. ரஜினியின் வசனம் ஒன்று கேட்டு இருக்கிறாயா? ஆண்டவன் கொடுப்பதை யாராலும் தடுக்க முடியாது. ஆண்டவன் வேண்டாம் என்று நினைப்பதை யாராலும் கொடுக்க முடியாது. இந்த சித்தாந்தத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. எனக்குத்தான் நீ என்று இருந்தால் நிச்சயம் வந்து சேர்வாய் என்று தெரியும்...''

''ஆனால்...''

''டோன்ட் டிஸ்டர்ப் மீ! நான் முடிக்கும் வரை இடையில் பேசாதே...'' என்று அழுத்தமாகச் சொன்ன தொனியில் அவளுக்கு வாய் அடைத்துப் போனது.

''இந்த உலகத்தில் அவனின்றி அணுவும் அசையாது. என்னுடைய முயற்சியால் இதைச் செய்தேன். அதைச் சாதித்தேன் என்று எதுவும் கிடையாது. உன்னைப் பார்த்தேன். பிடித்து இருந்தது. உன்னை மறுபடியும் எங்கே எப்படிச் சந்திப்பேன் என்ற எந்த உறுதியும் இல்லாத போதும், உன்னுடைய பேர், ஊர், பெற்றோர், உறவு, நட்பு என்று எதுவுமே தெரியாத போதும், உன்னை நேசித்தேன். அந்த நேசம் உண்மையாக இருந்தால், நீ என்னைத் தேடி வருவாய் என்று முழுமையாக நம்பினேன். ஆனால் நீ இல்லாவிட்டால், செத்துவிடுவேன் என்று ஒரு வினாடி கூட நான் நினைத்ததே இல்லை...'' அவனின் பேச்சைக் கேட்டு அஞ்சலியின் இறுகிய முகம் லேசாய்ப் புன்னகையில் விரிந்தது.

அந்தப் புன்னகை அவனையும் தொற்றிக் கொள்ள, ''நீ என்னைப் புரிந்து கொள்வாய் என்ற நம்பிக்கை எனக்கு



இருக்கு. உன்னை நான் தேடி அலைந்த இந்த மூன்று ஆண்டுகளும், நீ என்னுடன் இருந்தால் நன்றாக இருக்கும் என்றுதான் நினைத்தேன். நான் என் பெற்றோரின் உணர்வுகளை, அவர்களின் சந்தோஷத்தைப் பெரிதும் மதிக்கிறவன். அது அவர்களுக்கும் தெரியும். அவர்களின் உணர்வுகளை நான் மதிக்காமல் இருந்து இருந்தால், அஷோக்கின் திருமணம் நடைபெற்ற அன்று இரவில், நான் உன்னிடம் பேசியே இருக்க முடியாதே...?''

''ஆமா! எவ்வளோ நல்லா பேசினீங்க?'' சிணுங்கலாக வந்தது அஞ்சலியின் குரல். தலை தானாக அவனை நெருங்கித் தோளில் சாய்ந்து கொண்டது.

''குறுக்கே பேசவேண்டாம் என்று சொல்லி இருந்த ஞாபகம்...'' சின்னப் புன்னகையுடன் என்றாலும் தன் கொள்கையை விட்டுத் தரமாட்டேன் என்ற அவனின் அசட்டுப் பிடிவாதம் தெளிவாகத் தெரிந்தது. இந்த வார்த்தைகளைச் சொன்ன போது அஞ்சலியின் முகத்தில் சின்னக் கோபம் போல ஏதோ ஒரு உணர்வு ஒன்று முளைத்தது. அவனைக் கேள்வி கேட்கத் துடித்த வாயைத் தன் கைகளால் பொத்திக் கொள்ள, பாலாவின் புன்னகை விரிந்தது. அதை ஒதுக்கிப் பேச்சைத் தொடர்ந்தான்.

''அம்மாவிடம் இந்த ஆகஸ்ட் ஒன்றாம் தேதிக்குப் பிறகு, நீங்க பார்க்கும் பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று சொல்லி இருந்தேன். போன வருடம் அந்த வார்த்தையைச் சொல்லும்போது உண்மையாக உணர்ந்துதான் சொன்னேன். ஆனால் போன வாரம் அம்மா நான் பெண் பார்க்கப் போகிறேன் என்று சொன்ன போது கஷ்டமாக இருந்தது. நீ என் கண்ணில் படாமலேயே இருந்து இருந்தாலோ, அல்லது திருமணமாகி

இருந்தாலோ, சந்தோஷமாக இல்லை என்றாலும் நிம்மதியாக வேறு திருமணத்திற்கு ஒத்துக் கொண்டு இருப்பேன். ஆனால் உன்னைப் பெற்றோர்கள் இல்லாமல் தனியாக ஆசிரமத்தில் பார்த்த பிறகு, மணமாகவில்லை என்று தெரிந்த பிறகு, வேறு திருமணத்திற்கு நான் எப்படி ஒத்துக் கொள்வேன் அஞ்சலி?'' என்று கேட்டவன் முகமும் குரலும் இளகி இருந்தது.

''பாலா! ப்ளீஸ் என்னோட ஆதங்கத்தைப் புரிஞ்சுக் கோங்க. நீங்க என்னை லவ் பண்றீங்க என்பதில் யாருக்குமே எந்த சந்தேகமும் இல்லை. அதை யாரும் தப்பும் சொல்லவில்லை. அதை ஏன்...''

''அ...ஞ்...ச...லி... எந்தப் பொருளையுமே அடுத்தவரிடம் கேட்டு வாங்கிக் கொள்ளக் கூடாது என்ற கொள்கைப் பிடிப்புடன் இருக்கும் நான், வாழ்க்கை முழுவதும் வரக் கூடிய ஒரு முக்கியமான உறவை எப்படி யாசகமாகக் கேட்டுப் பெறுவேன்? காதல் என்பது உணர்வில்லையா அஞ்சலி. அதை கேட்டுப் பெறுவதில் எனக்கு விருப்பம் இல்லை. அவ்வளவுதான். இதற்கு மேல் எனக்கு விளக்கம் சொல்லத் தெரியவில்லை.''

''அப்படி என்றால் எனக்கு ஞாபகமே வரவில்லை என்றால், நான் வேறு கல்யாணம் பண்ணிக் கொண்டாலும் உங்களுக்கு ஒன்றும் இல்லை. அப்படித்தானே?'' எரிச்சலோடு இடையிட்டாள்.

''வருத்தமாக இருந்து இருக்கும் அஞ்சலி. நான் பொய் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அப்போதும் நான் நிச்சயம் வந்து உன்னிடம் பழையதை நினைவுபடுத்தி இருக்க மாட்டேன்!'' என்று உறுதியான குரலில் சொன்னவனை முறைத்துப் பார்த்தாள் அஞ்சலி. இவனை எந்தக் கணக்கில் சேர்ப்பது என்று அவளுக்குப் புரியவில்லை.



''உன்னோட கோபம் எனக்கு நன்றாகப் புரியுது அஞ்சலி. உனக்குத்தான் என்னுடைய உணர்வுகள் புரியவில்லை. சில அடிப்படைக் கொள்கைகளில் காம்ப்ரமைஸ் கிடையாது. உனக்கு என்னைப் பார்த்த முதல் வினாடியில் ஒரு ஸ்பார்க் வந்து இருக்கணும் என்று எதிர்பார்த்தேன்...''

''வந்தது பாலா. உங்களுடைய தோற்றம், என்னில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. குறிப்பாக கூர்மையான லேசர் பார்வை என்று முதலில் பார்த்த போதும், அப்புறம் அஷோக்கின் திருமண வீட்டில் பார்த்த போதும் நினைத்தேன். இது இரண்டையும் எனக்கு உடனடியாக இணைக்கத் தெரியவில்லை. ஆனால் அதை நான் வேறு விதமாய்ப் புரிந்து கொண்டு நான் யாரிடமும் எதுவும் சொல்லவில்லை. அதற்குத் தோற்றத்தில் இருந்த வேறுபாடும் காரணம் என்றாலும்...''

''ஷ்! அஞ்சலி. அதை விடு. நீ என்னை இங்கே மறுபடியும் அன்று பார்க்கவில்லையா? நான் நாடகத்திற்காகப் போட்ட வேஷத்தைக் கலைத்து விட்டு, உடனே மீண்டும் இங்கே திரும்பி வந்தேனே, அப்போது பார்க்கவில்லையா? நீங்க அஷோக்கின் பிறந்த நாளை ஹரியானா ஸ்டாலில் வைத்துக் கொண்டாடியதை நான் பார்த்தேனே...?'' என்று ஆச்சரியமாகக் கேட்டான்.

''நீங்க எங்கே இருந்தீங்க? நான் உங்களைப் பார்க்கவே இல்லையே?'' என்று ஆச்சரியமாகக் கேட்டாள்.

''ஹேய் தேங்க்ஸ் மை டியர்!'' திடீர் என்று அவன் கைகளைப் பற்றிக் குலுக்கவும் காரணம் புரியாமல் விழித்தாள் அஞ்சலி.

''என்ன எதுக்கு நன்றி என்று புரியவில்லை? முதன் முதலில் நாம் சந்தித்த வினாடி, உன்னுள் ஏதாவது மாற்றம் நிகழ்த்தி இருக்க வேண்டும் என்பது என் எதிர் பார்ப்பு. அது பொய்யாகப் போன போது வந்தது கோபம். ஆனால் அந்தச் சந்திப்பு வேண்டிய விதையை உன்னுள் விதைத்து இருந்தது என்று தெரிய வரும் இந்த வினா டியில், ரொம்ப ரொம்ப சந்தோஷம்...''

''சுத்தம், ஒரு வார்த்தை கூடப் புரியவில்லை. ஒண்ணு பேசாமலே இருப்பீங்க. இல்லை, பேசினால் புரியாத மாதிரி பேசுவீங்களா?'' என்று குழப்பத்தோடு அஞ்சலி கேட்டதும் அவன் சிரித்தான்.

''நான் முகம் கழுவி உடனே மைதானத்திற்கு வந் தேன் அஞ்சலி. நாம் இருவரும் நேருக்கு நேர் சந்தித்த அந்த வினாடியில், என் முகம், அது மாறு வேஷத்தில் இருந்தாலும் உன் மனதிலும் பதிந்து போய் இருக்க வேண்டும். அதனால் தான், உனக்கு அடுத்த பதினைந்து நிமிடங்கள் நீங்கள் கிளம்பும் வரை, உன் பார்வை படும் தூரத்தில் சுற்றிச் சுற்றி வந்த போதும், நீ என்னைப் பார்த் தும், உனக்கு என்னுடைய ஒரிஜினல் முகம் கண்ணில் படவில்லை. கண்ணில் பட்டாலும் மனதில் பதிய வில்லை...''

''நிஜமாவா சொல்றீங்க....'' சந்தேகமாகக் கேட்டாள்.

''ஆமா, நான் ஏன் பொய் சொல்ல வேண்டும் அஞ் சலி? எனக்குப் பொய் சொல்லவும் பிடிக்காது. நீ அஷோக் கிற்குக் கொடுக்க வேண்டிய கிப்டை என்னிடம் கொடுத்து விட்டாய் என்று அவனுக்குக் கோபம் போல. அதற்கு அவன் ஏதாவது சொல்லி இருக்க வேண்டும்.



உங்களுக்கிடையே ரொம்ப சூடான விவாதம் நடந்தது. பெரியவங்க தலையிட்டுச் சமாதானம் பண்ணி வைத் தாங்க. நான் பார்த்துக் கொண்டேதான் இருந்தேன்...''

''அவனுக்கு நான் பரிசு வாங்கப் போனது தெரியாது. அதற்குக் கோபமில்லை. நான் அவனுக்கு வாங்கிக் கொடுத்த வேஷ்டியை மாற்றி விட்டான் என்று எனக்குக் கோபம். உனக்குப் பரிசு கொடுப்பதே வேஸ்ட். அன்பின் அருமை புரியாதவன். அதை விட உனக்கு வாங்கிய செயினை, சற்று முன்பு உன்னைக் காணாமல் ஒல்ட் மேனுக்குக் கொடுத்து இருக்கலாம் என்று சண்டை போட் டேன். அந்த மாதிரி வயசான ஆட்கள் தான் நீ பண்ணும் அழும்பிற்குச் சரியாக வருவார்கள். அவங்களையே லைப் லாங் பிரெண்டா வச்சுக்கோ, என்று அவன் பதிலுக்குக் கேலி பண்ணினான். அதில் எனக்குதான் அன்று கோபம். அதே மாதிரி உடை நீங்க போட்டு இருந்ததால்தான்... சாரி...'' என்று முகம் சிவந்தாள்.

''எதுக்கு அஞ்சலி சாரி சொல்கிறாய்? நான்தான் சொல் லணும்... அந்த ஒரு வினாடியில் என்னுடைய எதிர் காலத்தை மாற்றி எழுதிய கலியுக பிரம்மா அல்லவா நீ...'' என்று சொன்னவன் வார்த்தைகளில் கவிதை வழிந்தோடியது.

''நான் கலியுக பிரம்மாவா? வார்த்தைகளில் நயம் துள்ளி விளையாடுது. நீங்க கவிதை எழுதுவீங்களா?'' என்று கேலியாகக் கேட்டாள் அஞ்சலி.

''காதல் வந்தால் கவிதையும் சேர்ந்து வர வேண்டியது தானே?''

''என்னைப் பார்த்த உடனே உங்க மனசில காதல் வந்தது என்று சொன்னீங்க. அப்ப கவிதையும் உடனே

வந்துடுச்சா?'' ஆர்வத்தில் குழைந்தது அஞ்சலியின் குரல்.

''அதில் என்ன சந்தேகம்? மூன்று வருடத்திற்கு முந்தைய என்னுடைய நாட்குறிப்பை உனக்குக் காட்டட்டுமா? முதல் கவிதை என்ன தெரியுமா? அவளின் முகத்தைப் பல வினாடிகள் இமைக்காமல் பார்த்து ரசித்தவன், அவளின் முகத்தைத் தன் இரண்டு கைகளிலும் மென்மையாக ஏந்தி, அவளின் விழி பார்த்து, ஒவ்வொரு வார்த்தையாக வார்த்தைக்கு வலிக்குமோ என்பது போல மிக மென்மையாகச் சொன்னான்.

''ஆர்ப்பாட்டமில்லா இயற்கை அழகின் ஒளியோடு
போட்டி போட முடியாமல்
பட்டென்று உயிர் விட்டது
கண்களைக் கூச வைக்கும் செயற்கை ஒளி!
நிலவின் வெளிச்ச நிழலில்
இதயத் துடிப்பின் இன்னிசை ஒலியில்
தென்றலின் இதமான தழுவலில்
முகத்தை மட்டுமா அங்கே தொலைத்திருந்தேன்?
உள்ளத்தையும் சேர்த்து அல்லவா?
(நன்றி: லாவண்யா)

என்று தன் மனதில் பூட்டி வைத்த உணர்வுகளை உடனடிக் கவிதையாக வெளிப்படுத்த நெகிழ்ந்து போய் ''பாலா...'' என்று சொன்னவளின் குரல் கரை இல்லாத காதலில் குளித்து இருந்தது.



# 18

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, தன்னை முதன் முதலில் பார்த்த போது என்ன நினைத்தாய் என்று அவள் சும்மா கேலியாகக் கேட்டதற்கு, அடுத்த வினாடியே தயங்காமல், தன் எண்ணத்தைக் கவிதைப் பூக்களாக்கிச் சொன்ன வேகத்தில் பிரமித்துப் போய், அவனின் மார்பில் சாய்ந்து இருந்தவளின் உச்சியை வருடியபடி சில நிமிடங்கள் கண் மூடி இருந்தான் பாலா.

மெல்ல அவளின் முகத்தை நிமிர்த்தி விலக்கியவன், புன்னகையோடு, ''உன்னை இந்த நேரம் இங்கே பார்த்ததில் எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷம் என்றாலும், இது கனவோ என்ற சந்தேகமும் எனக்கு இருக்கிறது அஞ்சு!'' என்று மெல்லிய குரலில் சொன்னான்.

அவனின் மார்பில் அது வரை சாய்ந்து இருந்ததால், நெகிழ்ந்து இருந்த மனதை மேலும் இளக்கியது அவனின் அந்த 'அஞ்சு' என்ற அழைப்பு. ''பாலா, ஐ லைக் திஸ் நேம் அஞ்சு. எங்க அப்பா என்னை இப்படித்தான் கூப்பிடுவாங்க. ஐ மிஸ் ஹிம்!'' என்றவளின் குரல் தழுதழுத்தது.

அவளின் குரல் தழுதழுத்ததை உணர்ந்தவன் பிடி இறுகியது. ''ஐம் ஆம் ஸோ சாரி அஞ்சு. உனக்கு உங்க அப்பா எவ்வளவு நெருக்கம் என்பதை ஏற்கெனவே அன்றே பார்த்து இருந்தேன் என்றாலும், அதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், நீ அன்று ஆசிரமத்தில் அப்பாவின்

சட்டை என்று சொல்லிக் கொடுத்ததில் முதலில் எனக்குக் கோபம் வந்து விட்டது. ஐ ஆம் ரி...ய...ல்...லி சாரி அஞ்சு..."

"ஏன் பாலா அப்படி சட்டை கொடுத்த உடனே மேலே ஒண்ணுமே பேசாமல் கிளம்பிட்டீங்க? எனக்கு எவ்வளவு கஷ்டமாக இருந்தது தெரியுமா?"

"ஐ ஆம் ரி...ய...ல்...லி சாரி அஞ்சு. வேறென்ன சொல்றது என்று எனக்குத் தெரியலை. எப்போதும் உன்னைப் பொறுத்தவரை நான் இரண்டாம் தரமான ஆளா என்ற கோபம். உனக்கு நான் நெருங்கியவனாக மிக மிக முக்கியமானவனாக இருக்க வேண்டும் என்ற அடங்காத ஆசை. அதனால்தான் அப்படி இல்லையோ என்ற சந்தேகத்தில், வருத்தத்தில், கோபம் வந்து விட்டது..."

"ஹய்யோ பாலா! உங்க சந்தேகம் தப்பு. நீங்க ரொம்ப ஸ்பெஷல் என்பதால் தான் எனக்கு ரொம்ப மதிப்புள்ளதை நெஞ்சுக்கு நெருங்கியதாய், நினைக்கும் ஒரு முக்கியமான பொருளை உங்களுக்குக் கொடுக்க முடிவு பண்ணினேன். அது..."

"அது அப்புறம் புரிஞ்சது அஞ்சலி. உன் மேலே எந்த தப்பும் இல்லை. அன்று நாம் பேசிய வார்த்தைகளை மீண்டும் மீண்டும் இரவில் நினைத்துப் பார்க்கும்போது, நீ அதை எவ்வளவு உயர்வாக மதித்து இருக்க வேண்டும் என்பதும், அதை நீ எனக்குக் கொடுக்க முடிவெடுத்ததன் காரணமும் புரிந்தது. ஆனால் அன்று அதை எல்லாம் யோசிக்கும் அளவிற்கு எனக்குப் பொறுமை இல்லை. எனக்கு உன்னுடைய பரிசுகள் ரொம்பவும் உயர்ந்தவை. விலை மதிப்பில்லாதவை. க்ளோஸ் டு மை ஹார்ட். போதுமா?"



"பரிசுகள்... பன்மையில் சொல்றீங்க? மூணு வருஷம் ஆன பின்பும், இன்னுமா அந்தச் சாதாரண கிறிஸ்டல் மாலையை வச்சு இருக்கீங்க?" என்று ஆச்சரியமாகக் கேட்டாள் அஞ்சலி.

"அதை எப்படிச் சாதாரணம் என்று சொல்கிறாய் அஞ்சலி. அது எனக்கு ஸ்பெஷல். ரொம்ப ஸ்பெஷல். அது என்னோட பீரோவின் சேப்டி லாக்கரில் இருக்கு. தெரியுமா? அதை விடு. உன்னிடம் இன்னொரு முக்கியமான விஷயம் கேட்கணுமே! இன்னிக்கு அஷோக் பிறந்த நாள் இல்லையா? இங்கே வந்து விட்டாய்?" என்று சந்தோஷமாகக் கேட்டான்.

அஷோக்கை விடத் தன்னை முக்கியமாக நினைத்து இங்கே வந்து விட்டாளே என்ற பெருமையில் ஏற்கெனவே இருந்த சந்தோஷம் மேலும் கூடி அவனின் முகம் பிரகாசித்தது.

அதைப் பார்த்ததினாலேயே, அவனின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடிந்ததாலேயே அவளுக்கு எரிச்சல் பெருகியது. "ம்கூம்! ரொம்ப ஒண்ணும் பெருமைப்பட வேண்டாம். எனக்கு அவனும் முக்கியம்தான். அதனால் தான் இந்த நேரம் இங்கே வந்தது. அதுக்காகத்தான் உங்களுக்கு மெசேஜ் அனுப்பி, க்ளு கொடுத்து உடனடியாக உங்களை இங்கே வரவழைத்தது. இல்லை என்றால் நீங்க எங்கே தங்கி இருக்கீங்க என்று எப்படித் தேடுவது? நீங்க மாலையில் ஆறு மணிக்கு வருவீங்க என்று தெரியும். அதுவரைக்கும் நான் காத்திருக்க வேண்டுமே! அந்த நேரம் நான் அங்கே சென்னையில் அஷோக்கின் பார்ட்டியில் இருக்க வேண்டும்!" என்று கோபத்தை மறைக்காத குரலில் பொரிந்தாள் அஞ்சலி.

"ஓகே ஓகே. கூல் மை டியர். நாம் இரண்டு பேரும் உடனேயே சென்னை கிளம்பலாம். உன்னோடு போட்டி போட்டது. நீயாக வர வேண்டும் என்று சொன்னது எல்லாமே உன்னுடைய காதலை நீ உணர்ந்து, என்னிடம் சொல்லும் வரை மட்டும்தான். இனி, இந்த நிமிடம் முதல், உனக்கு முக்கியமானவை எல்லாம் எனக்கு முக்கியமே. அதிலும் அஷோக் ரொம்ப ரொம்ப ஸ்பெஷல். நம்முடைய வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒரு அங்கம். கவலைப்படாதே. உடனேயே கிளம்பலாம்!" என்று உறுதியான குரலில் பாலா சொன்னவுடன், அஞ்சலிக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.

"எனக்கு ஓகே. ஒண்ணும் பிரச்னை இல்லை. ஆனால் உங்களுக்கு இங்கே வேறு ஏதாவது வேலை இருக்கா? உடனே கோவை திரும்பிப் போகணுமா? அங்கே நாளைக்கு வேலை எதுவும் காத்து இருக்கிறதா?" என்று சந்தேகத்தோடு இழுத்தாள் அஞ்சலி.

"என்னோட ப்ரோக்ராம் இருக்கட்டும். எங்க அம்மா ஜேம்ஸ்பாண்ட் நாட் நாட் செவன் லலிதா மேடம் என்ன சொல்லி அனுப்பினாங்க?" என்று கண் சிமிட்டிக் கேட்டான்.

"அவங்க எப்படி உங்க ப்ரோக்ராம் பற்றி சொல்வாங்க. என்னிடம் எதுவும் சொல்லவில்லையே? நீங்க இன்று இரவு விமானத்தில் கோவை கிளம்பி விடுவீங்க என்று சொன்னாங்க. அவங்க இன்று இரவு ரயிலில் சென்னையில் இருந்து கோவைக்குக் கிளம்பப் போவதாகச் சொன்னாங்க."

"அஞ்சலி, இப்படி பச்சைப் பிள்ளையாய் இருக்கிறாயே? இன்னுமா எங்க அம்மா சொல்றதை அப்ப



டியே நம்புகிறாய்? அவங்க பயங்கரமான ஆள் ஆச்சே! நான் பந்தயமே கட்டுகிறேன். அவங்க இன்று இரவு சென்னையில் இருந்து கிளம்ப மாட்டாங்க!" என்று உறுதியாகச் சொன்னான்.

"இல்லையே. என்னிடம் அப்படித்தான் சொன்னாங்க. அவங்க அஷோக் பர்த்டே பார்ட்டிக்கு கூட இருக்க விரும்பவில்லை. நான் மைதிலியைப் பார்க்க வந்தேன். கிளம்புகிறேன் என்ற ரீதியில் தான் பேசினாங்க. நீங்க ஏன் இப்படி சொல்றீங்க?" என்று குழப்பத்தோடு கேட்டாள்.

"நீ டெல்லி வருகிறாய் என்பது அவங்களுக்குத் தெரியுமா தெரியாதா?"

"அஷோக்கிடம் நான் சொன்னேன். அவன்தானே டிக்கெட் போட்டான். ஒரே வீட்டில் இருக்காங்க. அவங்களுக்குத் தெரியாமல் எப்படி இருக்கும்?"

"அப்ப இன்று நமக்குத் திருமண நிச்சயம் நடைபெறும். கன்பார்ம்ட். கிளம்பலாமா?" என்று கேட்க அவள் சிரித்தாள்.

"அடிதெள்ள பாலா, வருஷக்கணக்கா, சத்தமே இல்லாமல் கம்முன்னு காத்து இருப்பீங்க. விஷயம் தெரிந்த உடனே, அன்றே நிச்சயதார்த்தமா?" என்று சிரித்தாள் அஞ்சலி.

"எங்க அம்மா ஏற்பாடு செய்ததால்தான் நிச்சயம். நான் ஏற்பாடு செய்து இருந்தால் நேரடியா கல்யாணம் தான்!" என்று அசால்ட்டாய் சொன்னவன், அவளின் கை பற்றி எழுப்பினான்.

"லக்கேஜ் ஒன்றும் இல்லையா அஞ்சு. வெறும் ஹேண்ட் பேக் மட்டும்தானா? எங்காவது தங்கி

இருக்கிறாயா? அறை எதுவும் காலி பண்ண வேண்டுமா?'' என்று அவசரமாக விசாரித்தான்.

''நேற்று இரவு கிளம்பும் போது மணி ஒன்பதரை. இங்கே வந்து சேரும் போது நள்ளிரவு. அங்கேயே ஏர்போர்ட்டிலேயே உட்கார்ந்து இருந்து கொஞ்ச நேரம் கண் மூடி உங்களை லட்சார்ச்சனை செய்தேன். காலையில் முகம் கழுவிட்டு, உடனே இங்கே வந்து விட்டேன். எங்கிருந்து ரூம் போடுவது? நீங்க எங்கே இருப்பீங்க என்று தெரிந்தால் அங்கேயே வந்து இருக்கலாம். அதுவும் தெரியாது. வேறென்ன பண்ணுவது?'' என்று சலித்துக் கொண்டவள், அவனின் முதுகில் செல்லமாய்த் தட்டினாள்.

அவளின் தோளில் கை போட்டு இன்னும் அருகில் இழுத்து கொண்டவன், ''அஞ்சலி, இன்று நான் ரொம்ப ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன். ஏதாவது கேளேன். உனக்காக ஏதாவது நான் பரிசு கொடுக்கணுமே?'' என்று ஆர்வமாக அவளைப் பார்த்தான்.

''அதான் பார்ப்பதற்கு முன்பே, சமாதானம் ஆவதற்கு முன்பே, கொடுத்து விட்டீங்களே, இன்னும் என்ன தனியா? அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். எனக்கு அதில் எல்லாம் இன்ட்ரெஸ்ட் இல்லை பாலா!'' என்று உடனடியாக மறுத்தாள் அஞ்சலி.

''சரி விடு. உனக்கு என்ன பரிசு கொடுப்பது என்று நானே முடிவு பண்ணிக் கொள்கிறேன்!'' என்று சொன்னவன் அதை அப்படியே விட்டு விட்டான். அடுத்த இரண்டு மணி நேரத்தில் டெல்லியில் இருந்து கிளம்பி, மதிய உணவிற்குச் சென்னை வந்து விட்டாலும், அஷோக்கின் பிறந்த நாளைக்குப் பரிசு வாங்க வேண்டும்



என்று சொல்லி அவளை டி-நகருக்கு அழைத்துச் சென்றான் பாலா.

அஷோக் உனக்கு ஸ்பெஷல் பிரெண்ட், மைதிலி எனக்கு ரொம்ப க்ளோஸ். அவங்களுக்குக் குழந்தை வேறு வரப் போகிறது. ஏதாவது ஸ்பெஷலா வாங்க வேண்டாமா என்று கேள்வியோடு அழைத்துச் சென்றவன், மைதிலியின் விரலுக்குச் சரியாக இருக்குமா என்று போட்டுப் பாரு. என்று தூண்டில் போட்டு. அவளின் விரலுக்கு அளவு பார்த்து உடனடியாக இரண்டு ஜோடி வைர மோதிரங்கள் வாங்கினான் பாலா.

நாலு மணி அளவில் அவர்கள் அஷோக்கின் வீட்டிற்குள் அடி எடுத்து வைத்த போது, அவர்களை ''வாராயோ தோழி வாராயோ, மணப்பந்தல் காண வாராயோ...'' என்று பாடி வரவேற்க அஷோக் - மைதிலி ஜோடியும், ''மணமகளே மருமகளே வா வா, உன் வலது காலை எடுத்து வைத்து வா வா!'' என்று கலாட்டா பண்ண லலிதா - செல்வகுமார் ஜோடியும் தயாராக இருந்தனர்.

தன்னுடைய அப்பாவிடம் போனில் பேசியபோது கூட, 'அப்படியா விஷயம்?' என்பது போல சர்வ சாதாரணமாகக் கேட்டுக் கொண்டார். 'ரொம்ப சந்தோஷம், சீக்கிரமே இங்கே அழைச்சுட்டு வா, பார்க்கலாம்!' என்பது மாதிரிதான் பேச்சு நடந்தது. இப்போ இங்கே வந்து நிற்கிறாரா? எல்லாம் அம்மா வேலையா?

வேகமாக அருகில் வந்து அவரின் தோளைச் சேர்த்து அணைத்து, ''ஹாய்ப்பா, ரொம்ப ஸ்பீட் தான் போல! உடனே இங்கே அட்டெண்டன்ஸ் கொடுத்துட்டீங்க!'' என்று ஆச்சரியமாகவும் சந்தோஷமாகவும் பாலா விசா

ரித்ததை. லலிதா, அஞ்சலி இருவருமே தத்தம் செல் போன்களில் படம் பிடித்தனர்.

இந்தப் படபிடிப்பு ஒருவருக்கு ஒருவர் சொல்லாமலே ஒரே நேரத்தில் நிகழ்ந்ததைப் பார்த்து அஷோக்கும் செல்வகுமாரும் சிரித்தனர். "என்ன இது? இந்தியப் பிரதமரும், அமெரிக்க ஜனாதிபதியும், பேச்சு நடத்து வதை போல இத்தனை காமராக்கள் கண் சிமிட்டுது!" என்று சிரிப்பின் ஊடே விசாரித்தான் அஷோக்.

"என் பையன் சிரிப்பதே அதிசயம். அதுலயும் அப்பாவைக் கட்டி அணைத்து விசாரிப்பது கண் கொள்ளா காட்சி இல்லையா? எனக்கு அந்த அமைதிப் பேச்சு வார்த்தையை விட இது ரொம்ப ஸ்பெஷல்!" என்று லலிதா கண் சிமிட்ட, அந்தச் சிரிப்பில் பாலா உட்பட எல்லோருமே இணைந்து கொண்டனர்.

"அம்மா, உங்க மூச்சை நல்லா இழுத்து விட்டு, இன்னொரு அதிர்ச்சிக்குத் தயாராகிக்குங்கோ...." என்று சொல்லிவிட்டு அம்மாவை நெருங்கியவன், அவரை அணைத்து "ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்மா, ஐ லவ் யூ!" என்று சொல்லிக் கன்னத்தில் அழுத்தமாய் ஒரு முத்தமும் வைத்து விட, செல்வகுமாரும், மைதிலியும் திறந்த வாய் மூடாமல் பாலாவைப் பார்த்துத் திகைத்து நின்றனர்.

மைதிலி செல்வகுமார் இருவரின் திகைத்த முகத்தையும் பார்த்த அஞ்சலியும் பாலாவும், அவர்களை நெருங்கி, 'என்ன ஆச்சு?' என்று லேசாக உலுக்க, அவர்களின் தொடுகையில் இரண்டு சிலைகளுக்கும் உயிர் வந்தது.

தன் அருகே இருந்த அஞ்சலிக்குக் கை கொடுத்து அழுத்தமாகக் குலுக்கிய மைதிலி, "வாழ்த்துக்கள்



அஞ்சலி, பார்த்த சில மணி நேரத் தனிமையில் கடலளவு மாற்றம் பாலா அண்ணனிடம் கொண்டு வந்து விட்டாய் போல. என்னால் நம்பவே முடியலை... அஞ்சலி! பாலா அண்ணனை இவ்வளவு சந்தோஷமா இந்த ஆறு வருஷத்தில் நான் பார்த்ததே இல்லை. நானாவது ஆறு வருஷம். அங்கிளும் ஆன்ட்டியும் இருபத்தெட்டு வருஷத்திலே இப்படி சந்தோஷமா தன்னுடைய உணர்வுகளை வெளிபடுத்துகிற பாலா அண்ணனை.... அதுவும் முத்தம் தருகிற பாலா அண்ணன்... பார்த்து இருக்க முடியாது. சான்ஸே இல்லை...." என்று உணர்ச்சிப் பெருக்கில் வார்த்தைகள் தடுமாறினாலும் திக்கித் திக்கி விடாமல் சொல்லி முடித்தாள் மைதிலி.

"டேய் பாலா! இதுக்கா என்னை மூச்சு விட்டுக்க சொன்னாய்? இதுல என்ன அதிர்ச்சி இருக்கு? இந்த மாற்றம் உன்னில் வருவதற்குத்தான் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி அவ்வளவு கட்டாயப்படுத்தியது. இப்பவாவது மனுஷங்களுக்கு நிஜமான சந்தோஷம் எதுல இருக்கு என்று புரிந்துகொண்டாயே? லட்சக்கணக்கில் பணம் செலவழித்து நீ வாங்கும் நகையோ பொருளோ, கொடுக்க முடியாத சந்தோஷத்தை. 'இந்த ஐ லவ் யூம்மா' என்ற வார்த்தை தரும்டா. டெல்லி ஸ்டேடியத்துல போதி மரம் ஏதாவது இருக்கா? இப்பதான் உனக்குத் தெரிஞ்சதா?" என்று விசாரித்தார் லலிதா.

"அ...ப்...பா எவ்வளவு கேள்விகள்? எனக்கு மூச்சு வாங்குதும்மா, உங்களுக்கு எப்பவாவாது நாலே வார்த்தையில நறுக்குன்னு ஒரு விஷயத்தைச் சொல்லத் தெரியுமா? இப்ப இதே இடத்துல, நாலே வார்த்தையில ஒரு நல்ல விஷயம் சொல்லுங்க, பார்ப்போம்!" என்று சவால் விட்டான் பாலா.

''சவால் விட்டால் மட்டும் போதாது. நான் ஜெயித்தால், ஜெயித்தால் என்ன ஜெயித்தால்? நான் தான் ஜெயிக்கப் போறேன். நான் இன்று ஒரு நாள் என்ன சொன்னாலும் மறுத்துப் பேசாமல், அதற்கு நீ சரி என்று சொல்லணும். அப்பத்தான் போட்டிக்கு ஓகே!'' என்று பதில் சவால் விட்டார்.

''ஓகே. ஆனால் இங்கே நாம் பேசியதைக் கேட்காத ஒருத்தரிடம், இப்ப நாம் பேசிக் கொண்டு இருந்ததற்கு கொஞ்சமும் சம்பந்தம் இல்லாத ஒரு விஷயத்தை, நாலே வார்த்தையில், அவங்களுக்கு முழுசா புரியும்படி சொல்லணும். அவங்க அதுக்குப் பொருத்தமான பதிலும் சொல்லணும். குறுக்குக் கேள்விகள் ஜாடைகள் எதுவும் கிடையாது. ஓகே?'' என்று அதிரடியாய்ப் பாலா சொல்ல உடனடியாகச் சவாலை ஏற்றுக் கொண்டார் லலிதா.

''மைதிலி, உங்க அத்தையைக் கூட்டிட்டு வாம்மா....'' என்று லலிதாம்மா சவாலுக்குத் தயாராக, ''மைதிலி வேண்டாம். அவள் ஏதாவது சொல்லி விடுவாள். நானே போய்க் கூட்டிட்டு வருகிறேன்,'' என்று அவளை நிறுத்தி விட்டு அவசரமாகக் கிளம்பினான் பாலா.

அம்மாவிற்கும் பிள்ளைக்கும் இடையே என்ன நடக்கிறது என்று புரியாமல் கொஞ்சம் திகைப்பு கலந்த வியப்புடன் அஞ்சலி, அஷோக், மைதிலி, மூவரும் வெறும் பார்வையாளராக இருந்தனர். பாலா ஓரிரு நிமிடங்களிலேயே தோட்டத்தில் நடைபெற்றுக் கொண்டு இருந்த பார்ட்டி வேலைகளை மேற்பார்வையிட்டுக் கொண்டு இருந்த வளர்மதியுடன் திரும்பி வந்தான்.

''என்ன லலிதாம்மா கூப்பிட்டீங்களா? பாலா தம்பி சொன்னார். என்ன விஷயம்?'' என்று புன்னகையோடு விசாரித்தார் வளர்மதி.



அவரின் கேள்விக்குப் பிறகு, நகர்ந்து போய் செல்வகுமாரின் அருகில் சென்று, அவரின் தோள் மேல் கை வைத்து அணைத்தாற் போல நின்று, ''அஞ்சலியை எங்கள் மருமகளாக்கச் சம்மதமா?'' என்று ஒவ்வொரு வார்த்தையைச் சொல்வதற்கு முன்பும் பாலாவின் கண் முன்னால் ஒரு விரல் விட்டபடி நிதானமாகக் கேட்டார் லலிதா.

''இதென்னம்மா கேள்வி. இப்பவே ரெடி. அஞ்சலி மனசுதான் நேற்றே தெரிந்து விட்டதே! எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷம். என் கண்ணு...'' என்று ஒரே எட்டில் அஞ்சலியை நெருங்கி, அவளின் கன்னத்தை வழித்து முத்தமிட்டு வளர்மதி கொஞ்சிய வினாடியில் ஒரே நேரத்தில், பாலா உட்பட, செல்வகுமார், அஞ்சலி, மைதிலி, அஷோக் எல்லோரும் சேர்ந்தாற் போல பலத்த கரகோஷத்துடன் சிரித்தனர்.

''வாவ்! கிரேட்மா, சும்மா நச்சுன்னு வச்சீங்களே! ஐ லவ்ட் இட்!'' என்று முதலில் லலிதாவை நெருங்கிய பாலா அவரைக் கட்டி அணைத்து மீண்டும் ஒரு முத்தத்தைப் பரிசாகக் கொடுத்தான்.

''டேய், சும்மா சும்மா கன்னத்தை எச்சில் பண்ணாதே. ஹைஜீன் என்றால் என்ன விலை என்று கேட்பாயோ?'' என்று எப்போதும் பாலா சொல்லும் வசனத்தை லலிதா திருப்பிப் படிக்க, அடுத்த சிரிப்பலை எழுந்தது.

''அம்மா பிள்ளைக்குள் அதெல்லாம் கணக்குக் கிடையாதும்மா...'' என்று லலிதாவைக் கொஞ்சிய மகனை வியப்புடன் பார்த்த செல்வகுமார் அஞ்சலியை நெருங்கினார்.

"நான் உன்னை இப்போதான் முதன் முதலில் பார்க்கிறேன் அஞ்சலி. நீ என்னிடம் இதுவரை ஒரு வார்த்தை கூட நேரில் பேசவில்லை. ஆனாலும் உன் நல்ல மனதையும், நீ என் மகனை எவ்வளவு தூரம் பாதித்து இருக்கிறாய் என்பதையும் கண் கூடாக இந்தச் சில நிமிடங்களில் பார்த்து விட்டேன். எனக்கு ரொம்ப சந்தோஷம் அஞ்சலி. இன்னும் நூறு வருஷம் நீயும் பாலாவும், நாளொரு சண்டையும் பொழுதொரு சமாதானமுமாக சந்தோஷமா வாழ என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்!" என்று அவளின் தலையில் கை வைத்து ஆசிர்வாதம் செய்தார்.

"பாலா அம்மா செல்லமாக இருக்கட்டும். இனி நான் உங்க செல்லம்!" என்று சொன்ன ஒரே வாக்கியத்தில், அவள் அந்தக் குடும்பத்தில் ஒன்றாகிவிட்டதைப் பாலாவிற்குப் பிடித்த விதத்தில் இரத்தினச் சுருக்கமாக அஞ்சலி சொல்ல, அங்கே அடுத்த கரகோஷமும் சிரிப்பலையும் எழுந்தது. அந்த சிரிப்பும், சந்தோஷப் பேச்சும், அடுத்து வந்த பல மணி நேரத்திற்கு அந்த வீட்டில் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருந்தது.

## 19

அசோக்கின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த விருந்திலேயே ஏற்கெனவே இருந்த அசோக்கின் பிறந்த நாள், மைதிலி கருவுற்ற சேதி என்ற இரட்டை இனிப்புடன், வளர்மதி - வாசுதேவன் தம்பதியினர், ரூபி நெக்லஸை அவள்



கழுத்தில் அணிவித்தபடி, தங்கள் மகள் போன்ற அஞ்சலியைப் பாலாவிற்குத் திருமணம் செய்து வைக்கப் போகும் விஷயத்தைப் பெருமையுடன் அறிவித்து, விழாவில் மேலும் இனிமை சேர்த்தனர்.

வளர்மதி வெளியிட்ட பாலமுருகன் - அஞ்சலி இருவருக்கும் இடையேயான திருமண அறிவிப்பினைத் தொடர்ந்து, செல்வகுமார் - லலிதா தம்பதியினர் தங்கள் பங்கிற்குப் பரிசாக, அவர்கள் புதிதாகத் தொடங்கி உள்ள, 'ஃபேஷன் டுடே' என்ற மாத இதழை நடத்தும் முழு உரிமையை அஞ்சலிக்கு அளிப்பதாகச் சொல்ல அங்கே எழுந்த கரகோஷம் அடங்க வெகு நேரம் ஆகியது.

"ஜர்னலிசம் படிப்பை முடிக்கும் முன்பே மாத இதழ் நடத்தும் முழு உரிமை பெற்ற ஒரே ஆள் உலகத்திலேயே நம்ம மௌவுஸ் தான். பாவம் கோவை வாழ் ஜனங்கள். நீ சொல்றதுதான் அங்கே ஃபேஷனா சுண்டெலி?" என்று அசோக் வம்பிழுக்க, மைதிலியிடம் இருந்து அவன் முதுகில் செல்லமாய் ஒரு அடி கிடைத்தது.

"அவனைக் கையால் அடிக்காதே மைதிலி, உன் கைதான் வலிக்கும், கம்பு ஒண்ணு வச்சுக்கோ!" என்று அஞ்சலி அவளுக்கு ஏற்றி விட, எல்லோரும் சிரித்தனர்.

"அஞ்சலி, உனக்கு இன்று எங்கேஜ்மென்ட் என்று பார்க்கிறேன். உனக்கு நான் பிரமாதமா வாழ்த்துச் சொல்லி, ரூபி நெக்லஸ் அம்மாவை நான் கொடுக்கச் சொன்னதுக்கு, நீ மைதிலியிடம் சொல்லி என்னைக் கம்பால் அடிக்கச் சொல்றியா?" என்று அவளிடம் முறைப்போடு சொல்லி விட்டு.

"பாலா! பார்த்தீங்களா பாத்தே பேபியோட நிலையை? இதேதான் இருபத்திரண்டு வருஷமா விடாமல்

நடந்துகிட்டே இருக்கு. இத்தனை நாள் அம்மாவிற்கு ஐடியா கொடுத்தாள். இப்போ மைதிலிக்கு. இது எப்போ முடியுமோ?'' என்று பெருமூச்சு விட்டான் அஷோக்.

''ஆமா, நீ பர்த்டே பேபியா? உனக்கே ஒரு பேபி வரபோகுது. இன்னும் நீ பேபியா?'' என்று அஞ்சலியும், ''நீங்க எப்போ அஞ்சலியைச் சீண்டுவதை நிறுத்துறீங்களோ, அப்பவே இந்த அடியும் நிற்க வாய்ப்பு இருக்கு அஷோக்!'' என்று பாலாவும் ஆலோசனை சொல்ல, அங்கே மீண்டும் சிரிப்பொலி எழும்பியது.

கலகலப்பான பேச்சு சிரிப்பிற்கிடையே, அஷோக் - மைதிலிக்குத் தன்னுடைய சிறப்புப் பரிசினை அளித்த பாலா, அன்று வாங்கி வந்த வைர மோதிரத்தைப் போட்டு எளிமையாய் நிச்சயம் முடித்து, மூன்றே தினங்களில், ஞாயிற்றுக் கிழமை அன்பு இல்லத்தில், திருமணத்திற்கும், மாலையில் நட்சத்திர ஹோட்டலில் வரவேற்பிற்கும் ஏற்பாடு செய்து இருப்பதாக அறிவித்த போது, அஞ்சலி ஆச்சரியத்தில் திகைத்துப் போனாள்.

பாலாவிடம் தனியாக வந்து, ''உங்களுக்கு ஒன்றும் இதில் வருத்தம் இல்லையே பாலா!'' என்று கவலையோடு விசாரித்தாள்.

''நீ என்ன சொல்ற அஞ்சு? எனக்கு எதுக்கு வருத்தம்?'' என்று ஆச்சரியமாகக் கேட்டான்.

''உங்க அப்பா உங்களுக்கு கிராண்டா திருமணம் செய்யலாம் என்று நினைத்து இருக்கலாம். எனக்கு இப்போதைக்கு எடுத்துச் செய்ய அஷோக், ஆன்ட்டியை விட்டால் வேறு ஆளும் இல்லை. அதோடு, நான் என்னுடைய பெற்றோர் இறந்த கவலையை மறந்து, என்



மனதை மாற்ற உதவிய அந்த ஆசிரமக் குழந்தைகளுக்கு நான் ஏதாவது செய்யணும் என்று நினைத்து இருந்தேன். அதை நான் சொல்லாமலேயே... நீங்க.... தேங்க்ஸ் பாலா. தாங்க்யு ஸோ மச் பாலா!'' என்று திணறினாள்.

''அஞ்சலி! உனக்கு என்ன வேண்டும் என்பதை என்னிடம் நீ தாராளமா டிமாண்ட் பண்ணிக் கேட்கலாம். என் சட்டையைப் பிடித்து உலுக்கிச் சண்டை போடலாம் நினைச்சதைச் செய்யலாம். உன்னுடைய கணவன் நான். என்னிடம் எல்லா உரிமையும் எடுத்துக்கலாம். இந்த நன்றி சொல்லும் வேலை எல்லாம் வேண்டாம். அப்படி நிஜமாவே உனக்கு நன்றி சொல்ல வேண்டும் போல் இருந்தால் ஒண்ணு செய்....'' என்று நிறுத்தினான் பாலா.

''என்ன சொல்லுங்க பாலா, செய்றேன்!'' என்று ஆவலாக உறுதி அளித்தாள் அஞ்சலி.

தூரத்தில் கை காட்டி, ''அந்த டார்க் கிரீன், சில்க் காட்டன் சாரி கட்டி இருக்காங்க பார்த்தாயா. அவங்களுக்கு நன்றி சொல்லு. அவங்களுக்குதான் உண்மையிலேயே உன்னுடைய நன்றிகள் போய்ச் சேர வேண்டும்!'' என்று அவன் சொல்ல, திரும்பிப் பார்த்தவள் அங்கே லலிதாவைக் கண்டு புன்னகை செய்தாள்.

நிச்சயித்தபடியே, சென்னையில் அன்பு இல்லத்தில், பாலா தன்னுடைய பிரத்யேக கவனிப்பில் ஆசிரமக் குழந்தைகளுக்குத் தயார் செய்த புத்தாடையுடன் கொண்டாடப்பட்ட எளிமையான திருமணம். மாலையில் உறவினர் மற்றும் தொழில் முறை நண்பர்களுக்காகக் கோவையில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த வரவேற்பு நிகழ்ச்சிகளை முடித்து விட்டு, இடையறாத பயணம், நான்கு மணி நேரம் நின்றதால், வந்த கால் வலியுடனும்,

மகிழ்ச்சியில் திளைத்த மனதுடனும், பாலாவும் அஞ்சலியும் தங்களின் தனியறைக்கு வந்தனர்.

"என்ன அஞ்சலி ரொம்ப கால் வலிக்குதோ? நாளைக்கு டெல்லிக்குப் போய் பார்த்துக்கலாம். ட்ரெஸ் மாற்றி விட்டுத் தூங்கு!" என்று வாஞ்சையாய்ச் சொன்ன பாலாவை முறைத்தாள் அஞ்சலி.

"ஹலோ, உங்களிடம் நான் நிறையப் பேச வேண்டும் என்று பார்த்துட்டே இருக்கேன். புதன் கிழமை காலையில் உங்களைப் பார்த்ததில் இருந்து இந்த நாலு நாளில் அஞ்சு நிமிஷம் கூட என்னிடம் நின்று பேசவில்லை. ஓடிட்டே இருந்தீங்க. சரி, வேலை இருக்கு என்று விட்டு விட்டேன். எனக்கும் கொஞ்சூண்டு தயக்கம் கூச்சம் எல்லாம் இருந்தது. இன்று உங்களை விடுவதாக இல்லை. நீங்க இன்று தூங்கிடுவீங்களா? அதையும் பார்த்து விடுகிறேன்!" என்று மிரட்டலாகச் சொன்னாள் அஞ்சலி.

"ஹய்யோ சவாலா? முதல் நாளேவா! பயமா இருக்கே? நான் பாவம் இல்லையா அஞ்சு. அதையும் இவ்வளவு தள்ளி நின்று சொன்னால், நான் எப்படிச் சமாளிப்பது சொல்லு..." என்று கைகளை விரித்து, அவளைக் கண்ணால் அழைத்தபடி கொஞ்சினான் பாலா.

"பயப்படற ஆளைப் பாருங்கடா! நினைச்சதைச் செய்யணும் என்று அடம். ஒண்ணுமே தெரியாத மாதிரி அப்பாவி லுக் வேறயா? உங்களை..." என்று வாயால் மிரட்டியபடி, அவனின் விரித்த கைகளுக்குள் இஷ்டமாய்ச் சிறை புகுந்தாள் அஞ்சலி.

"வாய் ஒண்ணு சொல்லுது. கை ஒண்ணு செய்யுதே அஞ்சு..." என்று கொஞ்சியவன் குரல், கைபிடித்த



மனைவியின் அருகாமையில், குழைந்து கிறக்கத்திற்கு மாறிக் கொண்டு இருந்தது.

"ம்ம்ம், அடுத்தவங்களைக் குறை சொல்லும் போது, உங்க கையும் வாயும் என்ன செய்யுது என்று பார்க்க மாட்டீங்களா?" என்று மடக்கியவளின் குரலும் கொஞ்சிக் குழைய. அவளின் கரங்கள், அவனின் கழுத்தை வளைத்தன.

"அம்மா எனக்குக் கொடுத்த ஒரே ஒரு அட்வைஸ், உன்னை சந்தோஷமா வச்சுக்கச் சொல்லி இருக்காங்க. அதனால், நீ என்ன சொல்லித் தருவாயோ அதை நான் அப்படியே பின்பற்றி நடப்பேன். உன்னோட கை எங்கே எல்லாம் போகுதோ, அங்கே எல்லாம் என்னுடைய கையும் போகும். ஓகே...." என்றவன் கரங்கள் அவளைத் தன்னோடு சேர்த்து இறுக்கி அணைத்தன.

"பாலா, பாலா.... ப்ளீஸ்.... ஹோல்ட் ஆன். உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் கேட்கணும்!" என்று அவசரமாக அவனின் கை பற்றி தடுத்து நிறுத்தினாள் அஞ்சலி.

"அப்படி என்ன முக்கியமான விஷயம் மேடம். அதை உட்கார்ந்து, பேசலாமே!" என்று கேலியாகச் சொன்னவன், கட்டிலில் கால் நீட்டி அமர்ந்து, அவளின் கை பற்றித் தன் அருகே அமரவைத்து, இழுத்து தோளிலும் சாய்த்து, 'இப்ப சொல்லு.' என்று ஊக்கினான்.

அவனது தோளோடு சேர்த்த அணைப்பும், அருகாமையும், அன்பான குரலும், அவளை இளக்க, விரல்கள் அனிச்சையாய் அவனின் கேசத்தில் ஊடுருவ ஆரம்பிக்க, அவளின் இதழ்கள் தாமாக நகர்ந்து அவனின் கன்னத்தில் மென்மையாகப் பதிந்தன.

"இதுதான் நீ சொன்ன அந்த முக்கியமான விஷயமா அஞ்சு..." என்றவன் அணைப்பு மேலும் இறுகி, அவளின் கழுத்தில் இதழ்கள் புதைந்தன.

அவன் அணைப்பில் இருந்து விலகி, சற்று தள்ளி அமர்ந்து, "அங்கே இருந்தால் என்னால் நான் நினைத்ததைப் பேச முடியலை. அதனால் கொஞ்ச நேரம் நான் இப்படி உட்கார்ந்துக்கறேன்," என்று சொன்னாள் அஞ்சலி.

"என்ன அஞ்சலி, ஏதாவது பிரச்சனையா?" என்று முகம் யோசனையில் சுருங்க கவலையோடு கேட்டான்.

"பிரச்னை என்று ஒன்றும் இல்லை பாலா. ஆனால் உங்களிடம் சொல்ல வேண்டும் என்று தோன்றியது." என்று மீண்டும் இடைவெளி விட்டாள்.

"அப்ப சொல்ல வேண்டியதுதானே? ம்ம்ம் ஸ்டார்ட்...." என்று ஊக்கினான்.

"நீங்க தப்பா எடுத்துக்காதீங்க பாலா. ஆனால் எனக்கு நீங்க செய்யும் இந்த விஷயம் பிடிக்கலை!" என்று பூடகமாய் நிறுத்தினாள்.

"அஞ்சலி, எனக்குப் பொறுமையே ரொம்ப கம்மி. ப்ளீஸ் பட்டுன்னு விஷயத்தை உடைத்துச் சொல்லு."

"அதுக்குள்ளே பொறுமை போயிடுச்சா? ஒரு நாளைக்கு மூணு தடவையாவது நீங்க அம்மாவைப் பேசாமல் இருங்க.... பேசாதீங்க.... உங்களால் அஞ்சு நிமிஷம் அமைதியா இருக்க முடியுமா? இந்த மாதிரி எல்லாம் சொல்லிட்டே இருக்கீங்க. ஐ டோன்ட் லைக் திஸ் பாலா. திஸ் இஸ் டூ மச். உங்களால் செய்ய முடியாத எத்தனையோ விஷயத்தை, அவங்க அவங்களோட



பேச்சுத் திறமையால செஞ்சு முடிச்சு இருக்காங்க. அதுக்கு நம்ம கல்யாணம் உட்பட எத்தனை சாட்சி இருக்கு! அதனால் இனிமேல் அவங்களை அப்படி நீங்க பேசக் கூடாது..." என்று கண்டிப்பாகச் சொன்ன அஞ்சலியைத் திகைத்துப் போய்ப் பார்த்தான் பாலா.

"ஹேய் அவங்க என்னோட அம்மா. அவங்களுக்கு என்னைப் பற்றி நல்லா தெரியும்..."

"இருக்கட்டும், அதுக்காக, அவங்களை நாலு பேர் முன்னிலையில் அப்படி பேச வேண்டுமா? அவங்களை அமைதியா இருக்க முடியுமா என்று இத்தனை தடவை கேட்கறீங்களே? நான் உங்களைக் கேட்கிறேன். உங்களால் அவங்களை மாதிரி ஒரு பதினஞ்சு நிமிஷம், விடாமல் தொடர்ந்து பேச முடியுமா?" என்று எரிச்சலோடு இடையிட்டாள் அஞ்சலி.

"ஏதாவது விஷயம் இருந்தால், நான் பேச வேண்டும் என்ற தேவை இருந்தால், என்னால் நிச்சயம் பேச முடியும். இல்லை என்றால் தொழில் எப்படி நடக்கும்? ஆனால் விஷயமே இல்லாமல் என்னால் பேச முடியாது!" என்று அவளுக்கு மேல் எரிச்சலோடு சொன்னான்.

"ஓஹோ! அப்படியா? சரி, அதையும் பார்த்து விட லாம். என்னையே நினைச்சுட்டு இருந்ததா.... நான் உங்களுக்கு ரொம்ப ஸ்பெஷல் என்று.... அடிக்கடி சொல்லிட்டே இருக்கீங்களே! என் மேலே எவ்வளவு அன்பு வச்சு இருக்கீங்க. அதை எப்படி எல்லாம் வெளிப் படுத்துவீங்க என்று எனக்கு ஒரு ஆயிரம் வார்த்தையில் சொல்லுங்க பார்ப்போம். ஆயிரம் வார்த்தை ஒன்னும் ஜாஸ்தி இல்லை சார். நாம் முதலில் சந்தித்து பின்பு மூணு வருஷம் ஓடிப் போச்சு. ஒவ்வொரு நாளும் நீங்க

என்னிடம் நாலு வார்த்தை பேசுவதாக வைத்துக் கொண்டால் கூட நாலாயிரம் வார்த்தையைத் தாண்டுமே? நான் ஆயிரம் தானே கேட்கிறேன். ரெடி ஸ்டார்ட்..." என்று சொல்லி அவன் பேசப் போவதைப் பதிவு பண்ண மடிக்கணினியை உயிர்ப்பித்தாள்.

அந்த மடிக் கணினியை இரண்டு நாள் முன்பு, அவளுடைய பத்திரிகை தொடர்பான வேலைக்கு என்று சொல்லிக் கொடுத்த போது அதை வாங்க அவ்வளவு யோசித்தாள். கண் கலங்கினாள். முகம் வாடினாள். இன்று அது பற்றிய நினைவே இல்லாமல் சரளமாகக் கையாள்கிறாளே என்பதை வியப்போடு பார்த்தான் பாலா. அந்த அவளின் ஆர்வத்தைக் குறைக்க விரும்பாததாலேயே, பேச ஆரம்பித்தான்.

# 20

இந்த நவீன வசதிகளால் இதுவரை இழந்தது போதும். இனிமேல் இழக்க என்னிடம் ஒன்றுமே இல்லை என்று சில வாரங்களுக்கு முன்பு தன்னிடம் அழுகையும் ஆத்திரமுமாகச் சொன்ன அஞ்சலி இவள் தானா? பாலாவிற்கு இவளை மாற்றியது இவள் தன் மேல் வைத்து இருக்கும் அன்பு என்பதை எண்ணிப் பார்க்கப் பெருமிதமாக இருந்தது.

தன்னைத் தேடி டெல்லிக்கு வரும்போது, அசோக் வாங்கிக் கொடுத்துப் பத்திரமாகப் பெட்டியில் பூட்டி வைத்து இருந்த அந்த அலைபேசியை எடுத்து வந்தாள். அதை



முதன் முதலில் பயன்படுத்தியது, தனக்குத் தகவல் அனுப்பத்தான். அதற்கு முன்னால் டெல்லி வந்த உடனே வந்து சேர்ந்து விட்டதைச் சொல்ல, அங்கே இருந்த பொதுத்தொலைபேசியைப் பயன்படுத்தினாள் என்று அஷோக் சொன்னான். அதிலும் தனக்கு முதலிடமே.

இந்தக் கணினியைக் கொடுத்த பிறகும் இதில் இருந்து தனக்குத்தான் முதலில் செய்தி அனுப்பினாள். இப்போது தன்னுடைய பேச்சைப் பதிவு பண்ணவும், வார்த்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கிடவும் எவ்வளவு சரளமாக இயல்பாக மாறி விட்டாள் என்பதில் மனம் நிறைந்து சந்தோஷம் பெருகியது.

"குட், என்னுடைய குரலைக் கணினி அப்படியே பதிவு பண்ணி எண்ணவும் போகிறதா? வாழ்க அறிவியல்!" என்று சொல்லிப் புன்னகையுடன் ஆரம்பித்தான்.

"அஞ்சலி, என்னுடைய வாழ்க்கையில், என்னுடைய அம்மாவிற்கு பிறகு என்னைக் கவர்ந்த முதல் பெண்மணி நீ தான். உன்னைப் பார்த்தது சில வினாடிகள் தான். ஆனால் அந்த மாலை மயங்கும் வேளையில், அரை இருளில் நீ கொடுத்த சின்னப் பரிசும், பேசிய பேச்சும் அப்படியே என் மனதில் பதிந்து விட்டது அஞ்சலி..." என்று ஒரு சந்தோஷப் பெருமூச்சுடன் ஆரம்பித்தான் பாலா.

"அப்போதைக்கு உன் பேர் கூடத் தெரியாதே! ஆனாலும் எங்க அப்பா எப்போதும் என்னை அன்பாய் வைத்து அரவணைப்பாய்ப் பேசும் வார்த்தைகளை விட, எங்க அம்மா சுருக் என்று கேலி அல்லது நக்கல் கலந்து பேசும் வார்த்தைகள் தான் என்னை அதிகம் பாதிக்கும். மனசில் நிற்கும். அதே மாதிரி பாணியில் நீ சொன்ன,

''டேய் அழகா! உன்னை எங்கே எல்லாம் தேடுவது? பரிசுக்காக மூக்கால் அழுத என் அழகு சுந்தரமே! எப்போதும் இதே மாதிரி நாளொரு சண்டையும் பொழுதொரு சமாதானமுமாய்ச் சின்னச் சின்னப் பரிசுகள் கொடுத்து வாங்கிக் கொண்டு வாழ்நாள் முழுவதும் சேர்ந்தே இருப்போம்' என்ற வார்த்தைகள் என்னுள்ளே கடல் அளவு மாற்றத்தை உண்டு பண்ணின என்பது சத்தியம். அந்த வார்த்தைகளின் தீவிரத்தை நீ உணர்ந்து சொல்லவில்லை என்பது புரிந்தாலும், அது என்னிடம் சொல்லப் பட்ட வார்த்தைகள் இல்லை என்பது நூற்றுக்கு இருநூறு சதவிகிதம் தெளிவாகத் தெரிந்த போதும், அவை என்னுள் ஏற்படுத்திய தாக்கத்தை என்னால் மாற்றவோ, அழிக்கவோ இன்று வரை காலம் உட்பட எந்த சக்தியாலும் முடியவில்லை அஞ்சலி....''

''நான் உங்களைப் பாதிக்கும் அளவிற்கு என்ன செய்தேன் என்று நீ கேட்கலாம். ஆனால் நீ சொன்ன அழகன் என்ற வார்த்தை என்னுடைய தோற்றத்தைக் குறித்துச் சொன்னதாக நினைத்துக் கொண்டேன். எப்போதும்.... மலரும் மணமும் போல.... இணைபிரியாமல் வாழ்வோம் என்று தான் பலர் திருமணத்தில் வாழ்த்துவார்கள்.... அது நிச்சயம் நடக்காது என்று தெரிந்தும். அப்படி வாழ்த்துவது எனக்குப் பல சமயங்களில் எரிச்சலை மூட்டி இருக்கிறது. எனவே எப்போதும் சந்தோஷமாக இணை பிரியாமல் வாழ்வோம் என்ற 'ஐடியல் நிகழ்வாக' இல்லாமல், நாளொரு சண்டையும் பொழுதொரு சமாதானமுமாக வாழ்வோம் என்று நீ சொன்னது எனக்கு உன்னுடைய மன தைரியத்தை, பிரச்சனையை எதிர்கொள்ளும் மனப் பக்குவத்தைக் காட்டிய, அந்த நம்பிக்கை பிடித்தது...''



''உங்க அம்மா அப்பாவுடன் மட்டும் இல்லாமல், அஷோக்கின் அம்மா அப்பாவுடனும் நீ நட்பாகச் சிரித்த முகத்துடன் பழகிய விதம் எனக்குப் பிடித்தது அஞ்சலி...''

''உன்னுடைய கோபத்தை மறைக்காமல் வார்த்தைகளால் வெளிப்படுத்திய அஷோக்குடன் நீ போட்ட சண்டை பிடித்தது அஞ்சலி....''

''அந்தக் கோபத்தை விடாமல் பிடித்துக் கொண்டு அதிலேயே நின்று, அடுத்த வேலையைச் செய்யாமல் இருக்கவில்லை. சில நிமிடங்களிலேயே சமாதானமாகி, அவனுடைய பிறந்த நாள் கொண்டாட்டதில் நீ வெடித்த பலூன்களும், வண்ணக் காகிதங்களை மற்றும் விரைவில் மறையும் வெண்ணிற நுரையைக் கொட்டும் ப்ளாஸ்டரைப் பயன்படுத்தி உங்க ஆறு பேரின் முகங்களையும் அமுக்காக்கி உற்சாகமாகச் சிரித்ததும் ரொம்ப ரொம்ப பிடித்தது....''

''நான் தனிமையில் எங்களின் வீட்டில் பார்த்து இராத அந்த உற்சாகமான விளையாட்டை அங்கே கண்டு மனம் மயங்கி நின்றேன் என்பதை மறுக்க முடியாது. அந்த ஒரே நாளின் சில நிமிடங்களில் டெல்லியிலேயே நீ என் மனதில் உறுதியாய் அமர்ந்து விட்டாய். உன்னை அப்படி அவ்வளவு நேரம் வேடிக்கை பார்த்த போதும், என் கையில் போன் மட்டுமில்லாமல் நாடகத்தை எடுக்க என்று கல்லூரியில் இருந்து கொண்டு வந்த வீடியோ காமரா உட்பட, அத்தனை உபகாரணங்கள் தயாராக இருந்த போதும், இத்தனைக்கும் நான் உள்ளே சென்று உடை மாற்றி வந்த போது கூட கையில் எதையும் எடுத்து வரவில்லை. உன்னைப் படம் பிடிக்க ஒரு முயற்சி கூடச் செய்யவில்லை. செய்யத் தோன்றவில்லை என்றால்

என்னுடைய முட்டாள் தனத்தை நான் என்ன என்று சொல்வது?"

"சரி. படம் தான் பிடிக்கவில்லை. கொஞ்சம் நெருங்கி நின்று உங்களின் பேச்சு வார்த்தையைக் கவனித்து இருந்தால், உங்களின் பெயர், எங்கிருந்து வந்து இருக்கிறீர்கள், உன்னுடைய பெற்றோர் பெயரோ, பதவியோ ஏதாவது விபரம் காதிலாவது விழுந்து இருக்கும். அதையும் கவனிக்கவில்லை. நீங்க கிளம்பிய பிறகுதான் உன்னைப் பற்றி எதுவுமே விபரம் தெரியவில்லை என்பது உறைத்தது. நான் கொஞ்சம் லேட் பிக்கப் இல்லே?'' என்று வருத்தமாகச் சொல்லிப் பெருமூச்சு விட்டான் பாலா.

அதுவரை அவன் பேசியதைக் கதை கேட்கும் பாவனையில் சாதாரணமாகக் கேட்டபடி, வார்த்தைகளை எண்ணிக் கொண்டு வந்தவள், அவன் வருத்தத்தோடு பேசிய அந்த வினாடியில், 'நாங்க போனதை நீங்க பார்த்தீங்களா பாலா? அப்ப....''

''மொத்த எண்ணிக்கையில் பத்து வார்த்தை கழிச்சுக்கோ....'' என்று புன்னகையோடு கை காட்டி அவளை நிறுத்தி விட்டு தன்னுடைய பேச்சை விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்தான்.

''நீங்க போன வண்டி வாடகை கார். அது கண்காட்சிக்காகப் பயன்படுத்தப்பட வாங்கியது என்பது வரை தெரிந்தது. அதைப் பயன்படுத்திய நபர்கள் அந்த மூன்று நாட்களில் பலர். அதில் நீங்க யார் என்ற விபரம் என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால் நான் விசாரிக்கப் போன போது ஒரு மாதம் முடிந்து விட்டது. அதன் பிறகு டிரைவருக்கு உங்களை குறிப்பாக நினைவு கூற முடியவில்லை....''



''அப்புறம் டெல்லி வீதிகளில் உன்னைச் சல்லடை போடாத குறையாக அலசி இருக்கிறேன். தமிழர்கள் பெரும்பாலும் கூடும் இடங்களில் தேடி இருக்கிறேன். மாதம் ஒரு முறை ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் ஆக்ராவிற்குப் பயணம் செய்து, தாஜ்மகால் பார்க்க நீ வரக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் அங்கே காத்து இருந்தேன்....''

''உன்னை நான் பார்த்தது ஞாயிற்றுக் கிழமை என்பதால், டெல்லியில் இருந்த அந்த ஒரு வருஷம் முடிய, ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும், லால் பகதூர் ஸ்டேடியத்தில் சாப்பிடாமல், காலை எட்டு மணி முதல் இரவு பத்து மணி வரை காவல் காத்து இருக்கிறேன்....''

''இது எல்லாமே பைத்தியக்காரத்தனம் என்று எனக்கும் தெரியும். இதை வெளியில் சொல்ல முடியாது. கேட்பவர்கள் சிரிப்பார்கள் என்பதும் புரியும். ஆனாலும் என்னால் அங்கே போகாமல் இருக்க முடியவில்லை. இதை நான் அம்மாவிடம் கூடச் சொன்னதில்லை. என் மனதில் நீ இருக்கிறாயா என்று கேட்டாயே ஒரு கேள்வி? அதற்கான விளக்கமாக இதைச் சொல்லவில்லை. நீ எனக்கு விட்ட சவாலில் ஜெயிக்க வேண்டும். அதனால் ஆயிரம் வார்த்தைகள் விடாமல் பேச வேண்டும் என்பதற்காகவும் நான் இதைச் சொல்லவில்லை....''

''ஸ்.... பாலா.... எனக்கு மூச்சு வாங்குது... பேசுவது பாலாவா? வேறொருத்தர் ஆவியா?'' என்று பிரமிப்புடன் அஞ்சலி சிரித்த போதும் அவன் நிறுத்தவே இல்லை.

''மைனஸ் இருபது....'' என்ற குறிப்புடன் பேச்சைத் தொடர்ந்தான்.

''அப்புறம் எதுக்கு சொல்றேன் என்று பார்க்கிறாயா? நான் செய்வது சரி இல்லை என்பது எனக்குத் தெரியாமல் இல்லை அஞ்சலி. ஆனாலும் அதைச் செய்வேன். உன் மனதில் நான் போதிய பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறேன் என்று எனக்கு ஒரு சான்று வேண்டி இருந்தது. அதைத் தேடித்தான் அலைந்தேன்....''

''அஷோக்கின் கல்யாண வீட்டில் உன்னைப் பார்த்த போது அளவில்லாத சந்தோஷம் வந்தது. ஆனால் அசோக்கிடம் நீ நெருங்கிப் பேசி, தொட்டுச் சிரித்த போது, அவன் கல்யாண மாப்பிள்ளை என்றதையும் மீறிப் பொறாமைத் தீ கொழுந்து விட்டெரிந்து என்னைத் தள்ளி நிற்க வைத்தது...''

''அப்புறம் அஷோக்கின் தங்கையாக நிற்க வாய்த்த போது, அந்தப் பொறாமைத் தீ அணைந்து, உடனே உன்னிடம் பேச ஆவலாக ஓடி வந்தேன். ஆனால் நீ நாம் ஏற்கெனவே பார்த்து இருக்கிறோமா என்ற உன்னுடைய ஒற்றை வார்த்தையில், மூன்று ஆண்டுகளாக நான் ஊற்றி வளர்த்த காதல் நெருப்பை உடனடியாக ஒரே வாக்கியத்தில் நீரூற்றி அணைத்து விட, அந்த ஏமாற்றத்தில், கோபம் என்னும் பெருநெருப்பு, அந்த இடத்தை ஆக்ரமித்துக் கொண்டது....''

''இனி உன்னைப் பார்க்கவே கூடாது என்று உறுதியோடு நான் அங்கிருந்து கிளம்பி வர, அம்மாவின் மொபைல் போன் பரிசு, மீண்டும் நம்மிடையே பேச்சு வார்த்தையைத் துவக்கியது. அப்போது நீ கலங்கி அழுததும் சொன்ன செய்திகளும், மீண்டும் நம்மைச் சேர்த்து விட்டன....''



''போனில் நான் என்னை அறிமுகம் செய்து கொள்ளாத போதும் என்னை நீ அடையாளம் கண்டது என்னை மகிழ்ச்சிக் கடலில் மூழ்க வைத்தது. நீ ஆசிரமத்தில் குழந்தைகளுக்கு உடை அணிவித்த போது நடத்திய மௌன நாடகம் எனக்கு ஊக்கம் அளித்தது. ஆனால் சில நிமிடங்களில் காரில் கிளம்பிய போது, நீ கதவை ஒட்டி, தள்ளி அமர்ந்தது, அதுவரை இருந்த நெருக்கத்தை உடனே உடைத்துவிட்டது....''

''ஹோட்டலில் அந்த தடை விலகி, நீ என்னுடன் உணவைப் பகிர்ந்து கொண்டதும், இயல்பாகப் பேசியதும், கொஞ்சம் சந்தோஷத்தை தர, உற்சாகமாக ஆசிரமத்திற்குத் திரும்பி வந்த எனக்கு நீ கொடுத்த சட்டை எவரஸ்ட் சிகரத்தில் ஏற்றி வைத்தது. அது நீ உங்க அப்பாவிற்கு என்று வாங்கிய சட்டை என்று சொன்னது, அந்தச் சிகரத்தின் உச்சியில் இருந்து என்னைத் தலைகுப்புறத் தள்ளி விட்டது போல உணர்ந்தேன். பிறகு வீட்டில் இருந்து யோசிக்கும் போது சில விஷயங்கள் புரிந்தாலும், மீண்டும் உன்னை நெருங்கி வரப் பயமாய் இருந்தது அஞ்சலி...''

''இங்கே என்னுடைய தொழிலில் வரும் லாபத்தில் அரை சதவிகிதத்தைத் தரும காரியங்களுக்குச் செய்து தருவது வழக்கம் தான் என்றாலும் இங்கே கடந்த இரண்டு வருடங்களாகச் செய்து வரும் நிறுவனத்திற்குத் திடீர் என்று நிறுத்தவும் எனக்கு இஷ்டம் இல்லை. ஆனால் நீ கடந்த ஒரு வருடமாக அங்கே இருக்கிறாய் என்ற போது, அங்கே செய்யாமல் இருக்கவும் முடியவில்லை...''

''ஓ! அது நீங்க வழக்கமா செய்வதை காட்டிலும் எக்ஸ்ட்ராவா? சாவித்திரி அம்மா கூட...'' என்று

ஆரம்பித்தவளைப் புன்னகையோடு கை காட்டி நிறுத்தினான்.

''மைனஸ் முப்பது!'' என்ற குறிப்புடன் பேச்சைத் தொடர்ந்தான்.

''...அதனால் புதிய தொழில் ஒன்றை ஆரம்பிக்க முடிவு செய்தேன். அதன் லாபத்தை அங்கே நிரந்தரமாகக் கொடுக்கலாம் என்று நினைத்தேன். அது உனக்குப் பொருத்தமாக இருக்க வேண்டும். எனக்கும் உபயோகமாகவும் இருக்க வேண்டும். அப்படி யோசித்து ஆரம்பித்தது தான் ஃபேஷன் டுடே பத்திரிகை....''

''ஆசிரமத்தில் உன்னைச் சந்தித்து விட்டுத் திரும்பி வந்த பிறகு உன்னைப் பார்க்காமல் இருந்த அந்த நாற்பது நாட்களில் தான் உனக்காக இந்த ''ஃபேஷன் டுடே'' பத்திரிகை ஆரம்பிக்க எல்லா ஏற்பாடும் செய்தேன். நீ எப்படியும் என்னிடம் வந்து சேர்வாய் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அப்படி ஒரு வேளை வரவில்லை என்றாலும் இந்தப் பத்திரிகை ஆசிரியர் நீதான். காதலுக்கும் கல்யாணத்திற்கும் தான் நீ பழைய நினைவை உணர வேண்டும். தொழில் தொடர்புக்குத் தேவை இல்லை என்று எனக்கு நானே சொல்லித் தான் இந்தப் பத்திரிகை வேலையை உன்னை எடிட்டராகப் போட்டு ஆரம்பிக்க ஏற்பாடு செய்தேன்....''

''.....என்னுடைய காதலை உனக்கு உணர்த்த நான் எதுவும் செய்யவில்லை என்ற உன்னுடைய ஆதங்கம் எனக்குப் புரிகிறது. நீ என்னை அறிந்து இருப்பாய். என்னை மறுபடியும் நீ ஸ்டேடியத்தில் பார்த்தாய் என்ற என் எண்ணம் தான் நான் சொல்லாமல் விட்டதற்கு ஒரே காரணம். அது தப்பு என்பது எனக்குப் போன புதன் அன்று



தான் புரிந்தது ஐ ஆம் சாரி. உன்னுடைய ஆதங்கம், கோபம், எதிர்பார்ப்பு எல்லாமே புரிகிறது. அம்மா இத்தனை நாள் சொல்லி வந்தது எல்லாம் புரியாமல் இல்லை. ஆனால் இப்போது மீண்டும் உன் வாயால் கேட்கும் போது உங்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய முயற்சி செய்யலாம் என்று தோன்றியது....''

''நீயாக நம்முடைய பழைய சந்திப்பை நினைவு கூர்ந்து என்னைத் தேடி வரவேண்டும் என்ற என்னுடைய எதிர்பார்ப்பு பூர்த்தியான போது எனக்கு உண்டான சந்தோஷத்தை நான் இந்த நான்கு நாட்களில் நானூறு முறையாவது எண்ணிப் பார்த்து இருக்கிறேன். நான் பெற்ற இந்த இன்பத்தில் பாதியாவது மற்றவருக்குக் கொடுக்க வேண்டும் என்று உறுதி எடுத்தேன். அதன் முதல் படி. உன்னுடைய ஆசையை நிறைவேற்ற முயற்சி செய்யலாம் என்று நினைத்தேன், செய்து விட்டேன் என்று நினைக்கிறேன்...

''இது ஒரு ஆரம்பம் மட்டுமே. இது என்றென்றும் தொடர அந்த ஆண்டவன் அருள் புரியட்டும். நீ என் மனைவியாக வேண்டும் என்று மூன்று ஆண்டுகளுக்கு முன்பு டெல்லி லால் பகதூர் ஸ்டேடியத்தில் நான் கண்ட கனவைப் பல இடைஞ்சல்களுக்குப் பிறகு வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்த ஆண்டவன், இந்த ஆசையையும் நிறைவேற்றி வைப்பார் என்று நம்புகிறேன். நீ கேட்ட ஆயிரம் வார்த்தைகளுக்கு மேலேயே நான் பேசி இருப்பேன் அஞ்சலி. திருமணம் முடிந்த பிறகு வரும் முதல் இரவன்று, இப்படி கதா காலட்சேபம் பண்ணிய முதல் கணவன் நானாகத் தான் இருப்பேன். அதிலும் நமக்கு முதலிடமே! இப்ப சந்தோஷமா?'' என்று முடித்தான் பாலா.

"ஹய்யோ, பாலா! நீங்க இப்படி கட கடவென்று பேசுவீர்கள் என்று நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவே இல்லை. சாதித்து விட்டீங்க பாலா. ரியலி கிரேட். நான் நீங்க சவாலில் ஜெயித்ததற்காகச் சொல்லவில்லை. உங்களுடைய மூன்று ஆண்டு காலத் தேடலை, உங்க மனதின் ஏக்கத்தை, ஏமாற்றத்தை, எதிர்பார்ப்பை, காதலை, நியாய உணர்வை, உங்க கனவை, எவ்வளவு அழகாகச் சொன்னீங்க. ஐ லவ் இட் மேன்!" என்று உற்சாகமாகச் சொன்னவள், அவனைப் பாய்ந்து அணைத்து இரண்டு கன்னத்திலும் மாறி மாறிப் பலமுறை முத்தமிட்டாள்.

"வாவ்! சூப்பர்!" என்று ஆசையாகச் சொன்னவனும் அவளை அணைத்து, அவளின் கன்னத்தில் அழுத்தமாய் முத்தமிட்டான்.

## 21

கோவையில் இருந்து டெல்லிக்கு விமானத்தில் வந்து இறங்கி, அஞ்சலியின் தோளை அணைத்தபடி வெளியே வந்த பாலா டாக்சி பிடித்து ஹோட்டல் ரூமிற்கு வந்த போது இருவரின் முகமும் பழைய நினைவுகளின் தாக்கத்தில் மலர்ந்து விரிந்தது.

"ஹேய்! இங்கே தானே ஆகஸ்ட் ஒன்றாம் தேதி தங்கி இருந்தீங்க?" என்று கேட்ட அஞ்சலியைப் பார்த்து, "ஆமா, அதே ரூம் தான் வேண்டும் என்று கேட்டு வாங்கினேன்!" என்று சந்தோஷமாய்ச் சிரித்தான்.



"எனக்குத் தொழிலில் கிடைத்த வெற்றிகள் கொடுத்த சந்தோஷத்தை விட, அன்று காலை அஞ்சு மணிக்கு உன்னோட எஸ். எம்.எஸ். பார்த்துக் கிடைத்த சந்தோஷம் அதிகம் அஞ்சலி. என்னுடைய தொழில் வெற்றிகளைப் பகிர்ந்து கொள்ளவும், கொண்டாடவும், நீ அருகில் இல்லாததாலோ என்னவோ, எனக்கு அவ்வளவு சந்தோஷம் தெரியலை. ஐ லவ் யு அஞ்சு. ஐ லவ் யு சோ மச்!" என்று இறுக அணைத்துக் கன்னத்தில் முத்திட்டான் பாலா.

"ஆயிரத்து நூற்றுப் பதினேழு...."" என்று கேலியாக அஞ்சலி, காதலை அவன் சொன்ன கணக்கில் மேலும் ஒன்று கூட்ட அவன் சிரித்தான்.

கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டு டெல்லியின் வீதிகளைக் கைகளைப் பற்றி கொண்டு வலம் வந்தனர். மறுநாள் டெல்லியில் இருந்த சரித்திரப் புகழ் வாய்ந்த அனைத்து இடங்களையும் சுற்றிப் பார்த்தனர். சின்னச் சீண்டல்களுடன், கொஞ்சல்களுடன், இதழ்களில் நிரந்தரமாகக் குடி இருந்த சிரிப்புடன், சதா தோளிலும் இடையிலும் சுற்றி வளைத்த கரங்களுடன், தலை நகரத்தைக் கால் நடையாகவும் காரிலும் வலம் வந்தனர். பகல் பொழுதுகளின் இனிமை ஒரு விதம் என்றால், இரவோ முற்றிலும் புதிய மாயலோகத்தை அவர்கள் முன்பு கடை விரித்தது. இத்தனை இனிமையான அனுபவத்தை இத்தனை நாள் இழந்து விட்டோமே என்ற தவிப்பும் ஏக்கமும் இருவருக்குமே அவ்வப்போது தோன்றியது. இருந்தாலும் முடிந்ததைப் பற்றிப் பேசி நிகழ்காலத்தை வீணாக்கக் கூடாது என்ற அறிவும் இருந்ததால் அதை உடனே ஒதுக்கவும் கற்றுக் கொண்டனர்.

இரண்டு நாட்கள் டெல்லியில் பொழுதைக் கழித்த பின், மூன்றாவது நாள் கண் விழிக்கும் போதே அவள்

பக்கம் திரும்பி கன்னத்தில் வருடியபடி எழுப்பிய பாலா, ''அஞ்சு, இன்னிக்கு ஆக்ரா போகலாமா?'' என்று கேட்டான்.

''இன்று என்ன ஸ்பெஷலா பாலா? நாளைக்கு ஆகஸ்ட் பதினஞ்சு இங்கே கிராண்டா இருக்குமே? அதைப் பார்க்க வேண்டாமா?'' என்று கேட்டாள் அஞ்சலி.

''ஸ்பெஷல் தான். இன்று பௌர்ணமி. அது மட்டுமில்லை. தேதி பதினாலு. எல்லோரும் காதலர் தினம் பிப்ரவரி பதினாலு கொண்டாடுறாங்க. நாம் கொஞ்சம் வித்தியாசமா ஆகஸ்ட் பதினாலு கொண்டாடுவோமே! நம்ம ஸ்பெஷல் காதலர் தினத்தை, காதலின் நினைவுச் சின்னத்தில் கொண்டாடலாம், சரியா?'' என்று சிரிப்போடு கேட்டான்.

''ஆமா! காதலர் தினம் கொண்டாட நம்ம காதலர்களா என்ன?''

''ஏன் உனக்கு இப்படி ஒரு சந்தேகம்? கல்யாணம் ஆயிட்டா காதல் இருக்காதா? காதலுக்கும் கல்யாணத்திற்கும் என்ன சம்பந்தம்? இன்னும் சொல்லப் போனால் காதல் கல்யாணத்திற்குப் பிறகு வளரணும். மற்றவங்களைப் பற்றி நமக்கு என்ன? நம்மைப் பொறுத்தவரையில் வளரும்!'' என்று உறுதியாகச் சொன்ன பாலாவை விழி அகலப் பார்த்தாள் அஞ்சலி.

மாலை நிலவு வரும் நேரம் தாஜ் மகாலைப் பார்க்கலாம் என்று மதிய உணவிற்குப் பின் கிளம்பி ஆக்ரா வந்து சேர்ந்தவர்கள், ஹோட்டல் ரூமில் பெட்டியைப் போட்டு விட்டு, கட்டிலில் சரிந்து அவளை அருகில் இழுத்து, ''இன்னும் ஒரு மணி நோத்தில் கிளம்பலாம். இங்கிருந்து அஞ்சு நிமிஷத்தில் நடந்தே போய் விடலாம். குளிக்கலாமா?'' என்று கேட்டான் பாலா.



''இதென்ன கேள்வி? குளிக்கவா? என்று கேட்கணும். இல்லை குளிக்கப் போகிறாயா? என்று கேட்கணும். ரெண்டும் இல்லாமல் இதென்ன குளிக்கலாமா? ஆக்ரா வந்ததும் உங்களுக்குத் தமிழ் மறந்துடுச்சா?''

''யாரு, எனக்குத் தமிழ் மறந்துடுச்சா? உனக்குத்தான் மறந்து போச்சு. நான் கரெக்டாதான் கேட்டேன்!'' என்று அவன் அழுத்தமாய்ச் சொன்னதும் அவளுக்குப் புரிந்தது.

''ஆசை, தோசை அதுக்கு வேற ஆளைப் பாருங்க!'' சிவந்த முகத்தை மறுபுறம் திருப்பிப் பெட்டியில் இருந்து துணியை எடுத்து வெளியே வைத்தாள்.

''ஹேய் எனக்கு எதுக்கு வேற பொண்ணு? என்னை எல்லா விதத்திலும் திருப்திப் படுத்த நீயே போதும். அப்படியே உன் மேல கோபம், ஏக்கம், வருத்தம் ஏதாவது இருந்தாலும். அதற்காக வேற பெண்ணைத் தேடிப் போய் விடுவேன் என்றா நினைக்கிறாய்? அப்படிப் போவது என்றால் இந்த மூன்று ஆண்டுகளில் முயற்சி செய்து இருக்க மாட்டேனா? உனக்காக ஒற்றைக் காலில் தவமிருந்து இருப்பேனா என்ன?'' என்று கேட்டுச் சிரித்தான்.

''ஐயோ, போதும் போதும், என்னால முடியலை சாமி. உங்க காதலின் வீரியத்தைத் தாங்க என்னால் முடியலை சாமி!'' என்று கிண்டல் அடித்துச் சிரித்தாள் அஞ்சலி.

''இதுக்கே இப்படி சொன்னால் எப்படி?'' என்று கேலியாகச் சொல்லியபடி, அவளைக் கைகளில் அள்ளிக் கொண்டு குளியல் அறைக்குள் சென்றான். உள்ளே சிணுங்கலும் சிரிப்பும் ரொம்ப நேரத்திற்குக் கேட்டு கொண்டு இருந்தன. ஒரு வழியாய்க் குளித்து வெளியே வந்தவர்கள் கிளம்பினார்கள். அவன் உடை மாற்றி ரெடியாகிக் கொண்டு இருக்கையில், அவள் நைட்டியிலேயே வெகு நேரம் அமர்ந்து இருந்தாள்.

''என்ன அஞ்சலி, ட்ரெஸ் மாற்றவில்லையா? தாஜ்மஹால் பார்க்கணும் என்று சொன்னாயே? கிளம்பு!'' என்று சொன்னவனைப் பார்த்து ரகசியமாய்ப் புன்னகைத்தாள்.

''நீங்க கீழே போய் வெயிட் பண்ணுங்க. நான் அப்புறம் கிளம்பி வருவேன்!'' என்று சொன்னாள்.

''ஏன் நான் இருக்கும் போதே கிளம்பினால் என்ன?''

''சொன்னால் கேட்கணும். உங்களுக்குச் சின்ன சர்ப்ரைஸ், ப்ளீஸ்!'' என்று கொஞ்சலாய்ச் சொன்னாள்.

''நீ இப்படி சொன்னால் எனக்கு எப்படிப் போக மனசு வரும்? நானும் இங்கேயேதான் இருப்பேன்.''

''நீங்க இங்கேயே இருந்தால் எப்படி அது சர்ப்ரைசா இருக்கும்? நீங்களா போகா விட்டால் நான் கழுத்தைப் பிடித்து உங்களை வெளியே தள்ளி விடுவேன்!'' என்று மிரட்டினாள் அஞ்சலி.

''மோகம் முப்பது நாள் ஆசை அறுபது நாள் என்று சொல்வாங்களே! அந்தக் கணக்கு கூட இன்னும் முடியலையே? அதற்குள் இப்படி வன்முறையில் இறங்குகிறாய்!'' என்று புலம்பியவனைக் குறுக்கிட்டாள்.

''இப்பவே டைம் ஆச்சு. ஆறு மணிக்குப் போகணுமா வேண்டாமா? கிளம்புங்க, செல்லக்குட்டி இல்ல? நான் பதினஞ்சு நிமிடத்தில் வந்து விடுவேன்!'' என்று அவனை வெளியே தள்ளிக் கதவைச் சாத்தியவள் அவசரமாய்க் கிளம்பிக் கீழே இறங்கி வந்தாள்.

கீழே லாபியில் காத்து இருந்த பாலாவின் கண்களைப் பின்னால் இருந்து மூடினாள் அஞ்சலி. ''ஹேய் அஞ்சு குட்டி செம ஃபாஸ்ட் தான், வா!'' என்று கை பற்றி முன்னால் இழுத்தவன் கண் இமைக்க மறந்து போனான்.



அவனது கண் முன்னே உயிரோவியமாய், அவளுக்கென்று தான் பிரத்யேகமாக வடிவமைத்த, அந்த அலை அலையாய்த் துள்ளிய வெண்ணிற சாட்டின் டிரெசில், நீண்ட பின்னலுடன், தலை நிறையப் பூவுடன், பொட்டுடன், ஜிமிக்கி நெற்றிச் சுட்டி உள்ளிட்ட கொஞ்சம் பழைய மாடல் தங்க நகைகளுடன், அவனின் அஞ்சலி. ''ஹேய் அஞ்சு, சூப்பர், தேங்க்ஸ் ஹனி!'' என்று அவளை லேசாய் அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டான்.

''இது ஹோட்டல் லாபி. நம்ம ரூம் இல்லை. தாஜ் மஹால் பார்க்கப் போகலாமா?'' என்று அவன் கை பற்றி முன்னே நடந்தாள். அவளைப் பின் தொடர்ந்தவனுக்கு இன்னும் நம்ப முடியவில்லை.

பௌர்ணமி இரவில் யமுனை ஆற்றங்கரையில், காதல் சின்னம் தாஜ்மகாலின் பிம்பம், யமுனை நதியில் நெளிய, அதையும் அதைக் கண்டு ரசித்த ஆயிரக்கணக்கான காதல் இதயங்களையும் சேர்த்துப் பாலாவும் அஞ்சலியும் புன்னகையோடு ரசித்தனர். இரண்டு மணி நேரம் அங்கே அமர்ந்து பொழுதை இனிமையாகக் கழித்து விட்டு உணவு முடித்து, அறைக்குத் திரும்பியவுடன், ''ம்ம்ம் ரூம் வந்தாச்சு. என்னவோ பரிசு கொடுக்கணும் என்று சொன்னீங்களே, கொடுங்க!'' என்று கை நீட்டினாள்.

அவளை அருகில் இழுத்து, ''நெற்றிச்சுட்டி ஆடும் நெற்றிக்கு முதல் பரிசு'' என்று சொல்லி மென்மையாய் முத்தமிட்டான். ''ஜிமிக்கி உரசும் காதுக்கு, நெக்லேஸ் இருக்கும் கழுத்துக்கு'' என்று பாலாவின் பரிசுகள் தொடர்ந்தன.

அவனை இடைவெளி இன்றி அணைத்து, அவனின் காதில், நான் இனிமேல் உங்களை எப்படி கூப்பிடப்

போறேன், தெரியுமா?'' என்று காதோரம் ரகசியமாகக் கேட்டாள்.

''பாலா, பாலு... முருகா... அழகா... சுந்தரம்... சுந்தர்...'' என்ற அவனின் பல விடைகளுக்கு மறுப்பாய்த் தலை அசைத்தவள், அவன் நெற்றியில் தன் நெற்றியை வைத்து அழுத்தி, மூக்கோடு மூக்கு உரசியபடி, ''இது எல்லாமே தப்பு. நான் உங்களை இனிமேல் 'பலா' என்று தான் கூப்பிடப் போறேன். இது காரணப் பெயர். நீங்க பலாப் பழம் மாதிரி, வெளியே பார்க்க கரடு முரடு... உள்ளே ஒரே ஸ்வீட்டோ ஸ்வீட்தான். ஐ லவ் யு மேன். ஐ லவ் யு ஸோ மச்...'' என்று அழுத்தமாய் ஒவ்வொரு வார்த்தையாக அழுத்திச் சொன்னவள், அவனை அணைத்து அவனின் இனிமையைக் கண்டு, கேட்டு, தொட்டு, சுவைத்து என்று ஐம்புலன்களாலும் முழுமையாக உணர ஆம்பித்தாள்.

''நீ தான் அஞ்சு, எனக்கு வாழ்க்கையில் கிடைத்த மிகப் பெரிய பரிசு. அந்தப் பெரிய பரிசுக்கு ஒரு சின்னப் பரிசு இப்ப நான் கொடுக்கறேன்!'' என்றவன் தன் பையிலிருந்து ஒரு சின்ன ஆட்டின் டாலரோடு இருந்த தங்க செயினை எடுத்து அவளைத் திருப்பிக் கழுத்தில் அணிவித்துப் பின்னங்கழுத்தில் மென்மையாய் முத்தமிட்டான். அவனின் இதழ்கள் சற்றே நகர்ந்து மேலே அவள் காதுகளில் உரச ரகசியமாகப் பாடினான்.

''கனாக் கண்டேனடி தோழி!
கனாக் கண்டேனடி தோழி!
எங்கெங்கோ தேடித் தேடி
உன்னில் என்னை நான் கண்டேன்!''

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு புதுடில்லியில், லால் பகதூர் ஸ்டேடியத்தில், அந்தி மயங்கும் மாலை வேளையில் பாலமுருகன் கண்ட கனவு நனவாகியது.

*